கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

---

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

# தேவாரத்திரட்டு.

---

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரவர்கள்

முன்னிலையிற் பரிசோதித்து,

மேற்படியூர்

**சதாசிவப்பிள்ளையால்**

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

---

ஆறாம் பதிப்பு.

---

ஜய ௵ கார்த்திகை ௴.

# சூசிபத்திரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.


| பதிகம். | பக்கம். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருப்பிரமபுரம. | ௩ | திருவெழுகூற்றிருக்கை. | ௨௨ |
| திருநீற்றுப்பதிகம். | ௮ | திருக்கடவூர்மயானம். | ௨௪ |
| பஞ்சாக்கரத்திருப்பதிகம். | ௧௦ | திருவாழ்கொளிபுத்தூர். | ௩௧ |
| நமச்சிவாயத்திருப்பதிகம். | ௧௧ | திருப்பூந்தராய். | ௩௮ |
| திருக்ஷேத்திரக்கோவை. | ௧௬ | கோளறுபதிகம். | ௪௦ |


## திருநாவுக்கரசுநாயனார்.


| பதிகம். | பக்கம். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவதிகைவீரட்டானம். | ௪ | திருப்புகலூர். | ௨௭ |
| நமச்சிவாயத்திருப்பதிகம். | ௧௩ | திருவதிகைவீரட்டானம். | ௩௩ |
| திருக்ஷேத்திரக்கோவை. | ௧௯ | ஸ்ரீசைலாயம. | ௩௯ |
| கோயிற்றிருவிருத்தம். | ௨௫ | திருவாரூர்த்திருவிருத்தம். | ௪௬ |


## சுந்தரமூர்த்திநாயனார்.


| பதிகம். | பக்கம். | பதிகம். | பக்கம். |
|---|---|---|---|
| திருவெண்ணெய்நல்லூர். | ௭ | திருப்புன்கூர். | ௩௫ |
| திருப்பாண்டிக்கொடுமுடி. | ௧௪ | திருக்கழுக்குன்றம். | ௪௨ |
| ஊர்த்தொகை. | ௨௧ | திருத்தொண்டத்தொகை. | ௪௮ |
| திருக்கடவூர்மயானம். | ௩௦ | | |


திருச்சிற்றம்பலம்.

# வரலாறு.

அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே
என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும்பொருட்டுப் பல
அற்புதங்களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞானசம்
பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார்
என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப்பட்ட தமிழ்
வேதமாகிய தேவாரம் ஒரு லக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகமு
டையது. அவைகளுள் எழுநூற்றுத்தொண்ணூற்றேழு திருப்ப
திகம் ஒழித்து ஒழிந்தவை இறந்துபோயின. எஞ்சி நின்ற எழுநூற்
றுத்தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுல
சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப்
பொல்லாப்பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார்நம்பி
ஏழுதிருமுறைகளாக வகுத்தருளினார். அவவேழும் அடங்கிய திரு
முறை அடங்கன்முறையெனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய
முனிவர் அவ்வடங்கன்முறையினது மகிமையையும் அதனைநாடோ
றும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்தி சித்தி
க்குமென்பதனையும் அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய
ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமு
ற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின்கண்ணே ஆனந்ததா
ண்டவஞ்செய்தருளும் சபாநாதரை வணங்கி, தமது கருத்து முற்று
ம்பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபா
நாதருடைய திருவருளினாலே, "சிவாலயமுனிவனே நீ பொதியம
லையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்தே போவாயாயின் உன்க
ருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத்தோன்றிற்று. அதுகே
ட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி, விடை
பெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து, அகத்தியம
காமுனிவரைச்சிந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ்செய்தார்.

அகத்தியமகாமுனிவர் அவருக்குவெளிப்பட்டு, அடங்கன்முறை முழுதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத்திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ் செய்பவர்களாவர்கள்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினார். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

# தேவாரத்திரட்டு.

## தேவாரநுதலியபொருள்.

நேரிசைவெண்பா.

குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லரனுருவ மென்றலைமே லாக்குந்—திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்
றிட்டா ரகத்தியனா ரெட்டு.

## திருப்பதிகக்கருத்துரை.

நிலைமண்டலவாசிரியப்பா.

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை
மாற்றுப் பரையின் வரலா றாகுந்
துஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு
மாரூர் தில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகு
மோருரு வரிய பாளை வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்

திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ணாள
னடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்று கொன்றிவை மூன்று
நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வேய் குலந் தில்லை யெனுமிவை மூன்று
நாயனு மடிமையு நாட்டிய தாகு
மிப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
முழுதையுஞ் சிவாலய முனிக்கறி விதனுப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்க லியாவையு முணரும்
புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்
றனக்கருள் செய்தனன் றகவுற வதனாற்
றீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு மோதின ராவரே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

# திருப்பிரமபுரம்.

## பண் நட்டபாடை.

### குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௨)

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
யேர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௩)

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௪)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூரும்மிவனென்ன
வருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௫)

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
யிறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௬)

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்த
வுடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்

கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௭)

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்கும்முலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௮)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானு
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளீர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௯)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௧௦)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசுநாயனார்

## திருவதிகைவீரட்டானம்.

---

பண் கொல்லி.

---

குருவருள்.

---

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியே
குடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௧)

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தே
னினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனை
நணுகாமற்றுரந்துகரந்துமிடா
ரஞ்சேலுமென்னீரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௨)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்
படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டுமெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்டலைகொண்
டணிந்தீரடிகேளதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

முன்னம்மடியேனறியாமையினான்
முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்
சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோ
தலையாயவர்தங்கடனாவதுதா
னன்னநடையாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்
கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்லி
நீத்தாயகயம்புகநூக்கியிட
நிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்
வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
வார்த்தார்புனலாரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (௫)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்
றமிழோடிசைபாடன்மறந்தறியே
னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியே
னுன்னாமமென்னாவின்மறந்தறியே



மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வா
யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா
யலந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (சு)
உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளு
மொருவர்தலைகாவலிலாமையினால்
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்
வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர்
பயந்தேயென்வயிற்றினகம்படியே
பறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநா
னயர்ந்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (எ)
வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனமொன்றுமிலாமையினாற்
சலித்தாலொருவர்துணையாருமில்லைச்
சங்கவெண்குழைக்காதுடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற்றினகம்படியே
கலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன
வலுத்தேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (அ)
பொன்போலமிளிர்வதொர்மேனியினீர்
புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றை
நணுகாமற்றுரந்துகரந்துமிடீ
ரென்போலிகளும்மையினித்தெளியா
ரடியார்படுவதிதுவேயாகி
லன்பேயமையும்மதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (கூ)
போர்த்தாயங்கொரானையினீருரிதோல்
புறங்காடரங்காநடமாடவல்லா
யார்த்தானரக்கன்றனைமால்வரைக்கீ
ழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தா
லென்வேதனையானவிலக்கியிடா
யார்த்தார்புனல்சூழதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (கo)
திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## திருவெண்ணெய்நல்லூர்

பண் இந்தளம்.

குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (க)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (உ)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (ங)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்த்தி
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. (ச)

பாதம்பணிவார்கள்பெறுபண்டம்மதுபணியா
யாதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. (ரு)

தண்ணார்மதிசூடிதழல்போலுந்திருமேனி
யெண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (சு)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளானாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (எ)

எற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ
ரேற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாற்றாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (அ)

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (கூ)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைதென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளாரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருவாலவாய்த்திருநீற்றுப்பதிகம்.

---

பண் காந்தாரம்.

---

பரையின்வரலாறு.

---

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிரு வாலவாயான்றிருநீறே. (௧)

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிரு வாலவாயான்றிருநீறே. (௨)

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (௩)

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (௪)

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறு வந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிரு வாலவாயான்றிருநீறே. (௫)

அருத்தமதாவதுநீறு வவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிரு வாலவாயான்றிருநீறே. (௬)

எயிலதுவட்டதுநீறு விருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. (௭)

இராவணன்மேலதுநீறு வெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயானறிருநீறே. (௮)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (௯)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (௧௦)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
# பஞ்சாக்கரத்திருப்பதிகம்.

---

பண் காந்தாரபஞ்சமம்.

---

அஞ்செழுத்துண்மை.

---

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்துநினைமினாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (௧)

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. (௨)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிட
ரானகெடுப்பனவஞ்செழுத்துமே. (௩)

நல்லவர்தீயரெனாதுநச்சினர்
செல்லல்கெடச்சிவமுத்திகாட்டுவ
கொல்லநமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே. (௪)

கொங்கலர்வன்மதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சவைம்பொழிற்
றங்கரவின்படமஞ்சுந்தம்முடை
யங்கையிலைவிரலஞ்செழுத்துமே. (௫)

தும்மலிருமறொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. (௬)

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாநட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே. (௭)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன்பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (அ)

கார்வணனான்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (கூ)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. (க0)

நற்றமிழ்ஞானசம்பந்தனன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
# நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் கௌசிகம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (க)

நப
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிநினைந்
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்

தக்கவானவராய்த்தகுவிப்பது
நக்கனுமநமச்சிவாயவே. (௩)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினு
னியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனுமநமச்சிவாயவே. (௪)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவராயிடி
னெல்லாத்தீங்கையுநீங்குவரென்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே. (௫)

மந்தரம்மனபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே. (௬)

நரகமேழ்புகநாடினராயினு
முரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனுமநமச்சிவாயவே. (௭)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேற்
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொளுமநமச்சிவாயவே. (௮)

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காண்பரிதாகியலந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே. (௯)

கஞ்சிமண்டையர்கையினுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுள்கண்டனமச்சிவாயவே. (௧௦)

நந்திநாமநமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்

# நமச்சிவாயத்திருப்பதிகம்.

---

பண் காந்தாரபஞ்சமம்.

---

அஞ்செழுத்துண்மை.

---

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (க)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (உ)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. (ங)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. (ச)

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (ரு)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லா
னலமிலனாடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. (சா)

வீடினாருலகினில்விழுமியதொண்டர்
கூடினாரந்நெறிகூடச்சென்றலு

மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனுடிற்றுநமச்சிவாயவே. (எ)

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (அ)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணுதறிண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே. (கூ)

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## திருப்பாண்டிக்கொடுமுடி.

பண் பழம்பஞ்சுரம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (க)

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (உ)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேற்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௩)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௪)

அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினே
னஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கிநாய்க்கழிகின்றதென்
பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௫)

ஏடுவானிளந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மே
லாடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்
பாடுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்
சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௬)

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன்வினைகளும்விண்டன, நெ
ருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக்கோட்டிடைக்
குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந் தாடுபாண்டிக்கொடுமுடி
விரும்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௭)

செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய்
வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடுபாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௮)

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென்பொன்மாமணி
பேரெணாயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார் [யெனறு
நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடிக்
காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (௯)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப், பாணு
லாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை, நாணனைத்
தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்பமே. ()

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

# திருக்ஷேத்திரக்கோவை.

---

பண் இந்தளம்.

---

### கோயிற்றிறம்

---

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லநல்லம்
வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடா
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்
குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்
பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. (௧)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தா
றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமுங்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்
பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்
பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
யெண்ணாயிரவும்பகலுமிடும்பைக்
கடனீந்தலாங்காரணமே. (௨)

அட்டானமென்றோதியநாலிரண்டு
மழகன்னுறைகாவனைத்துந்துறைக
ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்
குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கு
மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்
மதிக்குமிடமாகியபாழிமூன்றுஞ்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பா
யரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (௩)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிப்பூசி
நீறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி
திருநனிபள்ளிசீர்மகேந்திரத்துப்

பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்
விரும்பும்மிடைப்பள்ளிவண்சக்கரமா
லுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி
யுணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே. (ச)

ஆறைவடமாகறலம்பரையா
றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவை
காதலித்தானவன்சேர்பதியே. (ரு)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு
மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்சொலிலாவிடைமாமருது
மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
றவமாமலமாயினதானறுமே. (சா)

மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராம
முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி
காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்
கடலொற்றியூர்மற்றுறையூரவையுங்
கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங்
கொடுங்கோவலூர்திருக்குணவாயில். (எ)

குலாவுதிங்கட்சடையான்குளிரும்பருதிநியமம்
போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூருங்
காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தா
னுறைகோயிலென்றென்றுநீகருதே. (அ)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக
னெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரநாகேச்சர
நளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த
கடல்வண்ணனுமாமலரோனுங்காணாச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்
குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே. (கூ)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்
குருந்தங்குடிதேவன்குடிமருவு
மத்தங்குடிதண்டிருவண்குடியு
மலம்புஞ்சலந்தஞ்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூட
நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்
நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்மினே. (கo)

அம்மானையருந்தவமாகிநின்ற
வமரர்பெருமான்பதியானவுன்னிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்
கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
விம்மாலையீரைந்துமிருநிலத்தி
லிரவும்பகலுநினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்பும்மடியார்
விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசுநாயனார்

## திருக்ஷேத்திரக்கோவை.

---

### திருத்தாண்டகம்.

---

கோயிற்றிறம்.

---

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங்கோடிகாவு
முல்லைப்புறவமுருகன்பூண்டி
முழையூர்பழையாறைசத்திமுற்றங்
கல்விற்றிகழ்சீரார்காளத்தியுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (க)

ஆரூர்மூலட்டானமானைக்காவு
மாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணுங்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௨)

இடைமருதீங்கோயிராமேச்சர
மின்னம்பரேரிடைவையேமப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே. (௩)

எச்சிலிளமரேமநல்லூ
ரிலம்பையங்கோட்டூரிறையான்சேரி
யச்சிறுபாக்கமளப்பூரம்ப
ராவடுதண்டுறையழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியுமேகம்பத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௪)

கொடுங்கோளூரஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவு
நெடுங்களநன்னிலநெல்லிக்காவு
நின்றியூர்நீடூர்நியமநல்லூ
ரிடும்பாவனமெழுமூரேழூர்தோழூ
ரெறும்பியூரேராருமேமகூடங்
கடம்பையிளங்கோயிறன்னிலுள்ளுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௫)

மண்ணிப்படிக்கரைவாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்

பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
  பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூருங்
கண்ணைகளர்க்காறைகழிப்பாலையுங்
  கயிலாயநாதனையேகாணலாமே. (௬)

வீழிமிழலைவெண்காடுவேங்கூர்
  வேதிகுடிவிசயமங்கைவியலூ
ராழியகத்தியான்பள்ளியண்ணா
  மலையாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
  பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடனாகைக்காரோணத்துங்
  கயிலாயநாதனையேகாணலாமே. (௭)

உஞ்சேனைமாகாளமூறலோத்தூ
  ருருத்திரகோடிமறைக்காட்டுள்ளா
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
  வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடல்மீயச்சூர்வைகா
  வேதீச்சுரம்விவீசுரம்வெற்றியூருங்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
  கயிலாயநாதனையேகாணலாமே. (௮)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி
  தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
  குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டான
  மையாறசோகந்தியாமாத்தூருங்
கண்டியூர்வீரட்டங்கருகாவூருங்
  கயிலாயநாதனையேகாணலாமே. (௯)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு
  நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
  தோணிபுரந்துருத்திசோமீச்சர
முறையூர்கடலொற்றியூரூற்றத்தூ
  ரோமாம்புலியூரோரேடகத்துங்
கறையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்
  கயிலாயநாதனையேகாணலாமே. (௧௦)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பலகண்டாற்றொண்டா
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## ஊர்த்தொகை.

பண் பழம்பஞ்சுரம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (க)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடீயடியார்கவலைகளையாயே. (உ)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
யிறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே. (௩)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே. (௪)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
யருகற்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே

கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே. (ரு)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பானே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே. (சு)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
யானைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
யூனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே. (எ)

துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்திநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
வருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே. (அ)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதூரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடீ
கலிசேர்புறவிற்கடவூராளீகாணவருளாயே. (கூ)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
# திருவெழுகூற்றிருக்கை.

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினைமானாங்காரத்
தீரியல்பாயொருவிண்முதல்பூதல
மொன்றியவிரிசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
யிருவரோடொருவனாகிநின்றனை
யோரானீழலொண்கழலிரண்டு

முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றாகக்கோட்டினை
யிருநதியரவமோடொருமதிசூடினை
யொருதாளீரயின்மூவிலைச்சூல
நாற்கான்மான்மறியைந்தலையரவ
மேந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரியீடழித்துரித்தனை
யொருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவவுணரையறுத்தனை
யைம்புலனாலாமந்தக்கரண
முக்குணமிருவளியொருங்கியவானோ
ரேத்தநின்றனையொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
யமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரம்பேணினை
யறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
யிகலியமைந்துணர்புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனைதொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை
யொருமலையெடுத்தவிருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினைபுறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோனான்முகனறியாப்
பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை
யையுறுமமணருமறுவகைத்தேரரு
மூழியுமுணராக்காழியமர்ந்தனை
யெச்சனேழிசையோன்கொச்சையைமெச்சினை
யாறுபதமுமைந்தமர்கல்வியு
மறைமுதனான்கு
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
யிருமையினொருமையுமொருமையின்பெருமையு
மறுவிலாமறையோர்

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியு
மனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## திருக்கடவூர்மயானம்.

---

பண் காந்தாரம்.

---

சிவனுருவம்.

---

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
யெரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. (க)

மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனொன்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவா
ரங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. (உ)

ஈடலிடபமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வா
ராடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே. (ங)

இறைநின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைநின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைநின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே. (ச)

வெள்ளையெருத்தின்மிசையார்விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடர்பொற்சடைகடுலங்கக்
கள்ளநகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (ரு)

பொன்றாதுதிருமணங்கொள்புனைபூங்கொன்றைபுனைந்தா
ரொன்றாவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றாவினஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
பின்றாழ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே. (௬)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. (௭)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோற்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே. (௮)

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே. (௯)

தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. (௧௦)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமானகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
யிரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசுநாயனார்

## கோயிற்றிருவிருத்தம்.

---

பண் கொல்லி.

---

சிவனுருவம்.

---

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னு

ளாளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே.

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதள
னுருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௨)

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னுடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௩)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (௪)

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான் [னே.
கைஞ்ஞின்றவாடல் கண்டாற்பின்னைக்கண்கொண்டு காண்பதென்

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
றேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. ()

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிக
டரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௭)

சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கநங்கனைத்தீவிழித்தான்றில்லையம்பலவ
னெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. ()

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்விளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௯)

தருக்குமிகுத்துத்தன்ரேள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
வரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவ
னெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே. (கO)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

## திருப்பூவணம்.

### திருத்தாண்டகம்.

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றுங்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (க)

ஆணாகிப்பெண்ணாயவடிவுதோன்று
மடியவர்கட்காரமுதமாகித்தோன்று
மூணாகியூர்திரிவானாகித்தோன்று
மொற்றைவெண்பிறைதோன்றும்பற்றார்தம்மேற்
சேணாகவரைவில்லாலெரித்தறோன்றுஞ்
செத்தவர்தமெலும்பினாற்செறியச்செய்த
பூணாணுமரைநாணும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உ)

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்று

மல்லாதகாலனைமுன்னடர்த்தரன்று
மைவகையாணினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புபூணுய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ங)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்று
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்று
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று
முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்று
மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ச)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்று
மியல்பாகவிடுபிச்சையேற்றரன்று
மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ரு)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்று
மோராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (சா)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்று
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தரன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தரன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (எ)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்று
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்று
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்று
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்று
மலைமகளுஞ்சலமகளுமலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (அ)

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்று
மணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றுஞ்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௯)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தறோன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றுங்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௦)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுதோன்று
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்திநாயனார்

# திருக்கடவூர்மயானம்.

## பண் பழம்பஞ்சுரம்.

### சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௧)

விண்ணோர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலையர்காலகாலர்கடவூர
ரெண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௨)

காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரர்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார்
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே. (௩)

நறைசேர்மலரைங்கணையானைநயனத்தீயாற்பொடிசெய்த
விறையாராவரெல்லார்க்குமில்லையென்னாதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிலுந்தொண்டர்பயில்கடவூர்ப்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௪)

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோணாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௫)

துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த்
திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௬)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேராரரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினா

ரூர்தாஞவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௭)

வாடாமுலையாடன்ஞேடுமெகிழ்ந்துகாணில்வேடுவஞய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்துவாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (அ)

வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்ப
ராழியளிப்பரரிதனக்குவானஞ்சுகப்பரறமுரைப்ப
ரேழைதலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௯)

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயஞர்

# திருவாழ்கொளிபுத்தூர்.

---

பண் தக்கராகம்.

---

திருவடிகள்.

---

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்ருனடிகாண்போம். (௧)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம்
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வோம். (௨)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையூரையமுண்டியென்றுபலகூறி [ர்த்
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (௩)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கைதாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றானடிகாண்போம். (ச)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (ரு)

அளைவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சிக்
களைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்று [த்
வளையொலிமுன்கைமடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
தளையவிழ்மாமலர்தூவித்தலைவனதாளிணைசார்வோம். (சா)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்துவழிதலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபலகூறி
மடனெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித்தலைவனதாணிழல்சார்வோம். (எ)

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். (அ)

கரியவனான்முகன்கைதொழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியூரையமிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம். (க)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினார்புறங்கூற
வெண்டலையிற்பலிகொண்டல்விரும்பினையென்றுவிளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன் வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கண்மாமலர்தூவத்தோன்றநின்றானடிசேர்வோம். (க0)

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

# திருவதிகைவீரட்டானம்.

## திருவடித்திருத்தாண்டகம்.

### திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான்சிந்தித்தரற்றும்மடி
யருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாரும்மடி
சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணாமடி
பரவுவார்பாவம்பறைக்கும்மடி
பதினெண்கணங்களும்பாடும்மடி
விரவுநீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானதெஞ்செல்வன்னடி. (௧)

கொடுவினையாரென்றுங்குறுகாவடி
குறைந்தடைந்தாராழாமைக்காக்கும்மடி
படுமுழவம்பாணிபயிற்றும்மடி
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடி
கடல்வையங்காப்பான்கருதும்மடி
நெடுமதியங்கண்ணியணிந்தானடி
நிறைகெடிலவீரட்டநீங்காவடி. (௨)

வைதெழுவார்காமம்பொய்போகாவடி
வஞ்சவலைப்பாடொன்றில்லாவடி
கைதொழுதுநாமேத்திக்காணும்மடி
கணக்குவழக்கைக்கடந்தவடி
நெய்தொழுதுநாமேத்தியாட்டும்மடி
நீள்விசும்பையூடறுத்துநின்றவடி
தெய்வப்புனற்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௩)

அரும்பித்தசெஞ்ஞாயிறேய்க்கும்மடி
யழகெழுதலாகாவருட்சேவடி
சுரும்பித்தவண்டினங்கள்சூழ்ந்தவடி
சோமனையுங்காலனையுங்காய்ந்தவடி

பெரும்பித்தர்கூடிப்பிதற்றும்மடி
பிழைத்தார்பிழைப்பறியவல்லவடி
திருந்துநீர்த்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௪)

ஒருகாலத்தொன்றாகிநின்றவடி
யூழிதோறூழியுயர்ந்தவடி
பொருகழலும்பல்சிலம்பும்மார்க்கும்மடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
யிருநிலத்தாரின்புற்றங்கேத்தும்மடி
யின்புற்றாரிட்டபூவேறும்மடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௫)

திருமகட்குச்செந்தாமரையாமடி
சிறந்தவர்க்குத்தேனாய்விளைக்கும்மடி
பொருளவர்க்குப்பொன்னுரையாய்நின்றவடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
யுருவிரண்டுமொன்றோடொன்றொவ்வாவடி
யுருவென்றுணரப்படாதவடி
திருவதிகைத்தென்கெடிலநாடன்னடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௬)

உரைமாலையெல்லாமுடையவடி
யுரையாலுணரப்படாதவடி
வரைமாதைவாடாமைவைக்கும்மடி
வானவர்கடாம்வணங்கிவாழ்த்தும்மடி
யரைமாத்திரையிலடங்கும்மடி
யகலமளக்கிற்பாரில்லாவடி
கரைமாங்கலிக்கெடிலநாடன்னடி
கமழ்வீரட்டானக்காபாலியடி. (௭)

நறுமலராய்நாறுமலர்ச்சேவடி
நடுவாயுலகநாடாயவடி
செறிகதிருந்திங்களுமாய்நின்றவடி
தீத்திரளாயுள்ளேதிகழ்ந்தவடி
மறுமதியைமாசுகழுவும்மடி
மந்திரமுந்தந்திரமுமாயவடி
யெறிகெடிலநாடர்பெருமானடி
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (௮)

அணியனவுஞ்சேயனவுமல்லாவடி
யடியார்கட்காரமுதமாயவடி
பணிபவர்க்குப்பாங்காகவல்லவடி
பற்றற்றார்பற்றும்பவளவடி
மணியடிபொன்னடிமாண்பாமடி
மருந்தாய்ப்பிணிதீர்க்கவல்லவடி
தணிபாடுதண்கெடிலநாடன்னடி
தகைசார்வீரட்டத்தலைவன்னடி. (௯)

அந்தாமரைப்போதலர்ந்தவடி
யரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடி
முழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள்பாகன்னடி
பவளத்தடவரையேபோல்வானடி
வெந்தார்சுடலைநீறாடுமடி
வீரட்டங்காதல்விமலன்னடி. (௧௦)

திருச்சிற்றப்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## திருப்புன்கூர்.

பண் தக்கேசி.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
வவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன்வன்மைகண்டடியே
னெந்தைநீயெனைநமன்றமர்நலியி
லிவன்மற்றென்னடியானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௧)

வையகமுற்றுமாமழைமறந்து
வயலினீரிலைமாநிலந்தருகோ
முய்யக்கொள்கமற்றெங்களையென்ன
வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்

பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்
பெயர்த்தும்பன்னிருவேலிகொண்டருளுஞ்
செய்கைகண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (உ)

ஏதநன்னிலமீரறுவேலி
யேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கறந்தாட்டக்
கோலவெண்மணற்சிவன் றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன்
சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்
பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. (௩)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
னாவினுக்கரையனாளைப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென் றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (௪)

கோலமால்வரைமதனெனநாட்டிக்
கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
வாலநஞ்சுகண்டவர்மிகவிரிய
வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டு
கண்டத்தேவைத்தபித்தநீசெய்த
சீலங்கண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௫)

இயக்கர்கின்னரர்யமனொடுவருண
ரியங்குதீவளிஞாயிறுதிங்கண்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லா
மயர்ப்பொன் றின் றிநின் றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
திசைப்பொன் றின் றிநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௬)

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்
பொழில்கொளானிழற்கீழறம்புரிந்து
பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்
தருளினாய்பண்டுபகீரதன்வேண்ட
வார்த்துவந்திழியும்புனற்கங்கை
நங்கையாளைநின்சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின்றன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (எ)

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி
லிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (அ)

அறிவினான்மிக்கவறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
வெறியுமாகடலிலங்கையர்கோனைத்
துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (௯)

கம்பமால்களிற்றின்னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
யும்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவரருவினையிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

மகாமஹோபாத்தியாய, டாக்டர்
வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

# திருப்பூந்தராய்.

பண் காந்தாரபஞ்சமம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள்பவளத்துவர்வாயினாள்பனிமாமதிபோன்முகத்
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிப்பிரான்
வந்துசேர்விடம்வானவரெத்திசையுந்நிறைந்துவலஞ்செய்துமாமலர்
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே. (௧)

காவியங்கருங்கண்ணினாள்கனித்தொண்டைவாய்க்கதிர்முத்தநல்
வெண்ணகைத், தூவியம்பெடையன்னநடைச்சுரிமென்குழலா
டேவியுந்திருமேனியோர்பாகமாயொன்றிரண்டொருமூன்றொடுசே
ர்பதி, பூவிலந்தணனொப்பவர்பூந்தராய்போற்றுதுமே. (௨)

பையராவருமல்குன்மெல்லியல்பஞ்சின்னேரடிவஞ்சிகொணுண்ணி
டைத், தையலாளொருபாலுடையெம்மிறைசாருமிடஞ்
செயயெலாங்கழுநீர்கமலம்மலர்த்தேறலூறலிற்சேறுலராதநற்
பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய்போற்றுதுமே. (௩)

முள்ளிநாண்முகைமொட்டியல்கோங்கினரும்புதேன்கொள்குரு
ம்பைமூவாமருந், துள்ளியன்றபைம்பொற்கலசத்தியலொத்தமுலை,
வெள்ளிமால்வரையன்னதோர்மேனியின் மேவினார்பதிவீமருதண்
பொழிற், புள்ளினந்துயின்மல்கியபூந்தராய்போற்றுதுமே. (௪)

பண்ணியன்றெழுமென்மொழியாள்பகர்கோதையேர்திகழ்பைந்
தளிர்மேனியோர், பெண்ணியன்றமொய்ம்பிற்பெருமாற்கிடம்பெய்
வளையார், கண்ணியன்றெழுகாவிச்செழுங்கருநீலமல்கியகாமருவா
விநற், புண்ணியருறையும்பதிபூந்தராய்போற்றுதுமே. (௫)

வாணிலாமதிபோனுதலாண்மடமாழையொண்கணாள்வண்டரளந்
நகை, பாணிலாவியவின்னிசையார்மொழிப்பாவையொடுஞ், சேணி
லாத்திகழ்செஞ்சடையெம்மண்ணல்சேர்வதுசிகரப்பெருங்கோயில்
சூழ், போணிலாநுழையும்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (௬)

காருலாவியவார்குழலாள்கயற் கண்ணினாள்புயற்காலொளிமின்னி
வாருலாவியமென்முலையாண்மலைமாதுடனாய் [டை

நீருலாவியசென்னியன்மன்னிநிகருநாமமுன்னூன்குநிகழ்பதி
போருலாவெயில்சூழ்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (எ)

காசைசேர்குழலாள்கயலேர்தடங் கண்ணிகாம்பனதோட்கதிர்மெ
ன்முலைத், தேசுசேர்மலைமாதமருந்திருமார்பகலத்
தீசன்மேவுமிருங்கயிலையெடுத்தானை யன்றடர்த்தானிணைச்சேவடி
பூசைசெய்பவர்சேர்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (அ)

கொங்குசேர்குழலாணிழல்வெண்ணகைக்கொவ்வைவாய்க்கொடி
யேரிடையாளுமை,பங்குசேர்திருமார்புடையார்படர்தீயுருவாய், மங்
குல்வண்ணனுமாமலரோனுமயங்கநீண்டவர் வான்மிசைவந்தெழு,
பொங்குநீரின்மிதந்தநற்பூந்தராய்போற்றுதுமே. (௯)

கலவமாமயிலாரியலாள்கரும்பன்னமென்மொழியாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழலாளுமைகூறனைவேறுரையா [நற்
லலவைசொல்லுவார்தேரமணாதர்களாக்கினூன்றனை நண்ணனுநல்கு
புலவர்தாம்புகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமே. (௧௦)

தேம்பனுண்ணிடையாள்செழுஞ்சேலன கண்ணியோடண்ணல்சேர்
விடந்தேனயர்,பூம்பொழிறிகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமென்,
றோம்புதன்மையன்முத்தமிழ்நான்மறைஞானசம்பந்த னெண்டமிழ்
மாலைகொண், டாம்படியிவையேத்தவல்லாக்கடையாவினையே. ()

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசுநாயனார்

## ஸ்ரீ கயிலாயம்.

---

### திருத்தாண்டகம்.

---

அருச்சனை.

---

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி
மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி
யூற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி
யோவாதசத்தத்தொலியேபோற்றி
யாற்றாகியங்கேயமர்ந்தாய்போற்றி
யாறங்கநால்வேதமானாய்போற்றி
காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௧)

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி
பிறவியறுக்கும்பிரானேபோற்றி
வைச்சாடனன்றுமுகந்தாய்போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பொய்ச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கச்சாகநாகமசைத்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௨)

மருவார்புரமூன்றுமெய்தாய்போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
யுருவாகியென்னைப்படைத்தாய்போற்றி
யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி
திருவாகிநின்றதிறமேபோற்றி
தேசம்பரவப்படுவாய்போற்றி
கருவாகியோடுமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௩)

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி
வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி
யூனத்தைநீக்குமுடலேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி
தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி
கானத்தீயாடலுகந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௪)

ஊராகிநின்றவுலகேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி
பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றி
நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்றமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௫)

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி
தேவரறியாததேவேபோற்றி
புல்லுயிர்க்கும்பூட்சிபுணர்த்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி

பல்லுயிராய்ப்பார்தோறுநின்றாய்போற்றி
பற்றியுலகைவிடாதாய்போற்றி
கல்லுயிராய்நின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (சு)

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (எ)

இமையாதுயிராதிருந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி
யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (அ)

மூவாய்பிறவாயிறவாய்போற்றி
முன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்கொழுந்தேபோற்றி
சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி
யாவாவடியேனுக்கெல்லாம்போற்றி
யல்லலறியவலந்தேன்போற்றி
காவாய்கனகத்திரளேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கூ)

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி
நீளவகலமுடையாய்போற்றி
யடியுமுடியுமிகலிப்போற்றி
யங்கொன்றறியாமைநின்றாய்போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி
கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி
கடியவுருமொடுமின்னேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கo)

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி
யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி
யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி
யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி
பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

## திருக்கழுக்குன்றம்

பண் நட்டபாடை.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடங்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (க)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடியே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிட
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. (உ)

நீளநின்றுதொழுமினித்தலுநீதியா
லாளுநம்மவினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே. (ங)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்யதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (ச)

புலைகடீரத்தொழுமின்புன்சடைப்புண்ணிய
னிலைகொள்சூலப்படையனெந்தைபிரானிட

முலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே. (ரு)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையவரவன்றான்பயிலுமிடங்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே. (சா)

ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே. (எ)

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்தமலர்கணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற்றண்கழுக்குன்றமே. (அ)

பிறைகடூரத்தொழுமின்பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையும்மிட
மழைகள்சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே. (கூ)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடங்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினாற்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## கோளறுதிருப்பதிகம்.

---

பண் பியந்தைக்காந்தாரம்.

---

அடிமை.

---

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தென்
னுளமேபுகுந்தவதனால்

ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
யாசறுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (க)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்க
வெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனு
லொன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறு
முடனுயநாள்களவைதா
மன்பொடுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (உ)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்து
வுமையோடும்வெள்ளைவிடைமேன்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனுற்
றிருமகள்கலையதூர்திசயமாதுபூமி
திசைதெய்வமானபலவு
மருநெதிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (ங)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்து
மறையோதுமெங்கள்பரம
னதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனுற்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்
கொடுநோய்களானபலவு
மதிகுணநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (ச)

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடு
விடையேறுநங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனல்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னு
மிகையானபூதமவையு
மஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (ரு)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
யாளரிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௬)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாக
விடையேறுசெல்வனடைவா
ரொப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்
வினையானவந்துநலியா
வப்படிநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௭)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனா
லேழ்கடல்சூழிலங்கையரையன்றனோடு
மிடரானவந்துநலியா
வாழ்கடனல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௮)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனான்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்
வருகாலமானபலவு
மலைகடன்மேருநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (௯)

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனாற்

புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ண
திருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்லவவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே. (க0)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
றானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
யானசொன்மாலையோதுமடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்

## திருவாரூர்த்திருவிருத்தம்.

பண் கொல்லி.

அடிமை.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
வலம்பலம்பாவ்ருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (க)

மற்றிடமின்றிமனைதுறந்தல்லுணாவல்லமணர்
சொற்றிடமென்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொலோ
விற்றிடம்வாங்கிவிசயனொடன்றொருவேடுவனாய்
புற்றிடங்கொண்டான்றன்றொண்டர்க்குத்தொண்டராம் புண்ணிய [மே.

ஒருவடிவின்றிநின்றுண்குண்டர்முன்னமக்குண்டுகொலோ
செருவடிவெஞ்சிலையாற்புரமட்டவன்சென்றடையாத்
திருவுடையான்றிருவாரூர்த்திருமூலட்டானஞ்செங்கட்
பொருவிடையானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.()

மாசினையேறியமேனியர்வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறுவேனுக்குமுண்டுகொலோ
தேசனையாரூர்த்திருமூலட்டானனைச்சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (ச)

அருந்தும்பொழுதுரையாடாவமணர்திறமகன்று
வருந்திநினைந்தரனேயென்றுவாழ்த்துவேற்குண்டுகொலோ
திருந்தியமாமதிலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியமே.

வீங்கியதோள்களுந்தாள்களுமாய்நின்றுவெற்றரையே
மூங்கைகள்போலுண்ணுமூடர்முன்னேநமக்குண்டுகொலோ
தேங்கமழ்சோலைத்தென்னாரூர்த்திருமூலட்டானன்செய்ய
பூங்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (சு)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன்றன்னருள்பெற்றேற்குமுண்டுகொலோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலட்டானனெங்கள்
புண்ணியன்றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. ()

கரப்பர்கண்மெய்யைத்தலைபறிக்கச்சுகமென்னுங்குண்ட
ருரைப்பனகேளாதிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
திருப்பொலியாரூர்த்திருமூலட்டானன்றிருக்கயிலைப்
பொருப்பன்விருப்பமர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே.

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
வையனணிவயலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. ()

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

### சுந்தரமூர்த்திநாயனார்

# திருத்தொண்டத்தொகை.

பண் கொல்லிக்கவ்வாணம்.

## அடிமை.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
றிருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே
னில்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே
னல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௧)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே
னலைமலிந்த புனன்மங்கை யானாயற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௨)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கு மடியேன்
றிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௩)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியே

னொருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௪)

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியே
னம்பிரான் திருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௫)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே
னார்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௬)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னையடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௭)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
னிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
றுறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியே
னறைக்கொண்ட வேனம்பி முனையடுவாற் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (௮)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியே
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (க)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
னப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. (கo)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியே
னென்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோ
னன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

அகத்தியமகாமுனிவர் திரட்டியருளிய

தேவாரத்திரட்டு முற்றுப்பெற்றது.

---

அகத்தியர்தேவாரத்திரட்டுப்

# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அஞ்சினார்க் | ௧௫ |
| அடர்செவி | ௩௨ |
| அட்டானமெ | ௧௬ |
| அணியனவு | ௩௫ |
| அண்ணாமலை | ௧௬ |
| அந்தணாள | ௩௫ |
| அந்தமில் | ௪௩ |
| அந்தாமரை | ௩௫ |
| அம்மானை | ௧௮ |
| அரவணை | ௩௩ |
| அருத்தம | ௯ |
| அருநெறி | ௪ |
| அருந்தும் | ௪௭ |
| அருப்போட்டு | ௨௯ |
| அரும்பித்த | ௩௩ |
| அரைகெழு | ௩௧ |
| அலைவளர் | ௩௨ |
| அறப்பள்ளி | ௧௬ |
| அறிவினான் | ௩௭ |
| —— | |
| ஆங்கணைந் | ௨௯ |
| ஆணாகிப்பெ | ௨௭ |
| ஆருருவ | ௨௯ |
| ஆரூரத்தாவை | ௨௧ |
| ஆரூர்தில்லை | ௧௬ |
| ஆரூர்மூலட் | ௧௯ |
| ஆறைவடமா | ௧௭ |
| ஆற்றலடல் | ௯ |
| —— | |
| இடுக்கண்பட் | ௧௩ |
| இடைமருதீ | ௧௯ |
| இட்டனும்மடி | ௧௪ |
| இமையாது | ௪௧ |
| இயக்கர்கின் | ௩௬ |
| இயமன்றூத | ௧௨ |
| இராவணன்மே | ௯ |
| இலங்கைமன்ன | ௧௨ |
| இலைமலிந்த | ௪௮ |
| இல்லகவிளக்க | ௧௪ |
| இறங்கிச்சென் | ௪௨ |
| இறைநின்றில | ௨௪ |
| —— | |
| ஈடலிடபமி | ௨௪ |
| —— | |
| உஞ்சேனைமா | ௨0 |
| உண்ணாதுறங் | ௪௨ |
| உயர்ந்தேன் | ௬ |
| உயர்வரையொ | ௩௨ |
| உருவளர் | ௪௪ |
| உரைமாலை | ௩௪ |
| —— | |
| ஊராகிநின் | ௪0 |
| ஊனத்தைநீ | ௨௬ |
| ஊனமில்லா | ௪௩ |
| ஊனாயுயிரா | ௭ |
| ஊனிலுயிர்ப் | ௧0 |
| —— | |
| எச்சிலிளம | ௧௯ |
| எயிலதுவட் | ௯ |
| எல்லையில்பு | ௧௫ |
| என்பொடு | ௪௪ |
| —— | |
| ஏடுவானிளந்தி | ௧௫ |
| ஏதநன்னில | ௩௬ |
| ஏற்றூர்புர | ௮ |
| —— | |
| ஒருகாலத் | ௩௪ |
| ஒருமைபெ | ௩ |
| ஒருவடிவின் | ௪௬ |
| —— | |
| ஓருருவாயினை | ௨௨ |
| ஓவுநாளுணர் | ௧௫ |
| —— | |
| கஞ்சிமண்டை | ௧௨ |
| கடல்சூழ்ந்த | ௫0 |
| கம்பமால்களி | ௩௭ |
| கரப்பர்கண் | ௪௭ |
| கரியவனான் | ௩௨ |
| கலவமாம | ௩௯ |
| கல்லாலினீழ | ௨௭ |
| கல்லுயர்மா | ௩௨ |
| கறைக்கண் | ௪௯ |
| கனமலர்க்கொ | ௩௨ |
| —— | |
| காசைசேர் | ௩௯ |
| காட்டூர்க்கட | ௨௧ |
| காணவினிய | ௯ |
| காதலாகிக் | ௧௧ |
| காத்தாள்ப | ௫ |
| காயும்புலியி | ௩0 |
| காரார்கடலி | ௩0 |
| காருலாவிய | ௩௮ |
| காரூர்புன | ௮ |
| கார்வணனான் | ௧௧ |
| காவியங்கருங் | ௩௮ |
| —— | |
| குண்டமணர் | ௩௨ |
| குண்டிகைக் | ௯ |
| குத்தங்குடி | ௧௮ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| குலம்பலம்பா | ௪௯ |
| குலாவுதிங் | ௧௭ |
| குற்றமுடை | ௪௭ |
| --- | |
| கூற்றுயினை | ௪ |
| --- | |
| கைம்மாவுரிவை | ௨௨ |
| கையிலிடு | ௪௭ |
| --- | |
| கொங்கலர் | ௧௦ |
| கொங்கிற்கு | ௨௧ |
| கொங்குசேர் | ௩௯ |
| கொடுங்கோ | ௧௯ |
| கொடுவினை | ௩௩ |
| கொத்தலர் | ௪௫ |
| கொத்தார் | ௩௦ |
| கொல்வா | ௧௨ |
| கொன்று | ௪௨ |
| --- | |
| கோணியபிறை | ௧௫ |
| கோலமால் | ௩௬ |
| --- | |
| சடைமுயங் | ௪ |
| சலமிலன் | ௧௩ |
| சலம்பூவொ | ௫ |
| --- | |
| சாரணன் | ௧௫ |
| --- | |
| சித்தத்தெழு | ௨௬ |
| சில்லுருவா | ௪௦ |
| --- | |
| சுற்றுமமரர் | ௨௬ |
| --- | |
| செப்பிளமு | ௪௫ |
| செம்பொனேர் | ௧௫ |
| செய்ஞ்ஞின்ற | ௨௬ |
| செறிகழலு | ௨௯ |
| செற்றவரக்கன | ௨௫ |
| --- | |
| சொற்றுணை | ௧௩ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| தண்ணார்மதி | ௭ |
| தருக்குமிகு | ௨௭ |
| தன்னடியார்க் | ௨௮ |
| --- | |
| தாங்கூர்பிணி | ௨௨ |
| தானுதல்செ | ௪ |
| தாரிடுகொ | ௩௨ |
| --- | |
| திண்டீச்சர | ௨௦ |
| திருநின்ற | ௪௮ |
| திருமகட்கு | ௩௪ |
| தில்லைச்சிற்றம் | ௧௮ |
| தில்லைவா | ௪௮ |
| --- | |
| துஞ்சலுந் | ௧௦ |
| துணிவார் | ௩௦ |
| தும்மலிரும | ௧௦ |
| துருத்திச்சு | ௨௨ |
| --- | |
| தூயவிடை | ௨௫ |
| --- | |
| தெரித்தகணை | ௨௬ |
| --- | |
| தேம்பனுண் | ௩௯ |
| தேனமர் | ௪௬ |
| தேனைக்கா | ௨௨ |
| --- | |
| தொடுத்தம | ௨௬ |
| --- | |
| தோடுடைய | ௩ |
| --- | |
| நஞ்சணிக | ௪௪ |
| நந்திநாம | ௧௨ |
| நம்புவார்நமர் | ௧௧ |
| நரகமேழ்புக | ௧௨ |
| நல்லவர்தீய | ௧௦ |
| நறுமலராய் | ௩௪ |
| நறைசேர் | ௩௦ |
| நறையூரிற் | ௨௦ |
| நற்றமிழ்ஞா | ௧௧ |
| நற்றமிழ்வல் | ௩௬ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| நாயேன்பல | ௭ |
| --- | |
| நிறைக்காட் | ௨௧ |
| --- | |
| நீர்பரந்த | ௩ |
| நீள்நின்று | ௪௨ |
| --- | |
| நெக்குளார்வ | ௧௧ |
| நெஞ்சமழு | ௫ |
| நெடியவிசும் | ௪௧ |
| நெற்குன்ற | ௧௭ |
| --- | |
| படைமலி | ௨௮ |
| பணிந்தாரன | ௫ |
| பண்ணியசா | ௪௭ |
| பண்ணியன் | ௩௮ |
| பண்ணினிசை | ௪௧ |
| பத்தராய்ப் | ௫௦ |
| பந்துசேர்வி | ௩௮ |
| பலபலவே | ௪௫ |
| பல்லில்லெவ | ௪௩ |
| --- | |
| பாசமான | ௨௫ |
| பாதம்பணி | ௭ |
| பாராழிவட்டத் | ௨௮ |
| பாலையுடை | ௨௫ |
| --- | |
| பிச்சாடல் | ௪௦ |
| பித்தாபிறை | ௭ |
| பிழைகடீர | ௪௩ |
| --- | |
| புத்தரோடு | ௪ |
| புத்தர்சமண் | ௧௧ |
| புலியூர்ச்சிற் | ௨௨ |
| புலிவலம் | ௨௧ |
| புலைகடீரத் | ௪௨ |
| --- | |
| பூசவினியது | ௯ |
| பூணெடுநாக | ௩௧ |
| பூவினுக்கரு | ௧௩ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| பையராவரு | ௩௮ | மன்னியசீர் | ௫௦ | வார்கொண் | ௨௯ |
| ——— | | மன்னேமற | ௭ | வாள்வரிய | ௪௫ |
| பொடியுடை | ௩௧ | ——— | | வானத்தார் | ௪௦ |
| பொய்யடிமை | ௪௯ | மாசிலேயே | ௪௭ | ——— | |
| பொருவிடை | ௨௬ | மாடமல்கு | ௩௧ | விண்ணுற | ௧௩ |
| பொனபோ | ௬ | மாட்டேர்மட | ௧௭ | விண்மகிழ் | ௩ |
| பொன்றுதுதி | ௨௫ | மாப்பிணைத | ௧௪ | விண்ணோர் | ௩௦ |
| ——— | | மாலொடய | ௯ | வியரிலங | ௪ |
| போதன்போ | ௧௨ | ——— | | விரும்பிநின் | ௧௫ |
| போர்த்தநீள் | ௩௭ | முடியேணிணி | ௭ | ——— | |
| போர்த்தாயங் | ௬ | முத்திதருவ | ௮ | வீங்கிய | ௪௭ |
| ——— | | மும்மையாலு | ௪௮ | வீடிருல | ௧௩ |
| மங்கையண | ௨௪ | முள்ளிகாண் | ௩௮ | வீடுபிறப் | ௧௦ |
| மடமுடைய | ௪௩ | முற்றலாமை | ௩ | வீழிமிழலை | ௨௦ |
| மண்ணிப்படி | ௧௯ | முன்னம்மடி | ௫ | ——— | |
| மதிநுதன்ம | ௪௪ | முன்னெறியா | ௧௪ | வெந்தநீறருங் | ௧௩ |
| மந்தரம்மன | ௧௨ | ——— | | வெளிறுதிர | ௪௨ |
| மந்திரநான் | ௧௦ | மூவாய்பிற | ௪௧ | வெள்ளையெருத் | ௨௪ |
| மந்திரமாவ | ௮ | மூவெயில்செ | ௩௭ | ——— | |
| மயலாகுங் | ௨௮ | ——— | | வேதத்திலு | ௮ |
| மரவம்பொழில் | ௨௫ | வடிவேறுதி | ௨௭ | வேயுறுதோ | ௪௩ |
| மருகலுறை | ௨௧ | வண்டம | ௧௧ | வேழமுரிப்பர் | ௩௧ |
| மருவார்கொ | ௩௦ | வம்பறுவ | ௪௯ | வேள்பட | ௪௫ |
| மருவார்புர | ௪௦ | வரியமறை | ௨௪ | வேற்றாகி | ௩௯ |
| மழுவாள்வல | ௮ | வருமாகரியி | ௨௫ | ——— | |
| மறைகலந்த | ௩ | வலித்தேன் | ௬ | வைச்சபொரு | ௨௬ |
| மற்றிடமி | ௪௬ | ——— | | வைதெழுவார் | ௩௩ |
| மற்றுப்பற் | ௧௪ | வாடாமுலை | ௩௧ | வையகமு | ௩௫ |
| மனவஞ்சர் | ௧௭ | வாணிலாம | ௩௮ | ——— | |


பாட்டுமுதற்குறிப்பகராதி முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS - 600 090.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

**மாணிக்கவாசகசுவாமிகள்**

அருளிச்செய்த

# திருவாசகம்.

இஃது

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஆறுமுகநாவலரவர்கள்**

முன்னிலையிற் பரிசோதித்து,

மேற்படியூர்

**சதாசிவப்பிள்ளையால்**

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஆறாம் பதிப்பு.

ஜய௵ கார்த்திகைமீ.

# பதிகவகராதி.


| பதிகம். | பக்கம். |
|---|---|
| அச்சப்பத்து. | ௧௦௩ |
| அச்சோப்பதிகம். | ௧௨௬ |
| அடைக்கலப்பத்து. | ௮௪ |
| அண்டப்பகுதி. | ௮ |
| அதிசயப்பத்து. | ௮௭ |
| அம்மானை. | ௪௬ |
| அருட்பத்து. | ௯௩ |
| அற்புதப்பத்து. | ௧௧௨ |
| அன்னைப்பத்து. | ௭௧ |
| ஆசைப்பத்து. | ௮௬ |
| ஆனந்தமாலை. | ௧௨௫ |
| உந்தியார். | ௬௫ |
| உயிருண்ணிப்பத்து. | ௧௦௧ |
| எண்ணப்பதிகம். | ௧௧௭ |
| எம்பாவை. | ௪௧ |
| ஏசறவு. | ௧௦௮ |
| கண்டபத்து. | ௯௭ |
| கழுக்குன்றப்பதிகம். | ௯௫ |
| கீர்த்தித்திருவகவல். | ௪ |
| குயிற்பத்து. | ௭௨ |
| குலாப்பத்து. | ௧௧௦ |
| குழைத்தபத்து. | ௧௦௦ |
| கோத்தும்பி. | ௫௫ |
| கோயிற்றிருப்பதிகம். | ௭௯ |
| கோயின்மூத்ததிருப்பதிகம். | ௭௮ |
| சதகம். | ௨௦ |
| சாழல. | ௬௦ |
| சிவபுராணம். | ௧ |
| செத்திலாப்பத்து. | ௮௨ |
| சென்னிப்பத்து. | ௧௧௩ |
| தசாங்கம். | ௭௪ |
| தெள்ளேணம். | ௫௭ |
| தோணோக்கம். | ௬௭ |
| நீத்தல்விண்ணப்பம். | ௩௫ |
| படையாட்சி. | ௧௨௩ |
| படையெழுச்சி. | ௧௨௦ |
| பண்டாயநான்மறை. | ௧௨௨ |
| பள்ளியெழுச்சி. | ௭௫ |
| பாண்டிப்பதிகம். | ௧௦௪ |
| பிடித்தபத்து. | ௧௦௬ |
| பிரார்த்தனைப்பத்து. | ௯௮ |
| புணர்ச்சிப்பத்து. | ௮௯ |
| புலம்பல். | ௧௧௦ |
| பூவல்லி. | ௬௩ |
| பொற்சுண்ணம். | ௫௦ |
| பொன்னூசல். | ௬௯ |
| போற்றித்திருவகவல். | ௧௪ |
| யாத்திரைப்பத்து. | ௧௧௮ |
| வார்த்தை. | ௧௧௫ |
| வாழாப்பத்து. | ௯௦ |
| வெண்பா. | ௧௨௦ |


ஆகத்திருப்பதிகங்கள் - ௫௧.

உ

கணபதி துணை.

சிவமயம்.

தமிழ்வேதமாகிய

# திருவாசகம்.

## நூற்சிறப்பு.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

உ

சிவமயம்.

# சிவபுராணம்.

---

## சிவனதநாதிமுறைமையானபழமை.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவி றுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள் புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானா
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

# கீர்த்தித் திருவகவல்.

## சிவனது திருவருட்புகழ்ச்சிமுறைமை.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

நிலைமண்டலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

தில்லை மூதூ ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
யெண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்து
மென்னுடை யிருளை யேறத் துரந்து
மடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடு
மெஞ்சா தீண்டு மின்னருள் விளைத்துங்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்துங்
கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய வாகமம் வாங்கியு
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியு
நந்தம் பாடியி னான்மறை யோனா
யந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
நூறுநூ றாயிர மியல்பின தாகி
யேறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்

குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவு
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையு
மரியொடு பிரமற் களவறி யொண்ணா
னரியைக் குதிரை யாக்கிய நன்மையு
மாண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையு
மந்தண னாகி யாண்டுகொண் டருளி
யிந்திர ஞாலங் * காட்டிய வியல்பு
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையு
மாங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசு
முத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்புந்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்

* இந்திரசாலம் இந்திரஞாலமெனத் திரிந்தது.

கட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமு
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையு
மோரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்
தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையு
மிடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசு
மேகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசுந்
திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசுங்
கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்து
மீங்கோய் மலையி லெழிலது காட்டியு
மையா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியுங்
குற்றா லத்துக் குறியா யிருந்து
மந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
யெவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
யந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியு

மந்திர மாமலை மகேந்திர வெற்ப
னந்தமில் பெருமை யருளுடை யண்ண
லெந்தமை யாண்ட பரிசது பகரி
னாற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி * நிமிர்ந்து காட்டியு
மூனந் தன்னை யொருங்குட னறுக்கு
மானந் தம்மே யாறா வருளியு
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணைய
னாதப் பெரும்பறை நவின்று கறங்கவு
மழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியு
மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
யேலுடைத் தாக வெழில்பெற வணிந்து
மரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமு
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவ
னுத்தர கோச மங்கையூ ராகவு
மாதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் றிருப்பெய ராகவு
மிருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
யருளிய பெருமை யருண்மலை யாகவு
மெப்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமு
மப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
வேல வென்னை யீங்கொழித் தருளி
யன்றுடன் சென்ற வருள்பெறு மடியவ
ரொன்ற வொன்ற வுடன்கலந் தருளியு
மெய்தவந் திலாதா ரெரியிற் பாயவு
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் அடையாறு, சென்னை-20.

* கொடி கோடியென நீட்டல்விகாரம்பெற்று நின்றது.

நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவு
மெழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
யிறைவ னீண்டிய வடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளின
னொலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்.

---

# திருவண்டப்பகுதி.

---

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

இணைக்குறளாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்க
மளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
யொன்றனுக் கொன்று நின்றெழில் பகரி
னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
வில்லுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை

காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவு டிருத் தகு
மறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறு
மருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவு
மனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
வேனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறு
மாற்றேன் காண்க வந்தோ கெடுவே
னின்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
வன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
வற்புதன் காண்க வநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
வொருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
வணுத்தருந் தன்மை யிலையோன் காண்க
விணைப்பரும் பெருமையி லீசன் காண்க
வரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க

வந்தமு மாதியு மகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
வருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
வவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
வவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
வைம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
வெந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
வெஞ்சா வின்னரு ணுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
யிருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு
மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
வாயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்க
ளிருவினை மாமரம் வேர்பறித் தெழுந்

துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
யருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
வருந்தவர்க் கருளு மாதி வாழ்க
வச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
வேதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோ
னுள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை
யின்றெனக் கெளிவந் தருளி
யழிதரு மாக்கை யொழியச் செய்த வொண்பொரு
ளின்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
யளிதரு மாக்கை செய்தோன் போற்றி
யூற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
யாற்றாவின்ப மலர்ந்தலை செய்யப்
போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்க

மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்து
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்து
மொற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்து
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்து
மித்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்து
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
யாணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயி
னைம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
யருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்து
மொன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறு மின்றே பயிறொறு
மொளிக்குஞ் சோரனைக் கண்டனம்
மார்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
றாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்னே ரில்லோன் றானே யான தன்மை
யென்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
யறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலு
முலையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தி
னாற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தன
னேற்றார் மூதூ ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடி
லொருத்தரும் வழாமை யொடுக்கினன்

றடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
வற்புத மான வமுத தாரைக
ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
யென்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
வருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்.

# போற்றித் திருவகவல்.

## சகத்தினுற்பத்தி.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

நிலைமண்டல வாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுர ணேன மாகி முன்கலந்
தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா வெறும்பீ றாய
வூனமி லியோனியி னுள்வினை பிழைத்து
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்து
மாண்டுக டோறு மடைந்தவக் காலை
யீண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி

வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயி
லொருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னு மல்லலிற் பிழைத்து
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலு
மாறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைக டொடங்கின
வாத்த மானா ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிக டத்த மதங்களி
லமைவ தாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
யதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
யகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியு
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
யென்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
யன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
யாடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
யின்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
யாவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
யிடரைக் களையு மெந்தாய் போற்றி
யீச போற்றி யிறைவ போற்றி

தேசப் பளிங்கின் றிரளே போற்றி
யரைசே போற்றி யமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
யாதி போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
யுடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
யையா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
யேனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
யாழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
யத்தா போற்றி யரனே போற்றி
யுரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
யருமையி லெளிய வழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
யென்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
யழிவிலா வானந்த வாரி போற்றி
யழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி

வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
யளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
யிடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
யாரூ ரமர்ந்த வரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
யண்ணா மலையெம் மண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
யேகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
யீங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
யடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
யித்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
யெந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி
யேனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
யருளிட வேண்டு மம்மான் போற்றி
யிருள்கெட வருளு மிறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் றமியேன் போற்றி
களங்கொளக் கருத வருளாய் போற்றி
யஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
யத்தா போற்றி யையா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி

பெரியாய் போற்றி பிரானே போற்றி
யரியாய் போற்றி யமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
யுறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
யலந்தே னாயே னடியேன் போற்றி
யிலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
யருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
யாளா னவர்கட் கன்பா போற்றி
யாரா வமுதே யருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் றாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
யெந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
யலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
யிரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
யடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்

பரகதி பாண்டியற் கருளினை போற்றி
யொழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மைய றுணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சதகம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

## பத்தி வைராக்கிய விசித்திரம்.

கட்டளைக்கலித்துறை.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே. (க)

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே. (உ)

உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே. (௩)

சாவமுன் னாட்டக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
யாவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே

மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணூண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே. (ச)

தவமே புரிந்திலன் றண்மல ரிட்டுமுட் டாதிறைஞ்சே
னவமே பிறந்த வருவினை யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம் பரம்பரனே. (ரு)

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட் டாதடி யேயிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை யேத்த முழுவதுமே. (சு)

முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி சாய்த்துமுன்னாட்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப் பாலனிப் பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியா
யுழுவையின் றோலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே. (எ)

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும்விண்ணு
மிழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பி
னுழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே. (அ)

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண் டானென் சிறுமைகண்டு
மவனெம் பிரானென்ன நானடி யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவ தியம்புகவே. (கு)

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே. (கo)

---

## அறிவுறுத்தல்.

### தரவுகொச்சகக்கலிப்பா.

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே. (கக)

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே. (கஉ)

வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னாயடியே
னிருந்துநல மலர்புனையே னேத்தேனாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநா னாமாறே. (கங)

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (கச)

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. (கரு)

வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. (கசு)

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
னரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே. (கஎ)

அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
றரியேனா னாமாறென் சாவேனான் சாவேனே. (கஅ)

வேனில்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. (கக)

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. (௨0)

## சுட்டறுத்தல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே. (௨௧)

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
வினையனா னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
யனையநான் பாடேனின் றாடே னந்தோ
வலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயினானே. (௨௨)

ஆயநான் மறையவனு நீயே யாத
லறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பே
னாயினே னாதலா லாண்டு கொண்டா
யடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே. (௨௩)

பேசிற்றா மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றான் றிருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்றா

நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
யாண்டானே யவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந் தானே. (உச)

வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே. (உரு)

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே. (உசு)

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே. (உஎ)

கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா
னாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. (உஅ)

விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிருகாத லடியார்தம் மடிய ருக்கி
யச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
வச்சனுண் பெண்ணலியா காச மாகி
யாரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே. (௨௯)

தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. (௩0)

## ஆத்துமசுத்தி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே. ()

அறிவி லாத வெனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமே
னெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே.()

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம் மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச் சிவனவன் றிரடோண்மே
னீறு நின்றது கண்டனை யாயினு நெக்கிலை யிக்காயங்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங் கில்லேனே. (௩௩)

இற்ற வாமன மேகெடு வாயுடை யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற் குரியவன் விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ யுண்டனை யெல்லாமுன்
னற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு மளவறுக் கில்லேனே. ()

அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானங்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயு
முளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன் செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை பரகதி புகுவானே. (௩௫)

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவது மெந்தையெம் பிரானென்னை யாண்டவன்கழற்கன்பு
நெகுவ தாவது நித்தலு மமுதொடு தேனொடு பால்கட்டி
மிகுவதாவதுமின்றெனின்மற்றிதற்கென்செய்கேன்வினையேனே.()

வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப் பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான் முட்டிலேன் றலைகீறே
னினையன்பாவனையிரும்புகன்மனஞ்செவியின்னதென்றறியேனே.

ஏனை யாவரு மெய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத
தேனையானெயைக்கரும்பினின்றேறலைச்சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக் குறுகிலே னெடுங்கால
மூனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயி ரோயாதே.(௩௮)

ஓய்வி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய வின்னருள் புரிந்தவென் றலைவனை நனிகாணேன்
றீயில்வீழ்கிலேன்றிண்வரையுருள்கிலேன்செழுங்கடல்புகுவேனே.

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்தவென் சிவனகர் புகப்போகே
னூனி லாவியை யோம்புதற் பொருட்டினுமுண்டுடுத்திருந்தேனே.

## கைம்மாறுகொடுத்தல்.

### கலிவிருத்தம்.

இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே. (௪௧)

உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை

தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றிநாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே. (சஉ)

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோங்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. (சங)

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. (சச)

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
றாற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலே
னேற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே. (சரு)

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறாமலர்க் கொன்றையா
னள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளு
மெள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே. (சகா)

எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே. (சஎ)

செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும்பொரு
ளெல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. (சஅ)

கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை யேற்றினை
யெட்டி னோடிரண் டும்மறி யேனையே. (சகு)

அறிவ னேயமு தேயடி நாயினே
னறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
வறிவி லாமையன் றேகண்ட தாண்டநா
ளறிவ னோவல்ல னோவரு ளீசனே. (ருo)

## அநுபோகசுத்தி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே. (௫௧)

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனா னுண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே. (௫௨)

போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந் தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ கொடியே னுயிர்தா னுலவாதே. (௫௩)

உலவாக் காலந் தவமெய்தி யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க மாட்டேன் மணியே யுனைக்காண்பா
னலவா நிற்கு மன்பிலே னென்கொண் டெழுகே னெம்மானே. ()

மானேர் நோக்கி யுமையாள் பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின் றெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக் கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தானே னுடையானே. (௫௫)

உடையா னேநின் றனையுள்கி யுள்ள முருகும் பெருங்காத
லுடையா ருடையாய் நின்பாதஞ் சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேனெஞ் சுருகாதேன் கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப தாக முடித்தாயே. (௫௬)

முடித்த வாறு மென்றனக்கே தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற் சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து கேடென் றனக்கே சூழ்ந்தேனே.

தேனைப் பாலைக் கன்னலின் றெளியை யொளியைத் தெளிந்தார்த
மூனை யுருக்கு முடையானை யும்ப ரானை வம்பனேன்

ஞானின் னடியே னீயென்னை யாண்டா யென்று லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் றன்மையே. (ருஅ)

தன்மை பிறரா லறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
வென்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தா யெங்குப் புகுவேனே. (ருகூ)

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணோக்கி நாண மில்லா நாயினே
னெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள வடியேனுந்
தருவ னேயென் றன்மையே யெந்தா யந்தோ தரியேனே. (சூ0)

## காருணியத்திரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க ணின்மலா போற்றி போற்றி. (சூக)

போற்றியோ நமச்சி வாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சயசய போற்றி போற்றி. (சூஉ)

போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே. (சூங)

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண்டும் போற்றி
யுடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி. (சூச)

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
யிங்கிவாழ் வாற்றகில்லே னெம்பிரா னிழித்திட் டேனே. (சூரு)

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| உம்பர் | ௧௦௬ |
| உய்யவல்லா | ௬௬ |
| உரியேனல் | ௧௧௭ |
| உருகிப்பெ | ௫௯ |
| உருத்தெரியா | ௯௭ |
| உரைமாண்ட | ௬௯ |
| உலக்கை | ௫௧ |
| உலவாக் | ௨௮ |
| உவலைச் | ௫௩ |
| உழிதரு | ௨௧ |
| உழைதரு | ௪௧ |
| உள்ளப் | ௫௭ |
| உள்ளமல | ௧௨௨ |
| உள்ளன | ௩௮ |
| உற்றவாக் | ௮௮ |
| உற்றுரை | ௧௧௦ |
| உன்னற், சீரு | ௭௨ |
| உன்னற், திரு | ௭௦ |
| உன்னையுகப் | ௭௩ |
| ——— | |
| ஊசலாட்டு | ௧௧௩ |
| ஊனுயுயிரா | ௪௯ |
| ——— | |
| எங்கணுயக | ௯௩ |
| எச்சம்மறிவே | ௧௦௨ |
| எண்ணிலேன் | ௮௮ |
| எண்ணுடை | ௬௮ |
| எந்தையா | ௨௭ |
| எந்தையெ | ௬௩ |
| எம்பிரான் | ௩௦ |
| எய்தலாவ | ௩௧ |
| எய்த்தே | ௮௬ |
| எரிமூன்று | ௬௩ |
| எறும்பிடை | ௩௮ |
| எனைநானெ | ௧௦௨ |
| என்பாலைப் | ௧௦௯ |
| என்புள்ளுரு | ௧௧௧ |
| என்பே | ௧௧௮ |
| என்னணி | ௧௨௩ |
| என்னப்ப | ௯௦ |
| என்னுலறியா | ௧௨௫ |
| என்னை | ௩௭ |
| என்றும் | ௬௭ |
| ——— | |
| ஏசாநிற்ப | ௭௮ |
| ஏசினும்யா | ௪௧ |
| ஏதமிலா | ௭௪ |
| ஏய்ந்த | ௧௧௨ |
| ஏராளிளங | ௭௪ |
| ஏர்தரு | ௭௩ |
| ஏழைத்தொ | ௬௯ |
| ஏனையாவ | ௨௬ |
| ——— | |
| ஐயநின் | ௩௦ |
| ——— | |
| ஒண்ணித்தி | ௪௨ |
| ஒண்மை | ௩௮ |
| ஒப்புனக் | ௧௦௭ |
| ஒருவ | ௩௦ |
| ஒன்றாய் | ௫௬ |
| ஒன்றின்று | ௧௨௩ |
| ஒன்றும்போ | ௧௦௦ |
| ——— | |
| ஓடுங்கவர் | ௧௧௦ |
| ஓயாதே | ௪௭ |
| ஓய்விலா | ௨௬ |
| ஓரொருகா | ௪௫ |
| ——— | |
| கடகரியும் | ௬௨ |
| கடலினு | ௩௭ |
| கடலின்றிரை | ௧௦௨ |
| கடலேயனைய | ௯௯ |
| கடவுளே | ௨௯ |
| கடையவ | ௩௫ |
| கட்டறு | ௨௭ |
| கண்களிரண் | ௧௨௩ |
| கண்டது | ௩௯ |
| கண்ணஞ் | ௭௧ |
| கண்ணப் | ௫௫ |
| கண்ணார் | ௧௦௧ |
| கதியடி | ௪௦ |
| கமலநான் | ௯௩ |
| கயன்மாண் | ௫௯ |
| கரணங்க | ௫௬ |
| கருடக்கொ | ௮௬ |
| கருவாயுல | ௫௬ |
| கலந்துநின் | ௯௮ |
| கல்லாதபுல் | ௯௭ |
| கல்லாமன | ௪௭ |
| களிவந் | ௩௭ |
| கள்வன்கடி | ௫௭ |
| கறங்கோலை | ௫௮ |
| கற்போலு | ௬௮ |
| கற்றறியேன் | ௧௦௯ |
| கனவேயுந் | ௫௮ |
| கன்ணுருரித் | ௫௮ |
| ——— | |
| காசணி | ௫௧ |
| காட்டகத்து | ௧௨௨ |
| காணலாம் | ௨௭ |
| காணுங் | ௧௨௨ |
| காணும | ௧௧௮ |
| காணுமாறு | ௩௨ |
| காதார் | ௪௪ |
| காப்பாய் | ௯௦ |
| காமனுட | ௬௮ |
| காருடைப் | ௭௩ |
| காருறு | ௩௬ |
| காலமுண் | ௧௦௬ |
| கானார்புலித் | ௫௧ |
| ——— | |
| கிஞ்சுக | ௭௪ |
| கிளியனார் | ௧௦௩ |
| கிளிவந்த | ௪௯ |
| கிற்றவா | ௨௫ |
| ——— | |
| கீதமினிய | ௭௨ |
| ——— | |
| குதுகுது | ௩௯ |
| குலங்க | ௩௯ |
| குலம்பாடி | ௬௦ |
| குழைத்தாற் | ௧௦௦ |
| குறியுநெறி | ௧௧௧ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| குறைவிலா | ௮௦ |
| கூடிக்கூடி | ௧௦௦ |
| கூவின | ௭௬ |
| கூறுநாவே | ௧௦௦ |
| கூற்றை | ௧௦௫ |
| கெடுவேன் | ௧௨௫ |
| கேட்டாயோ | ௪௭ |
| கேட்டாரு | ௨௪ |
| கையார் | ௪௮ |
| கையாற் | ௮௭ |
| கொந்தணவு | ௭௪ |
| கொம்பரி | ௩௮ |
| கொம்பில | ௧௧௧ |
| கொம்மை | ௧௧௧ |
| கொழுமணி | ௩௮ |
| கொள்ளு | ௨௭ |
| கொள்ளோர் | ௩௫ |
| கொள்ளேன் | ௨௦ |
| கொன்றை | ௭௨ |
| கோணிலா | ௧௦௪ |
| கோயில்சுடு | ௬௦ |
| கோலமேனி | ௯௬ |
| கோலவரை | ௭௦ |
| கோலாலமா | ௬௧ |
| கோவே | ௧௨௫ |
| கோழிசிலம் | ௪௩ |
| கோற்றேனெ | ௧௦௨ |
| கோற்றேன் | ௭௫ |
| சங்கமரற்றச் | ௫௩ |
| சங்கரா | ௨௯ |
| சங்கு | ௧௨௪ |
| சச்சை | ௩௧ |
| சடையா | ௧௧௦ |
| சட்டோங்கீனை | ௫௬ |
| சதுரை | ௧௦௪ |
| சந்திரனை | ௪௯ |
| சலமுடைய | ௬௨ |
| சாடியவே | ௬௬ |
| சாதல் | ௧௨௭ |
| சாதிகுலம் | ௯௭ |
| சாவமுன் | ௨௦ |
| சித்தமேபுகு | ௧௧௪ |
| சிந்தனை | ௨௪ |
| சிந்தை | ௩௧ |
| சிரிப்பார் | ௭௯ |
| சிரிப்பிப்ப | ௪௧ |
| சீரார்திரு | ௬௫ |
| சீரார்பவ | ௬௯ |
| சீலமின்றி | ௧௨௫ |
| சீவார்ந்தி | ௮௬ |
| சுடர்பொற் | ௮௯ |
| சுந்தரத் | ௭௩ |
| சுந்தரநீ | ௫௦ |
| சுருள்புரி | ௮௫ |
| சூடகந்தோ | ௫௧ |
| சூடுவேன் | ௪௯ |
| சூரியனார் | ௬௭ |
| செங்கணெடு | ௪௬ |
| செங்கணவ | ௪௫ |
| செடியாராக் | ௮௭ |
| செப்பார் | ௪௮ |
| செம்மை | ௧௨௭ |
| செய்த | ௧௨௦ |
| செய்யவாய் | ௭௪ |
| செய்வதறி | ௨௮ |
| செல்வநல் | ௨௭ |
| செழுகின் | ௩௬ |
| செழுக்கமல | ௮௪ |
| செறியுமி | ௧௧௩ |
| செறியும் | ௧௦௫ |
| சேரக்கருதி | ௧௧௯ |
| சொல்லிய | ௧௨௪ |
| சோதியாய் | ௮௧ |
| சோதியே | ௯௩ |
| சோலைப்ப | ௭௫ |
| ஞாலமிந்தி | ௮௪ |
| ஞானக்கரு | ௫௩ |
| ஞானவா | ௧௨௦ |
| தகைவிலா | ௧௦௪ |
| தக்கனு | ௬௭ |
| தக்கனையு | ௬௧ |
| தச்சுவிடு | ௬௫ |
| தந்ததுன் | ௮௧ |
| தரிக்கிலே | ௨௧ |
| தவமே | ௨௧ |
| தறிசெறி | ௧௦௪ |
| தனித்து | ௪௦ |
| தனியனேன் | ௨௪ |
| தன்மை | ௨௯ |
| தாதாடு | ௭௪ |
| தாதாய்மூவே | ௯௦ |
| தாமேதம | ௧௧௯ |
| தாயாய் | ௧௨௫ |
| தாரகை | ௪௧ |
| தாராயு | ௩௨ |
| தாராவருளோ | ௯௯ |
| தாளியறுகி | ௭௨ |
| தானந்தமில் | ௬௧ |
| திகழத்திகழு | ௮௯ |
| திண்போர் | ௬௫ |
| திருந்துவார் | ௯௫ |
| திருமாலும் | ௫௭ |
| திருவார் | ௫௮ |

ரச்சத் தாலே யாழ்ந்திடு கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா வென்னா னென் செய்கேன் பேசாயே. (௮௧)

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதா
லாசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே. (௮௨)

அடியே னல்லேன் கொல்லோதானெனை யாட்கொண் டிலைகொல்
வடியா ரானா ரெல்லாரும் வந்துன் றாள்சேர்ந்தார் [லோ
செடிசே ருடல மிதுநீக்க மாட்டே னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக் காணுமா று காணேனே. (௮௩)

காணு மாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
யாணே பெண்ணே யாரமுதே யத்தா செத்தே போயினே
னேணா ணில்லா நாயினே னென்கொண் டெழுகே னெம்மானே. ()

மானேர் நோக்கி யுடையாள் பங்கா மறையீ றறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக் கரியாய் சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே. (௮௫)

புறமே போந்தோம் பொய்யும் யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யா
னறவே நின்னைச் சேர்ந்த வடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தாரே. (௮௬)

தாரா யுடையா யடியேற் குன்றா ளிணையன்பு
பேரா வுலகம் புக்கா ரடியார் புறமே போந்தேன்யா
னூரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங் குன்றா ளிணையன்புக்
காரா யடியே னயலே மயல்கொண் டழுகேனே. (௮௭)

அழுகே னின்பா லன்பா மனமா யழல்சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண் டுன்னைப் பணிகேனே. (௮௮)

பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய வடியார்க்குன்
னணியார் பாதங் கொடுத்தி யதுவு மரிதென்றாற்
றிணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர் மெய்யானே.(௮௯)

யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு
மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே. (௯௦)

## ஆனந்தாதீதம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினா
ரீறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடைய னாயினேன் பட்ட கீழ்மையே. (௯௧)

மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. (௯௨)

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
யரத்த மேனியா யருள்செ யன்பரு
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
யிருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. (௯௩)

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
யேல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினா

யெல்லை யில்லைநின் கருணை யெம்பிரா
னேது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. (௯௪)

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
யேனை நாடருந் தெரியொ ணாதநீ
யென்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஆனை நாடக மாடு வித்தவா
வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு விததவா
நைய வையகத் துடைய விச்சையே. (௯௫)

விச்ச தன்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே. (௯௬)

உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
யுடைய னோபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
னடிய னாக்கினாய் போற்றி யாதியு
மந்த மாயினாய் போற்றி யப்பனே. (௯௭)

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதே
னொப்ப னேயுனக் குரிய வன்பரி
லுரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே. (௯௮)

மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினு
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாட்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னவினுற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. (௯௯)

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (௧௦௦)

திருச்சிற்றம்பலம்.

# நீத்தல்விண்ணப்பம்.

## பிரபஞ்சவைராக்கியம்.

உத்தரகோசமங்கையிலருளிச்செயப்பட்டது.

### கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோ
லுடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே. (௧)

கொள்ளேர்பிளவகலாத்தடங்கொங்கையர்கொவ்வைச்செவ்வாய்
விள்ளேனெனினும்விடுதிகண்டாய்நின்விழுத்தொழும்பி
னுள்ளேன்புறமல்லேனுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளேனொழியவுங்கண்டுகொண்டாண்டதெக்காரணமே. (௨)

காருறுகண்ணியரைம்புலனாற்றங்கரைமரமாய்
வேருறுவேனைவிடுதிகண்டாய்விளங்குந்திருவா
ரூருறைவாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
வாருறுபூண்முலையாள்பங்கவென்னைவளர்ப்பவனே. (௩)

வளர்கின்றநின்கருணைக்கையில்வாங்கவுநீங்கியிப்பான்
மிளிர்கின்றவென்னைவிடுதிகண்டாய்வெண்மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்றநீண்முடியுத்தரகோசமங்கைக்கரசே
தெளிகின்றபொன்னுமின்னும்மன்னதோற்றச்செழுஞ்சுடரே. (௪)

செழிகின்றதீப்புகுவிட்டிலிற்சின்மொழியாரிற்பன்னாள்
விழுகின்றவென்னைவிடுதிகண்டாய்வெறிவாயறுகா
லுழுகின்றபூமுடியுத்தரகோசமங்கைக்கரசே
வழிநின்றுநின்னருளாரமுதூட்டமறுத்தனனே. (௫)

மறுத்தனன்யானுன்னருளறியாமையிலென்மணியே
வெறுத்தெனைநீவிட்டிடுதிகண்டாய்வினையின்றொகுதி
யொறுத்தெனையாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
பொறுப்பரன்றேபெரியோர்சிறுநாய்கடம்பொய்யினையே. (௬)

பொய்யவனேனைப்பொருளெனவாண்டொன்றுபொத்திக்கொண்ட
மெய்யவனேவிட்டிடுதிகண்டாய்விடமுண்மிடற்று
மையவனேமன்னுமுத்தரகோசமங்கைச்கரசே
செய்யவனேசிவனேசிறியேன்பவந்தீர்ப்பவனே. (௭)

தீர்க்கின்றவாறென்பிழையைநின்சீரருளென்கொலென்று
வேர்க்கின்றவென்னைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வார்க்கின்றதார்விடையுத்தரகோசமங்கைக்கரசே
யீர்க்கின்றவஞ்சொடச்சம்வினையேனையிருதலையே. (௮)

இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பொத்துநினைப்பிரிந்த
விரிதலையேனைவிடுதிகண்டாய்வியன்மூவுலகுக்
கொருதலைவாமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
பொருதலைமூவிலைவேல்வலனேந்திப்பொலிபவனே. (௯)

பொலிகின்றநின்றாள்புகுதப்பெற்றாக்கையைப்போக்கப்பெற்று
மெலிகின்றவென்னைவிடுதிகண்டாயளிதேர்விளரி
யொலிநின்றபூம்பொழிலுத்தரகோசமங்கைக்கரசே
வலிநின்றதிண்சிலையாலெரித்தாய்புரமாறுபட்டே. (௧௦)

மாறுபட்டஞ்சென்னைவஞ்சிப்பயானுன்மணிமலர்த்தாள்
வேறுபட்டேனைவிடுதிகண்டாய்வினையேன்மனத்தே

யூறுமட்டேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
நீறுபட்டேயொளிகாட்டும்பொன்மேனிநெடுந்தகையே. (௧௧)

நெடுந்தகைநீயென்னையாட்கொள்ளயானைம்புலன்கள்கொண்டு
விடுந்தகையேனைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
வடுந்தகைவேல்வல்லவுத்தரகோசமங்கைக்கரசே
கடுந்தகையேனுண்ணுந்தெண்ணீரமுதப்பெருங்கடலே. (௧௨)

கடலினுணாய்நக்கியாங்குன்கருணைக்கடலினுள்ளம்
விடலரியேனைவிடுதிகண்டாய்விடலில்லடியா
ருடலிலமேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மடலின்மட்டேமணியேயமுதேயென்மதுவெள்ளமே. (௧௩)

வெள்ளத்துணாவற்றியாங்குன்னருள்பெற்றுத்துன்பத்தின்றும்
விள்ளக்கிலேனைவிடுதிகண்டாய்விரும்பும்மடியா
ருள்ளத்துள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளத்துளேற்கருளாய்களியாதகளியெனக்கே. (௧௪)

களிவந்தசிந்தையொடுன்கழல்கண்டுங்கலந்தருள
வெளிவந்திலேனைவிடுதிகண்டாய்மெய்ச்சுடருக்கெல்லா
மொளிவந்தபூங்கழலுத்தரகோசமங்கைக்கரசே
யெளிவந்தவெந்தைபிரானென்னையாளுடையென்னப்பனே. (௧௫)

என்னையப்பாவஞ்சலென்பவரின்றிநின்றெய்த்தலைந்தேன்
மின்னையொப்பாய்விட்டிடுதிகண்டாயுவமிக்கின்மெய்யே
யுன்னையொப்பாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யன்னையொப்பாயெனக்கத்தனொப்பாயென்னரும்பொருளே. (௧௬)

பொருளேதமியேன்புகலிடமேநின்புகழிகழ்வார்
வெருளேயெனைவிட்டிடுதிகண்டாய்மெய்ம்மையார்விழுங்கு
மருளேயணிபொழிலுத்தரகோசமங்கைக்கரசே
யிருளேவெளியேயிகபரமாகியிருந்தவனே. (௧௭)

இருந்தென்னையாண்டுகொள்விற்றுக்கொளொற்றிவையென்னினல்
விருந்தினனேனைவிடுதிகண்டாய்மிக்கநஞ்சமுதா [லால்
வருந்தினனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மருந்தினனேபிறவிப்பிணிப்பட்டுமடங்கினர்க்கே. (௧௮)

மடங்கவென்வல்வினைக்காட்டைநின்மன்னருட்டீக்கொளுவும்
விடங்கவென்றன்னைவிடுதிகண்டாயென்பிறவியைவே
ரொடுங்களைந்தாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
கொடுங்கரிக்குன்றுரித்தஞ்சுவித்தாய்வஞ்சிக்கொம்பினையே. (௧௯)

கொம்பரில்லாக்கொடிபோலலமந்தனன்கோமளமே
வெம்புகின்றேனைவிடுதிகண்டாய்விண்ணவர்நண்ணுகில்லா
வும்பருள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
யம்பரமேநிலனேயனல்காலொடப்பானவனே. (௨௦)

ஆனைவெம்போரிற்குறுந்தூறெனப்புலனாலலைப்புண்
டேனையெந்தாய்விட்டிடுதிகண்டாய்வினையேன்மனத்துத்
தேனையும்பாலையுங்கன்னலையும்மமுதத்தையுமொத்
தூனையுமென்பினையுமுருக்காநின்றவொண்மையனே. (௨௧)

ஒண்மையனேதிருநீற்றையுத்தூளித்தொளிமிளிரும்
வெண்மையனேவிட்டிடுதிகண்டாய்மெய்யடியவர்கட்
கண்மையனேயென்றுஞ்சேயாய்பிறர்க்கறிதற்கரிதாம்
பெண்மையனேதொன்மையாண்மையனேயலிப்பெற்றியனே. (௨௨)

பெற்றதுகொண்டுபிழையேபெருக்கிச்சுருக்குமன்பின்
வெற்றடியேனைவிடுதிகண்டாய்விடிலோகெடுவேன்
மற்றடியேன்றன்னைத்தாங்குநரில்லையென்வாழ்முதலே
யுற்றடியேன்மிகத்தேறிநின்றேனெனக்குள்ளவனே. (௨௩)

உள்ளனவேநிற்கவில்லனசெய்யுமையற்றுழனி
வெள்ளனலேனைவிடுதிகண்டாய்வியன்மாத்தடக்கைப்
பொள்ளனல்வேழத்துரியாய்புலனின்கட்போதலொட்டா
மெள்ளனவேமொய்க்குநெய்க்குடந்தன்னையெறும்பெனவே. (௨௪)

எறும்பிடைநாங்கூழெனப்புலனாலரிப்புண்டலந்த
வெறுந்தமியேனைவிடுதிகண்டாய்வெய்யகூற்றொடுங்க
வுறுங்கடிப்போதவையேயுணர்வுற்றவரும்பரும்பர்
பெறும்பதமேயடியார்பெயராதபெருமையனே. (௨௫)

பெருநீரறச்சிறுமீன்றுவண்டாங்குநினைப்பிரிந்த
வெருநீர்மையேனைவிடுதிகண்டாய்வியன்கங்கைபொங்கி
வருநீர்மடுவுண்மலைச்சிறுதோணிவடிவின்வெள்ளைக்
குருநீர்மதிபொதியுஞ்சடைவானக்கொழுமணியே. (௨௬)

கொழுமணியேர்நகையார்கொங்கைக்குன்றிடைச்சென்றுகுன்றி
விழுமடியேனைவிடுதிகண்டாய்மெய்ம்முழுதுங்கம்பித்
தழுமடியாரிடையார்த்துவைத்தாட்கொண்டருளியென்னைக்
கழுமணியேயின்னுங்காட்டுகண்டாய்நின்புலன்கழலே. (௨௭)

புலன்கடிகைப்பிக்கயானுந்திகைத்திங்கொர்பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனைவிடுதிகண்டாய்விண்ணுமண்ணுமெல்லாங்

கலங்கமுந்நீர்நஞ்சமுதுசெய்தாய்கருணாகரனே
துலங்குகின்றேனடியேனுடையாயென்றொழுகுலமே. (௨௮)

குலங்களைந்தாய்களைந்தாயென்னைக்குற்றங்கொற்றச்சிலையாம்
விலங்கலெந்தாய்விட்டிடுதிகண்டாய்பொன்னின்மின்னுகொன்றை
யலங்கலந்தாமரைமேனியப்பாவொப்பிலாதவனே
மலங்களைந்தாற்சுழல்வன்றயிரிற்பொருமத்துறவே. (௨௯)

மத்துறுதண்டயிரிற்புலன்றீக்கதுவக்கலங்கி
வித்துறுவேனைவிடுதிகண்டாய்வெண்டலைமிலைச்சிக்
கொத்துறுபோதுமிலைந்துகுடர்நெடுமாலைசுற்றித்
தத்துறுநீறுடனாரச்செஞ்சாந்தணிசச்சையனே. (௩0)

சச்சையனேமிக்கதண்புனல்விண்கானிலநெருப்பாம்
விச்சையனேவிட்டிடுதிகண்டாய்வெளியாய்கரியாய்
பச்சையனேசெய்யமேனியனேயொண்படவரவக்
கச்சையனேகடந்தாய்தடந்தாளவடற்கரியே. (௩௧)

அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்தவென்னை
விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய்விழுத்தொண்டர்க்கல்லாற்
றொடற்கரியாய்சுடர்மாமணியேசுடுதீச்சுழலக்
கடற்கரிதாயெழுநஞ்சமுதாக்குங்கறைக்கண்டனே. (௩௨)

கண்டதுசெய்துகருணைமட்டுப்பருகிக்களித்து
மிண்டுகின்றேனைவிடுதிகண்டாய்நின்விரைமலர்த்தாள்
பண்டுதந்தாற்போற்பணித்துப்பணிசெயக்கூவித்தென்னைக்
கொண்டெனெந்தாய்களையாய்களையாயகுதுகுதுப்பே. (௩௩)

குதுகுதுப்பின்றிநின்றென்குறிப்பேசெய்துநின்குறிப்பில்
விதுவிதுப்பேனைவிடுதிகண்டாய்விரையார்ந்தினிய
மதுமதுப்போன்றென்னைவாழைப்பழத்தின்மனங்கனிவித்
தெதிர்வதெப்போதுபயில்விக்கயிலைப்பரம்பரனே. (௩௪)

பரம்பரனேநின்பழவடியாரொடுமென்படிறு
விரும்பரனேவிட்டிடுதிகண்டாய்மென்முயற்கறையி
னரும்பரநேர்வைத்தணிந்தாய்பிறவியைவாயரவம்
பொரும்பெருமான்வினையேன்மனமஞ்சிப்பொதும்புறவே. (௩௫)

பொதும்புறுதீப்போற்புகைந்தெரியப்புலன்றீக்கதுவ
வெதும்புறுவேனைவிடுதிகண்டாய்விரையார்நறவந்
ததும்புமந்தாரத்திற்றாரம்பயின்றுமந்தம்முரல்வண்
டதும்புங்கொழுந்தேனவிர்சடைவானத்தடலரைசே. (௩௬)

அரைசேயறியாச்சிறியேன்பிழைக்கஞ்சலென்னினல்லால்
விரைசேர்முடியாய்விடுதிகண்டாய்வெண்ணகைக்கருங்கட்
டிரைசேர்மடந்தைமணந்ததிருப்பொற்பதப்புயங்கா
வரைசேர்ந்தடர்ந்தென்னவல்வினைதான்வந்தடர்வனவே. (௩௭)

அடர்புலனானிற்பிரிந்தஞ்சியஞ்சொனல்லாரவர்தம்
விடர்விடலேனைவிடுதிகண்டாய்விரிந்தேயெரியுஞ்
சுடரனையாய்சுடுகாட்டரசேதொழும்பர்க்கமுதே
தொடர்வரியாய்தமியேன்றனிநீக்குந்தனித்துணையே. (௩௮)

தனித்துணைநீநிற்கயான்றருக்கித்தலையானடந்த
வினைத்துணையேனைவிடுதிகண்டாய்வினையேனுடைய
மனத்துணையேயென்றன்வாழ்முதலேயெனக்கெய்ப்பில்வைப்பே
தினைத்துணையேனும்பொறேன்றுயராக்கையின்றிண்வலையே. (௩௯)

வலைத்தலைமானன்னநோக்கியர்நோக்கின்வலையிற்பட்டு
மிலைத்தலைந்தேனைவிடுதிகண்டாய்வெண்மதியினொற்றைக்
கலைத்தலையாய்கருணாகரனேகயிலாயமென்னு
மலைத்தலைவாமலையாண்மணவாளவென்வாழ்முதலே. (௪0)

முதலைச்செவவாய்ச்சியர்வேட்கைவெந்நீரிற்கடிப்பமூழ்கி
விதலைச்செய்வேனைவிடுதிகண்டாய்விடக்கூன்மிடைந்த
சிதலைச்செய்காயம்பொறேன்சிவனேமுறையோமுறையோ
திதலைச்செய்பூண்முலைமங்கைபங்காவென்சிவகதியே. (௪௧)

கதியடியேற்குன்கழறந்தருளவுமூன்கழியா
விதியடியேனைவிடுதிகண்டாய்வெண்டலைமுழையிற்
பதியுடைவாளரப்பார்த்திறைபைத்துச்சுருங்கவஞ்சி
மதிநெடுநீரிற்குளித்தொளிக்குஞ்சடைமன்னவனே. (௪௨)

மன்னவனேயொன்றுமாறறியாச்சிறியேன்மகிழ்ச்சி
மின்னவனேவிட்டிடுதிகண்டாய்மிக்கவேதமெய்ந்நூல்
சொன்னவனேசொற்கழிந்தவனேகழியாத்தொழும்பர்
முன்னவனேபின்னுமானவனேயிம்முழுதையுமே (௪௩)

முழுதயில்வேற்கண்ணியரென்னுமூரித்தழன்முழுகும்
விழுதனையேனைவிடுதிகண்டாய்நின்வெறிமலர்த்தா
டொழுதுசெல்வானத்தொழும்பரிற்கூட்டிடுசோற்றெம்பிரான்
பழுதுசெய்வேனைவிடேலுடையாயுன்னைப்பாடுவனே. (௪௪)

பாடிற்றிலேன்பணியேன்மணிநீயொளித்தாய்க்குப்பச்சூன்
வீடிற்றிலேனைவிடுதிகண்டாய்வியந்தாங்கலறித்

தேடிற்றிலேன்சிவனெவ்விடத்தானெவர்கண்டனரென்
றோடிற்றிலேன்கிடந்துள்ளுருகேனின்றுழைத்தனனே. (௪௫)

உழைதருநோக்கியர்கொங்கைப்பலாப்பழத்தீயினொப்பாய்
விழைதருவேனைவிடுதிகண்டாய்விடின்வேலைநஞ்சுண்
மழைதருகண்டன்குணமிலிமானிடன்றேய்மதியன்
பழைதருமாபரனென்றென்றறைவன்பழிப்பினையே. (௪௬)

பழிப்பினின்பாதப்பழந்தொழும்பெய்திவிழப்பழித்து
விழித்திருந்தேனைவிடுதிகண்டாய்வெண்மணிப்பணிலங்
கொழித்துமந்தாரமந்தாகினிநுந்தும்பந்தப்பெருமை
தழிச்சிறைநீரிற்பிறைக்கலஞ்சேர்தருதாரவனே. (௪௭)

தாரகைபோலுந்தலைத்தலைமாலைத்தழலரப்பூண்
வீரவென்றன்னைவிடுதிகண்டாய்விடிலென்னைமிக்கா
ராரடியானென்னினுத்தரகோசமங்கைக்கரசின்
சீரடியாரடியானென்றுநின்னைச்சிரிப்பிப்பனே. (௪௮)

சிரிப்பிப்பன்சீறும்பிழைப்பைத்தொழும்பையுமீசற்கென்று
விரிப்பிப்பனென்னைவிடுதிகண்டாய்விடின்வெங்கரியி
னுரிப்பிச்சன்றோலுடைப்பிச்சனஞ்சூண்பிச்சனூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னையுமாளுடைப்பிச்சனென்றேசுவனே. (௪௯)

ஏசினும்யானுன்னையேத்தினுமென்பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே. (௫௦)

திருச்சிற்றம்பலம்.

# திருவெம்பாவை.

## சத்தியை வியந்தது.

திருவண்ணாமலையிலருளிச்செய்யப்பட்டது.

வெண்டளையான்வந்த இயற்றரவிணைக்கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்

வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய். (௧)

பாசம்பரஞ்சோதிக்கென்பாயிராப்பகனும்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
யேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய். (௨)

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய். (௩)

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய். (௪)

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம்
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்கா
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய். (௫)

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேயெழுப்புவனென்றலுநாணாமே
போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேயறிவரியான்
றானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவா
யூனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு
மேனோர்க்குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய். (௬)

அன்னேயிவையுஞ்சிலவோபலவமர
ருன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பாய்
யென்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னே துயிலின்பரிசேலோரெம்பாவாய். (௭)

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
மேழிலியம்பவியம்பும்வெண்சங்கெங்குங்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
யாழியானன்புடைமையாமாறுமிவவாறோ
வூழிமுதல்வனாய்நின்றவொருவனை
யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய்.

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய். (௯)

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு

அடையாறு, சென்னை-20.
டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்

மோதவுலவாவொருதோழன்றொண்டருளன்
கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன்பேராருற்றாரயலா
ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். (க0)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
யையாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
வையாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய். (கக)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய். (க௨)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தாற்
றங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (க௩)

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய். (க௪)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (௧௫)

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ
மென்னச்சிலைகுலவிநந்தம்மையாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவணமக்குமுன்சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். (௧௬)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். ௧௭)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். ()

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தா
லெங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க

வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். (கக)

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாமிணையடிகள்
போற்றிமாலுன்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய். (உ0)

திருச்சிற்றம்பலம்.

# திருவம்மானை.

## ஆனந்தக்களிப்பு.

திருவண்ணாமலையிலருளிச்செயப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்தவாறடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காண்பரிய
பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா
னங்கணனந்தணனாயறைகூவிவீடருளு
மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய். (க)

பாரார்விசும்புள்ளார்பாதாளத்தார்புறத்தா
ராராலுங்காண்டற்கரியானெமக்கெளிய
பேராளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றி
வாராவழியருளிவந்தென்னுளம்புகுந்த
வாராவமுதாயலைகடல்வாய்மீன்விசிறும்
பேராசைவாரியனைப்பாடுதுங்காணம்மானாய். (உ)

இந்திரனுமாலயனுமேனோரும்வானோரு
மந்தரமேநிற்கச்சிவனவனிவந்தருளி
யெந்தரமுமாட்கொண்டுதோட்கொண்டநீற்றனாய்ச்
சிந்தனையைவந்துருக்குஞ்சீரார்பெருந்துறையான்
பந்தம்பரியப்பரிமேற்கொண்டான்றந்த
வந்தமிலாவானந்தம்பாடுதுங்காணம்மானாய். (௩)

வான்வந்ததேவர்களுமாலயனோடிந்திரனுங்
கானின்றுவற்றியும்புற்றெழுந்துங்காண்பரிய
தான்வந்துநாயேனைத்தாய்போற்றலையளித்திட்
டூன்வந்துரோமங்களுள்ளேயுயிர்ப்பெய்து
தேன்வந்தமுதின்றெளிவின்றொளிவந்த
வான்வந்தவார்கழலேபாடுதுங்காணம்மானாய். (௪)

கல்லாமனத்துக்கடைப்பட்டநாயேனை
வல்லாளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றிக்
கல்லைப்பிசைந்துகனியாக்கித்தன்கருணை
வெள்ளத்தழுத்திவினைகடிந்தவேதியனைத்
தில்லைநகர்புக்குச்சிற்றம்பலமன்னு
மொல்லைவிடையானைப்பாடுதுங்காணம்மானாய். (௫)

கேட்டாயோதோழிகிறிசெய்தவாறொருவன்
றீட்டார்மதில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
காட்டாதனவெல்லாங்காட்டிச்சிவங்காட்டித்
தாட்டாமரைகாட்டித்தன்கருணைத்தேன்காட்டி
நாட்டார்நகைசெய்யநாமேலைவீடெய்த
வாட்டான்கொண்டாண்டவாபாடுதுங்காணம்மானாய். (௬)

ஓயாதேயுள்குவாருள்ளிருக்குமுள்ளானைச்
சேயானைச்சேவகனைத்தென்னன்பெருந்துறையின்
மேயானைவேதியனைமாதிருக்கும்பாதியனை
நாயானநந்தம்மையாட்கொண்டநாயகனைத்
தாயானதத்துவனைத்தானேயுலகேழு
மாயானையாள்வானைப்பாடுதுங்காணம்மானாய். (௭)

பண்சுமந்தபாடற்பரிசுபடைத்தருளும்
பெண்சுமந்தபாகத்தன்பெம்மான்பெருந்துறையான்
விண்சுமந்தகீர்த்திவியன்மண்டலத்தீசன்
கண்சுமந்தநெற்றிக்கடவுள்கலிமதுரை

மண்சுமந்துகூலிகொண்டக்கோவான்மொத்துண்டு
புண்சுமந்தபொன்மேனிபாடுதுங்காணம்மானாய். (௮)

துண்டப்பிறையான்மறையான்பெருந்துறையான்
கொண்டபுரிநூலான்கோலமாவூர்தியான்
கண்டங்கரியான்செம்மேனியான்வெண்ணீற்றா
னண்டமுதலாயினானந்தமிலாவானந்தம்
பண்டைப்பரிசேபழவடியார்க்கீந்தருளு
மண்டம்வியப்புறுமாபாடுதுங்காணம்மானாய். (௯)

விண்ணாளுந்தேவர்க்குமேலாயவேதியனை
மண்ணாளுமன்னவர்க்குமாண்பாகிநின்றானைத்
தண்ணார்தமிழளிக்குந்தண்பாண்டிநாட்டானைப்
பெண்ணாளும்பாகனைப்பேணுபெருந்துறையிற்
கண்ணார்கழல்காட்டிநாயேனையாட்கொண்ட
வண்ணாமலையானைப்பாடுதுங்காணம்மானாய். (௧௦)

செப்பார்முலைபங்கன்றென்னன்பெருந்துறையான்
றப்பாமேதாளடைந்தார்நெஞ்சுருக்குந்தன்மையினா
னப்பாண்டிநாட்டைச்சிவலோகமாக்குவித்த
வப்பார்சடையப்பனானந்தவார்கழலே
யொப்பாகவொப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய். (௧௧)

மைப்பொலியுங்கண்ணிகேண்மாலயனோடிந்திரனு
மெப்பிறவியுந்தேடவென்னையுந்தன்னின்னருளா
லிப்பிறவியாட்கொண்டினிப்பிறவாமேகாத்து
மெய்ப்பொருட்கட்டோற்றமாய்மெய்யேநிலைபேறா
யெப்பொருட்குந்தானேயாயாவைக்கும்வீடாகு
மப்பொருளாஞ்சிவனைப்பாடுதுங்காணம்மானாய். (௧௨)

கையார்வளைசிலம்பக்காதார்குழையாட
மையார்குழல்புரளத்தேன்பாயவண்டொலிப்பச்
செய்யானைவெண்ணீறணிந்தானைச்சேர்ந்தறியாக்
கையானையெங்குஞ்செறிந்தானையன்பர்க்கு
மெய்யானையல்லாதார்க்கல்லாதவேதியனை
யையாறமர்ந்தானைப்பாடுதுங்காணம்மானாய். (௧௩)

ஆனையாய்க்கீடமாய்மானுடராய்த்தேவரா
யேனைப்பிறவாய்ப்பிறந்திறந்தெய்த்தேனை
யூனையுநின்றுருக்கியென்வினையையோட்டுகந்து

தேனையும்பாலையுங்கன்னலையுமொத்தினிய
கோனவன்போல்வந்தென்னைத்தன்றொழும்பிற்கொண்டருளும
வானவன்பூங்கழலேபாடுதுங்காணம்மானாய். (கச)

சந்திரனைத்தேய்த்தருளித்தக்கன்றன்வேள்வியினி
லிந்திரனைத்தோணெரித்திட்டெச்சன்றலையரிந்
தந்தரமேசெல்லுமலர்கதிரோன்பற்றகர்த்துச்
சிந்தித்திசைதிசையேதேவர்களையோட்டுகந்த
செந்தார்ப்பொழில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
மந்தாரமாலையேபாடுதுங்காணம்மானாய். (கரு)

ஊனாயுயிராயுணர்வாயென்னுட்கலந்து
தேனாயமுதமுமாய்த்தீங்கரும்பின்கட்டியுமாய்
வானோரறியாவழியெமக்குத்தந்தருளுந்
தேனார்மலர்க்கொன்றைச்சேவகனார்சீரொளிசே
ரானாவறிவாயளவிறந்தபல்லுயிர்க்குங்
கோனாகிநின்றவாகூறுதுங்காணம்மானாய். (கசு)

சூடுவேன்பூங்கொன்றைசூடிச்சிவன்றிரடோள்
கூடுவேன்கூடிமுயங்கிமயங்கிநின்
றூடுவேன்செவவாய்க்குருகுவேனுள்ளுருகித்
தேடுவேன்றேடிச்சிவன்கழலேசிந்திப்பேன்
வாடுவேன்பேர்த்துமலர்வேனனலேந்தி
யாடுவான்சேவடியேபாடுதுங்காணம்மானாய். (கஎ)

கிளிவந்தமென்மொழியாள்கேழ்கிளரும்பாதியனை
வெளிவந்தமாலயனுங்காண்பரியவித்தகனைத்
தெளிவந்ததேறலைச்சீரார்பெருந்துறையி
லெளிவந்திருந்திரங்கியெண்ணரியவின்னருளா
லொளிவந்தென்னுள்ளத்தினுள்ளேயொளிதிகழ
வளிவந்தவந்தணனைப்பாடுதுங்காணம்மானாய். (கஅ)

முன்னானைமூவர்க்குமுற்றுமாய்முற்றுக்கும்
பின்னானைப்பிஞ்ஞகனைப்பேணுபெருந்துறையின்
மன்னானைவானவனைமாதியலும்பாதியனைத்
தென்னானைக்காவானைத்தென்பாண்டிநாட்டானை
யென்னானையென்னப்பனென்பார்கட்கின்னமுதை
யன்னானையம்மானைப்பாடுதுங்காணம்மானாய். (ககூ)

பெற்றிபிறர்க்கரியபெம்மான்பெருந்துறையான்
கொற்றக்குதிரையின்மேல்வந்தருளித்தன்னடியார்
குற்றங்கணீக்கிக்குணங்கொண்டுகோதாட்டிச்
சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றொல்புகழே
பற்றியிப்பாசத்தைப்பற்றறநாம்பற்றுவான்
பற்றியபேரானந்தம்பாடுதுங்காணம்மானாய். (௨0)

திருச்சிற்றம்பலம்.

# திருப்பொற்சுண்ணம்.

## ஆனந்தமனோலயம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற்றாமம்பூமாலைதூக்கி
முளைக்குடந்தூபநற்றீபம்வைம்மின்
சத்தியுஞ்சோமியும்பார்மகளு
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கௌரியும்பார்ப்பதியுங்
கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧)

பூவியல்வார்சடையெம்பிராற்குப்
பொற்றிருச்சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்வடுவகிரன்னகண்ணீர்
வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமே
குனிமின்றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. (௨)

சுந்தரநீறணிந்தும்மெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி

யிந்திரன்கற்பகநாட்டியெங்கு
மெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயன்றன்பெருமா
னாழியானாதனல்வேலன்றாதை
யெந்தரமாளுமையாள்கொழுநற்
கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே. (௩)

காசணிமின்களுலக்கையெல்லாங்
காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்க
ணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறித்துநின்று
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௪)

அறுகெடுப்பாரயனும்மரியு
மன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லா
நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லி
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௫)

உலக்கைபலவோச்சுவார்பெரிய
ருலகமெலாமுரல்போதாதென்றே
கலக்கவடியவர்வந்துநின்றார்
காணவுலகங்கள்போதாதென்றே
நலக்கவடியோமையாண்டுகொண்டு
நாண்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடி
மகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே. (௬)

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்ப
நாமுமவர்தம்மையார்ப்பவார்ப்ப

பாடகமெல்லடியார்க்குமங்கை
பங்கினனெங்கள்பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௭)

வாட்டடங்கண்மடமங்கைநல்லீர்
வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்கத்
தோட்டிருமுண்டந்துதைந்திலங்கச்
சோற்றெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
யாட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௮)

வையகமெல்லாமுரலதாக
மாமேருவென்னுமுலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறையவட்டி
மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்
செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாணனுக்கே
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௯)

முத்தணிகொங்கைகளாடவாட
மொய்குழல்வண்டினமாடவாடச்
சித்தஞ்சிவனொடுமாடவாடச்
செங்கயற்கண்பனியாடவாடப்
பித்தெம்பிரானொடுமாடவாட
பிறவிபிறரொடுமாடவாட
வத்தன்கருணையொடாடவாட
வாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧௦)

மாடுநகைவாணிலாவெறிப்ப
வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமினந்தம்மையாண்டவாறும்
பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம்பெருமானைத்தேடிச்
சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (௧௧)

மையமர்கண்டனைவானநாடர்
மருந்தினைமாணிக்கக்கூத்தன்றன்னை
யையனையையர்பிரானைநம்மை
யகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனைமெய்யர்மெய்யைப்
போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோட்
பையரவல்குன்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கஉ)

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்
வெண்ணகைப்பண்ணமர்மென்மொழியீ
ரென்னுடையாரமுதெங்களப்ப
னெம்பெருமானிமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்றகப்பன்
றமையனெம்மையன்றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (கங)

சங்கமரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கையிரைப்பவராவிரைக்குங
கற்றைச்சடைமுடியான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (கச)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,
அடையாறு, சென்னை-20.

ஞானக்கரும்பின்றெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானற்றடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. (கரு)

ஆவகைநாமும்வந்தன்பர்தம்மோ
டாட்செயும்வண்ணங்கள்பாடிவிண்மேற்
றேவர்கனவிலுங்கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்

சேவகமேந்தியவெல்கொடியான்
  சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகனாமங்கள்பாடிப்பாடிச்
  செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. (கசு)

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்
  சிவபுரம்பாடித்திருச்சடைமேல்
வானகமாமதிப்பிள்ளைபாடி
  மால்விடைபாடிவலக்கையேந்து
மூனகமாமழுச்சூலம்பாடி
  யும்பருமிம்பருமுய்யவன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்
  பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. (கஎ)

அயன்றலைகொண்டுசெண்டாடல்பாடி
  யருக்கனெயிறுபறித்தல்பாடிக்
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
  காலனைக்காலாலுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புரமெய்தல்பாடி
  யேழையடியோமையாண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடி
  நாதற்குச்சுண்ணமிடித்துநாமே. (கஅ)

வட்டமலர்க்கொன்றைமாலைபாடி
  மத்தமும்பாடிமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்றில்லைபாடிச்
  சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்
கட்டியமாசுணக்கச்சைபாடிக்
  கங்கணம்பாடிக்கவித்தகைம்மே
லிட்டுநின்றாடுமரவம்பாடி
  யீசற்குச்சுண்ணமிடித்துநாமே. (ககூ)

வேதமும்வேள்வியுமாயினார்க்கு
  மெய்ம்மையும்பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்குத்
  துன்பமுமாயின்பமாயினார்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினார்க்குப்
  பந்தமுமாய்வீடுமாயினாருக்
காதியுமந்தமுமாயினாருக்
  காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. (உ0)

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோத்தும்பி.

## சிவனோடைக்கியம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூவேறுகோனும்புரந்தரனும்பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாரணனுநான்மறையு
மாவேறுசோதியும்வானவருந்தாமறியாச்
சேவேறுசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧)

நானாரென்னுள்ளமார்ஞானங்களாரென்னையாரறிவார
வானோர்பிரானென்னையாண்டிலனேன்மதிமயங்கி
யூனாருடைதலையிலுண்பலிதேரம்பலவன்
றேனார்கமலமேசென்றூதாய்கோத்தும்பீ. (௨)

தினைத்தனையுள்ளதோர்பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும்புண்ணெகவானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௩)

கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பிலென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௪)

அத்தேவர்தேவரவர்தேவரென்றிங்ஙன்
பொய்த்தேவுபேசிப்புலம்புகின்றபூதலத்தே
பத்தேதுமில்லாதென்பற்றறநான்பற்றிநின்ற
மெய்த்தேவர்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௫)

வைத்தநிதிபெண்டீர்மக்கள்குலங்கல்வியென்னும்
பித்தவுலகிற்பிறப்போடிறப்பென்னுஞ்
சித்தவிகாரக்கலக்கந்தெளிவித்த
வித்தகத்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௬)

சட்டோநினைக்கமனத்தமுதாஞ்சங்கரனைக்
கெட்டேன்மறப்பேனோகேடுபடாத்திருவடியை
யொட்டாதபாவித்தொழும்பரைநாமுருவறியோஞ்
சிட்டாயசிட்டற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௭)

ஒன்றாய்முளைத்தெழுந்தெத்தனையோகவடுவிட்டு
நன்றாகவைத்தென்னைநாய்சிவிகையேற்றுவித்த
வென்றாதைதாதைக்குமெம்மனைக்குந்தம்பெருமான்
குன்றாதசெல்வற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௮)

கரணங்களெல்லாங்கடந்துநின்றகறைமிடற்றன்
சரணங்களேசென்றுசார்தலுமேதானெனக்கு
மரணம்பிறப்பென்றிவையிரண்டின்மயக்கறுத்த
கருணைக்கடலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௯)

நோயுற்றுமூத்துநானுந்துகன்றாயிங்கிருந்து
நாயுற்றசெல்வநயந்தறியாவண்ணமெல்லாந்
தாயுற்றுவந்தென்னையாண்டுகொண்டதன்கருணைத்
தேயுற்றசெல்வற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧0)

வன்னெஞ்சக்கள்வன்மனவலியனென்னாதே
கன்னெஞ்சுருக்கிக்கருணையினாலாண்டுகொண்ட
வன்னந்திளைக்குமணிதில்லையம்பலவன்
பொன்னங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧௧)

நாயேனைத்தன்னடிகள்பாடுவித்தநாயகனைப்
பேயேனதுள்ளப்பிழைபொறுக்கும்பெருமையனைச்
சீயேதுமில்லாதென்செய்பணிகள்கொண்டருளுந்
தாயானவீசற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧௨)

நான்றனக்கன்பின்மைநானுந்தானுமறிவோந்
தானென்னையாட்கொண்டதெல்லாருந்தாமறிவா
ரானகருணையுமங்குற்றேதானவனே
கோனென்னைக்கூடக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ. (௧௩)

கருவாயுலகினுக்கப்புறமாயிப்புறத்தே
மருவார்மலர்க்குழன்மாதினொடும்வந்தருளி
யருவாய்மறைபயிலந்தணனாயாண்டுகொண்ட
திருவானதேவற்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧௪)

நானுமென்சிந்தையுநாயகனுக்கெவ்விடத்தோந்
தானுந்தன்றையலுந்தாழ்சடையோனுண்டிலனேல்

வானுந்திசைகளுமாகடலுமாயபிரான்
றேனுந்துசேவடிக்கேசென்றூதாய்சோத்தும்பீ. (௧௫)

உள்ளப்படாததிருவுருவையுள்ளுதலுங்
கள்ளப்படாதகளிவந்தவான்கருணை
வெள்ளப்பிரானெம்பிரானென்னைவேறேயாட்
கொள்ளப்பிரானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧௬)

பொய்யாயசெல்வத்தேபுக்கழுந்திநாடோறு
மெய்யாக்கருதிக்கிடந்தேனையாட்கொண்ட
ஐயாவென்னாருயிரேயம்பலவாவென்றவன்றன்
செய்யார்மலரடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧௭)

தோலுந்துகிலுங்குழையுஞ்சுருடோடும்
பால்வெள்ளைநீறும்பசுஞ்சாந்தும்பைங்கிளியுஞ்
சூலமுந்தொக்கவளையுமுடைத்தொன்மைக்
கோலமேநோக்கிக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ. (௧௮)

கள்வன்கடியன்கலதியிவனென்னாதே
வள்ளல்வரவரவந்தொழிந்தானென்மனத்தே
யுள்ளத்துறுதுயரொன்றொழியாவண்ணமெல்லாந்
தெள்ளுங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௧௯)

பூமேலயனோடுமாலும்புகலரிதென்
றேமாறிநிற்கவடியேனிறுமாக்க
நாய்மேற்றவிசிட்டுநன்றாப்பொருட்படுத்த
தீமேனியானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ. (௨0)

திருச்சிற்றம்பலம்.

# திருத்தெள்ளேணம்.

## சிவனோடடைவு.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனாயாண்டுகொண்டா
னொருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧)

திருவார்பெருந்துறைமேயபிரானென்பிறவிக்
கருவேரறுத்தபின்யாவரையுங்கண்டதில்லை
யருவாயுருவமுமாயபிரானவன்மருவுந்
திருவாரூர்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௨)

அரிக்கும்பிரமற்குமல்லாததேவர்கட்குந்
தெரிக்கும்படித்தன்றிநின்றசிவம்வந்துநம்மை
யுருக்கும்பணிகொள்ளுமென்பதுகேட்டுலகமெல்லாஞ்
சிரிக்குந்திறம்பாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௩)

அவமாயதேவரவகதியிலழுந்தாமே
பவமாயங்காத்தென்னையாண்டுகொண்டபரஞ்சோதி
நவமாயசெஞ்சுடர்நல்குதலுநாமொழிந்து
சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௪)

அருமந்ததேவரயன்றிருமாற்கரியசிவ
முருவந்துபூதலத்தோருகப்பெய்தக்கொண்டருளிக்
கருவெந்துவீழக்கடைக்கணித்தென்னுளம்புகுந்த
திருவந்தவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௫)

அரையாடுநாகமசைத்தபிரானவனியின்மேல்
வரையாடுமங்கைதன்பங்கொடும்வந்தாண்டதிற
முரையாடவுள்ளொளியாடவொண்மாமலர்க்கண்களினீர்த்
திரையாடுமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௬)

ஆவாவரியயனிந்திரன்வானோர்க்கரியசிவன்
வாவாவென்றென்னையும்பூதலத்தேவலித்தாண்டுகொண்டான்
பூவாரடிச்சுவடென்றலைமேற்பொறித்தலுமே
தேவானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௭)

கறங்கோலைபோல்வதோர்காயப்பிறப்போடிறப்பென்னு
மறம்பாவமென்றிரண்டச்சந்தவிர்த்தென்னையாண்டுகொண்டான்
மறந்தேயுந்தன்கழனான்மறவாவண்ணநல்கியவத்
திறம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௮)

கன்னாருரித்தென்னவென்னையுந்தன்கருணையினாற்
பொன்னார்கழல்பணித்தாண்டபிரான்புகழ்பாடி
மின்னேர்நுடங்கிடைச்செந்துவர்வாய்வெண்ணகையீர்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ. (௯)

கனவேயுந்தேவர்கள்காண்பரியகனைகழலோன்
புனவேயனவளைத்தோளியொடும்புகுந்தருளி

நனவேயெனைப்பிடித்தாட்கொண்டவாநயந்துநெஞ்சஞ்
சினவேற்கணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௦)

கயன்மாண்டகண்ணிதன்பங்கனெனைக்கலந்தாண்டலுமே
யயன்மாண்டருவினைச்சுற்றமுமாண்டவனியின்மேன
மயன்மாண்டுமற்றுள்ளவாசகமாண்டென்னுடைய
செயன்மாண்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௧)

முத்திக்குழன்றுமுனிவர்குழாநனிவாட
வத்திக்கருளியடியேனையாண்டுகொண்டு
பத்திக்கடலுட்பதித்தபரஞ்சோதி
தித்திக்குமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௨)

பார்பாடும்பாதாளர்பாடும்விண்ணோர்தம்பாடு
மார்பாடுஞ்சாராவகையருளியாண்டுகொண்ட
நேர்பாடல்பாடிநினைப்பரியதனிப்பெரியோன்
சீர்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௩)

மாலேபிரமனேமற்றொழிந்ததேவர்களே
நூலேநுழைவரியானுண்ணியனாய்வந்தடியேன்
பாலேபுகுந்துபரிந்துருக்கும்பாவகத்தாற்
சேலேர்கண்ணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௪)

உருகிப்பெருகியுளங்குளிரமுகந்துகொண்டு
பருகற்கினியபரங்கருணைத்தடங்கடலை
மருவித்திகழ்தென்னன்வார்கழலேநினைந்தடியோந்
திருவைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௫)

புத்தன்புரந்தராதியயன்மால்போற்றிசெயும்
பித்தன்பெருந்துறைமேயபிரான்பிறப்பறுத்த
வத்தனணிதில்லையம்பலவனருட்கழல்கள்
சித்தம்புகுந்தவாதெள்ளேணங்கொட்டாமோ. (௧௬)

உவலைச்சமயங்களொவ்வாதசாத்திரமாஞ்
சவலைக்கடலுளனாய்க்கிடந்துதடுமாறுங்
கவலைக்கெடுத்துக்கழலிணைகடந்தருளுஞ்
செயலைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௭)

வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினுந்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ. (௧௮)

விண்ணோர்முழுமுதல்பாதாளத்தார்வித்து
மண்ணோர்மருந்தயன்மாலுடையவைப்படியோங்
கண்ணாரவந்துநின்றான்கருணைக்கழல்பாடித்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ. (கக)

குலம்பாடிக்கொக்கிறகும்பாடிக்கோல்வளையா
ணலம்பாடிநஞ்சுண்டவாபாடிநாடோறு
மலம்பார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
சிலம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ. (உ0)

திருச்சிற்றம்பலம்.

# திருச்சாழல்.

## சிவனுடையகாருணியம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவவுயிர்க்குமியல்பானான்சாழலோ. (க)

என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றுன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ. (உ)

கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடீ
தாயுமிலிதந்தையிலிதான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ. (ங)

அயனையநங்கனையந்தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயாவடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடையநாயகனேதண்டித்தாற்
சயமன்றோவானவர்க்குத்தாழ்குழலாய்சாழலோ. (ச)

தக்கனையுமெச்சனையுந்தலையறுத்துத்தேவர்கணந்
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்ததுதானென்னேடீ
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்குமிகைத்தலைமற்றருளினன்காண்சாழலோ. (௫)

அலரவனுமாலவனுமறியாமேயழலுருவாய்
நிலமுதற்கீழண்டமுறநின்றதுதானென்னேடீ
நிலமுதற்கீழண்டமுறநின்றிலனேலிருவருந்தஞ்
சலமுகத்தாலாங்காரந்தவிரார்காண்சாழலோ. (௬)

மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ. (௭)

கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர்தானென்னேடீ
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீடுவர்காண்சாழலோ. (௮)

தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ. (௯)

தானந்தமில்லான்றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ
யானந்தவெள்ளத்தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ. (௧௦)

நங்காயிதென்னதவநரம்போடெலும்பணிந்து
கங்காளந்தோண்மேலேகாதலித்தான்காணேடீ
கங்காளமாமாகேள்காலாந்தரத்திருவர்
தங்காலஞ்செய்யத்தரித்தனன்காண்சாழலோ. (௧௧)

கானார்புலித்தோலுடைதலையூண்காடுபதி
யானாலவனுக்கிங்காட்படுவாராரேடீ
யானாலுங்கேளாயயனுந்திருமாலும்
வானாடர்கோவும்வழியடியார்சாழலோ. (௧௨)

மலையரையன்பொற்பாவைவாணுதலாள்பெண்டிருவை
யுலகறியத்தீவேட்டானென்னுமதுவென்னேடீ

யுலகறியத்தீவேளாதொழிந்தனனேலுலகனைத்துங்
கலைநவின்றபொருள்களெல்லாங்கலங்கிடுங்காண்சாழலோ. (௧௩)

தேன்புக்கதண்பணைசூழ்தில்லைச்சிற்றம்பலவன்
றான்புக்குநட்டம்பயிலுமதுவென்னேடீ
தான்புக்குநட்டம்பயின்றிலனேற்றரணியெல்லா
மூன்புக்கவேற்காளிக்கூட்டாங்காண்சாழலோ. (௧௪)

கடகரியும்பரிமாவுந்தேருமுகந்தேறாதே
யிடபமுகந்தேறியவாறெனக்கறியவியம்பேடீ
தடமதில்களவைமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான்றிருமால்காண்சாழலோ. (௧௫)

நன்றாகநால்வர்க்குநான்மறையினுட்பொருளை
யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தான்காணேடீ
யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தானாயிடினுங்
கொன்றான்காண்புரமூன்றுங்கூட்டோடேசாழலோ. (௧௬)

அம்பலத்தேகூத்தாடியமுதுசெயப்பலிதிரியு
நம்பனையுந்தேவனென்றுநண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாமாகேணான்மறைகடாமறியா
வெம்பெருமானீசாவென்றேத்தினகாண்சாழலோ. (௧௭)

சலமுடையசலந்தரன்றனுடறடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன்றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்றனயனமிடந்தரனடிக்கீ
ழலராகவிடவாழியருளினன்காண்சாழலோ. (௧௮)

அம்பரமாம்புள்ளித்தோலாலாலமாரமுத
மெம்பெருமானுண்டசதுரெனக்கறியவியம்பேடீ
யெம்பெருமானேதுடுத்தங்கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமைதானறியாத்தன்மையன்காண்சாழலோ. (௧௯)

அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான்கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கைதெரியாகாண்சாழலோ. (௨௦)

திருச்சிற்றம்பலம்.

MAHAMAHO...
DR. U.V. SWAMINATHA IYER LIB...

# திருப்பூவல்லி.

## மாயாவிசயநீக்குதல்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

### இதுவுமது.

திருச்சிற்றம்பலம்.

இணையார்திருவடியென்றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந்துறந்தொழிந்தே
னணையார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧)

எந்தையெந்தாய்சுற்றமற்றுமெல்லாமென்னுடைய
பந்தமறுத்தென்னையாண்டுகொண்டபாண்டிப்பிரா
னந்தவிடைமருதிலானந்தத்தேனிருந்த
பொந்தைப்பரவிநாம்பூவல்லிகொய்யாமோ. (௨)

நாயிற்கடைப்பட்டநம்மையுமோர்பொருட்படுத்துத்
தாயிற்பெரிதுந்தயாவுடையதம்பெருமான்
மாயப்பிறப்பறுத்தாண்டானென்வல்வினையின்
வாயிற்பொடியட்டிப்பூவல்லிகொய்யாமோ. (௩)

பண்பட்டதில்லைப்பதிக்கரசைப்பரவாதே
யெண்பட்டதக்கனருக்கனெச்சனிந்துவனல்
விண்பட்டபூதப்படைவீரபத்திரராற்
புண்பட்டவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௪)

தேனாடுகொன்றைசடைக்கணிந்தசிவபெருமா
னூனாடிநாடிவந்துள்புகுந்தானுலகர்முன்னே
நானாடியாடிநின்றோலமிடநடம்பயிலும்
வானாடர்கோவுக்கேபூவல்லிகொய்யாமோ. (௫)

எரிமூன்றுதேவர்க்கிரங்கியருள்செய்தருளிச்
சிரமூன்றறத்தன்றிருப்புருவநெரித்தருளி
யுருமூன்றுமாகியுணர்வரிதாமொருவனுமே
புரமூன்றெரித்தவாபூவல்லிகொய்யாமோ. (௬)

வணங்கத்தலைவைத்துவார்கழல்வாய்வாழ்த்தவைத்
திணங்கத்தன்சீரடியார்கூட்டமும்வைத்தெம்பெருமா

ணங்கொடணிதில்லையம்பலத்தேயாடுகின்ற
குணங்கூரப்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௭)

நெறிசெய்தருளித்தன்சீரடியார்பொன்னடிக்கே
குறிசெய்துகொண்டென்னையாண்டபிரான்குணம்பரவி
முறிசெய்துநம்மைமுழுதுடற்றும்பழவினையைக்
கிறிசெய்தவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௮)

பன்னாட்பரவிப்பணிசெய்யப்பாதமல
ரென்னாகந்துன்னவைத்தபெரியோனெழிற்சுடராய்க்
கன்னாருரித்தென்னையாண்டுகொண்டான்கழலிணைகள்
பொன்னானவாபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௯)

பேராசையாமிந்தப்பிண்டமறப்பெருந்துறையான்
சீரார்திருவடியென்றலைமேல்வைத்தபிரான்
காரார்கடனஞ்சையுண்டுகந்தகாபாலி
போரார்புரம்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௦)

பாலுமமுதமுந்தேனுடனாம்பராபரமாய்க்
கோலங்குளிர்ந்துள்ளங்கொண்டபிரான்குரைகழல்கண்
ஞாலம்பரவுவார்நன்னெறியாமந்நெறியே
போலும்புகழ்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௧)

வானவன்மாலயன்மற்றுமுள்ளதேவர்கட்குங்
கோனவனாய்நின்றுகூடலிலாக்குணக்குறியோ
னானநெடுங்கடலாலாலமமுதுசெய்யப்
போனகமானவாபூவல்லிகொய்யாமோ. (௧௨)

அன்றாலநீழற்கீழருமறைகடானருளி
நன்றாகவானவர்மாமுனிவர்நாடோறு
நின்றாரவேத்துநிறைகழலோன்புனைகொன்றைப்
பொன்றாதுபாடிநாம்பூவவலிகொய்யாமோ. (௧௩)

படமாகவென்னுள்ளேதன்னிணைப்போதவையளித்திங்
கிடமாகக்கொண்டிருந்தேகம்பமேயபிரான்
றடமார்மதிற்றில்லையம்பலமேதானிடமா
நடமாடுமோபாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௪)

அங்கியருக்கனிராவணனந்தகன்கூற்றன்
செங்கணரியயனிந்திரனுஞ்சந்திரனும்
பங்கமிறக்கனுமெச்சனுந்தம்பரிசழியப்
பொங்கியசீர்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௫)

திண்போர்விடையான்சிவபுரத்தார்போரேறு
மண்பான்மதுரையிற்பிட்டமுதுசெய்தருளித்
தண்டாலேபாண்டியன்றன்னைப்பணிகொண்ட
புண்பாடல்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௬)

முன்னாயமாலயனும்வானவருந்தானவரும்
பொன்னார்திருவடிதாமறியார்போற்றுவதே
யென்னாகமுள்புகுந்தாண்டுகொண்டானிலங்கணியாம்
பன்னாகம்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ. (௧௭)

சீரார்திருவடித்திண்சிலம்புசிலம்பொலிக்கே
யாராதவாசையதாயடியேனகமகிழத்
தேரார்ந்தவீதிப்பெருந்துறையான்றிருநடஞ்செய்
பேரானந்தம்பாடிப்பூவல்லிகொய்யாமோ. (௧௮)

அத்தியுரித்ததுபோர்த்தருளும்பெருந்துறையான்
பித்தவடிவுகொண்டிவ்வுலகிற்பிள்ளையுமா
முத்திமுழுமுதலுத்தரகோசமங்கைவள்ளல்
புத்திபுகுந்தவாபூவல்லிகொய்யாமோ. (௧௯)

திருச்சிற்றம்பலம்.

---

# திருவுந்தியார்.

---

## ஞானவெற்றி.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

கலித்தாழிசை.

திருச்சிற்றம்பலம்.

வளைந்ததுவில் லுவிளைந்ததுபூச
லுளைந்தனமுப்புரமுந்தீபற
வொருங்குடன்வெந்தவாறுந்தீபற. (௧)

ஈரம்புகண்டிலமேகம்பர்தங்கையி
லோரம்பேமுப்புரமுந்தீபற
வொன்றும்பெருமிகையுந்தீபற. (௨)

தச்சுவிடுத்தலுந்தாமடியிட்டலு
மச்சுமுறிந்ததென்றுந்தீபற
வழிந்தனமுப்புரமுந்தீபற. (௩)

உய்யவல்லாரொருமூவரைக்காவல்கொண்
டெய்யவல்லானுக்கேயுந்தீபற
விளமுலைபங்கனென்றுந்தீபற. (௪)

சாடியவேள்விசரிந்திடத்தேவர்க
ளோடியவாபாடியுந்தீபற
வுருத்திரநாதனுக்குந்தீபற. (௫)

ஆவாதிருமாலவிப்பாகங்கொண்டன்று
சாவாதிருந்தானென்றுந்தீபற
சதுர்முகன்றாதையென்றுந்தீபற. (௬)

வெய்யவனங்கிவிழுங்கத்திரட்டிய
கையைத்தறித்தானென்றுந்தீபற
கலங்கிற்றுவேள்வியென்றுந்தீபற. (௭)

பார்ப்பதியைப்பகைசாற்றியதக்கனைப்
பார்ப்பதென்னேயேடியுந்தீபற
பணைமுலைபாகனுக்குந்தீபற. (௮)

புரந்தரனாரொருபூங்குயிலாகி
மரந்தனிலேறினாருந்தீபற
வானவர்கோனென்றேயுந்தீபற. (௯)

வெஞ்சினவேள்விவியாத்திரனார்தலை
துஞ்சினவாபாடியுந்தீபற
தொடர்ந்தபிறப்பறவுந்தீபற. (௧௦)

ஆட்டின்றலையைவிதிக்குத்தலையாகக்
கூட்டியவாபாடியுந்தீபற
கொங்கைகுலுங்கநின்றுந்தீபற. (௧௧)

உண்ணப்புகுந்தபகனொளித்தோடாமே
கண்ணைப்பறித்தவாறுந்தீபற
கருக்கெடநாமெலாமுந்தீபற. (௧௨)

நாமகணாசிசிரம்பிரமன்படச்
சோமன்முகனெரித்துந்தீபற
தொல்லைவினைகெடவுந்தீபற. (௧௩)

நான்மறையோனுமகத்தியமான்படப்
போம்வழிதேடுமாறுந்தீபற
புரந்தரன்வேள்வியிலுந்தீபற. (௧௪)

சூரியனார்தொண்டைவாயினிற்பற்களை
வாரிநெரித்தவாறுந்தீபற
மயங்கிற்றுவேள்வியென்றுந்தீபற. (௧௫)

தக்கனாரன்றேதலையிழந்தார்தக்கன்
மக்களைச்சூழநின்றுந்தீபற
மடிந்ததுவேள்வியென்றுந்தீபற. (௧௬)

பாலகனார்க்கன்றுபாற்கடலீந்திட்ட
கோலச்சடையற்கேயுந்தீபற
குமரன்றன்றாதைக்கேயுந்தீபற. (௧௭)

நல்லமலரின்மேனான்முகனார்தலை
யொல்லையரிந்ததென்றுந்தீபற
வுகிராலரிந்ததென்றுந்தீபற. (௧௮)

தேரைநிறுத்திமலையெடுத்தான்சிர
மீரைந்துமிற்றவாறுந்தீபற
விருபதுமிற்றதென்றுந்தீபற. (௧௯)

திருச்சிற்றம்பலம்.

# திருத்தோணோக்கம்.

## பிரபஞ்சசுத்தி.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூத்தாரும்பொய்கைப்புனலிதுவேயெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குறும்பேதைகுணமாகாமே
தீர்த்தாய்திகழ்தில்லையம்பலத்தேதிருநடஞ்செய்
கூத்தாவுன்சேவடிகூடும்வண்ணந்தோணோக்கம். (௧)

என்றும்பிறந்திறந்தாழாமேயாண்டுகொண்டான்
கன்றால்விளவெறிந்தான்பிரமன்காண்பரிய
குன்றாதசீர்த்தில்லையம்பலவன்குணம்பரவித்
துன்றார்குழலினீர்தோணோக்கமாடாமோ. (௨)

பொருட்பற்றிச்செய்கின்றபூசனைகள்போல்விளங்கச்
செருப்புற்றசீரடிவாய்க்கலசமூனமுதம்

விருப்புற்றுவேடனார்சேடறியமெய்குளிர்ந்தங்
கருட்பெற்றுநின்றவாதோணோக்கமாடாமோ. (௩)

கற்போலுநெஞ்சங்கசிந்துருகக்கருணையினா
னிற்பானைப்போலவென்னெஞ்சினுள்ளேபுகுந்தருளி
நற்பாற்படுத்தென்னைநாடறியத்தானிங்ஙன்
சொற்பாலதானவாதோணோக்கமாடாமோ. (௪)

நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனாயமைந்தனோடெண்வகையாய்ப்புணர்ந்துநின்றா
னுலகேழெனத்திசைபத்தெனத்தானொருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ. (௫)

புத்தன்முதலாயபுல்லறிவிற்பல்சமயந்
தத்தமதங்களிற்றட்டுளுப்புப்பட்டுநிற்கச்
சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கு
மத்தன்கருணையினாற்றோணோக்கமாடாமோ. (௬)

தீதில்லைமாணிசிவகருமஞ்சிதைத்தானைச்
சாதியும்வேதியன்றாதைதனைத்தாளிரண்டுஞ்
சேதிப்பவீசன்றிருவருளாற்றேவர்தொழப்
பாதகமேசோறுபற்றினவாதோணோக்கம். (௭)

மானமழிந்தோமதிமறந்தோமங்கைநல்லீர்
வானந்தொழுந்தென்னன்வார்கழலேநினைந்தடியோ
மானந்தக்கூத்தனருள்பெறினாமவ்வணமே
யானந்தமாகிநின்றாடாமோதோணோக்கம். (௮)

எண்ணுடைமூவரிராக்கதர்களெரிபிழைத்துக்
கண்ணுதலெந்தைகடைத்தலைமுன்னின்றதற்பி
னெண்ணிலியிந்திரரெத்தனையோபிரமர்களு
மண்மிசைமால்பலர்மாண்டனர்காண்டோணோக்கம். (௯)

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கண்ணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாந்தோணோக்கமாடாமோ. (௧௦)

காமனுடலுயிர்காலன்பற்காய்கதிரோ
னாமகணாசிசிரம்பிரமன்கரமெரியைச்
சோமன்கலைதலைதக்கனையுமெச்சனையுந்
தூய்மைகள்செய்தவாதோணோக்கமாடாமோ. (௧௧)

பிரமனரியென்றிருவருந்தம்பேதைமையாற்
பரமமியாம்பரமமென்றவர்கள்பதைபபொடுங்க
வரனூரழலுருவாயங்கேயளவிறந்து
பரமாகிநின்றவாதோணோக்கமாடாமோ. (கஉ)

ஏழைத்தொழும்பனேனெத்தனையோகாலமெல்லாம்
பாழுக்கிறைத்தேன்பரம்பரனைப்பணியாதே
யூழிமுதற்சிந்தாதநன்மணிவந்தென்பிறவித்
தாழைப்பறித்தவாதோணோக்கமாடாமோ. (கங)

உரைமாண்டவுள்ளொளியுத்தமன்வந்துளம்புகலுங்
கரைமாண்டகாமப்பெருங்கடலைக்கடத்தலுமே
யிரைமாண்டவிந்திரியப்பறவையிரிந்தோடத்
துரைமாண்டவாபாடித்தோணோக்கமாடாமோ. (கச)

திருச்சிற்றம்பலம்.

---

# திருப்பொன்னூசல்.

---

## அருட்சுத்தி.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

---

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சீரார்பவளங்கான்முத்தங்கயிறாக
வேராரும்பொற்பலகையேறியினிதமர்ந்து
நாராயணனறியாநாண்மலர்த்தாளடியேற்
கூராகத்தந்தருளுமுத்தரகோசமங்கை
யாராவமுதினருட்டாளிணைபாடிப்
போரார்வேற்கண்மடவீர்பொன்னூசலாடாமோ. (க)

மூன்றங்கிலங்குநயனத்தன்மூவாத
வான்றங்குதேவர்களுங்காணாமலரடிக
டேன்றங்கித்தித்திததமுதூறித்தான்றெளிந்தங்
கூன்றங்கிநின்றுருக்குமுத்தரகோசமங்கைக்
கோன்றங்கிடைமருதுபாடிக்குலமஞ்ஞை
போன்றங்கனநடையீர்பொன்னூசலாடாமோ. (உ)

முன்னீறுமாதியுமில்லான்முனிவர்குழாம்
பன்னூறுகோடியிமையோர்கடாநிற்பத்

தன்னீறெனக்கருளித்தன்கருணைவெள்ளத்து
மன்னூறமன்னுமணியுத்தரகோசமங்கை
மின்னேறுமாடவியன்மாளிகைபாடிப்
பொன்னேறுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (௩)

நஞ்சமர்கண்டத்தனண்டத்தவர்நாதன்
மஞ்சுதோய்மாடமணியுத்தரகோசமங்கை
யஞ்சொலாடன்னோடுங்கூடியடியவர்க
ணெஞ்சுளேநின்றமுதமூறிக்கருணைசெய்து
துஞ்சல்பிறப்பறுப்பான்றூயபுகழ்பாடிப்
புஞ்சமார்வெள்வளையீர்பொன்னூசலாடாமோ. (௪)

ஆணோவலியோவரிவையோவென்றிருவர்
காணாக்கடவுள்கருணையினாற்றேவர்குழா
நாணாமேயுய்யவாட்கொண்டருளிநஞ்சுதனை
யூணாகவுண்டருளுமுத்தரகோசமங்கைக்
கோணார்பிறைச்சென்னிக்கூத்தன்குணம்பரவிப்
பூணார்வனமுலையீர்பொன்னூசலாடாமோ. (௫)

மாதாடுபாகத்தனுத்தரகோசமங்கைத் *
தாதாடுகொன்றைச்சடையானடியாருட்
கோதாட்டிநாயேனையாட்கொண்டென்றொல்பிறவித்
தீதோடாவண்ணந்திகழப்பிறப்பறுப்பான்
காதாடுகுண்டலங்கள்பாடிக்கசிந்தன்பாற்
போதாடுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (௬)

உன்னற்கரியதிருவுத்தரகோசமங்கை
மன்னிப்பொலிந்திருந்தமாமறையோன்றன்புகழே
பன்னிப்பணிந்திறைஞ்சப்பாவங்கள்பற்றறுப்பா
னன்னத்தின்மேலேறியாடுமணிமயில்போ
லென்னத்தனென்னையுமாட்கொண்டானெழில்பாடிப்
பொன்னொத்தபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (௭)

கோலவரைக்குடுமிவந்துகுவலயத்துச்
சாலவமுதுண்டுதாழ்கடலின்மீதெழுந்து
ஞாலமிகப்பரிமேற்கொண்டுநமையாண்டான்
சீலந்திகழுந்திருவுத்தரகோசமங்கை
மாலுக்கரியானைவாயாரநாம்பாடிப்
பூலித்தகங்குழைந்துபொன்னூசலாடாமோ. (௮)

தெங்குலவுசோலைத்திருவுத்தரகோசமங்கை
தங்குலவுசோதித்தனியுருவம்வந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொள்வான்
பங்குலவுகோதையுந்தானும்பணிகொண்ட
கொங்குலவுகொன்றைச்சடையான்குணம்பரவிப்
பொங்குலவுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ. (கூ)

திருச்சிற்றம்பலம்.

# அன்னைப்பத்து.

## ஆத்துமபூரணம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்
நாதப்பறையினரன்னேயென்னும்
நாதப்பறையினர்நான்முகன்மாலுக்கு
நாதரிந்நாதனாரன்னேயென்னும். (க)

கண்ணஞ்சனத்தர்கருணைக்கடலின
ருண்ணின்றுருக்குவரன்னேயென்னும்
முண்ணின்றுருக்கியுலப்பிலாவானந்தக்
கண்ணீர்தருவராலன்னேயென்னும். (உ)

நித்தமணாளர்நிரம்பவழகியர்
சித்தத்திருப்பராலன்னேயென்னுஞ்
சித்தத்திருப்பவர்தென்னன்பெருந்துறை
யத்தரானந்தராலன்னேயென்னும். (ங)

ஆடரப்பூணுடைத்தோல்பொடிப்பூசிற்றோர்
வேடமிருந்தவாறன்னேயென்னும்
வேடமிருந்தவாகண்டுகண்டென்னுள்ளம்
வாடுமிதுவென்னேயன்னேயென்னும். (ச)

நீண்டகரத்தர்நெறிதருகுஞ்சியர்
பாண்டிநன்னாடராலன்னேயென்னும்

பாண்டிநன்னாடர்பரங்தெழுசிந்தையை
யாண்டன்புசெய்வராலன்னேயென்னும். (௫)

உன்னற்கரியசீருத்தரமங்கையர்
மன்னுவதென்னெஞ்சிலன்னேயென்னு
மன்னுவதென்னெஞ்சின்மாலயன்காண்கிலா
ரென்னவதிசயமன்னேயென்னும். (௬)

வெள்ளைக்கலிங்கத்தர்வெண்டிருமுண்டத்தர்
பள்ளிக்குப்பாயத்தரன்னேயென்னும்
பள்ளிக்குப்பாயத்தர்பாய்பரிமேல்கொண்டெ
ன்னுள்ளங்கவர்வராலன்னேயென்னும். (எ)

தாளியறுகினர்சந்தனச்சாந்தினா
ராளெம்மையாள்வராலன்னேயென்னு
மாளெம்மையாளுமடிகளார்தங்கையிற்
றாளமிருந்தவாறன்னேயென்னும். (அ)

தையலோர்பங்கினர்தாபதவேடத்த
ரையம்புகுவராலன்னேயென்னு
மையம்புகுந்தவர்போதலுமென்னுள்ள
நையுமிதுவென்னேயன்னேயென்னும். (௯)

கொன்றைமதியமுங்கூவிளமத்தமுந்
துன்றியசென்னியரன்னேயென்னுந்
துன்றியசென்னியின்மத்தமுன்மத்தமே
யின்றெனக்கானவாறன்னேயென்னும். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# குயிற்பத்து.

## ஆத்துமவிரக்கம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமான்
பாதமிரண்டும்வினவிற்பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிற்சொல்லிறந்துநின்றதொன்மை
யாதிகுணமொன்றுமில்லானந்தமிலான்வரக்கூவாய். (௧)

ஏர்தருமேழுலகேத்தவெவ்வுருவுந்தன்னுருவா
யார்கலிசூழ்தென்னிலங்கையழகமர்வண்டோதரிக்குப்
பேரருளின்பமளித்தபெருந்துறைமேயபிரானைச்
சீரியவாயாற்குயிலேதென்பாண்டிநாடனைக்கூவாய். (௨)

நீலவுருவிற்குயிலேநீண்மணிமாடநிலாவுங்
கோலவழகிற்றிகழுங்கொடிமங்கையுள்ளுறைகோயிற்
சீலம்பெரிதுமினியதிருவுத்தரகோசமங்கை
ஞாலம்விளங்கவிருந்தநாயகனைவரக்கூவாய். (௩)

தேன்பழச்சோலைபயிலுஞ்சிறுகுயிலேயிதுகேணீ
வான்பழித்திம்மண்புகுந்துமனிதரையாட்கொண்டவள்ள
லூன்பழித்துள்ளம்புகுந்தென்னுணர்வதுவாயவொருத்தன்
மான்பழித்தாண்டமென்னோக்கிமணாளனைநீவரக்கூவாய். (௪)

சுந்தரத்தின்பக்குயிலேசூழ்சுடர்ஞாயிறுபோல
வந்தரத்தேநின்றிழிந்திங்கடியவராசையறுப்பான்
முந்துநடுவுமுடிவுமாகியமூவரறியாச்
சிந்துரச்சேவடியானைச்சேவகனைவரக்கூவாய். (௫)

இன்பந்தருவன்குயிலேயேழுலகும்முழுதாளி
யன்பனமுதளித்தூறுமானந்தன்வான்வந்ததேவ
னன்பொன்மணிச்சுவடொத்தநற்பரிமேல்வருவானைக்
கொம்பின்மிழற்றுங்குயிலேகோகழிநாதனைக்கூவாய். (௬)

உன்னையுகப்பன்குயிலேயுன்றுணைத்தோழியுமாவன்
பொன்னையழித்தநன்மேனிப்புகழிற்றிகழுமழகன்
மன்னன்பரிமிசைவந்தவள்ளல்பெருந்துறைமேய
தென்னவன்சேரலன்சோழன்சீர்ப்புயங்கன்வரக்கூவாய். (௭)

வாவிங்கேநீகுயிற்பிள்ளாய்மாலொடுநான்முகன்றேடி
யோவியவருன்னிநிற்பவொண்டழல்விண்பிளந்தோங்கி
மேவியன்றண்டங்கடந்துவிரிசுடராய்நின்றமெய்யன்
றூவிவரும்பரிப்பாகன்றாழ்சடையோன்வரக்கூவாய். (௮)

காருடைப்பொன்றிகழ்மேனிக்கடிபொழில்வாழுங்குயிலே
சீருடைச்செங்கமலத்திற்றிகழுருவாகியசெல்வன்
பாரிடைப்பாதங்கள்காட்டிப்பாசமறுத்தெனையாண்ட
வாருடையம்பொனின்மேனியமுதினைநீவரக்கூவாய். (௯)

கொந்தணவும்பொழிற்சோலைக்கூங்குயிலேயிதுகேணீ
யந்தணனாகிவந்திங்கேயழகியசேவடிகாட்டி
யெந்தமராமிவனென்றிங்கென்னையுமாட்கொண்டருளுஞ்
செந்தழல்போற்றிருமேனித்தேவர்பிரான்வரக்கூவாய். (௧0)

திருச்சிற்றம்பலம்.

# திருத்தசாங்கம்.

## அடிமைகொண்டமுறைமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

### நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஏராரிளங்கிளியேயெங்கள்பெருந்துறைக்கோன்
சீரார்திருநாமந்தேர்ந்துரையா—யாரூரன்
செம்பெருமான்வெண்மலரான்பாற்கடலான்செப்புவபோ
லெம்பெருமான்றேவர்பிரானென்று. (௧)

ஏதமிலாவின்சொன்மரகதமேயேழ்பொழிற்கு
நாதனமையாளுடையானாடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டுமீளாவருள்புரிவானாடென்றுந்
தென்பாண்டிநாடேதெளி. (௨)

தாதாடுபூஞ்சோலைத்தத்தாய்நமையாளு
மாதாடும்பாகத்தன்வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம்பார்மேற்சிவபுரம்போற்கொண்டாடு
முத்தரகோசமங்கையூர். (௩)

செய்யவாய்ப்பைஞ்சிறகிற்செல்வீநஞ்சிந்தைசே
ரையன்பெருந்துறையானாறுரையாய்—தையலாய்
வான்வந்தசிந்தைமலங்கழுவவந்திழியு
மானந்தங்காணுடையானாறு. (௪)

கிஞ்சுகவாயஞ்சுகமேகேடில்பெருந்துறைக்கோன்
மஞ்சன்மருவுமலைபகராய்—நெஞ்சத்
திருளகலவாள்வீசியின்பமருமுத்தி
யருளுமலையென்பதுகாணுய்ந்து. (௫)

இப்பாடேவந்தியம்புகூடுபுகலென்கிளியே
யொப்பாடாச்சீருடையானூர்வதென்னே—யெப்போதுக்

தேன்புரையுஞ்சிந்தையராய்த்தெய்வப்பெண்ணேத்திசைப்ப
வான்புரவியூருமகிழ்ந்து. (சா)

கோற்றேன்மொழிக்கிள்ளாய்கோதில்பெருந்துறைக்கோன்
மாற்றாரைவெல்லும்படைபகரா—யேற்று
ரழுக்கடையாநெஞ்சுருகமும்மலங்கள்பாயுங்
கழுக்கடைகாண்கைக்கொள்படை. (எ)

இன்பான்மொழிக்கிள்ளாயெங்கள்பெருந்துறைக்கோன்
முன்பான்முழங்குமுரசியம்பா—யன்பாற்
பிறவிப்பகைகலங்கப்பேரின்பத்தோங்கும்
பருமிக்கநாதப்பறை. (அ)

ஆயமொழிக்கிள்ளாயள்ளூறுமன்பர்பான்
மேயபெருந்துறையான்மெய்த்தாரென்—றீயவினை
நாளுமணுகாவண்ணநாயேனையாளுடையான்
றாளியறுகாமுவந்ததார். (கூ)

சோலைப்பசுங்கிளியேதூநீர்ப்பெருந்துறைக்கோன்
கோலம்பொலியுங்கொடிகூறாய்—சாலவு
மேதிலார்துண்ணென்னமேல்விளங்கியேர்காட்டுங்
கோதிலாவேறாங்கொடி. (கο)

திருச்சிற்றம்பலம்.

---

# திருப்பள்ளியெழுச்சி.

---

## திரோதானசுத்தி.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

---

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தெமக்கருண்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ்
சேற்றிதழ்க்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (க)

அருணனிந்திரன்றிசையணுகினனிருள்போ
யகன்றதுவுதயநின்மலர்த்திருமுகத்தின்
கருணையின்சூரியனெழவெழநயனக்
கடிமலர்மலரமற்றண்ணலங்கண்ணாந்
திரணிரையறுபதமுரல்வனவிவையோர்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யருணிதிதரவருமானந்தமலையே
யலைகடலேபள்ளியெழுந்தருளாயே. (௨)

கூவினபூங்குயில்கூவினகோழி
குருகுகளியம்பினவியம்பினசங்க
மோவினதாரகையொளியொளியுதயத்
தொருப்படுகின்றதுவிருப்பொடுநமக்குத்
தேவநற்செறிகழற்றாளிணைகாட்டாய்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யாவருமறிவரியாயெமக்கெளியா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௩)

இன்னிசைவீணையர்யாழினரொருபா
லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற்
றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற்
றொழுகையரழுகையர்துவள்கையரொருபாற்
சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்
றிருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௪)

பூதங்கடோறுநின்றாயெனினல்லாற்
போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர்
கீதங்கள்பாடுதலாடுதலல்லாற்
கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச்
சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னா
சிந்தனைக்குமரியாயெங்கண்முன்வந்
தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (௫)

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்
பந்தனைவந்தறுத்தாரவர்பலரு
மைப்புறுகண்ணியர்மானுடத்தியல்பின்
வணங்குகின்றாரணங்கின்மணவாளா

செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (சு)

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்
கரிதெனவெளிதெனவமரருமறியா
ரிதுவவன்றிருவுருவிவனவனெனவே
யெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு
மதுவளர்பொழிற்றிருவுத்தரகோச
மங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா
வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (எ)

முந்தியமுதனடுவிறுதியுமானாய்
மூவருமறிகிலர்யாவர்மற்றறிவார்
பந்தணைவிரலியுநீயுநின்னடியார்
பழங்குடிதொறுமெழுந்தருளியபரனே
செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி
யந்தணனாவதுங்காட்டிவந்தாண்டா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (அ)

விண்ணகத்தேவருநண்ணவுமாட்டா
விழுப்பொருளேயுனதொழுப்படியோங்கண்
மண்ணகத்தேவந்துவாழச்செய்தானே
வண்டிருப்பெருந்துறையாய்வழியடியோங்
கண்ணகத்தேநின்றுகளிதருதேனே
கடலமுதேகரும்பேவிரும்படியா
ரெண்ணகத்தாயுலகுக்குயிரானா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. (கூ)

புவனியிற்போய்ப்பிறவாமையினாணாம்
போக்குகின்றோமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனாசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. (க0)

திருச்சிற்றம்பலம்.

# கோயின்மூத்ததிருப்பதிகம்.

## அநாதியாகியசற்காரியம்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உடையாளுன்றனடுவிருக்குமுடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீருமிருப்பதானாலடியேனுன்
னடியார்நடுவுளிருக்குமருளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்துமுடியும்வண்ணமுன்னின்றே. (க)

முன்னின்றாண்டாயெனைமுன்னமியானுமதுவேமுயல்வுற்றுப்
பின்னின்றேவல்செய்கின்றேன்பிற்பட்டொழிந்தேன்பெம்மானே
யென்னின்றருளிவரநின்றுபோந்திடென்னாவிடிலடியா
ருன்னின்றிவனாரென்னாரோபொன்னம்பலக்கூத்துகந்தானே. (உ)

உகந்தானேயன்புடையடிமைக்குருகாவுள்ளத்துணர்விலியேன்
சகந்தானறியமுறையிட்டாற்றக்கவாறன்றென்னாரோ
மகந்தான்செய்துவழிவந்தார்வாழவாழ்ந்தாயடியேற்குன்
முகந்தான்றாராவிடின்முடிவேன்பொன்னம்பலத்தெம்முழுமுதலே.

முழுமுதலேயைம்புலனுக்குமூவர்க்குமென்றனக்கும்
வழிமுதலேநின்பழவடியார்திரள்வான்குழுமிக்
கெழுமுதலேயருடந்திருக்கவிரங்குங்கொல்லோவென்
றழுமதுவேயன்றிமற்றென்செய்கேன்பொன்னம்பலத்தரைசே. ( )

அரைசேபொன்னம்பலத்தாடுமமுதேயென்றுன்னருணோக்கி
யிரைதேர்கொக்கொத்திரவுபகலேசற்றிருந்தேவேசற்றேன்
கரைசேரடியார்களிசிறப்பக்காட்சிகொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர்பாலினெய்போலப்பேசாதிருந்தாலேசாரோ. (ரு)

ஏசாநிற்பரென்னையுனக்கடியானென்றுபிறரெல்லாம்
பேசாநிற்பர்யான்றானும்பேணாநிற்பேனின்னருளே
தேசாநேசர்சூழ்ந்திருக்குந்திருவோலக்கஞ்சேவிக்க
வீசாபொன்னம்பலத்தாடெந்தாயினித்தானிரங்காயே. (சு)

இரங்குநமக்கம்பலக்கூத்தனென்றென்றேமாந்திருப்பேனை
யருங்கற்பனைகற்பித்தாண்டாயாள்வாரிலிமாடாவேனோ

நெருங்குமடியார்களுநீயுநின்றுநிலாவிவிளையாடு
மருங்கேசார்ந்துவரவெங்கள்வாழ்வேவாவென்றருளாயே. (எ)

அருளாதொழிந்தாலடியேனையஞ்சேலென்பாராரிங்குப்
பொருளாவென்னைப்புகுந்தாண்டபொன்னே பொன்னம்பலக்கூத்
மருளார்மனத்தோடுனைப்பிரிந்துவருந்துவேனைவாவென்றுன் [தா
றெருளார்கூட்டங்காட்டாயேற்செத்தேபோனாற்சிரியாரோ. (அ)

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்வெவ்வேறிருந்துன்றிருநாமந்
தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய்நாயேனிருப்பேனோநம்பியினித்தானல்காயே. (௯)

நல்காதொழியானமக்கென்றுன்னாமம்பிதற்றிநயனநீர்
மல்காவாழ்த்தாவாய்குழறாவணங்காமனத்தானினைந்துருகிப்
பல்காலுன்னைப்பாவித்துப்பரவிப்பொன்னம்பலமென்றே
யொல்காநிற்குமுயிர்க்கிரங்கியருளாயென்னையுடையானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# கோயிற்றிருப்பதிகம்.

## அநுபோகவிலக்கணம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்
புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுளெழுபரஞ்சோதி
யுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானே
திருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்த
வின்பமேயென்னுடையன்பே. (௧)

அன்பினாலடியேனாவியோடாக்கை
யானந்தமாய்க்கசிந்துருக
வென்பரமல்லாவின்னருடந்தா
யானிதற்கிலனோர்கைம்மாறு

முன்புமாய்ப்பின்புமுழுதுமாய்ப்பரந்த
முத்தனேமுடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய்சிவபெருமானே
சீருடைச்சிவபுரத்தரசே. (௨)

அரைசனேயன்பர்க்கடியனேனுடைய
வப்பனேயாவியோடாக்கை
புரைபுரைகனியப்புகுந்துநின்றுருகிப்
பொய்யிருள்கடிந்தமெய்ச்சுடரே
திரைபொராமன்னுமமுதத்தெண்கடலே
திருப்பெருந்துறையுறைசிவனே
யுரையுணர்விறந்துநின்றுணர்வதோருணர்வே
யானுன்னையுரைக்குமாறுணர்த்தே. (௩)

உணர்ந்தமாமுனிவரும்பரோடொழிந்தா
ருணர்வுக்குந்தெரிவரும்பொருளே
யிணங்கிலியெல்லாவுயிர்கட்குமுயிரே
யெனைப்பிறப்பறுக்குமெம்மருந்தே
திணிந்ததோரிருளிற்றெளிந்ததூவெளியே
திருப்பெருந்துறையுறைசிவனே
குணங்கடாமில்லாவின்பமேயுன்னைக்
குறுகினேற்கினியென்னகுறையே. (௪)

குறைவிலாநிறைவேகோதிலாவமுதே
யீறிலாக்கொழுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய்மறையின்பொருளுமாய்வந்தென்
மனத்திடைமன்னியமன்னே
சிறைபெறுநீர்போற்சிந்தைவாய்ப்பாயுந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யிறைவனேநீயென்னுடலிடங்கொண்டா
யினியுன்னையென்னிரக்கேனே. (௫)

இரந்திரந்துருகவென்மனத்துள்ளே
யெழுகின்றசோதியேயிமையோர்
சிரந்தனிற்பொலியுங்கமலச்சேவடியாய்
திருப்பெருந்துறையுறைசிவனே
நிரந்தவாகாயநீர்நிலந்தீகா
லாயவையல்லையாயாங்கே
கரந்ததோருருவேகளித்தனனுன்னைக்
கண்ணுறக்கண்டுகொண்டின்றே. (௬)

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே. (எ)

பார்பதமண்டமனைத்துமாய்முளைத்துப்
பரந்ததோர்படரொளிப்பரப்பே
நீருறுதீயேநினைவதேலரிய
நின்மலாநின்னருள்வெள்ளச்
சீருறுசிந்தையெழுந்ததோர்தேனே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாருறவெனக்கிங்காரயலுள்ளா
ரானந்தமாக்குமென்சோதி. (அ)

சோதியாய்த்தோன்றுமுருவமேயருவா
மொருவனேசொல்லுதற்கரிய
வாதியேநடுவேயந்தமேபந்த
மறுக்குமானந்தமாகடலே
தீதிலாநன்மைத்திருவருட்குன்றே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாதுநீபோவதோர்வகையெனக்கருளாய்
வந்துநின்னிணையடிதந்தே. (௯)

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்
சங்கராவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றே
னியாதுநீபெற்றதொன்றென்பாற்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்
றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டா
யானிதற்கிலனோர்கைம்மாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# செத்திலாப்பத்து.

## சிவானந்தமளவறுக்கொணாமை.

### திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யனேனகநெகப்புகுந்தமுதூறும்
புதுமலர்க்கழலிணையடிபிரிந்துங்
கையனேனின்னுஞ்செத்திலேனந்தோ
விழித்திருந்துள்ளக்கருத்தினையிழந்தே
னையனேயரசேயருட்பெருங்கடலே
யத்தனேயயன்மாற்கறியொண்ணாச்
செய்யமேனியனேசெய்வகையறியேன்
றிருப்பெருந்துறைமேவியசிவனே. (௧)

புற்றுமாய்மரமாய்ப்புனல்காலே
யுண்டியாயண்டவாணரும்பிறரும்
வற்றியாருநின்மலரடிகாணா
மன்னவென்னையோர்வார்த்தையுட்படுத்துப்
பற்றினாய்பதையேன்மனமிகவுருகேன்
பரிகிலேன்பரியாவுடறன்னைச்
செற்றிலேனின்னுந்திரிதருகின்றேன்
றிருப்பெருந்துறைமேவியசிவனே. (௨)

புலையனேனையும்பொருளெனநினைந்துன்
னருள்புரிந்தனைபுரிதலுங்களித்துத்
தலையினாடந்தேன்விடைப்பாகா
சங்கராவெண்ணில்வானவர்க்கெல்லா
நிலையனேயலைநீர்விடமுண்ட
நித்தனேயடையார்புரமெரித்த
சிலையனேயெனைச்செத்திடப்பணியாய்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௩)

அன்பராகிமற்றருந்தவமுயல்வா
ரயனுமாலுமற்றழலுறமெழுகா

மென்பராய்நினைவாரெனைப்பலர்
நிற்கவிங்கெனையெற்றினுக்காண்டாய்
வன்பராய்முருடொக்குமென்சிந்தை
மரக்கணென்செவியிரும்பினும்வலிது
தென்பராய்த்துறையாய்சிவலோகா
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௪)

ஆட்டுத்தேவர்தம்விதியொழித்தன்பா
லையனேயென்றுன்னருள்வழியிருப்பே
னாட்டுத்தேவருநாடரும்பொருளே
நாதனேயுனைப்பிரிவுறாவருளைக்
காட்டித்தேவநின்கழலிணைகாட்டிக்
காயமாயத்தைக்கழித்தருள்செய்யாய்
சேட்டைத்தேவர்தந்தேவர்பிரானே
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௫)

அறுக்கிலேனுடறுணிபடத்தீப்புக்
கார்கிலேன்றிருவருள்வகையறியேன்
பொறுக்கிலேனுடல்போக்கிடங்காணேன்
போற்றிபோற்றியென்போர்விடைப்பாகா
விறக்கிலேனுனைப்பிரிந்தினிதிருக்க
வென்செய்கேனிதுசெய்கவென்றருளாய்
சிறைக்கணேபுனனிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௬)

மாயனேமறிகடல்விடமுண்ட
வானவாமணிகண்டத்தெம்மமுதே
நாயினேனுனைநினையவுமாட்டே
னமச்சிவாயவென்றுன்னடிபணியாப்
பேயனாகிலும்பெருநெறிகாட்டாய்
பிறைகுலாஞ்சடைப்பிஞ்ஞகனேயோ
சேயனாகினின்றலறுவதழகோ
திருப்பெருந்துறைமேவியசிவனே. (௭)

போதுசேரயன்பொருகடற்கிடந்தோன்
புரந்தராதிகணிற்கமற்றென்னைக்
கோதுமாட்டிநின்குரைகழல்காட்டிக்
குறிக்கொள்கென்றுநின்றொண்டரிற்கூட்டா
யாதுசெய்வதென்றிருந்தனன்மருந்தே
யடியனேனிடர்ப்படுவதுமினிதோ

சீதவார்புனனிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (அ)

ஞாலமிந்திரனுன்முகன்வானவர்
நிற்கமற்றெனைநயந்தினிதாண்டாய்
காலனுருயிர்கொண்டபூங்கழலாய்
கங்கையாயங்கிதங்கியகையாய்
மாலுமோலமிட்டலறுமம்மலர்க்கே
மரக்கணேனையும்வந்திடப்பணியாய்
சேலுநீலமுநிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே. (க)

அளித்துவந்தெனக்காவவென்றருளி
யச்சந்தீர்த்தநின்னருட்பெருங்கடலிற்
றிளைத்துந்தேக்கியும்பருகியுமுருகேன்
றிருப்பெருந்துறைமேவியசிவனே
வளைக்கையானொடுமலரவனறியா
வானவாமலைமாதொருபாகா
களிப்பெலாமிகக்கலங்கிடுகின்றேன்
கயிலைமாமலைமேவியகடலே. (கo)

திருச்சிற்றம்பலம்.

# அடைக்கலப்பத்து.

## பக்குவநிண்ணயம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

### கலவைப்பாட்டு.

திருச்சிற்றம்பலம்.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. (க)

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (உ)

பெரும்பெருமானென்பிறவியைவேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான்சதுரப்பெருமானென்மனத்தினுள்ளே
வரும்பெருமான்மலரோனெடுமாலறியாமனின்ற
வரும்பெருமானுடையாயடியேனுன்னடைக்கலமே. (௩)

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேறினர்வான்யானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௪)

சுருள்புரிகூழையர்சூழலிற்பட்டுன்றிறமறந்திங்
கிருள்புரியாக்கையிலேகிடந்தெய்த்தனன்மைத்தடங்கண்
வெருள்புரிமானன்னநோக்கிதன்பங்கவிண்ணோர்பெருமா
னருள்புரியாயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௫)

மாழைமைப்பாவியகண்ணியர்வன்மத்திடவுடைந்து
தாழியைப்பாவுதயிர்போற்றளர்ந்தேன்றடமலர்த்தாள்
வாழியெப்போதுவந்தெந்நாள்வணங்குவன்வல்வினையே
னாழியப்பாவுடையாயடியேனுன்னடைக்கலமே. (௬)

மின்கணினார்நுடங்குமிடையார்வெகுளிவலையிலகப்பட்டுப்
புன்கணனாய்ப்புரள்வேனைப்புரளாமற்புகுந்தருளி
யென்கணிலேயமுதூறித்தித்தென்பிழைக்கிரங்கு
மங்கணனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. (௭)

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௮)

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்றாருன்னைவந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௯)

வழங்குகின்றாய்க்குன்னருளாரமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்விதியின்மையாற்
றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# ஆசைப்பத்து.

## ஆத்துமவிலக்கணம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருடக்கொடியோன்காணமாட்டாக்கழற்சேவடியென்னும்
பொருளைத்தந்திங்கென்னையாண்டபொல்லாமணியேயோ
விருளைத்துரந்திட்டிங்கேவாவென்றங்கேகூவு
மருளைப்பெறுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௧)

மொய்ப்பாநரம்புகயிறாகமூளையென்புதோல்போர்த்த
குப்பாயம்புக்கிருக்ககில்லேன்கூவிக்கொள்ளாய்கோவேயோ
வெப்பாலவர்க்குமப்பாலாமென்னாரமுதேயோ
வப்பாகாணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௨)

சீவார்ந்தீமொய்த்தழுக்கொடுதிரியுஞ்சிறுகுடிலிதுசிதையக்
கூவாய்கோவேகூத்தாகாத்தாட்கொள்ளுங்குருமணியே
தேவாதேவர்க்கரியானேசிவனேசிறிதென்முகநோக்கி
யாவாவென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௩)

மிடைந்தெலும்பூத்தைமிக்கழுக்கூறல்வீறிலிநடைக்கூடந்
தொடர்ந்தெனைநலியத்துயருறுகின்றேன் * சோத்தமெம்பெருமானே
யுடைந்துநைந்துருகியுன்னொளிநோக்கியுன்றிருமலர்ப்பாத
மடைந்துநின்றிடுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௪)

அளிபுண்ணகத்துப்புறந்தோன்மூடியடியேனுடையாக்கை
புளியம்பழமொத்திருந்தேனிருந்தும்விடையாய்பொடியாடீ
யெளிவந்தென்னையாண்டுகொண்டவென்னாரமுதேயோ
வளியேனென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௫)

எய்த்தேனாயேனினியிங்கிருக்ககில்லேனிவ்வாழ்க்கை
வைத்தாய்வாங்காய்வானோரறியாமலர்ச்சேவடியானே
முத்தாவுன்றன்முகவொளிநோக்கிமுறுவனகைகாண
வத்தாசாலவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (௬)

பாரோர்விண்ணோர்பரவியேத்தும்பரனேபரஞ்சோதீ
வாராய்வாராவுலகந்தந்துவந்தாட்கொள்வானே

---

* சோத்தம்—இழிந்தார்செய்யுமஞ்சலி.

பேராயிரமும்பரவித்திரிந்தெம்பெருமானெனவேத்த
வாராவமுதேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (எ)

கையாற்றொழுதுன்கழற்சேவடிகள்கழுமத்தழுவிக்கொண்
டெய்யாதென்றன்றலைமேல்வைத்தெம்பெருமான்பெருமானென்
றையாவென்றன்வாயாலரற்றியழல்சேர்மெழுகொப்ப
வையாற்றரசேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (அ)

செடியாராக்கைத்திறமறவீசிச்சிவபுரநகர்புக்குக்
கடியார்சோதிகண்டுகொண்டென்கண்ணிணைகளிகூரப்
படிதானில்லாப்பரம்பரனேயுன்பழவடியார்கூட்ட
மடியேன்காணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (கூ)

வெஞ்சேலனையகண்ணார்தம்வெகுளிவலையிலகப்பட்டு
நைஞ்சேனாயேன்ஞானச்சுடரேநானோர்துணைகாணேன்
பஞ்சேரடியாள்பாகத்தொருவாபவளத்திருவாயா
லஞ்சேலென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

# அதிசயப்பத்து.

## முத்தியிலக்கணம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்று மனத்திடையுருகாதே
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (க)

நீதியாவனயாவையுநினைக்கிலேனினைப்பவரொடுங்கூடே
னேதமேபிறந்திறந்துழல்வேன்றனையென்னடியானென்று
பாதிமாதொடுங்கூடியபரம்பரனிரந்தரமாய்நின்ற
வாதியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (உ)

முன்னையென்னுடைவல்வினைபோயிடமுக்கணதுடையெந்தை
தன்னையாவருமறிவதற்கரியவனெளியவனடியார்க்குப்

பொன்னைவென்றதோர்புரிசடைமுடிதனிலிளமதியதுவைத்த
வன்னையாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௩)

பித்தனென்றெனையுலகவர்பகர்வதோர்காரணமிதுகேளீ
ரொத்துச்சென்றுதன்றிருவருட்கூடிடுமுபாயமதறியாமே
செத்துப்போயருநரகிடைவீழ்வதற்கொருப்படுகின்றேனை
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௪)

பரவுவாரவர்பாடுசென்றணைகிலேன்பன்மலர்பறித்தேற்றேன்
குரவுவார்குழலார்திறத்தேநின்றுகுடிகெடுகின்றேனை
யிரவுநின்றெரியாடியவெம்மிறையெரிசடைமிளிர்கின்ற
வரவனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௫)

எண்ணிலேன்றிருநாமவஞ்செழுத்துமென்னேழைமையதனாலே
நண்ணிலேன்கலைஞானிகடம்மொடுநல்வினைநயவாதே
மண்ணிலேபிறந்திறந்துமண்ணாவதற்கொருப்படுகின்றேனை
யண்ணலாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௬)

பொத்தையூன்சுவர்புழுப்பொதிந்துளுத்தசும்பொழுகியபொய்க்கூ
ரை,யித்தைமெய்யெனக்கருதிநின்றிடர்க்கடற்சுழித்தலைப்படுவேனை
முத்துமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின்முழுச்சோதி
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௭)

நீக்கிமுன்னெனைத்தன்னொடுநிலாவகைகுரம்பையிற்புகப்பெய்து
நோக்கிநுண்ணியநொடியனசொற்செய்துநுகமின்றிவிளாக்கைத்துத்
தூக்கிமுன்செய்தபொய்யறத்துகளறுத்தெழுதருசுடர்ச்சோதி
யாக்கியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௮)

உற்றவாக்கையினுறுபொருணறுமலரெழுதருநாற்றம்போற்
பற்றலாவதோர்நிலையிலாப்பரம்பொருளப்பொருள்பாராதே
பெற்றவாபெற்றபயனதுநுகர்ந்திடும்பித்தர்சொற்றெளியாமே
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. (௯)

இருடிணிந்தெழுந்திட்டதோர்வல்வினைச்சிறுகுடிலிதுவித்தைப்
பொருளெனக்களித்தருநரகத்திடைவிழப்புகுகின்றேனைத்
தெருளுமும்மதினொடிவரையிடித்தரச்சினப்பதத்தொடுசெந்தீ
யருளுமெய்ந்நெறிபொய்ந்நெறிநீக்கியவதிசயங்கண்டாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# புணர்ச்சிப்பத்து.

## அத்துவிதவிலக்கணம்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சுடர்பொற்குன்றைத்தோளாமுத்தைவாளாதொழும்புகந்து,கடை
பட்டேனையாண்டுகொண்டகருணாலயனைக்கருமால்பிரமன், றடை
பட்டின்னுஞ்சாரமாட்டாத்தன்னைத்தந்தவென்னாரமுதைப், புடை
பட்டிருப்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே

ஆற்றகில்லேனடியேனரசேயவனிதலத்தைம்புலனாய
சேற்றிலழுந்தாச்சிந்தைசெய்துசிவனெம்பெருமானென்றேத்தி
யூற்றுமணற்போனெக்குநெக்குள்ளேயுருகியோலமிட்டுப் [தே.
போற்றிநிற்பதென்றுகொல்லோ வென்பொல்லாமணியைப்புணர்க்

நீண்டமாலுமயனும்வெருவநீண்டநெருப்பைவிருப்பிலேனை
யாண்டுகொண்டவென்னாரமுதையள்ளூறுள்ளத்தடியார்முன்
வேண்டுந்தனையும்வாய்விட்டலறிவிரையார்மலர்தூவிப் [தே.
பூண்டுகிடப்பதென்றுகொல்லோவென்பொல்லா மணியைப்புணர்ந்

அல்லிக்கமலத்தயனுமாலுமல்லாதவருமமரர்கோனுஞ்,சொல்லிப்
பரவுநாமத்தானைச்சொல்லும்பொருளுமிறந்தசுடரை, நெல்லிக்கனி
யைத்தேனைப்பாலைநிறையின்னமுதையமுதின்சுவையைப், புல்லிப்
புணர்வதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே. ()

இகழத்திகழுமடியுமுடியுங்காண்பான்கீழ்மேலயனுமாலு, மகழப்
பறந்துங்காணமாட்டாவம்மானிம்மாநிலமுழுது,நிகழப்பணிகொண்
டென்னையாட்கொண்டாவாவென்றநீர்மையெல்லாம், புகழப்பெறு
வதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே. (௫)

பரிந்துவந்துபரமானந்தம்பண்டேயடியேற்கருள்செய்யப்
பிரிந்துபோந்துபெருமாநிலத்திலருமாலுற்றேனென்றென்று, சொரி
ந்தகண்ணீர்சொரியவுண்ணீருரோமஞ்சிலிர்ப்பவுகந்தன்பாய்ப், புரிந்
துநிற்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே. (௬)

நினையப்பிறருக்கரியநெருப்பைநீரைக்காலைநிலனைவிசும்பைத் [டங்
தனையொப்பாரையில்லாத்தனியைநோக்கித்தழைத்துத் தழுத்தகண்

கணையக்கண்ணீரருவிபாயக்கையுங்கூப்பிக்கடிமலராற், புணையப்பெறுவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே. (எ)

நெக்குநெக்குள்ளுருகியுருகிநின்றுமிருந்துங்கிடந்துமெழுந்து
நக்குமழுதுந்தொழுதும்வாழ்த்திநாளுவிதத்தாற்கூத்துநவிற்றிச்
செக்கர்போலுந்திருமேனிதிகழநோக்கிச்சிலிர்சிலித்துப்
புக்குநிற்பதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே.

தாதாய்மூவேழுலகுக்குந்தாயேநாயேன்றனையாண்ட, பேதாய்பிறவிப்பிணிக்கோர்மருந்தேபெருந்தேன்பில்கவெப்போது, மேதாமணியேயென்றென்றேத்தியிரவும்பகலுமெழிலார்பாதப், போதாய்ந்தணைவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே. ()

காப்பாய்படைப்பாய்கரப்பாய்முழுதுங்கண்ணோர்விசும்பின் விண்ணோர்க்கெல்லா, மூப்பாய்மூவாமுதலாய்நின்றமுதல்வாமுன்னேயெனையாண்ட, பார்ப்பானேயெம்பரமாவென்றுபாடிப்பாடிப்பணிந்துபாதப், பூப்போதணைவதென்றுகொல்லோவென்பொல்லாமணியைப்புணர்ந்தே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

# வாழாப்பத்து.

---

## முத்தியுபாயம்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாரொடுவிண்ணாய்ப்பரந்தவெம்பரனே
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
சீரொடுபொலிவாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாரொடுநோகேனார்க்கெடுத்துரைக்கே
னாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (க)

வம்பனேன்றன்னையாண்டமாமணியே
மற்றுநான்பற்றிலேன்கண்டா
யும்பருமறியாவொருவனேயிருவர்க்
குணர்விறந்துலகமூடுருவுஞ்

செம்பெருமானேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெம்பெருமானேயென்னையாள்வானே
யென்னைநீகூவிக்கொண்டருளே. (௨)

பாடிமால்புகழும்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேடிநீயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யூடுவதுன்னோடுவப்பதுமுன்னை
யுணர்த்துவதுனக்கெனக்குறுதி
வாடினேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௩)

வல்லைவாளரக்கர்புரமெரித்தானே
மற்றுநான்பற்றிலேன்கண்டாய்
தில்லைவாழ்கூத்தாசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெல்லைமூவுலகுமுருவியன்றிருவர்
காணுநாளாதியீறின்மை
வல்லையாய்வளர்ந்தாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௪)

பண்ணினேர்மொழியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திண்ணமேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெண்ணமேயுடல்வாய்மூக்கொடுசெவிகண்
ணென்றிவைநின்கணேவைத்து
மண்ணின்மேலடியேன்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௫)

பஞ்சின்மெல்லடியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செஞ்சவேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யஞ்சினேனாயேனாண்டுநீயளித்த
வருளினைமருளினான்மறந்த
வஞ்சனேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (௬)

பருதிவாழொளியாய்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திருவுயர்கோலச்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
கருணையேநோக்கிக்கசிந்துளமுருகிக்
கலந்துநான்வாழுமாறறியா
மருளனேனுலகில்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (எ)

பந்தணைவிரலாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யந்தமிலமுதேயரும்பெரும்பொருளே
யாரமுதேயடியேனை
வந்துயவாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (அ)

பாவநாசாவுன்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேவர்தந்தேவேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
மூவுலகுருவவிருவர்கீழ்மேலாய்
முழங்கழலாய்நிமிர்ந்தானே
மாவுரியானேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (கூ)

பழுதிறுதொல்புகழாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
தொழுவனோபிறரைத்துதிப்பனோவெனக்கோர்
துணையெனநினைவனோசொல்லாய்
மழவிடையானேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே. (க0)

திருச்சிற்றம்பலம்.

# அருட்பத்து.

## மகாமாயாசுத்தி.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கே
　சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்
　பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையி
　னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தா
　லதெந்துவேயென்றருளாயே. (௧)

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்
　கண்ணனேவிண்ணுளோர்பிரானே
யொருத்தனேயுன்னையோலமிட்டலறி
　யுலகெலாந்தேடியுங்காணேன்
றிருத்தமாம்பொய்கைத்திருப்பெருந்துறையிற்
　செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருத்தனேயடியேனாதரித்தழைத்தா
　லதெந்துவேயென்றருளாயே. (௨)

எங்கணாயகனேயென்னுயிர்த்தலைவா
　வேலவார்குழலிமாரிருவர்
தங்கணாயகனேதக்கனற்காமன்
　றனதுடலழலெழவிழித்த
செங்கணாயகனேதிருப்பெருந்துறையிற்
　செழுமலர்க்குருந்தமேவியசீ
ரங்கணாவடியேனாதரித்தழைத்தா
　லதெந்துவேயென்றருளாயே. (௩)

கமலநான்முகனுங்கார்முகினிறத்துக்
　கண்ணனுநண்ணுதற்கரிய
விமலனேயெமக்குவெளிப்படாயென்ன
　வியன்றழல்வெளிப்பட்டவெந்தாய்

திமிலநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரமலனேயடியேனாதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே. (ச)

துடிகொணேரிடையாள்சுரிகுழன்மடந்தை
  துணைமுலைக்கண்கடோய்சுவடு
பொடிகொள்வான்றழலிற்புள்ளிபோலிரண்டு
  பொங்கொளிதங்குமார்பினனே
செடிகொள்வான்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரடிகளேயடியேனாதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே. (ரு)

துப்பனேதூயாய்தூயவெண்ணீறு
  துதைந்தெழுதுளங்கொளிவயிரத்
தொப்பனேயுன்னையுள்குவார்மனத்தி
  னூறுசுவையளிக்குமாரமுதே
செப்பமாமறைசேர்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரப்பனேயடியேனாதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே. (சா)

மெய்யனேவிகிர்தாமேருவேவில்லா
  மேவலர்புரங்கண்மூன்றெரித்த
கையனேகாலாற்காலனைக்காய்ந்த
  கடுந்தழற்பிழம்பன்னமேனிச்
செய்யனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரையனேயடியேனாதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே. (எ)

முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவா
  மொட்டறாமலர்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்
  பரகதிகொடுத்தருள்செய்யுஞ்
சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரத்தனேயடியேனாதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே. (அ)

மருளனேன்மனத்தைமயக்கறநோக்கி
  மறுமையோடிம்மையுங்கெடுத்த
பொருளனேபுனிதாபொங்குவாளரவங்
  கங்கைநீர்தங்குசெஞ்சடையாய்
தெருளுநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருளனேயடியேனுதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே. (௯)

திருந்துவார்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணியேசருநினைந்திட்
  டென்னுடையெம்பிரானென்றென்
றருந்தவாநினைந்தேயாதரித்தழைத்தா
  லலைகடலதனுளேநின்று
பொருந்தவாகயிலைபுகுநெறியிதுகாண்
  போதராயென்றருளாயே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

# திருக்கழுக்குன்றப்பதிகம்.

---

## குருதரிசனம்.

திருக்கழுக்குன்றத்திலருளிச்செயப்பட்டது.

---

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெரு
  மானுன்னுமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந்
  துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளை
  யாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீவந்து
  காட்டினாய்கழுக்குன்றிலே. (௧)

பிட்டுநேர்படமண்சுமந்த
  பெருந்துறைப்பெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாத
  சழக்கனேனுனைச்சார்ந்திலேன்

சிட்டனேசிவலோகனேசிறு
நாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௨)

மலங்கினேன்கண்ணினீரைமாற்றி
மலங்கெடுத்தபெருந்துறை
விலங்கினேன்வினைக்கேடனேனினி
மேல்விளைவதறிந்திலே
னிலங்குகின்றநின்சேவடிக
ளிரண்டும்வைப்பிடமின்றியே
கலங்கினேன்கலங்காமலேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௩)

பூணொணாததொரன்புபூண்டு
பொருந்திநாடொறும்போற்றவு
நாணொணாததொர்நாணமெய்தி
நடுக்கடலுளழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப்பெருந்
தோணிபற்றியுகைத்தலுங்
காணொணாத்திருக்கோலநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௪)

கோலமேனிவராகமேகுண
மாம்பெருந்துறைக்கொண்டலே
சீலமேதுமறிந்திலாதவென்
சிந்தைவைத்தசிகாமணி
ஞாலமேகரியாகநானுனை
நச்சிநச்சிடவந்திடுங்
காலமேயுனையோதநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௫)

பேதமில்லதொர்கற்பளித்த
பெருந்துறைப்பெருவெள்ளமே
யேதமேபலபேசநீயெனை
யேதிலார்முனமென்செய்தாய்
சாதல்சாதல்பொல்லாமையற்ற
தனிச்சரண்சரணாமெனக்
காதலானுனையோதநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (௬)

இயக்கிமா ரறுபத்துநால்வரை
யெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதோர்மும்மலப்பழ
வல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்
றூய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே. (எ)

திருச்சிற்றம்பலம்.

# கண்டபத்து.

## நிருத்ததரிசனம்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே. (க)

வினைப்பிறவியென்கின்றவேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதுநினையாதேதளர்வெய்திக்கிடப்பேனை
யெனைப்பெரிதுமாட்கொண்டென்பிறப்பறுத்தவிணையிலியை
யனைத்துலகுந்தொழுந்தில்லையம்பலத்தேகண்டேனே. (உ)

உருத்தெரியாக்காலத்தேயுள்புகுந்தென்னுளமன்னிக்
கருத்திருத்தியூன்புக்குக்கருணையினாலாண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத்தித்திக்குஞ்சிவபதத்தை
யருத்தியினானாயடியேனணிகொடில்லைகண்டேனே. (ங)

கல்லாதபுல்லறிவிற்கடைப்பட்டநாயேனை
வல்லாளனாய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே. (ச)

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிப்பட்டுத்தடுமாறு
மாதமிலிநாயேனையல்லலறுத்தாட்கொண்டு

பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக்குலாவுதில்லைகண்டேனே. (௫)

பிறவிதனையறமாற்றிப்பிணிமூப்பென்றிவையிரண்டு
முறவினொடுமொழியச்சென்றுலகுடையவொருமுதலைச்
செறிபொழில்சூழ்தில்லைநகர்த்திருச்சிற்றம்பலமன்னி
மறையவரும்வானவரும்வணங்கிடநான்கண்டேனே. (௬)

பத்திமையும்பரிசுமிலாப்பசுபாசமறுத்தருளிப்
பித்தனிவனெனவென்னையாக்குவித்துப்பேராமே
சித்தமெனுந்திண்கயிற்றாற்றிருப்பாதங்கட்டுவித்த
வித்தகனார்விளையாடல்விளங்குதில்லைகண்டேனே. (௭)

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனைக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே. (௮)

பாங்கினொடுபரிசொன்றுமறியாதநாயேனை
யோங்கியுளத்தொளிவளரவுலப்பிலாவன்பருளி
வாங்கிவினைமலமறுத்துவான்கருணைதந்தானை
நான்குமறைபயிறில்லையம்பலத்தேகண்டேனே. (௯)

பூதங்களைந்தாகிப்புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# பிரார்த்தனைப்பத்து.

## சதாமுத்தி.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

ஆ சி ரி ய வி ரு த் த ம்.

திருச்சிற்றம்பலம்.

கலந்துநின்னடியாரோடன்றுவாளாகளித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்புகுந்துநின்றதிடர்பின்னா
ளுலர்ந்துபோனேனுடையானேயுலவாவின்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யாயார்வங்கூரவடியேற்கே. (௧)

அடியார்சிலருன்னருள்பெற்றாரார்வங்கூரயானவமே
முடையார்பிணத்தின்முடிவின்றிமுனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடையகருவினையைக்களைந்துன்கருணைக்கடல்பொங்க
வுடையாயடியேனுள்ளத்தேயோவாதுருகவருளாயே. (௨)

அருளாரமுதப்பெருங்கடல்வாயடியாரெல்லாம்புக்கழுந்த
விருளாராக்கையிதுபொறுத்தேயெய்த்தேன்கண்டாயெம்மானே
மருளார்மனத்தோருன்மத்தன்வருமாலென்றிங்கெனைக்கண்டார்
வெருளாவண்ணமெய்யன்பையுடையாய்பெறநான்வேண்டுமே. ()

வேண்டும்வேண்டுமெய்யடியாருள்ளேவிரும்பியெனையருளா
லாண்டாயடியேனிடர்களைந்தவமுதேயருமாமணிமுத்தே
தூண்டாவிளக்கின்சுடரனையாய்தொண்டனேற்குமுண்டாங்கொல்
வேண்டாதொன்றும்வேண்டாதுமிக்கவன்பேமேவுதலே. (௪)

மேவுமுன்றனடியாருள்விரும்பியானுமெய்ம்மையே
காவிசேருங்கயற்கண்ணாள்பங்காவுன்றன்கருணையினாற்
பாவியேற்குமுண்டாமோபரமானந்தப்பழங்கடல்சேர்ந்
தாவியாக்கையானெனதென்றியாதுமின்றியறுதலே. (௫)

அறவேபெற்றார்நின்னன்பரந்தமின்றியகநெகவும்
புறமேகிடந்துபுலைநாயேன்புலம்புகின்றேனுடையானே
பெறவேவேண்டுமெய்யன்புபேராவொழியாப்பிரிவில்லா
மறவாநினையாவளவிலாமாளாவின்பமாகடலே. (௬)

கடலேயனையவானந்தங்கண்டாரெல்லாங்கவர்ந்துண்ண
விடரேபெருக்கியேசற்றிங்கிருத்தலழகோவடிநாயே [தேன்
னுடையாய்நீயேயருளுதியென் றுணர்த்தாதொழிந்தேகழிந்தொழிந்
சுடராரருளாலிருணீங்கச்சோதியினித்தான்றுணியாயே. (௭)

துணியாவுருகாவருள்பெருகத்தோன்றுந்தொண்டரிடைப்புகுந்து
திணியார்மூங்கிற்சிந்தையேன்சிவனேநின்றுதேய்கின்றே
னணியாரடியாருனக்குள்ளவன்புந்தாராயருளளியத்
தணியாதொல்லைவந்தருளித்தளிர்ப்பொற்பாதந்தாராயே. (௮)

தாராவருளொன்றின்றியேதந்தாயென்றுன்றமரெல்லா
மாராநின்றாரடியேனுமயலார்போலவயர்வேனோ
சீராரருளாற்சிந்தனையைத்திருத்தியாண்டசிவலோகா
பேரானந்தம்பேராமைவைக்கவேண்டும்பெருமானே. (௯)

மானேர்பங்காவந்திப்பார்மதுரக்கனியேமனநெகா
நானேர்தோளாச்சுரையொத்தானம்பியித்தால்வாழ்ந்தாயே

யூனேபுகுந்தவுனையுணர்ந்தேயுருகிப்பெருகுமுள்ளத்தைக்
கோனேயருளுங்காலந்தான்கொடியேற்கென்றோகூடுவதே. (௧௰)
கூடிக்கூடியுன்னடியார்குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்வற்றன்மரம்போனிற்பேனோ
வூடியூடியுடையாயொடுகலந்துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவேயாகவருள்கலந்தே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

# குழைத்தபத்து.

## ஆத்துமநிவேதனம்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குழைத்தாற்பண்டைக் கொடுவினைநோய் காவாயுடையாய்கொடு
வினையே, னுழைத்தாலுறுதியுண்டோதானுமையாள்கணவாவெனை
யாள்வாய், பிழைத்தாற்பொறுக்கவேண்டாவோபிறைசேர்சடையா
ய்முறையோவென், றழைத்தாலருளாதொழிவதேயம்மானேயுன்ன
டியேற்கே. (௧)
அடியேனல்லலெல்லாமுன்னகலவாண்டாயென்றிருந்தேன்
கொடியேரிடையாள்கூறாவெங்கோவேயாவாவென்றருளிச்
செடிசேருடலைச்சிதையாததெத்துக்கெங்கள்சிவலோகா
வுடையாய்கூவிப்பணிகொள்ளாதொறுத்தாலொன்றும்போதுமே. ()
ஒன்றும்போதாநாயேனையுய்யக்கொண்டநின்கருணை
யின்றேயின்றிப்போய்த்தோதானேழைபங்காவெங்கோவே
குன்றேயனையகுற்றங்கள்குணமாமென்றேநீகொண்டா
லென்றான்கெட்டதிரங்கிடாயெண்டோண்முக்கணெம்மானே. (௩)
மானேர்நோக்கிமணவாளாமன்னேநின்சீர்மறப்பித்திவ
வூனேபுகவென்றனைநூக்கியுழலப்பண்ணுவித்திட்டா
யானாலடியேனறியாமையறிந்துநீயேயருள்செய்து
கோனேகூவிக்கொள்ளுநாளென்றென்றுனைக்கூறுவதே. (௪)
கூறுநாவேமுதலாகக்கூறுங்கரணமெல்லாநீ
தேறும்வகைநீதிகைப்புநீதீமைநன்மைமுழுதுநீ
வேறோர்பரிசிங்கொன்,றில்லைமெய்ம்மையுன்னைவிரித்துரைக்கிற்
றேறும்வகையென்சிவலோகாதிகைத்தாற்றேற்றவேண்டாவோ. ()

வேண்டத்தக்கதறிவோய்நீவேண்டமுழுதுந்தருவோய்நீ
வேண்டுமயன்மாற்கரியோய்நீவேண்டியென்னைப்பணிகொண்டாய்
வேண்டிநீயாதருள்செய்தாயானுமதுவேவேண்டினல்லால்
வேண்டும்பரிசொன்றுண்டென்னிலதுவுமுன்றன்விருப்பன்றே. ()

அன்றேயென்றனாவியுமுடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே. (௭)

நாயிற்கடையாநாயேனைநயந்துநீயேயாட்கொண்டாய்
மாயப்பிறவியுன்வசமேவைத்திட்டிருக்குமதுவன்றி
யாயக்கடவேனானோதானென்னதோவிங்கதிகாரங்
காயத்திடுவாயுன்னுடையகழற்கீழ்வைப்பாய்கண்ணுதலே. (௮)

கண்ணார்நுதலோய்கழலிணைகள்கண்டேன்கண்கள்களிகூர
வெண்ணாதிரவும்பகலுநானவையேயெண்ணுமதுவல்லான்
மண்மேல்யாக்கைவிடுமாறும்வந்துன்கழற்கேபுகுமாறு
மண்ணாவெண்ணக்கடவேனோவடிமைசாலவழகுடைத்தே. (௯)

அழகேபுரிந்திட்டடிநாயேனரற்றுகின்றேனுடையானே
திகழாநின்றதிருமேனிகாட்டியென்னைப்பணிகொண்டாய்
புகழேபெரியபதமெனக்குப்புராணநீதந்தருளாதே
குழகாகோலமறையோனேகோனேயென்னைக்குழைத்தாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

# உயிருண்ணிப்பத்து.

---

## சிவானந்தமேலிடுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

---

### கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பைந்நாப்படவரவேரல்குலுமைபாகமதாயென்
மெய்ந்நாடொறும்பிரியாவினைக்கேடாவிடைப்பாகா
செந்நாவலர்பரசும்புகழ்த்திருப்பெருந்துறையுறைவா
யெந்நாட்களித்தெந்நாளிறுமாக்கேனினியானே.

நானாரடியணைவானொருநாய்க்குத்தவிசிட்டிங்
நானாருடல்புகுந்தானுயிர்கலந்தானுளம்பிரியான்

றேனார்சடைமுடியான்மன்னுதிருப்பெருந்துறையுறைவான்
வானோர்களுமறியாததோர்வளமீந்தனனெனக்கே. (௨)

எனைநானென்பதறியேன்பகலிரவாவதுமறியேன்
மனவாசகங்கடந்தானெனைமத்தோன்மத்தனாக்கிச்
சினமால்விடையுடையான்மன்னுதிருப்பெருந்துறையுறையும்
பனவனெனைச்செய்தபடிறறியேனபரஞ்சுடரே. (௩)

வினைக்கேடருமுளரோபிறர்சொல்லீர்வியனுலகி
லெனைத்தான்புகுந்தாண்டானெனதென்பின்புரையுருக்கிப்
பினைத்தான்புகுந்தெல்லேபெருந்துறையிலுறைபெம்மான்
மனத்தான்கண்ணினகத்தான்மறுமாற்றத்திடையானே. (௪)

பற்றாங்கவையற்றீர்பற்றும்பற்றாங்கதுபற்றி
நற்றாங்கதியடைவோமெனிற்கெடுவீரோடிவம்மின்
றெற்றார்சடைமுடியான்மன்னுதிருப்பெருந்துறையிறைசீர்
கற்றாங்கவன்கழல்பேணினரொடுங்கூடுமின்கலந்தே. (௫)

கடலின்றிரையதுபோல்வருகலக்கமலமறுத்தென்
னுடலுமெனதுயிரும்புகுந்தொழியாவண்ணநிறைந்தான்
சுடருஞ்சுடர்மதிசூடியதிருப்பெருந்துறையுறையும்
படருஞ்சடைமகுடத்தெங்கள்பரன்றான்செய்தபடிறே. (௬)

வேண்டேன்புகழ்வேண்டேன்செல்வம்வேண்டேன்மண்ணும்விண்
வேண்டேன்பிறப்பிறப்புச்சிவம்வேண்டார்தமைநாளுந் [ணும்
தீண்டேன்சென்றுசேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறையிறைதாள்
பூண்டேன்புறம்போகேனினிப்புறம்போகலொட்டேனே. (௭)

கோற்றேனெனக்கென்கோகுரைகடல்வாயமுதென்கோ
வாற்றேனெங்களரனேயருமருந்தேயெனதரசே
சேற்றார்வயல்புடைசூழ்தருதிருப்பெருந்துறையுறையு
நீற்றார்தருதிருமேனிநின்மலனேயுனையானே. (௮)

எச்சமறிவேனானெனக்கிருக்கின்றதையறியே
னச்சோவெங்களரனேயருமருந்தேயெனதமுதே
செச்சைமலர்புரைமேனியன்றிருப்பெருந்துறையுறைவா
னிச்சம்மெனநெஞ்சின்மன்னியானாகிநின்றானே. (௯)

வான்பாவியவுலகத்தவர்தவமேசெயவவமே
யூன்பாவியவுடலைச்சுமந்தடவிமரமானேன்
றேன்பாய்மலர்க்கொன்றைமன்னுதிருப்பெருந்துறையுறைவாய்
நான்பாவியனானாலுனைநல்காயெனலாமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

# அச்சப்பத்து.

## ஆனந்தமுறுதல்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (க)

வெருவரேன்வேட்கைவந்தால்வினைக்கடல்கொளினுமஞ்சே
னிருவரான்மாறுகாணாவெம்பிரான்றம்பிரானாந்
திருவுருவன்றிமற்றோர்தேவரெத்தேவரென்ன
வருவராதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (உ)

வன்புலால்வேலுமஞ்சேன்வளைக்கையார்கடைக்கணஞ்சே
னென்பெலாமுருகநோக்கியம்பலத்தாடுகின்ற
வென்பொலாமணியையேத்தியினிதருள்பருகமாட்டா
வன்பிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௩)

கிளியனார்கிளவியஞ்சேனவர்கிறிமுறுவலஞ்சேன்
வெளியநீறாடுமேனிவேதியன்பாதநண்ணித்
துளியுலாங்கண்ணராகித்தொழுதழுதுள்ளநெக்கிங்
களியிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௪)

பிணியெலாம்வரினுமஞ்சேன்பிறப்பினோடிறப்புமஞ்சேன்
றுணிநிலாவணியினான்றன்றொழும்பரோடழுந்தியம்மா
றிணிநிலம்பிளந்துங்காணாச்சேவடிபரவிவெண்ணீ
றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௫)

வாளுலாமெரியுமஞ்சேன்வரைபுரண்டிடினுமஞ்சேன்
றோளுலாநீற்றனேற்றன்சொற்பதங்கடந்தவப்பன்
றாளதாமரைகளேத்தித்தடமலர்புனைந்துநையு
மாளலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௬)

தகைவிலாப்பழியுமஞ்சேன்சாதலைமுன்னமஞ்சேன்
புகைமுகந்தெரிகைவீசிப்பொலிந்தவம்பலத்துளாடு
முகைநகைக்கொன்றைமாலைமுன்னவன்பாதமேத்தி
யகநெகாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௭)

தறிசெறிகளிறுமஞ்சேன்றழல்விழியுழுவையஞ்சேன்
வெறிகமழ்சடையனப்பன்விண்ணவர்நண்ணமாட்டாச்
செறிதருகழல்களேத்திச்சிறந்தினிதிருக்கமாட்டா
வறிவிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (அ)

மஞ்சுலாமுருமுமஞ்சேன்மன்னரோடுறவுமஞ்சே
னஞ்சமேயமுதமாக்குநம்பிரானெம்பிரானாய்ச்
செஞ்செவேயாண்டுகொண்டான்றிருமுண்டந்தீட்டமாட்டா
தஞ்சுவாரவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௯)

கோணிலாவாளியஞ்சேன்கூற்றுவன்சீற்றமஞ்சே
னீணிலாவணியினானைநினைந்துநைந்துருகிநெக்கு
வாணிலாங்கண்கள்சோரவாழ்த்திநின்றேத்தமாட்டா
வாணலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாண்டிப்பதிகம்.

## சிவானந்தவிளைவு.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

பருவரைமங்கைதன்பங்கரைப்பாண்டியற்காரமுதா
மொருவரையொன்றுமிலாதவரைக்கழற்போதிறைஞ்சித்
தெரிவரநின்றுருக்கிப்பரிமேற்கொண்டசேவகனா
ரொருவரையன்றியுருவறியாதென்றனுள்ளமதே. (௧)

சதுரைமறந்தறிமால்கொள்வர்சார்ந்தவர்சாற்றிச்சொன்னோங்
கதிரைமறைத்தன்னசோதிகழுக்கடைகைப்பிடித்துக்
குதிரையின்மேல்வந்துகூடிடுமேற்குடிகேடுகண்டீர்
மதுரையர்மன்னன்மறுபிறப்போடமறித்திடுமே. (௨

நீரின்பவெள்ளத்துநீந்திக்குளிக்கின்றநெஞ்சங்கொண்டீர்
பாரின்பவெள்ளங்கொளப்பரிமேற்கொண்டபாண்டியனா
ரோரின்பவெள்ளத்துருக்கொண்டுதொண்டரையுள்ளங்கொண்டார்
பேரின்பவெள்ளத்துட்பெய்கழலேசென்றுபேணுமினே. (௩)

செறியும்பிறவிக்குநல்லவர்செல்லன்மின்றென்னனன்னாட்
டிறைவன்கிளர்கின்றகாலமிக்காலமெக்காலத்துள்ளு
மறிவொண்கதிர்வாளுறைகழித்தானந்தமாக்கடவி
யெறியும்பிறப்பையெதிர்ந்தார்புரளவிருநிலத்தே. (௪)

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே. (௫)

ஈண்டியமாயாவிருள்கெடவெப்பொருளும்விளங்கத்
தூண்டியசோதியைமீனவனுஞ்சொல்லவல்லனல்லன்
வேண்டியபோதேவிலக்கிலைவாய்தல்விரும்புமின்றாள்
பாண்டியனாரருள்செய்கின்றமுத்திப்பரிசிதுவே. (௬)

மாயவனப்பரிமேல்கொண்டுமற்றவர்கைக்கொளலும்
போயறுமிப்பிறப்பென்னும்பகைகள்புகுந்தவருக்
காயவரும்பெருஞ்சீருடைத்தன்னருளேயருளுஞ்
சேயநெடுங்கொடைத்தென்னவன்சேவடிசேர்மின்களே. (௭)

அழிவின்றிநின்றதொரானந்தவெள்ளத்திடையழுத்திக்
கழிவில்கருணையைக்காட்டிக்கடியவினையகற்றிப்
பழமலம்பற்றறுத்தாண்டவன்பாண்டிப்பெரும்பதமே
முழுதுலகுந்தருவான்கொடையேசென்றுமுந்துமினே. (௮)

விரவியதீவினைமேலைப்பிறப்புமுந்நீர்கடக்கப்
பரவியவன்பரையென்புருக்கும்பரம்பாண்டியனார்
புரவியின்மேல்வரப்புந்திகொளப்பட்டபூங்கொடியார்
மரவியன்மேல்கொண்டுதம்மையுந்தாமறியார்மறந்தே. (௯)

கூற்றைவென்றாங்கைவர்கோக்களையும்வென்றிருந்தழகால்
வீற்றிருந்தான்பெருந்தேவியுந்தானுமோர்மீனவன்பா
லேற்றுவந்தாருயிருண்டதிறலொற்றைச்சேவகனே
தேற்றமிலாதவர்சேவடிசிக்கெனச்சேர்மின்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# பிடித்தபத்து.

## முத்திக்கலப்புரைத்தல்.

திருத்தோணிபுரத்திலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கரசேயொழிவறநிறைந்த
யோகமேயூற்றையேன்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டு
வாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலே
செல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௧)

விடைவிடாதுகந்தவிண்ணவர்கோவே
வினையனேனுடையமெய்ப்பொருளே
முடைவிடாதடியேன்மூத்தறமண்ணாய்
முழுப்புழுக்குரம்பையிற்கிடந்து
கடைபடாவண்ணங்காத்தெனையாண்ட
கடவுளேகருணைமாகடலே
யிடைவிடாதுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௨)

அம்மையேயப்பாவொப்பிலாமணியே
யன்பினில்விளைந்தவாரமுதே
பொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப்புலையனேன்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
செல்வமேசிவபெருமானே
யிம்மையேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௩)

அருளுடைச்சுடரேயளிந்ததோர்கனியே
பெருந்திறலருந்தவர்க்கரசே
பொருளுடைக்கலையேபுகழ்ச்சியைக்கடந்த
போகமேயோகத்தின்பொலிவே

தெருளிடத்தடியார்சிந்தையுட்புகுந்த
செல்வமேசிவபெருமானே
யிருளிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௪)

ஒப்புனக்கில்லாவொருவனேயடியே
னுள்ளத்துள்ளொளிர்கின்றவொளியே
மெய்ப்பதமறியாவீறிலியேற்கு
விழுமியதளித்ததோரன்பே
செப்புதற்கரியசெழுஞ்சுடர்மூர்த்தி
செல்வமேசிவபெருமானே
யெய்ப்பிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௫)

அறவையேன்மனமேகோயிலாக்கொண்டாண்
டளவிலாவானந்தமருளிப்
பிறவிவேரறுத்தென்குடிமுழுதாண்ட
பிஞ்ஞகாபெரியவெம்பொருளே
திறவிலேகண்டகாட்சியேயடியேன்
செல்வமேசிவபெருமானே
யிறவிலேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௬)

பாசவேரறுக்கும்பழம்பொருடன்னைப்
பற்றுமாறடியனேற்கருளிப்
பூசனையுகந்தென்சிந்தையுட்புகுந்து
பூங்கழல்காட்டியபொருளே
தேசுடைவிளக்கேசெழுஞ்சுடர்மூர்த்தி
செல்வமேசிவபெருமானே
யீசனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௭)

அத்தனேயண்டரண்டமாய்நின்ற
வாதியேயாதுமீறில்லாச்
சித்தனேபத்தர்சிக்கெனப்பிடித்த
செல்வமேசிவபெருமானே
பித்தனேயெல்லாவுயிருமாய்த்தழைத்துப்
பிழைத்தவையல்லையாய்நிற்கு
மெத்தனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௮)

பானிலேநஞ்ஞாட்டுந்தாயினுஞ்சாலப்
பரிந்துநீபாவியேனுடைய
வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கி
யுலப்பிலாவானந்தமாய
தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்த
செல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (௯)

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்
பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கியெளியையாயாண்ட
வீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலாமறுத்தநற்சோதீ
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

# திருவேசறவு.

---

## சுட்டறிவொழித்தல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இரும்புதருமனத்தேனையீர்த்தீர்த்தெனென்புருக்கிக்
கரும்புதருசுவையெனக்குக்காட்டினையுன்கழலிணைக
ளொருங்குதிரையுலவுசடையுடையானேநரிகளெல்லாம்
பெருங்குதிரையாக்கியவாறன்றேயுன்பேரருளே. (க)

பண்ணார்ந்தமொழிமங்கைபங்காநின்னாளானார்க்
குண்ணார்ந்தவாரமுதேயுடையானேயடியேனை
மண்ணார்ந்தபிறப்பறுத்திட்டாள்வாய்நீவாவென்னக்
கண்ணாரவுய்ந்தவாறன்றேயுன்கழல்கண்டே. (உ)

ஆதமிலியான்பிறப்பிறப்பென்னுமருநரகி
லார்தமருமின்றியேயழுந்துவேற்காவாவென்

னோதமலிநஞ்சுண்டவுடையானேயடியேற்குன்
பாதமலர்காட்டியவாறன்றேயெம்பரம்பரனே. (௩)

பச்சைத்தாளரவாட்டீபடர்சடையாய்பாதமல
ருச்சத்தார்பெருமானேயடியேனையுய்யக்கொண்
டெச்சத்தார்சிறுதெய்வமேத்தாதேயச்சோவென்
சித்தத்தாறுய்ந்தவாறன்றேயுன்றிறநினைந்தே. (௪)

கற்றறியேன்கலைஞானங்கசிந்துருகேனாயிடினு
மற்றறியேன்பிறதெய்வம்வாக்கியலால்வார்கழல்வந்
துற்றிறுமாந்திருந்தேனெம்பெருமானேயடியேற்குப்
பொற்றவிசுநாய்க்கிடுமாறன்றேநின்பொன்னருளே. (௫)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நஞ்சாயதுயர்கூரநடுங்குவேனின்னருளா
லுய்ஞ்சேனெம்பெருமானேயுடையானேயடியேனை
யஞ்சேலென்றாண்டவாறன்றேயம்பலத்தமுதே. (௬)

என்பாலைப்பிறப்பறுத்திங்கிமையவர்க்குமறியவொண்ணாத்
தென்பாலைத்திருப்பெருந்துறையுறையுஞ்சிவபெருமா
னன்பாநீயகநெகவேபுகுந்தருளியாட்கொண்ட
தென்பாலேநோக்கியவாறன்றேயெம்பெருமானே. (௭)

மூத்தானேமூவாதமுதலானேமுடிவில்லா
வோத்தானேபொருளானேயுண்மையுமாயின்மையுமாய்ப்
பூத்தானேபுகுந்திங்குப்புரள்வேனைக்கருணையினாற்
பேர்த்தேநீயாண்டவாறன்றேயெம்பெருமானே. (௮)

மருவினியமலர்ப்பாதமனத்தில்வளர்ந்துள்ளுருகத்
தெருவுதொறுமிகவலறிச்சிவபெருமானென்றேத்திப்
பருகியநின்பரங்கருணைத்தடங்கடலிற்படிவாமா
றருளெனக்கிங்கிடைமருதேயிடங்கொண்டவம்மானே. (௯)

நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னூனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருப்புலம்பல்.

## சிவானந்தமுதிர்வு.

திருவாரூரிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறாவெண்ணீறாடீ
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே. (க)

சடையானேதழலாடீதயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனா
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே. (உ)

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே. (ங)

திருச்சிற்றம்பலம்.

# குலாப்பத்து.

## அநுபவமிடையீடுபடாமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங்கவந்தியுமேயுறவென்றிட்டுள்கசிந்து
தேடும்பொருளுஞ்சிவன்கழலேயெனத்தெளிந்து
கூடுமுயிருங்குமண்டையிடக்குனித்தடியே
னாடுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (க)

துடியேரிடுகிடைத்தூய்மொழியார்தோணசையாற்
செடியேறுதீமைகளெத்தனையுஞ்செய்திடினு
முடியேன்பிறவேனெனைத்தனதாண்முயங்குவித்த
வடியேன்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (உ)

என்புள்ளுருக்கியிருவினையையீடழித்துத்
துன்பங்களைந்து துவந்துவங்கடேய்மைசெய்து
முன்புள்ளவற்றைமுழுதழியவுள்புகுந்த
வன்பின்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௩)

குறியுநெறியுங்குணமுமிலார்குழாங்கடமைப்
பிறியுமனத்தார்பிறிவரியபெற்றியனைச்
செறியுங்கருத்திலுருத்தமுதாஞ்சிவபதத்தை
யறியுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௪)

பேருங்குணமும்பிணிப்புறுமிப்பிறவிதனைத்
தூரும்பரிசுதுரிசறுத்துத்தொண்டரெல்லாஞ்
சேரும்வகையாற்சிவன்கருணைத்தேன்பருகி
யாருங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௫)

கொம்பிலரும்பாய்க்குவிமலராய்க்காயாகி
வம்புபழுத்துடலமாண்டிங்ஙன்போகாமே
நம்புமென்சிந்தைநணுகும்வண்ணநானணுகு
மம்பொன்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௬)

மதிக்குந்திறலுடையவல்லரக்கன்றோணெரிய
மிதிக்குந்திருவடியென்றலைமேல்வீற்றிருப்பக்
கதிக்கும்பசுபாசமொன்றுமிலோமெனக்களித்திங்
கதிர்க்குங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௭)

இடக்குங்கருமுருட்டேனப்பின்கானகத்தே
நடக்குந்திருவடியென்றலைமேனட்டமையாற்
கடக்குந்திறலைவர்கண்டகர்தம்வல்லாட்டை
யடக்குங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௮)

பாழ்ச்செய்விளாவிப்பயனிலியாய்க்கிடப்பேற்குக்
கீழ்ச்செய்தவத்தாற்கிழியீடுநேர்பட்டுத்
தாட்செய்யதாமரைச்சைவனுக்கென்புன்றலையா
லாட்செய்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௯)

கொம்மைவரிமுலைக்கொம்பனையாள்கூறனுக்குச்
செம்மைமனத்தாற்றிருப்பணிகள்செய்வேனுக்
கிம்மைதரும்பயனித்தனையுமீங்கொழிக்கு
மம்மைகுலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# அற்புதப்பத்து.

## அனுபவமாற்றாமை.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மையலாயிந்தமண்ணிடைவாழ்வெனுமாழியுளகப்பட்டுத்
தையலாரெனுஞ்சுழித்தலைப்பட்டுநான்றலைதடுமாறாமே
பொய்யெலாம்விடத்திருவருடந்துதன்பொன்னடியிணைகாட்டி
மெய்யனாய்வெளிகாட்டிமுன்னின்றதோரற்புதம்விளம்பேனே. (க)

ஏய்ந்தமாமலரிட்டுமுட்டாததோரியல்பொடும்வணங்காதே
சாந்தமார்முலைத்தையனல்லாரொடுந்தலைதடுமாறிப்
போந்தியானுயர்புகாவணமருள்செய்துபொற்கழலிணைகாட்டி
வேந்தனாய்வெளியேயென்முனின்றதோரற்புதம்விளம்பேனே. (௨)

நடித்துமண்ணிடைப்பொய்யினைப்பலசெய்துநானெனதெனுமாயக்
கடித்தவாயிலேநின்றுமுன்வினைமிகக்கழறியேதிரிவேனைப்
பிடித்துமுன்னின்றப்பெருமறைதேடியவரும்பொருளடியேனை
யடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதமறியேனே. (௩)

பொருந்துமிப்பிறப்பிறப்பிவைநினையாதுபொய்களேபுகன்றுபோய்க்
கருங்குழலினார்கண்களாலேறுண்டுகலங்கியேகிடப்பேனைத்
திருந்துசேவடிச்சிலம்பவைசிலம்பிடத்திருவொடுமகலாதே
யருந்துணைவனாயாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (௪)

மாடுஞ்சுற்றமுமற்றுளபோகமுமங்கையர்தம்மோடுங்
கூடியங்குளகுணங்களாலேறுண்டுகுலாவியேதிரிவேனை
வீடுதந்தென்றன்வெந்தொழில்வீட்டிடமென்மலர்க்கழல்காட்டி
யாடுவித்தெனதகம்புகுந்தாண்டதோரற்புதமறியேனே. (௫)

வணங்குமிப்பிறப்பிறப்பிவைநினையாதுமங்கையர்தம்மோடும் [னைக்
பிணைந்துவாயிதழ்ப்பெருவெள்ளத்தழுந்திநான் பித்தனாய்த் திரிவே
குணங்களுங்குறிகளுமிலாக்குணக்கடல்கோமளத்தொடுங்கூடி
யணைந்துவந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (௬)

இப்பிறப்பினிலிணைமலர்கொய்துநானியல்பொடஞ்செழுத்தோதித்
தப்பிலாதுபொற்கழல்களுக்கிடாதுநான்றடமுலையார்தங்கண்

மைப்புலாங்கண்ணாலேறுண்டுகிடப்பேனைமலரடியிணைகாட்டி
யப்பனென்னைவந்தாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (எ)

ஊசலாட்டுமிவ்வுடலுயிராயினவிருவினையறுத்தென்னை
யோசையாலுணர்வார்க்குணர்வரியவனுணர்வுதந்தொளியாக்கிப்
பாசமானவைபற்றறுத்துயர்ந்ததன்பரம்பெருங்கருணையா
லாசைதீர்த்தடியாரடிக்கூட்டியவற்புதமறியேனே. (அ)

பொச்சையானவிப்பிறவியிற்கிடந்துநான்புழுத்தலைநாய்போல
விச்சையாயினவேழையர்க்கேசெய்தங்கிணங்கியேதிரிவேனை
யிச்சகத்தரியயனுமெட்டாததன்விரைமலர்க்கழல்காட்டி
யச்சனென்னையுமாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (கூ)

செறியுமிப்பிறப்பிறப்பிலைநினையாதுசெறிகுழலார்செய்யுங்
கிறியுங்கீழ்மையுங்கெண்டையங்கண்களுமுன்னியேகிடப்பேனை
யிறைவனெம்பிரானெல்லையில்லாததன்னிணைமலர்க்கழல்காட்டி
யறிவுதந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

# சென்னிப்பத்து.

---

## சிவவிளைவு.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

---

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தேவதேவன்மெய்ச்சேவகன்றென்பெருந்துறைநாயகன்
மூவராலுமறியொணாமுதலாயவானந்தமூர்த்தியான்
யாவராயினுமன்பரன்றியறியொணாமலர்ச்சோதியான்
றூயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிச்சுடருமே. (க)

அட்டமூர்த்தியழகனின்னமுதாயவானந்தவெள்ளத்தான்
சிட்டன்மெய்ச்சிவலோகநாயகன்றென்பெருந்துறைச்சேவகன்
மட்டுவார்குழன்மங்கையாளையோர்பாகம்வைத்தவழகன்றன்
வட்டமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (உ)

நங்கைமீரெனைநோக்குமின்னங்கணாதனம்பணிகொண்டவன்,றெ ங்குசோலைகள்சூழ்பெருந்துறைமேயசேவகனாயகன், மங்கைமார்கை யில்வளையுங்கொண்டெம்முயிருங் கொண்டெம்பணிகொள்வான், பொங்குமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிப்பொலியுமே. (௩)

பத்தர்சூழப்பராபரன்பாரில்வந்துபார்ப்பானெனச்
சித்தர்சூழச்சிவபிரான்றில்லைமூதூர்நடஞ்செய்வா [ன்
னெத்தனாகிவந்தில்புகுந்தெமையாளுங்கொண் டெம்பணிகொள்வா
வைத்தமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (௪)

மாயவாழ்க்கையைமெய்யென்றெண்ணிமதித்திடாவகைநல்கினான்
வேயதோளுமைபங்கனெங்கடிருப்பெருந்துறைமேவினான்
காயத்துள்ளமுதூறவூறநீகண்டுகொள்ளென்றுகாட்டிய
சேயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (௫)

சித்தமேபுகுந்தெம்மையாட்கொண்டுதீவினைகெடுத்துய்யலாம்
பத்திதந்துதன்பொற்கழற்கணேபன்மலர்கொய்துசேர்த்தலு
முத்திதந்திந்தமூவுலகுக்குமப்புறத்தெமைவைத்திடு
மத்தன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (௬)

பிறவியென்னுமிக்கடலைநீந்தத்தன்பேரருடந்தருளினா
னறவையென்றடியார்கடங்களருட்குழாம்புகவிட்டுநல்
லுறவுசெய்தெனையுய்யக்கொண்டபிரான்றனுண்மைப்பெருக்கமாந்
திறமைகாட்டியசேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (௭)

புழுவினாற்பொதிந்திடுகுரம்பையிற்பொய்தனையொழிவித்திடு,மெ ழில்கொள்சோதியெம்மீசனெம்பிரானென்னுடையப்பனென்றென் று, தொழுதகையினராகித்தூயமலர்க்கண்கணீர்மல்குந்தொண்டர்க் கு, வழுவிலாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே. (௮)

வம்பனாய்த்திரிவேனைவாவென்றுவல்வினைப்பகைமாய்த்திடு
மும்பரானுலகூடறுத்தப்புறத்தனாய்நின்றவெம்பிரா
னன்பரானவர்க்கருளிமெய்யடியார்கட்கின்பந்தழைத்திடுஞ்
செம்பொன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. ()

முத்தனைமுதற்சோதியைமுக்கணப்பனைமுதல்வித்தினைச்
சித்தனைச்சிவலோகனைத்திருநாமம்பாடித்திரிதரும்
பத்தர்காளிங்கேவம்மினீருங்கள்பாசந்தீரப்பணிமினோ
சித்தமார்தருஞ்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருவார்த்தை.

## அறிவித்தன்புறுதல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாதிவர்பாகன்மறைபயின்ற
வாசகன்மாமலர்மேயசோதி
கோதில்பரங்கருணையடியார்
குலாவுநீதிகுணமாகநல்கும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்
புண்ணியன்மண்ணிடைவந்திழிந்
தாதிப்பிரமம்வெளிப்படுத்த
வருளறிவாரெம்பிரானுவாரே. (க)

மாலயன்வானவர்கோனும்வந்து
வணங்கவவர்க்கருள்செய்தவீசன்
ஞாலமதனிடைவந்திழிந்து
நன்னெறிகாட்டிநலந்திகழுங்
கோலமணியணிமாடநீடு
குலாவுமிடவைமடநல்லாட்குச்
சீலமிகக்கருணையளிக்குந்
திறமறிவாரெம்பிரானுவாரே. (உ)

அணிமுடியாதியமரர்கோமா
னானந்தக்கூத்தனறுசமயம்
பணிவகைசெய்துபடவதேறிப்
பாரொடுவிண்ணும்பரவியேத்தப்
பிணிகெடநல்கும்பெருந்துறையெம்
பேரருளாளன்பெண்பாலுகந்து
மணிவலைகொண்டுவான்மீன்விசிறும்
வகையறிவாரெம்பிரானுவாரே. (௩)

வேடுருவாகிமகேந்திரத்து
மிகுகுறைவானவர்வந்துதன்னைத்
தேடவிருந்தசிவபெருமான்
சிந்தனைசெய்தடியோங்களுய்ய

வாடலமர்ந்தபரிமாவேறி
யையன்பெருந்துறையாதியந்நா
ளேடர்களையெங்குமாண்டுகொண்ட
வியல்பறிவாரெம்பிரானாவாரே. (ச)

வந்திமையோர்கள்வணங்கியேத்த
மாக்கருணைக்கடலாயடியார்
பந்தனைவிண்டறநல்குமெங்கள்
பரமன்பெருந்துறையாதியந்நா
ளுந்துதிரைக்கடலைக்கடந்தன்
றோங்குமதிலிலங்கையதனிற்
பந்தணைமெல்விரலாட்கருளும்
பரிசறிவாரெம்பிரானாவாரே. (ரு)

வேவத்திரிபுரஞ்செற்றவில்லி
வேடுவனாய்க்கடிநாய்கள்சூழ
வேவற்செயல்செய்யுந்தேவர்முன்னே
யெம்பெருமான்றானியங்குகாட்டி
லேவுண்டபன்றிக்கிரங்கியீச
னெந்தைபெருந்துறையாதியன்று
கேவலங்கேழலாய்ப்பால்கொடுத்த
கிடப்பறிவாரெம்பிரானாவாரே. (சு)

நாதமுடையதோர்நற்கமலப்
போதினினண்ணியநன்னுதலா
ரோதிப்பணிந்தலர்தூவியேத்த
வொளிவளர்சோதியெம்மீசன்மன்னும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்
புண்ணியன்மண்ணிடைவந்துதோன்றிப்
பேதங்கெடுத்தருள்செய்பெருமை
யறியவல்லாரெம்பிரானாவாரே. (எ)

பூவலர்கொன்றையமாலைமார்பன்
போருகிர்வன்புலிகொன்றவீரன்
மாதுநல்லாளுமைமங்கைபங்கன்
வண்பொழில்சூழ்தென்பெருந்துறைக்கோ
னேதில்பெரும்புகழெங்களீச
னிருங்கடல்வாணற்குத்தீயிற்றோன்று
மோவியமங்கையர்தோள்புணரு
முருவறிவாரெம்பிரானாவாரே. (அ)

தூவெள்ளைநீறணியெம்பெருமான்
சோதிமகேந்திரநாதன்வந்து
தேவர்தொழும்பதம்வைத்தவீசன்
றென்னன்பெருந்துறையாளியன்று
காதல்பெருகக்கருணைகாட்டித்
தன்கழல்காட்டிக்கசிந்துருகக்
கேதங்கெடுத்தென்னையாண்டருளுங்
கிடப்பறிவாரெம்பிரானாவாரே. (௯)

அங்கணனெங்களமரர்பெம்மா
னடியார்க்கமுதனவனிவந்த
வெங்கள்பிரானிரும்பாசந்தீர
விகபரமாயதோரின்பமெய்தச்
சங்கங்கவர்ந்துவண்சாத்தினோடுஞ்
சதுரன்பெருந்துறையாளியன்று
மங்கையர்மல்குமதுரைசேர்ந்த
வகையறிவாரெம்பிரானாவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# எண்ணப்பதிகம்.

## ஒழியாவின்பத்துவகை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாருருவாயபிறப்பறவேண்டும்பத்திமையும்பெறவேண்டுஞ்
சீருருவாயசிவபெருமானேசெங்கமலமலர்போ
லாருருவாயவென்னாரமுதேயுன்னடியவர்தொகைநடுவே, யோருரு
வாயநின்திருவருள்காட்டியென்னையுமுய்யக்கொண்டருளே. (௧)

உரியேனல்லேனுனக்கடிமையுன்னைப்பிரிந்திங்கொருபொழுதுந்
தரியேனாயேனின்னதென்றறியேன்சங்கராகருணையினாற்
பெரியோனொருவன்கண்டுகொளென்றுன்பெய்கழலடிகாட்டிப், பிரி
யேனென்றென்றருளியவருளும்பொய்யோவெங்கள்பெருமானே.

என்பேயுருகநின்னருளளித் துன்னிணைமலரடிகாட்டி
முன்பேயென்னையாண்டுகொண்டமுனிவாமுனிவர்முழுமுதலே
யின்பேயருளியெனையுருக்கியுயிருண்கின்றவெம்மானே
நண்பேயருளாயென்னுயிர்நாதாநின்னருணாணுமே. (௩)

பத்திலனேனும்பணிந்திலனேனுமுன்னுயர்ந்தபைங்கழல்காணப்
பித்திலனேனும்பிதற்றிலனேனும்பிறப்பறுப்பாயெம்பெருமானே
முத்தனையானேமணியனையானேமுதல்வனேமுறையோவென்
றெத்தனையானும்யான்றொடர்ந்துன்னையினிப்பிரிந்தாற்றேனே. (௪)

காணுமதொழிந்தேனின் றிருப்பாதங்கண்டுகண்களிகூரப், பேணுமதொழிந்தேன்பிதற்றுமதொழிந்தேன் பின்னையெம்பெருமானே, தாணுவேயழிந்தேனின்னினைந்துருகுந்தன்மையென்புன்மைகளாற் காணுமதொழிந்தேனீயினிவரினுங்காணவுநாணுவனே. (௫)

பாற்றிருநீற்றெம்பரமனைப்பரங்கருணையோடுமெதிர்ந்து, தோற்றி மெய்யடியார்க்கருட்டுறையளிக்குஞ்சோதியைநீதியிலேன், போற்றி யென்னமுதேயெனநினைந்தேத்திப் புகழ்ந்தழைத்தலறியென்னுள் ளே, யாற்றுவனுகவுடையவனேயெனையாவவென்றருளாயே. (௬)

திருச்சிற்றம்பலம்.

# யாத்திரைப்பத்து.

## அனுபவாதீதமுரைத்தல்.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார்சென்னிமன்னனெம்புயங்கப்பெருமான்சிறியோமை
யோவாதுள்ளங்கலந்துணர்வாயுருக்கும்வெள்ளக்கருணையிஞ
லாவாவென்னப்பட்டன்பாயாட்பட்டீர்வந்தொருப்படுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான்கழல்புகவே. ()

புகவேவேண்டாபுலன்களினீர்புயங்கப்பெருமான்பூங்கழல்கண்
மிகவேநினைமின்மிக்கவெல்லாம்வேண்டாபோகவிடுமின்க
ணகவேஞாலத்துள்புகுந்துநாயேயனையநமையாண்ட
தகவேயுடையான்றனைச்சாரத்தளராதிருப்பார்தாந்தாமே. (௨)

தாமேதமக்குச்சுற்றமுந்தாமேதமக்குவிதிவகையும்
யாமாரெமதார்பாசமாரென்னமாயமிவைபோகக்,கோமான்பண்டை
த்தொண்டரொடுமவன்றன்குறிப்பேகுறிக்கொண்டு,போமாறமைமி
ன்பொய்நீக்கிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே. (௩)

அடியாராணீரெல்லீருமகலவிடுமின்விளையாட்டைக்
கடிசேரடியேவந்தடைந்துகடைக்கொண்டிருமின்றிருக்குறிப்பைச்
செடிசேருடலைச்செலநீக்கிச்சிவலோகத்தேநமைவைப்பான்
பொடிசேர்மேனிப்புயங்கன்றன்பூவார்கழற்கேபுகவிடுமே. (௪)

விடுமின்வெகுளிவேட்கைநோய்மிகவோர்காலமினியில்லை
யுடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோ டுடன்போவதற்கேயொருப்ப
டுமி, னடைவோநாம்போய்ச்சிவபுரத்துளணியார்கதவதடையாமே
புடைபட்டுருகிப்போற்றுவோம்புயங்கனாள்வான்புகழ்களையே. (௫)

புகழ்மின்றொழுமின்பூப்புனைமின்புயங்கன்றாளேபுந்திவைத்திட்
டிகழ்மினெல்லாவல்லலையுமினியோரிடையூறடையாமே
திகழுஞ்சீரார்சிவபுரத்துச்சென்றுசிவன்றாள்வணங்கிநா
நிகழுமடியார்முன்சென்றுநெஞ்சமுருகிநிற்போமே. (௬)

நிற்பார்நிற்கநில்லாவுலகினில்லோமினிநாஞ்செல்வோமே
பொற்பாலொப்பாந்திருமேனிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந்தாழாதேநிற்கும்பரிசேயொருப்படுமின்
பிற்பானின்றுபேழ்கணித்தாற்பெறுதற்கரியன்பெருமானே. (௭)

பெருமான்பேரானந்தத்துப்பிரியாதிருக்கப்பெற்றீர்கா
ளருமாலுற்றுப்பின்னைநீரம்மாவழுங்கியரற்றாதே
திருமாமணிசேர்திருக்கதவந்திறந்தபோதேசிவபுரத்துத்
திருமாலறியாத்திருப்புயங்கன்றிருத்தாள்சென்றுசேர்வோமே. (௮)

சேரக்கருதிச்சிந்தனையைத்திருந்தவைத்துச்சிந்திமின்
போரிற்பொலியும்வேற்கண்ணாள்பங்கன்புயங்கனருளமுத
மாரப்பருகியாராதவார்வங்கூரவழுந்துவீர்
போரப்புரிமின்சிவன்கழற்கேபொய்யிற்கிடந்துபுரளாதே. (௯)

புரள்வார்தொழுவார்புகழ்வாராயின்றேவந்தாளாகாதீர்
மருள்வீர்பின்னைமதிப்பாரார்மதியுட்கலங்கிமயங்குவீர்
தெருள்வீராகிலிதுசெய்மின்சிவலோகக்கோன்றிருப்புயங்க
னருளார்பெறுவாரகலிடத்தேயந்தோவந்தோவந்தோவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருப்படையெழுச்சி.

## பிரபஞ்சப்போர்.

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

கலிவிருத்தம.

திருச்சிற்றம்பலம.

ஞானவாளேந்துமையர்நாதப்பறையறைமின
மானமாவேறுமையர்மதிவெண்குடைகவிமி
னானநீற்றுக்கவசமடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோநாமாயப்படைவாராமே. (௧)

தொண்டர்காடூசிசெல்லீர்பத்தர்காள்சூழப்போகீ
ரொண்டிறல்யோகிகளேபேரணியுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்க
ளண்டர்நாடாள்வோநாமல்லற்படைவாராமே. (௨)

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்பா.

## அணைந்தோர்தன்மை.

திருப்பெருந்துறையிலருளிச்செய்யப்பட்டது.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

வெய்யவினையிரண்டும்வெந்தகலமெய்யுருகிப்
பொய்யும்பொடியாகாதென்செய்கேன்—செய்ய
திருவார்பெருந்துறையான்றேனுந்துசெந்தீ
மருவாதிருந்தேன்மனத்து. (௧)

ஆர்க்கோவரற்றுகோவாடுகோபாடுகோ
பார்க்கோபரம்பரனேயென்செய்கேன்—தீர்ப்பரிய
வானந்தமாலேற்றுமத்தன்பெருந்துறையான்
றானென்பாராரொருவர்தாழ்ந்து. (௨)

செய்தபிழையறியேன்சேவடியேகைதொழுதே
யுய்யும்வகையினுயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள்வேன்மடுத்தென்சிந்தனைக்கேகோத்தான்
பெருந்துறையின்மேயபிரான். (௩)

முன்னைவினையிரண்டும்வேரறுத்துமுன்னின்றான்
பின்னைப்பிறப்பறுக்கும்பேராளன்—றென்னன்
பெருந்துறையின்மேயபெருங்கருணையாளன்
வருந்துயரந்தீர்க்குமருந்து. (ச)

அறையோவறிவார்க்கனைத்துலகுமீன்ற
மறையோனுமாலுமால்கொள்ளு—மிறையோன்
பெருந்துறையுண்மேயபெருமான்பிரியா
திருந்துறையுமென்னெஞ்சத்தின்று. (ரு)

பித்தென்னையேற்றும்பிறப்பறுக்கும்பேச்சரிதா
மத்தமேயாக்கும்வந்தென்மனத்தை—யத்தன்
பெருந்துறையானாட்கொண்டுபேரருளாளனுக்கு
மருந்திறவாப்பேரின்பம்வந்து. (சா)

வாராவழியருளிவந்தெனக்குமாறின்றி
யாராவமுதாயமைந்தன்றே—சீரார்
திருத்தென்பெருந்துறையானென்சிந்தைமேய
வொருத்தன்பெருக்குமொளி. (எ)

யாவர்க்குமேலாமளவிலாச்சீருடையான்
யாவர்க்குங்கீழாமடியேனை—யாவரும்
பெற்றறியாவின்பத்துள்வைத்தாய்க்கென்னெம்பெருமான்
மற்றறியேன்செய்யும்வகை. (அ)

மூவருமுப்பத்துமூவருமற்றொழிந்த
தேவருங்காணாச்சிவபெருமான்—மாவேறி
வையகத்தேவந்திழிந்தவார்கழல்கள்வந்திக்க
மெய்யகத்தேயின்பமிகும். (கூ)

இருந்தென்னையாண்டாணிணையடியேசிந்தித்
திருந்திரந்துகொண்ணெஞ்சேயெல்லாந்—தருங்காண்
பெருந்துறையின்மேயபெருங்கருணையாளன்
மருந்துருவாயென்மனத்தேவந்து. (கo)

இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியா—யன்பமைத்துச்
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து. (கக)

திருச்சிற்றம்பலம்.

மகாமகோபாத்தியாய, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், அடையாறு, சென்னை-20.

# பண்டாயநான்மறை.

## அநுபவத்துக்கையமின்மையுரைத்தல்.

திருப்பெருந்துறையிலருளிச்செயப்பட்டது.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

பண்டாயநான்மறையும்பாலணுகாமாலயனுங்
கண்டாருமில்லைக்கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங்கோகழியெங்கோமாற்குநெஞ்சமே
யுண்டாமோகைம்மாறுரை. (க)

உள்ளமலமூன்றுமாயவுகுபெருந்தேன்
வெள்ளந்தரும்பரியின்மேல்வந்த—வள்ளன்
மருவும்பெருந்துறையைவாழ்த்துமின்கள்வாழ்த்தக்
கருவுங்கெடும்பிறவிக்காடு. (உ)

காட்டகத்துவேடன்கடலில்வலைவாண
ஞட்டிற்பரிப்பாகனம்வினையை—வீட்டி
யருளும்பெருந்துறையானங்கமலபாத
மருளுங்கெடநெஞ்சேவாழ்த்து. (ங)

வாழ்ந்தார்களாவாரும்வல்வினையைமாய்ப்பாருந்
தாழ்ந்துலகமேத்தத்தகுவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சியேத்துந்திருவார்பெருந்துறையை
நன்றிறைஞ்சியேத்துநமர். (ச)

நண்ணிப்பெருந்துறையைநம்மிடர்கள்போயகல
வெண்ணியெழுகோகழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோடுத்தரகோசமங்கைமன்னிக்
கழியாதிருந்தவனைக்காண். (ரு)

காணுங்கரணங்களெல்லாம்பேரின்பமெனப்
பேணுமடியார்பிறப்பகலக்—காணும்
பெரியானைநெஞ்சேபெருந்துறையிலென்றும்
பிரியானைவாயாரப்பேசு. (சு)

பேசும்பொருளுக்கிலக்கிதமாம்பேச்சிறந்த
மாசின்மணியின்மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையேயென்றுபிறப்பறுத்தேனல்ல
மருந்தினடியென்மனத்தேவைத்து. (எ)

திருச்சிற்றம்பலம்.

# திருப்படையாட்சி.

## சீவோபாதியொழிதல்.

### தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே. (க)

ஒன்றினொடொன்றுமோரைந்தினொடைந்துமுயிர்ப்பறுமாகாதே
யுன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே
கன்றைநினைந்தெழுதாயெனவந்தகணக்கதுவாகாதே
காரணமாகுமனாதிகுணங்கள்கருத்துறுமாகாதே
நன்றிதுதீதெனவந்தநடுக்கநடந்தனவாகாதே
நாமுமேலாமடியாருடனேசெலநண்ணுதுமாகாதே
யென்றுமெனன்புநிறைந்தபராவமுதெய்துவதாகாதே
யேறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே. (உ)

பந்தவிகாரகுணங்கள்பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்தபராவமுதாகாதே
யந்தமிலாதவகண்டமுநம்முளகப்படுமாகாதே
யாதிமுதற்பரமாயபரஞ்சுடரண்ணுவதாகாதே
செந்துவர்வாய்மடவாரிடரானவைசிந்திடுமாகாதே
சேலனகண்களவன்றிருமேனிதிளைப்பனவாகாதே
யிந்திரஞாலவிடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே
யென்னுடைநாயகனாகியவீசனெதிர்ப்படுமாயிடிலே. (௩)

என்னணியார்முலையாகமளைந்துடனின்புறுமாகாதே
யெல்லையின்மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே
நன்மணிநாதமுழங்கியெனுள்ளுறநண்ணுவதாகாதே
நாதனணித்திருநீற்றினைநித்தலுநண்ணுவதாகாதே

மன்னியவன் பரிமேலென் பணிமூர்த்தறவை குவதாகாதே
மாமறையும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
யின்னியற்செங்கழுநீர்மலரென்றலைபெய் துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. (ச)

மண்ணினின்மாயைமதித்துவகுத்தமயக்கறுமாகாதே
வானவரும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
கண்ணிலிகாலமனைத்தினும்வந்தகலக்கறுமாகாதே
காதல்செயும்மடியார்மனமின்றுகளித்திடுமாகாதே
பெண்ணலியாணெனநாமெனவந்தபிணக்கறுமாகாதே
பேரறியாதவனேகபவங்கள்பிழைத்தனவாகாதே
யெண்ணிலியாகியசித்திகள்வந்தெனையெய் துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. (ரு)

பொன்னியலுந்திருமேனிவெண்ணீறுபொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர்கைகள்குவிந்துபொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடையார்கள்கருத்துவெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழுமோசையிலின்பமிகுத்திடுமாகாதே
தன்னடியாரடியென்றலைமீதுதழைப்பனவாகாதே
தானடியோமுடனேயுயவந்துதலைப்படுமாகாதே
யின்னியமெங்குநிறைந்தினிதாகவியம்பிடுமாகாதே
யென்னைமுனாளுடையீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே. (சு)

சொல்லியலாதெழுதுமணியோசைசுவைதருமாகாதே
துண்ணெனவென்னுளமன்னியசோதிதொடர்ந்தெழுமாகாதே
பல்லியல்பாயபரப்பறவந்தபராபரமாகாதே
பண்டறியாதபரானுபவங்கள்பரந்தெழுமாகாதே
வில்லியனன்னுதலார்மயலின்றுவிளைந்திடுமாகாதே
விண்ணவரும்மறியாதவிழுப்பொருளிப்பொருளாகாதே
யெல்லையிலாதனவெண்குணமானவையெய்திடுமாகாதே
யிந்துசிகாமணியெங்களையாளவெழுந்தருளப்பெறிலே. (எ)

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணமமோடுசெலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. (அ)

திருச்சிற்றம்பலம்.

# ஆனந்தமாலை.

## சிவானுபவவிருப்பம்.

### தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

### ஆசிரியவிருத்தம்.

### திருச்சிற்றம்பலம்.

மின்னேரனையபூங்கழல்களடைந்தார்கடந்தார்வியனுலகம்
பொன்னேரனையமலர்கொண்டுபோற்றாநின்றாரமரரெல்லாங்
கன்னேரனையமனக்கடையாய்க்கழிப்புண்டவலக்கடல்வீழ்ந்த
வென்னேரனையேனினியுன்னைக்கூடும்வண்ணமியம்பாயே. (க)

என்னாலறியாப்பதந்தந்தாயானதறியாதேகெட்டே
னுன்னாலொன்றுங்குறைவில்லையுடையாயடிமைக்காரென்பேன்
பன்னாளுன்னைப்பணிந்தேத்தும்பழையவடியரொடுங்கூடா
தென்னாயகமேபிற்பட்டிங்கிருந்தேனோய்க்குவிருந்தாயே. (உ)

சீலமின்றிநோன்பின்றிச்செறிவேயின்றியறிவின்றித்
தோலின்பாவைக்கூத்தாட்டாய்ச்சுழன்றுவிழுந்துகிடப்பேனை
மாலுங்காட்டிவழிகாட்டிவாராவுலகநெறியேறக்
கோலங்காட்டியாண்டானைக்கொடியேனென்றோகூடுவதே. (௩.)

கெடுவேன்கெடுமாகெடுகின்றேன்கேடிலாதாய்பழிகொண்டாய்
படுவேன்படுவதெல்லாநான்பட்டாற்பின்னைப்பயனென்னே
கொடுமாநரகத்தழுந்தாமேகாத்தாட்கொள்ளுங்குருமணியே
நடுவாய்நில்லாதொழிந்தக்கானன்றோவெங்கணாயகமே. (௪)

தாயாய்முலையைத்தருவானேதாராதொழிந்தாற்சவலையாய்
நாயேன்கழிந்துபோவேனோநம்பியினித்தானல்குதியே
தாயேயென்றுன்றாளடைந்தேன்றயாநீயென்பாலில்லையே
நாயேனடிமையுடனாகவாண்டாய்நான்றான்வேண்டாவோ. (௫)

கோவேயருளவேண்டாவோகொடியேன்கெடவேயமையுமே
யாவாவென்னாவிடிலென்னையஞ்சேலென்பாராரோதான்
சாவாரெல்லாமென்னளவோதக்கவாறன்றென்னாரோ
தேவேதில்லைநடமாடதிகைத்தேனினித்தான்றேற்றாயே. (௬)

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவநாசியப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதீசெய்வதொன்றுமறியேனே. (எ)

திருச்சிற்றம்பலம்.

# அச்சோப்பதிகம்.

## அனுபவவழியறியாமை.

தில்லையிலருளிச்செயப்பட்டது.

கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறியறியாதமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (க)

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே. (௨)

பொய்யெல்லாமெய்யென்றுபுணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனைமாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான்றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௩)

மண்ணதனிற்பிறந்தெய்த்துமாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளியெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத்தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (௪)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூரநிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனுனுடையானேயடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவாறார்பெறுவாரச்சோவே. (௫)

வெந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (சு)

தையலார்மையலிலேதாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்துபாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட்டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (எ)

சாதல்பிறப்பென்னுந்தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார்கலவியிலேவிழுவேனை
மாதொருகூறுடையபிரான்றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (அ)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

## திருவாசகம் முற்றுப்பெற்றது.

# திருவாசகப்
# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அங்கணனெ | ௧௧௭ |
| அங்கியருக் | ௬௪ |
| அடர்புல | ௪௦ |
| அடற்கரி | ௩௯ |
| அடியாரானீ | ௧௧௯ |
| அடியார் | ௯௯ |
| அடியே, ல | ௧௦௦ |
| அடியே, லே | ௩௨ |
| அட்டமூர்த் | ௧௧௩ |
| அணிமுடி | ௧௧௫ |
| அண்டப்பகுதி | ௮ |
| அண்ணாமலை | ௪௫ |
| அதுபழச் | ௭௭ |
| அத்தனே | ௧௦௭ |
| அத்தியுரித் | ௬௫ |
| அத்தேவர் | ௫௫ |
| அப்பனே | ௩௪ |
| அம்பரமாம் | ௬௨ |
| அம்பலத் | ௬௨ |
| அம்மையே | ௧௦௬ |
| அயனையந | ௬௦ |
| அயன்றலை | ௫௪ |
| அரிக்கும் | ௫௮ |
| அரியானே | ௨௨ |
| அருணணிந் | ௭௬ |
| அருந்தவருக் | ௬௨ |
| அருமந்த | ௫௮ |
| அருளாதொ | ௭௯ |
| அருளாரமுத | ௯௯ |
| அருளுடை | ௧௦௬ |
| அரைசனே | ௮௦ |
| அரை, பொ | ௭௮ |
| அரைசேய | ௪௦ |
| அரையாடு | ௫௮ |
| அலரவனு | ௬௧ |
| அல்லிக்கமல | ௮௯ |
| அவமாய | ௫௮ |
| அழகேபுரிந் | ௧௦௧ |
| அழிவின்றி | ௧௦௫ |
| அழுகே | ௩௨ |
| அளவறு | ௨௬ |
| அளவிலாப் | ௯௮ |
| அளித்து | ௮௪ |
| அளிபுண் | ௮௬ |
| அறவேபெற் | ௯௯ |
| அறவையே | ௧௦௭ |
| அறிவனே | ௨௭ |
| அறிவிலா | ௨௫ |
| அறுகெடு | ௫௧ |
| அறுக்கிலே | ௮௩ |
| அறையோ | ௧௨௧ |
| அன்பராகி | ௮௨ |
| அன்பினு | ௭௯ |
| அன்றாலநீழ | ௬௪ |
| அன்றேயெ | ௧௦௧ |
| அன்னேயி | ௪௩ |
| ——— | |
| ஆடரப்பூ | ௭௧ |
| ஆடுகின்றி | ௨௫ |
| ஆட்டின் | ௬௬ |
| ஆட்டுத்தேவர் | ௮௩ |
| ஆணோவலி | ௭௦ |
| ஆதமிலி | ௧௦௮ |
| ஆதியுமந்த | ௪௧ |
| ஆமாறுன் | ௨௨ |
| ஆயநான் | ௨௩ |
| ஆயமொ | ௭௫ |
| ஆர்க்கோ | ௧௨௦ |
| ஆர்த்தபிற | ௪௪ |
| ஆவகைநாமு | ௫௩ |
| ஆவாதிரு | ௬௬ |
| ஆவாவரி | ௫௮ |
| ஆற்றகில்லே | ௮௯ |
| ஆனையாய்க் | ௪௮ |
| ஆனைவெம் | ௩௮ |
| ——— | |
| இடக்குந் | ௧௧௧ |
| இணையார் | ௯௩ |
| இந்திரனு | ௪௭ |
| இந்திரிய | ௯௭ |
| இப்பாடே | ௭௪ |
| இப்பிறப்பி | ௧௧௨ |
| இயக்கிமார | ௯௭ |
| இரங்குநம | ௭௮ |
| இரந்திரந் | ௮௦ |
| இருகை | ௨௬ |
| இருடிணிந் | ௮௮ |
| இருதலை | ௩௬ |
| இருந்தெ, டா | ௧௨௧ |
| இருந்தெ, டு | ௩௭ |
| இருப்பு | ௩௧ |
| இரும்பு | ௧௦௮ |
| இல்லை | ௩௩ |
| இழித்தன | ௩௦ |
| இன்பந் | ௭௩ |
| இன்பம் | ௧௨௧ |
| இன்பான் | ௭௫ |
| இன்றெனக் | ௮௧ |
| இன்னிசை | ௭௬ |
| ——— | |
| ஈசனேநீ | ௩௧ |
| ஈசனேயென் | ௨௮ |
| ஈண்டிய | ௧௦௫ |
| ஈரம்பு | ௬௫ |
| ——— | |
| உகந்தானே | ௭௮ |
| உங்கையிற | ௪௫ |
| உடையநா | ௩௪ |
| உடையாளு | ௭௮ |
| உடையானே | ௨௮ |
| உணர்ந்த | ௮௦ |
| உண்டொ | ௨௬ |
| உண்ணப் | ௬௬ |
| உத்தமனத்த | ௨௦ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| உம்பர் | ௧௦௬ | என்னை | ௩௭ | கயன்மாண் | ௫௯ |
| உய்யவல்லா | ௬௬ | என்றும் | ௬௭ | கரணங்க | ௫௬ |
| உரியேனல் | ௧௧௭ | —— | | கருடக்கொ | ௮௬ |
| உருகிப்பெ | ௫௯ | ஏசாநிற்ப | ௭௮ | கருவாயுல | ௫௬ |
| உருத்தெரியா | ௯௭ | ஏசினும்யா | ௪௧ | கலந்துநின் | ௯௮ |
| உரைமாண்ட | ௬௯ | ஏதமிலா | ௭௪ | கல்லாதபுல் | ௯௭ |
| உலக்கை | ௫௧ | ஏய்ந்த | ௧௧௨ | கல்லாமன | ௪௭ |
| உலவாக் | ௨௮ | ஏராரிளங் | ௭௪ | களிவந் | ௩௭ |
| உவலைச் | ௫௩ | ஏர்தரு | ௭௩ | கள்வன்கடி | ௫௭ |
| உழிதரு | ௨௧ | ஏழைத்தொ | ௬௯ | கறங்கோலை | ௫௮ |
| உழைதரு | ௪௧ | ஏனையாவ | ௨௬ | கற்போலு | ௬௮ |
| உள்ளப் | ௫௭ | —— | | கற்றறியேன் | ௧௦௩ |
| உள்ளமல | ௧௨௨ | ஐயநின் | ௩௦ | கனவேயும் | ௫௮ |
| உள்ளன | ௩௮ | —— | | கன்றுருரித் | ௫௮ |
| உற்றவாக் | ௮௮ | ஒண்ணித்தி | ௪௨ | —— | |
| உற்றாரை | ௧௧௦ | ஒண்மை | ௩௮ | காசணி | ௫௧ |
| உன்னற், சீரு | ௭௨ | ஒப்புனக் | ௧௦௭ | காட்டகத்து | ௧௨௨ |
| உன்னற், திரு | ௭௦ | ஒருவ | ௩௦ | காணலாம் | ௨௭ |
| உன்னையுகப் | ௭௩ | ஒன்றாப் | ௫௬ | காணுங் | ௧௨௨ |
| —— | | ஒன்றியொ | ௧௨௩ | காணும | ௧௧௮ |
| ஊசலாட்டு | ௧௧௩ | ஒன்றும்போ | ௧௦௦ | காணுமாறு | ௩௨ |
| ஊனாயுயிரா | ௪௯ | —— | | காதார் | ௪௪ |
| —— | | ஓடுங்கவந் | ௧௧௦ | காப்பாய் | ௯௦ |
| எங்கணாயக | ௯௩ | ஓயாதே | ௪௭ | காமனுட | ௬௮ |
| எச்சமறிவே | ௧௦௨ | ஓய்விலா | ௨௬ | காருடைப் | ௭௩ |
| எண்ணிலேன் | ௮௮ | ஓராருகா | ௪௫ | காருறு | ௩௬ |
| எண்ணுடை | ௬௮ | —— | | காலமுண் | ௧௦௬ |
| எந்தையா | ௨௭ | கடகரியும் | ௬௨ | கானார்புலித் | ௫௧ |
| எந்தையெ | ௬௩ | கடலினு | ௩௭ | —— | |
| எம்பிரான் | ௩௦ | கடலின்றிரை | ௧௦௨ | கிஞ்சுக | ௭௪ |
| எய்தலாவ | ௩௧ | கடலேயனைய | ௯௯ | கிளியனார் | ௧௦௩ |
| எய்த்தே | ௮௬ | கடவுளே | ௨௯ | கிளிவந்த | ௪௯ |
| எரிமூன்று | ௬௩ | கடையவ | ௩௫ | கிற்றவா | ௨௫ |
| எறும்பிடை | ௩௮ | கட்டறு | ௨௭ | —— | |
| எனைநானெ | ௧௦௨ | கண்களிரண் | ௧௨௩ | கீதமினிய | ௭௨ |
| என்பாலைப் | ௧௦௯ | கண்டது | ௩௯ | —— | |
| என்புள்ளுரு | ௧௧௧ | கண்ணஞ் | ௭௧ | குதுகுது | ௩௯ |
| என்பே | ௧௧௮ | கண்ணப் | ௫௫ | குலங்க | ௩௯ |
| என்னணி | ௧௨௩ | கண்ணார் | ௧௦௧ | குலம்பாடி | ௬௦ |
| என்னப்ப | ௬௦ | கதியடி | ௪௦ | குழைத்தாற் | ௧௦௦ |
| என்னாலறியா | ௧௨௫ | கமலநான் | ௯௩ | குறியுநெறி | ௧௧௧ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| குறைவிலா | ௮௦ |
| — | |
| கூடிக்கூடி | ௧௦௦ |
| கூவின | ௭௬ |
| கூறுநாவே | ௧௦௦ |
| கூற்றை | ௧௦௫ |
| — | |
| கெடுவேன் | ௧௨௫ |
| — | |
| கேட்டாயோ | ௪௭ |
| கேட்டாரு | ௨௪ |
| — | |
| கையார் | ௪௮ |
| கையாற் | ௮௭ |
| — | |
| கொந்தணவு | ௭௪ |
| கொம்பரி | ௩௮ |
| கொம்பில | ௧௧௧ |
| கொம்மை | ௧௧௧ |
| கொழுமணி | ௩௮ |
| கொள்ளு | ௨௭ |
| கொள்ளோர் | ௩௫ |
| கொள்ளேன் | ௨௦ |
| கொன்றை | ௭௨ |
| — | |
| கோணிலா | ௧௦௪ |
| கோயில்சுடு | ௬௦ |
| கோலமேனி | ௯௬ |
| கோலவரை | ௭௦ |
| கோலாலமா | ௬௧ |
| கோவே | ௧௨௫ |
| கோழிசிலம் | ௪௩ |
| கோற்றேனெ | ௧௦௨ |
| கோற்றேன் | ௭௫ |
| — | |
| சங்கமரற்றச் | ௫௩ |
| சங்கரா | ௨௯ |
| சங்கு | ௧௨௪ |
| சச்சை | ௩௯ |
| சடையா | ௧௧௦ |
| சட்டோங்கினே | ௫௬ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| சதுரை | ௧௦௪ |
| சந்திரனே | ௪௯ |
| சலமுடைய | ௬௨ |
| — | |
| சாடியவே | ௬௬ |
| சாதல் | ௧௨௭ |
| சாதிகுலம் | ௯௭ |
| சாவமுன் | ௨௦ |
| — | |
| சித்தமேபுகு | ௧௧௪ |
| சிந்தனே | ௨௪ |
| சிந்தை | ௩௧ |
| சிரிப்பார் | ௭௯ |
| சிரிப்பிப்ப | ௪௧ |
| — | |
| சீரார்திரு | ௬௫ |
| சீரார்பவ | ௬௯ |
| சீலமின்றி | ௧௨௫ |
| சீவார்ந்தீ | ௮௬ |
| — | |
| சுடர்பொற் | ௮௯ |
| சுந்தரத் | ௭௩ |
| சுந்தரசீ | ௫௦ |
| சுருள்புரி | ௮௫ |
| — | |
| சூடகந்தோ | ௫௧ |
| சூடுவேன் | ௪௯ |
| சூரியனோர் | ௬௭ |
| — | |
| செங்கணெடு | ௪௬ |
| செங்கணவ | ௪௫ |
| செடியாராக் | ௮௭ |
| செப்பார் | ௪௮ |
| செம்மை | ௧௨௭ |
| செய்த | ௧௨௦ |
| செய்யவாய் | ௭௪ |
| செய்வதறி | ௨௮ |
| செல்வநல் | ௨௭ |
| செழுகின் | ௩௬ |
| செழுக்கமல | ௮௪ |
| செறியுமி | ௧௧௩ |

| பாட்டு | பக்கம். |
|---|---|
| செறியும் | ௧௦௫ |
| — | |
| சேரக்கருதி | ௧௧௯ |
| — | |
| சொல்லிய | ௧௨௪ |
| — | |
| சோதியாய் | ௮௧ |
| சோதியே | ௯௩ |
| சோலைப்ப | ௭௫ |
| — | |
| ஞாலமிந்தி | ௮௪ |
| ஞானக்கரு | ௫௩ |
| ஞானவா | ௧௨௦ |
| — | |
| தகைவிலா | ௧௦௪ |
| தக்கனு | ௬௭ |
| தக்கனேயு | ௬௧ |
| தச்சுவிடு | ௬௫ |
| தந்ததுன் | ௮௧ |
| தரிக்கிலே | ௨௯ |
| தவமே | ௨௧ |
| தறிசெறி | ௧௦௪ |
| தனித்து | ௪௦ |
| தனியனேன் | ௨௪ |
| தன்மை | ௨௯ |
| — | |
| தாதாடு | ௭௪ |
| தாதாய்மூவே | ௯௦ |
| தாமேதம | ௧௧௯ |
| தாயாய் | ௧௨௫ |
| தாரகை | ௪௧ |
| தாராயு | ௩௨ |
| தாராவருளோ | ௯௯ |
| தாளியறுகி | ௭௨ |
| தானந்தமில் | ௬௧ |
| — | |
| திகழத்திகழு | ௮௯ |
| திண்போர் | ௬௫ |
| திருந்துவார் | ௯௫ |
| திருமாலும் | ௫௭ |
| திருவா | ௫௮ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| தில்லைமூதூர் | ௪ |
| தினைத்தனை | ௫௫ |
| — | |
| தீதில்லை | ௬௮ |
| தீர்க்கின் | ௩௬ |
| தீர்ந்தவன் | ௩௦ |
| — | |
| துடிகொ | ௯௪ |
| துடியேரிடு | ௧௧௦ |
| துணியாவுரு | ௯௯ |
| துண்டப் | ௪௮ |
| துப்பனே | ௯௪ |
| — | |
| தூவெள் | ௧௧௭ |
| — | |
| தெங்குலவு | ௭௧ |
| தென்பாலுக | ௬௧ |
| — | |
| தேரைநிறுத்தி | ௬௭ |
| தேவதேவன் | ௧௧௩ |
| தேவர்கோ | ௨௫ |
| தேனகமாம | ௫௪ |
| தேனாடுகொ | ௬௩ |
| தேனைப் | ௨௮ |
| தேன்பழச் | ௭௩ |
| தேன்புக்க | ௬௨ |
| — | |
| தையலார் | ௧௨௭ |
| தையலோர் | ௭௨ |
| — | |
| தொண்டர்கா | ௧௨௦ |
| — | |
| தோலுந்து | ௫௭ |
| — | |
| நங்காயிதெ | ௬௧ |
| நங்கைமீரெ | ௧௧௪ |
| நஞ்சமர் | ௭௦ |
| நடித்து | ௧௧௨ |
| நண்ணிப் | ௧௨௨ |
| நமச்சிவாய | ௧ |
| நரியை | ௧௨௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| நல்கா | ௭௯ |
| நல்லமலரி | ௬௭ |
| நனறாக | ௬௨ |
| — | |
| நாடகத்தா | ௨௧ |
| நாதமுடைய | ௧௧௬ |
| நாமகணாசி | ௬௬ |
| நாயிற்கடைப் | ௬௩ |
| நாயிற்கடை | ௧௦௧ |
| நாயேனை | ௫௬ |
| நானாரடி | ௧௦௧ |
| நானாரென் | ௫௫ |
| நானுமென் | ௫௬ |
| நானேயோ | ௧௦௯ |
| நான்மறை | ௯௬ |
| நான்முகன் | ௧௪ |
| நான்றனக் | ௫௬ |
| — | |
| நித்தமணா | ௭௧ |
| நிருத்தனே | ௯௩ |
| நிலநீர் | ௬௮ |
| நினைப்ப | ௩௧ |
| நினையப்பிற | ௮௯ |
| நிற்பார் | ௧௧௯ |
| — | |
| நீக்கிமுன் | ௮௮ |
| நீண்டகர | ௭௧ |
| நீண்டமாலு | ௮௯ |
| நீதியாவன | ௮௭ |
| நீரின்பவெ | ௧௦௫ |
| நீலவுரு | ௭௩ |
| — | |
| நெக்குநெக் | ௯௦ |
| நெடுந்த | ௩௭ |
| நெறிசெய் | ௬௪ |
| நெறியல்லா | ௧௨௬ |
| — | |
| நோயுற்று | ௫௬ |
| — | |
| பங்கயமா | ௬௮ |
| பச்சைத்தா | ௧௦௯ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பஞ்சாய | ௧௦௯ |
| பஞ்சாயவ | ௧௨௬ |
| பஞ்சின்மெல் | ௯௧ |
| படமாகவெ | ௬௪ |
| பணிவார் | ௩௨ |
| பண்சுமந் | ௪௭ |
| பண்டாய | ௧௨௨ |
| பண்பட்ட | ௬௩. |
| பண்ணார்ந் | ௧௦௮ |
| பண்ணினேர் | ௯௧ |
| பத்தர்சூழப் | ௧௧௪ |
| பத்திமை | ௯௮ |
| பத்திலனே | ௧௧௮ |
| பந்தணைவிர | ௯௨ |
| பந்தவிகார | ௧௨௩ |
| பப்பற | ௭௬ |
| பரந்துபல் | ௨௧ |
| பரம்பர | ௩௯ |
| பரவுவாரி | ௨௨ |
| பரவுவாரவர் | ௮௮ |
| பரிந்துவந்து | ௮௯ |
| பரிதிவாழொ | ௯௨ |
| பருவரை | ௧௦௪ |
| பவனெம் | ௨௧ |
| பழிப்பினி | ௪௧ |
| பழுதிறொல் | ௯௨ |
| பற்றாங்கவை | ௧௦௨ |
| பன்னாட்பரவி | ௬௪ |
| — | |
| பாங்கினொடு | ௯௮ |
| பாசம்பரஞ் | ௪௨ |
| பாசவே | ௧௦௭ |
| பாடவே | ௩௫ |
| பாடிமால்புக | ௯௧ |
| பாடிற்றிலே | ௪௦ |
| பாதாள | ௪௩ |
| பாரார்விசு | ௪௬ |
| பாருருவாய | ௧௧௭ |
| பாரொடு | ௯௦ |
| பாரோர் | ௮௬ |
| பார்பத | ௮௧ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| பார்பாடு | ௫௯ |
| பார்ப்பதி | ௬௬ |
| பாலகனூர்க் | ௬௭ |
| பாலுமமுத | ௬௪ |
| பாவநாசா | ௯௨ |
| பாழ்ச்செய் | ௧௧௧ |
| பாற்றிரு | ௧௧௮ |
| பாணிணைந் | ௧௦௮ |
| பிட்டுநேர் | ௯௫ |
| பிணக்கிலாத | ௯௫ |
| பிணியெலா | ௧௦௩ |
| பித்தனென் | ௮௮ |
| பித்தென்னை | ௧௨௧ |
| பிரமனரி | ௬௯ |
| பிறவிதனை | ௯௮ |
| பிறவியென் | ௧௧௪ |
| பிறிவறியா | ௮௫ |
| புகவே | ௨௧ |
| புகவேவே | ௧௧௮ |
| புகழ்மின் | ௧௧௯ |
| புகுவதா | ௨௬ |
| புகுவே | ௨௯ |
| புணர்ப்ப | ௩௦ |
| புத்தன்புரந் | ௫௯ |
| புத்தன்மு | ௬௮ |
| புரந்தரனு | ௬௬ |
| புரள்வார் | ௧௧௯ |
| புலன்கடி | ௩௮ |
| புலையனே | ௮௨ |
| புவனியிற் | ௭௭ |
| புழுவினுற் | ௧௧௪ |
| புறமே | ௩௨ |
| புற்றில்வா | ௧௦௩ |
| புற்றுமாய் | ௮௨ |
| புன்புலால் | ௧௦௮ |
| பூங்கமல | ௧௧௦ |
| பூசுவதும் | ௬௦ |
| பூணெணுதை | ௯௬ |
| பூதங்கடோ | ௭௬ |
| பூதங்களை | ௯௮ |
| பூத்தாரும் | ௬௭ |
| பூமேலயனு | ௫௭ |
| பூவலர் | ௧௧௬ |
| பூவார் | ௧௧௮ |
| பூவியல் | ௫௦ |
| பூவேறு | ௫௫ |
| பெருநீரற | ௩௮ |
| பெருமான் | ௧௧௯ |
| பெரும்பெரு | ௮௫ |
| பெற்றது | ௩௮ |
| பெற்றிபிறர்க் | ௫௦ |
| பேசப்பட் | ௩௨ |
| பேசிற்று | ௨௩ |
| பேசும் | ௧௨௨ |
| பேதமில்ல | ௯௬ |
| பேராசை | ௬௪ |
| பேருங்குண | ௧௧௧ |
| பைங்குவ | ௪௪ |
| பைந்நாப்ப | ௧௦௧ |
| பொச்சை | ௧௧௩ |
| பொதும் | ௩௯ |
| பொத்தை | ௮௮ |
| பொய்யவ | ௩௬ |
| பொய்யனே | ௮௨ |
| பொய்யாய | ௫௭ |
| பொய்யெல் | ௧௨௬ |
| பொருட்ப | ௬௭ |
| பொருத்த | ௩௩ |
| பொருந்து | ௧௧௨ |
| பொருளே | ௩௭ |
| பொலிகின் | ௩௬ |
| பொழிகின்ற | ௮௫ |
| பொன்னிய | ௧௨௪ |
| போகம் | ௩௦ |
| போதுசேரய | ௮௩ |
| போரேறே | ௨௮ |
| போற்றியரு | ௪௬ |
| போற்றியிப் | ௩௦ |
| போற்றி-போ | ௨௯ |
| போற்றி-வாழ் | ௭௫ |
| போற்றியென்று | ௨௭ |
| போற்றியோ | ௨௯ |
| மஞ்சுலா | ௧௦௪ |
| மடங்க | ௩௭ |
| மண்ணதனிற் | ௧௨௬ |
| மண்ணின் | ௧௨௪ |
| மதிக்குந் | ௧௧௧ |
| மத்துறு | ௩௯ |
| மருவினிய | ௧௦௯ |
| மருளனேன் | ௯௫ |
| மலங்கினேன் | ௯௬ |
| மலைமகளை | ௬௧ |
| மலையரை | ௬௧ |
| மன்னவ | ௪௦ |
| மன்னவெ | ௩௫ |
| மறுத்த | ௩௬ |
| மாடுஞ்சு | ௧௧௨ |
| மாடுநகை | ௫௨ |
| மாதாடு | ௭௦ |
| மாதிவர் | ௧௧௫ |
| மாயவாழ்க் | ௧௧௪ |
| மாயவனப் | ௧௦௫ |
| மாயனே | ௮௩ |
| மாலயன் | ௧௧௫ |
| மாலறியா | ௪௨ |
| மாலேபிரம | ௫௯ |
| மாவடுவகிர | ௮௫ |
| மாழைமை | ௮௫ |
| மாறி-றெனே | ௨௫ |
| மாறி-றென் | ௭௯ |
| மாறிலா | ௩௩ |
| மாறுபட் | ௩௬ |
| மானமழிந் | ௬௮ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| மானேநீ | ௪௩ |
| மா-க்கிம | ௧௦௦ |
| மா-க்கியுடை | ௩௨ |
| மானே-யுமை | ௨௮ |
| மானோர்பங்க | ௯௯ |
| மிடைந்தெ | ௮௬ |
| மின்கணி | ௮௫ |
| மின்னிடை | ௫௩ |
| மின்னேர | ௧௨௫ |
| முடித்த | ௨௮ |
| முதலே | ௪௦ |
| முத்தணி | ௫௨ |
| முத்தனே | ௯௪ |
| முத்தலே | ௧௧௪ |
| முத்தன்ன | ௪௨ |
| முத்திக்குழ | ௫௯ |
| முத்திநெறி | ௧௨௬ |
| முத்துநற்றும | ௫௦ |
| முந்தியமுத | ௭௭ |
| முழுதயில் | ௪௦ |
| முழுமுதலே | ௭௮ |
| முழுவதுங் | ௨௧ |
| முன்னைய | ௬௫ |
| முன்னுலே | ௪௯ |
| முன்னிக் | ௪௫ |
| முன்னின்று | ௭௮ |
| முன்னீறு | ௬௯ |
| முன்னைப் | ௪௩ |
| முன்னையெ | ௮௭ |
| முன்னைவி | ௧௨௧ |
| மூத்தானே | ௧௦௯ |
| மூவரு | ௧௨௧ |
| மூன்றங் | ௬௯ |
| மெய்தா | ௨௦ |
| மெய்யனே | ௬௪ |
| மேலேவா | ௨௭ |
| மேவுமுன்ற | ௯௯ |
| மைப்பொலி | ௪௮ |
| மையமர் | ௫௩ |
| மையலா | ௧௧௨ |
| மையிலங் | ௩௩ |
| மொய்ப்பா | ௮௬ |
| மொய்யார் | ௪௪ |
| யாவர்க்கு | ௧௨௧ |
| யானேதும் | ௨௨ |
| யானேபொ | ௩௩ |
| வட்டமலர் | ௫௪ |
| வணங்கத் | ௬௩ |
| வணங்குநி | ௩௧ |
| வணங்குமி | ௧௧௨ |
| வண்ணந் | ௨௪ |
| வந்திமை | ௧௧௬ |
| வம்பனுய்த் | ௧௧௪ |
| வம்பனேன் | ௯௦ |
| வருந்துவ | ௨௨ |
| வலைத்தலை | ௪௦ |
| வல்லைவா | ௯௧ |
| வழங்குகின் | ௮௫ |
| வளர்கின் | ௩௬ |
| வளைந்தது | ௬௫ |
| வன்புலால் | ௧௦௩ |
| வன்னெஞ் | ௫௬ |
| வாட்டடங் | ௫௨ |
| வாராவழி | ௧௨௧ |
| வாவிங் | ௭௩ |
| வாழ்கின் | ௨௩ |
| வாழ்த்துவ | ௨௨ |
| வாழ்ந்தார், | ௧௨௨ |
| வானுலா | ௧௦௩ |
| வானநா | ௩௪ |
| வானவன் | ௬௪ |
| வானுகி | ௨௨ |
| வான்கெட் | ௫௯ |
| வான்பாவிய | ௧௦௨ |
| வான்வந்த | ௪௭ |
| விச்ச | ௩௪ |
| விச்சுக் | ௩௧ |
| விச்சைதா | ௨௫ |
| விடுமின் | ௧௧௯ |
| விடைவிடா | ௧௦௬ |
| விண்ணகத் | ௭௭ |
| விண்ணு | ௪௮ |
| விண்ணோர் | ௬௦ |
| விரவிய | ௧௦௫ |
| வினைக்கேட | ௧௦௨ |
| வினைப்பிறவி | ௯௭ |
| வினையிலே | ௨௩ |
| வினையெ | ௨௬ |
| வெஞ்சின | ௬௬ |
| வெஞ்சேல | ௮௭ |
| வெந்து | ௧௨௭ |
| வெய்யவ | ௬௬ |
| வெய்யவி | ௧௨௦ |
| வெருவரேன் | ௧௦௩ |
| வெள்ளத் | ௩௭ |
| வெள்ளந் | ௨௩ |
| வெள்ளைக் | ௭௨ |
| வெறுப்பன | ௮௪ |
| வேடுருவாகி | ௧௧௫ |
| வேண்டத்த | ௧௦௧ |
| வேண்டுநி | ௩௧ |
| வேண்டும் | ௯௯ |
| வேண்டேன் | ௧௦௨ |
| வேதமும் | ௫௪ |
| வேதமொ | ௭௧ |
| வேவத் | ௧௧௬ |
| வேனில்-க | ௨௬ |
| வேனில்-ம | ௨௨ |
| வைத்தநிதி | ௫௫ |
| வைப்புமா | ௮௭ |
| வையக | ௫௨ |


முற்றிற்று.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

---

ஒன்பதாந்திருமுறையாகிய

# திருவிசைப்பா,

# திருப்பல்லாண்டு.

---

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்

## சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஆறாம் பதிப்பு.

ஜய௵ கார்த்திகைமீ.

# சூசிபத்திரம்.


பதிகம். பக்கம்.

**க. திருமாளிகைத்தேவர்.**

க. கோயில். க
உ. கோயில்-உயர்கொடி[யாடை. ச
ங. கோயில்-உறவாகிய[யோகம். சா
ச. கோயில்(இணங்கிலாவீசன். கூ

**உ. சேந்தனார்.**

க. திருவீழிமிழலை கக
உ. திருவாவடுதுறை கச
ங. திருவிடைக்கழி. கரு

**ங. கருவூர்த்தேவர்.**

க. கோயில். கஎ
உ. திருக்களந்தையாதித்[தேச்சரம். ககூ
ங. திருக்கீழ்க்கோட்டூர்[மணியம்பலம். உக
ச. திருமுகத்தலை. உச
ரு. திரைலோக்கியசுந்தரம். உசா
சா. கங்கைகொண்டசோ[ளேச்சரம். உஅ
எ. திருப்பூவணம். ஙO
அ. திருச்சாட்டியக்குடி. ஙஉ
கூ. தஞ்சையிராசராசே[ச்சரம். ஙச

**கO. திருவிடைமருதூர். ஙசா**

**ச. பூந்துருத்திநம்பிகாடநம்பி.**

க. திருவாரூர். ஙஅ
உ. கோயில். ஙஅ

**ரு. கண்டராதித்தர்.**

க. கோயில். சO

**சா. வேணாட்டடிகள்.**

க. கோயில். சக

**எ. திருவாலியமுதனார்.**

க. கோயில்-பாதாதிகேசம். சஉ
உ. கோயில்-பவளமால்வரை சச
ங. கோயில்-அல்லாய்ப்ப[கலாய். சரு
ச. கோயில்-கோலமலர். சஎ

**அ. புருடோத்தமநம்பி.**

க. கோயில்-வாரணி சஅ
உ. கோயில்-வானவர்கள். ருO

**கூ. சேதிராயர்.**

க. கோயில். ருக

**சேந்தனார் திருப்பல்லாண்டு.**

க. கோயில். ருங

## திருச்சிற்றம்பலம்.

### திருவிசைப்பா அருளிச்செய்த ஒன்பதுநாயன்மார் திருநாமமும் திருப்பதிகவகையும் பண்ணின்வகையுந் தெரியுமடைவு.

---

செம்பொன்மணியம்பலத்துநிருத்தனார்க்குத்
திருவிசைப்பாவுரைத்தவர்தந்திருப்பேர்சொல்லிற்
பம்புபுகழ்செறிதிருமாளிகைமெய்த்தேவர்
பரிவுடையசேந்தனார்கருவூர்த்தேவர்
நம்பிகாடவர்கோனற்கண்டராதித்தர்
நன்குயர்வேணாட்டடிகடிருவாலியமுத
ரம்புவியோர்புகழ்புருடோத்தமர்சேதிராய
ராகவிவரொன்பதின்மர்தாமுறைகண்டடைவே. (௧)

அடைவுறுமாளிகைத்தேவர்நான்குசேந்த
னன்புறுபல்லாண்டொன்றோடிசைப்பாமூன்று
திடமுடையகருவூரர்பத்துவீறிற்
சிறந்தகாடவரிரண்டுகண்டர்வேணாடர்
படிபுகழொவ்வொன்றுதிருவாலிநான்கு
பன்னுபுருடோத்தமனாரிரண்டுசேதிராய
ருடையதிருக்கடைக்காப்பொன்றாகவிருபத்தொன்
பானேதுசெய்யுண்முந்நூற்றறுபதினோடைந்தே. (௨)

ஐந்துடனால்வருமுரைத்ததிருக்கடைக்காப்பிற்பண்
ணறையின்மாளிகைத்தேவர்நான்கிலொன்றுகாந்தார
முந்துகருவூரர்பத்தினிரண்டுபுறநீர்மை
மொழிந்திடுகாந்தாரமொன்றுகாடவர்கோனிரண்டி
னந்தலில்சாளரபாணியொன்றுவேணாட்டடிக
ணவின்றதொன்றுபுறநீர்மைதிருவாலியமுதர்
பந்தமறச்சொன்னான்கினொன்றுநட்டராகம்
பகர்ந்திடினொன்றிந்தளமற்றெவையும்பஞ்சமமே. (௩)

---

சில திருப்பதிகங்களிலே

சில திருப்பாட்டுக்கள் இறந்துவிட்டன.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா.

## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

### க. கோயில்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
யளிவளருள்ளத்தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. (க)

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னு
ளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்
தூயநற்சோதியுட்சோதீ
யடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா
வயனொடுமாலறியாமைப்
படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்
தொண்டனேன்பணியுமாபணியே. (௨)

தற்பரம்பொருளேசசிகண்டசிகண்டா
சாமகண்டாவண்டவாணா
நற்பெரும்பொருளாயுரைகலந்துன்னை
யென்னுடைநாவினானவில்வா
னற்பனென்னுள்ளத்தளவிலாவுன்னைத்
தந்தபொன்னம்பலத்தாடீ
கற்பமாயுலகாயல்லையானாயைத்
தொண்டனேன்கருதுமாகருதே. (௩)

பெருமையிற்சிறுமைபெண்ணொடாணாயென்
பிறப்பிறப்பறுத்தபேரொளியே
கருமையின்வெளியேகயற்கணாளிமவான்
மகளுமையவள்களைகண்ணே
யருமையின்மறைநான்கோலமிட்டரற்று
மப்பனேயம்பலத்தமுதே
யொருமையிற்பலபுக்குருவினின்றாயைத்
தொண்டனேனுரைக்குமாறுரையே. (௪)

கோலமேமேலைவானவர்கோவே
குணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைநாயகாவெங்கள்
காலகாலாகாமநாசா
வாலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்
கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத்
தொண்டனேனணுகுமாறணுகே. (௫)

நீறணிபவளக்குன்றமேநின்ற
நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமேமேருவில்வீரா
வாறணிசடையெம்மற்புதக்கூத்தா
வம்பொன்செயம்பலத்தரசே
யேறணிகொடியெம்மீசனேயுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே. (௬)

தன.தனற்றோழாசங்கராசூல
பாணியேதாணுவேசிவனே
கனகநற்றூணேகற்பகக்கொழுந்தே
கண்கண்மூன்றுடையதோர்கரும்பே
யனகனேகுமரவிநாயகசனக
வம்பலத்தமரசேகரனே
யுனகழலிணையென்னெஞ்சினுள்ளினிதாத்
தொண்டனேனுகருமாறுகரே. (௭)

திறம்பியபிறவிச்சிலதெய்வநெறிக்கே
திகைக்கின்றேன்றனைத்திகையாமே
நிறம்பொன்னுமின்னுநிறைந்தசேவடிக்கீழ்
நிகழ்வித்தநிகரிலாமணியே

யறம்பலதிறங்கண்டருந்தவர்க்கரசா
  யாலின்கீழிருந்தவம்பலவா
புறஞ்சமண்புத்தப்பொய்கள்கண்டாயைத்
  தொண்டனேன்புணருமாபுணரே. (அ)

தக்கனற்றலையுமெச்சன்வன்றலையுந்
  தாமரைநான்முகன்றலையு
மொக்கவிண்டுருளவொண்டிருப்புருவ
  நெறித்தருளியவுருத்திரனே
யக்கணிபுலித்தோலாடைமேலாட
  வாடப்பொன்னம்பலத்தாடுஞ்
சொக்கனேயெவர்க்குந்தொடர்வரியாயைத்
  தொண்டனேன்றொடருமாதொடரே. (௯)

மடங்கலாய்க்கனகன்மார்புகீண்டானுக்
  கருள்புரிவள்ளலேமருளா
ரிடங்கொண்முப்புரம்வெந்தவியவைதிகத்தே
  ரேறியவேறுசேவகனே
யடங்கவல்லரக்கனருட்டிருவரைக்கீ
  ழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத்
  தொண்டனேன்விரும்புமாவிரும்பே. (௰)

மறைகளுமமரர்கூட்டமுமாட்டா
  தயன்றிருமாலொடுமயங்கி
முறைமுறைமுறையிட்டோர்வரியாயை
  மூர்க்கனேன்மொழிந்தபுன்மொழிக
ளறைகழலரன்சீரறிவிலாவெறுமைச்
  சிறுமையிற்பொறுக்குமம்பலத்து
ணிறைதருகருணைநிலயமேயுன்னைத்
  தொண்டனேனினையுமாநினையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## உ. கோயில் - உயர்கொடியாடை.

---

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உயர்கொடியாடைமிடைபடலத்தி
னேமைதூமப்படலத்தின்
பெயர்நெடுமாடத்தகிற்புகைப்படலம்
பெருகியபெரும்பற்றப்புலியூர்ச்
சியரொளிமணிகணிரந்துசேர்கனக
நிறைந்தசிற்றம்பலக்கூத்தா
மயர்வறுமமரர்மகுடந்தோய்மலர்ச்சே
வடிகளென்மனத்துவைத்தருளே. (௧)

கருவளர்மேகத்தகடுதோய்மகுடக்
கனகமாளிகைகலந்தெங்கும்
பெருவளர்முத்தீநான்மறைத்தொழில்சா
லெழின்மிகுபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்தெய்வப்பதிவதிநிதியந்
திரண்டசிற்றம்பலக்கூத்தா
வுருவளரின்பச்சிலம்பொலியலம்பு
முன்னடிக்கீழதென்னுயிரே. (௨)

வரம்பிரிவாளைமிளிர்மடுக்கமலங்
கரும்பொடுமோந்துமேதிகள்சேர்
பரம்பிரிசெந்நெற்கழனிச்செங்கழுநீர்ப்
பழனஞ்சூழ்பெரும்பற்றப்புலியூர்ச்
சிரம்புணர்முடிவானவரடிமுறையா
லிறைஞ்சுசிற்றம்பலக்கூத்தா
நிரந்தரமுனிவர்நினைதிருக்கணைக்கா
ணினைந்துநின்றொழிந்ததென்னெஞ்சே. (௩)

தேர்மலிவிழவிற்குழலொலிதெருவிற்
கூத்தொலியேத்தொலியோத்தின்
பேரொலிபரந்துகடலொலிமலியப்
பொலிதருபெரும்பற்றப்புலியூர்ச்
சீர்நிலவிலயத்திருநடத்தியல்பிற்
றிகழ்ந்தசிற்றம்பலக்கூத்தா
வார்மலிமுலையாள்வருடியதிரண்மா
மணிக்குறங்கடைந்ததென்மதியே. (௪)

நிறைதழைவாழைநிழற்கொடிநெடுந்தெங்
இளங்கமுகுளங்கொணீள்பலமாப்
பிறைதவழ்பொழில்சூழ்கிடங்கிடைப்பதண
முதுமதிற்பெரும்பற்றப்புலியூர்ச்
சிறைகொணீர்த்தரளத்திரள்கொணித்திலத்த
செம்பொற்சிற்றம்பலக்கூத்த
பொறையணிநிதம்பப்புலியதளாடைக்
கச்சுநூல்புகுந்ததென்புகலே. (௫)

அதுமதியிதுவென்றலந்தலைநூல்கற்
றழைப்பொழிந்தருமறையறிந்து
பிதுமதிவழிநின்றொழிவிலாவேள்விப்
பெரியவர்பெரும்பற்றப்புலியூர்ச்
செதுமதிச்சமணுந்தேரருஞ்சேராச்
செல்வச்சிற்றம்பலக்கூத்த
மதுமதிவெள்ளத்திருவயிற்றுந்தி
வளைப்புண்டென்னுண்மகிழ்ந்ததுவே. (௬)

பொருவரைப்புயத்தின்மீமிசைப்புலித்தோல்
பொடியணிபூணநூலகலம்
பெருவரைபுரைதிண்டோளுடன்காணப்
பெற்றவர்பெரும்பற்றப்புலியூர்த்
திருமருவுதரத்தார்திசைமிடைப்ப
நடஞ்செய்சிற்றம்பலக்கூத்த
வுருமருவுதரத்தணிவடந்தொடர்ந்து
கிடந்ததென்னுணர்வுணர்ந்துணர்ந்தே. (௭)

கணியெரிவிசிறுகரந்துடிவிடவாய்க்
கங்கணஞ்செங்கைமற்றபயம்
பிணிகெடவிவைகண்டரன்பெருநடத்திற்
பிரிவிலார்பெரும்பற்றப்புலியூர்த்
திணிமணிநீலகண்டத்தென்னமுதே
சீர்கொள்சிற்றம்பலக்கூத்த
வணிமணிமுறுவற்பவளவாய்ச்செய்ய
சோதியுளடங்கிற்றென்னறிவே. (௮)

திருநெடுமாலிந்திரனயன்வானோர்
திருக்கண்டக்காவலினெருக்கிப்
பெருமுடிமோதியுகுமணிமுன்றிற்
பிறங்கியபெரும்பற்றப்புலியூர்ச்

செருநெடுமேருவில்லின்முப்புரந்தீ
    விரித்தசிற்றம்பலக்கூத்த
கருவடிகுழைக்காதமலச்செங்கமல
    மலர்முகங்கலந்ததென்கருத்தே. (௯)

ஏர்கொள்கற்பகமொத்திருசிலைப்புருவம்
    பெருந்தடங்கண்கண்மூன்றுடையோன்
பேர்களாயிரநூறுயிரம்பிதற்றும்
    பெற்றியோர்பெரும்பற்றப்புலியூர்ச்
சீர்கொள்கொக்கிறகுங்கொன்றையுந்துன்று
    சென்னிச்சிற்றம்பலக்கூத்த
நீர்கொள்செஞ்சடைவாழ்மதிபுதுமத்த
    நிகழ்ந்தவென்சிந்தையுணிறைந்தே. (௧௦)

காமனைக்காலன்றக்கன்மிக்கெச்சன்
    படக்கடைக்கணித்தவனல்லாப்
பேய்மனம்பிறிந்ததவப்பெருந்தொண்டர்
    தொண்டனேன்பெரும்பற்றப்புலியூர்ச்
சேமநற்றில்லைவட்டங்கொண்டாண்ட
    செல்வச்சிற்றம்பலக்கூத்த
பூமலரடிக்கீழ்ப்புராணபூதங்கள்
    பொறுப்பரென்புன்சொலின்பொருளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## ௩. கோயில் - உறவாகியயோகம்.

---

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உறவாகியயோகமும்போகமுமா
    யுயிராளியென்னுமென்பொன்னொருநாட்
சிறவாதவர்புரஞ்செற்றகொற்றச்
    சிலைகொண்டுபன்றிப்பின்சென்றுநின்ற
மறவாவென்னும்மணிநீரருவி
    மகேந்திரமாமலைமேலுறையுங்
குறவாவென்னுங்குணக்குன்றேயென்னுங்
    குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧)

காடாடுபல்கணஞ்சூழக்கேழற்
கடும்பின்னெடும்பகற்கானடந்த
வேடாமகேந்திரவெற்பாவென்னும்
வினையேன்மடந்தைவிம்மாவெருவுஞ்
சேடாவென்னுஞ்செல்வர்மூவாயிரஞ்
செழுஞ்சோதியந்தணர்செங்கைதொழுங்
கோடாவென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௨)

கானேவருமுரணேனமெய்த
களியார்புளினநற்காளாயென்னும்
வானேதடவுநெடுங்குடுமி
மகேந்திரமாமலைமேலிருந்த
தேனேயென்னுந்தெய்வவாய்மொழியார்
திருவாளர்மூவாயிரவர்தெய்வக்
கோனேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௩)

வெறியேறுபன்றிப்பின்சென்றொருநாள்
விசயற்கருள்செய்தவேந்தேயென்னு
மறியேறுசாரன்மகேந்திரமா
மலைமேலிருந்தமருந்தேயென்னு
நெறியேயென்னுநெறிநின்றவர்க
ணினைக்கின்றநீதிவேதாந்தநிலைக்
குறியேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௪)

செழுந்தென்றலன்றிலித்திங்கள்கங்கு
றிரைவீரைதீங்குழல்சேவின்மணி
யெழுந்தின்றென்மேற்பகையாடவாடு
மெனைநீநலிவதென்னேயென்னு
மழுந்தாமகேந்திரத்தந்தரப்புட்
கரசுக்கரசேயமரர்தனிக்
கொழுந்தேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௫)

வண்டார்குழலுமைநங்கைமுன்னே
மகேந்திரச்சாரல்வராகத்தின்பின்
கண்டார்கவலவில்லாடிவேடர்
கடிநாயுடன்கைவளைந்தாயென்னும்

பண்டாயமலரயன்றக்கனெச்சன்
பகலோன்றலைபற்பசுங்கண்
கொண்டாயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௬)

கடுப்பாய்ப்பறைகறங்கக்கடுவெஞ்சிலையுங்
கணையுங்கவணுங்கைக்கொண்
டுடுப்பாய்த்தோல்செருப்புச்சுரிகை
வராகமுன்னோடிவிளியுளைப்ப
நடப்பாய்மகேந்திரநாதநாதாந்தத்
தரையாவென்பார்க்குநாதாந்தபதங்
கொடுப்பாயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௭)

சேவேந்துவெல்கொடியானேயென்னுஞ்
சிவனேயென்சேமத்துணையேயென்னு
மாவேந்துசாரன்மகேந்திரத்தில்
வளர்நாயகாவிங்கேவாராயென்னும்
பூவேந்திமூவாயிரவர்தொழப்
புகழேந்துமன்றுபொலியநின்ற
கோவேயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (அ)

தரவார்புனஞ்சுனைதாழருவித்
தடங்கல்லுறையுமடங்கலமர்
மரவார்பொழிலெழில்வேங்கையெங்கு
மழைசூழ்மகேந்திரமாமலைமேற்
சுரவாவென்னுஞ்சுடர்நீண்முடிமாலய
னிந்திரன்முதற்றேவர்க்கெல்லாங்
குரவாவென்னுங்குணக்குன்றேயென்னுங
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௯)

திருநீறிடாவுருத்தீண்டேனென்னுந்
திருநீறுமெய்த்திருமுண்டத்திட்டுப்
பெருநீலகண்டன்றிறங்கொண்டிவள்
பிதற்றிப்பெருந்தெருவேதிரியும்
வருநீரருவிமகேந்திரப்பொன்
மலையின்மலைமகளுக்கருளுங்
குருநீயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (௧௦)

உற்றாயென்னுமுன்னையன்றிமற்றொன்
றுணரேனென்னுமுணர்வுகள்கலக்கப்
பெற்றாயவைந்தெழுத்தும்பிதற்றிப்
பிணிதீரவெண்ணீறிடப்பெற்றேனென்னுஞ்
சுற்றாயசோதிமகேந்திரஞ்சூழ
மனத்திருள்வாங்கிச்சூழாதநெஞ்சிற்
குற்றாயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (கக)

வேறாகவுள்ளத்துவகைவிளைத்
தவனிச்சிவலோகவேதவென்றி
மாறாதமூவாயிரவரையுமெனையும்
மகிழ்ந்தாளவல்லாயென்னு
மாறார்சிகரமகேந்திரத்துன்
னடியார்பிழைபொறுப்பாய்மாதோர்
கூறாயென்னுங்குணக்குன்றேயென்னுங்
குலாத்தில்லையம்பலக்கூத்தனையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## ங. கோயில் - இணங்கிலாவீசன்.

பண் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தத்தினேற்கு
மணங்கொள்சீர்த்தில்லைவாணன்மணவடியார்கள்வண்மைக்
குணங்களைக்கூறாவீறிற்கோறைவாய்ப்பீறற்பிண்டப்
பிணங்களைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (க)

எட்டுருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி
விட்டிலங்கலங்கற்றில்லைவேந்தனைச்சேர்ந்திலாத
துட்டரைத்தூர்த்தவார்த்தைத்தொழும்பரைப்பிழம்புபேசும்
பிட்டரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (உ)

அருட்டிரட்செம்பொற்சோதியம்பலத்தாடுகின்ற
விருட்டிரட்கண்டத்தெம்மானின்பருக்கன்புசெய்யா
வரட்டரையரட்டுப்பேசுமழுக்கரைக்கழுக்களாய
பிரட்டரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (ங)

துணுக்கெனவயனுமாலுந்தொடர்வருஞ்சுடராயிப்பா
லணுக்கருக்கணியசெம்பொனம்பலத்தாடிக்கல்லாச்
சிணுக்கரைச்செத்தற்கோத்தைச்சிதம்பரைச்சீத்தையூத்தைப்
பிணுக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (ச)

திசைக்குடிக்குலவுசீர்த்தித்தில்லைக்கூத்துகந்துதீய
நசிக்கவெண்ணீறதாடுநமர்களைநணுகாநாய்க
ளசிக்கவாரியங்களோதுமாதரைப்பேதவாதப்
பிசுக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (ரு)

ஆடரவாடவாடுமம்பலத்தமிர்தேயென்னுஞ்
சேடர்சேவடிகள்சூடத்திருவிலாவுருவிலாரைச்
சாடரைச்சாட்கைமோடச்சழக்கரைப்பிழக்கப்பிட்கப்
பேடரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (சா)

உருக்கியென்னுள்ளத்துள்ளேயூறலந்தேறன்மாறாத்
திருக்குறிப்பருளுந்தில்லைச்செல்வன்பாற்செல்லுஞ்செல்வி
னருக்கரையள்ளல்வாயகள்ளரையவியாப்பாவப்
பெருக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (எ)

செக்கரொத்திரவிநூறாயிரத்திரளொப்பாந்தில்லைச்
சொக்கரம்பலவரென்னுஞ்சுருதியைக்கருதமாட்டா
வெக்கரைக்குண்டமிண்டவெத்தரைப்புத்தராதிப்
பொக்கரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (அ)

எச்சனைத்தலையைக்கொண்டுசெண்டடித்திடபமேறி
யச்சங்கொண்டமரரோடநின்றவம்பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாக்கயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (கூ)

விண்ணவர்மகுடகோடிமிடைந்தொளிர்மணிகள்வீச
மண்ணலம்பலவன்கொற்றவரசனுக்காசையில்லாத
தெண்ணரைத்தெருளாவுள்ளத்திருளரைத்திட்டைமுட்டைப்
பெண்ணரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (க௦)

சிறப்புடையடியார்தில்லைச்செம்பொனம்பலவற்காளா
முறைப்புடையடியார்கீழ்க்கீழுறைப்பர்சேவடிநீறாட
ரிறப்பொடுபிறப்பினுக்கேயினியராய்மீண்டுமீண்டும்
பிறப்பரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

# சேந்தனார் திருவிசைப்பா.

## க. திருவீழிமிழலை.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகநாயகனையிமையவர்க்கரசை
யென்னுயிர்க்கமுதினையெதிரில்
போகநாயகனைப்புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேகநாயகனைமிகுதிருவீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
யோகநாயகனையன்றிமற்றொன்று
முண்டெனவுணர்கிலேன்யானே. (க)

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே. (உ)

மண்டலத்தொளியைவிலக்கியானுகர்ந்த
மருந்தையென்மாறிலாமணியைப்
பண்டலரயன்மாற்கரிதுமாயடியார்க்
கெளியதோர்பவளமால்வரையை
விண்டலர்மலர்வாய்வேரிவார்பொழில்சூழ்
திருவீழிமிழலையூராளுங்
கொண்டலங்கண்டத்தெங்குருமணியைக்
குறுகவல்வினைகுறுகாவே. (௩)

தன்னடிநிழற்கீழென்னையுந்தகைத்த
சசிகுலாமவுலியைத்தானே
யென்னிடைக்கமலமூன்றினுட்டோன்றி
யெழுஞ்செழுஞ்சுடரினையருள்சேர்

மின்னெடுங்கடலுள்வெள்ளத்தைவீழி
மிழலையுள்விளங்குவெண்பளிங்கின்
பொன்னடிக்கடிமைபுக்கினிப்போக
விடுவனோபூண்டுகொண்டேனே. (ச)

இத்தெய்வநெறிநன்றென்றிருண்மாயப்
பிறப்பறாவிந்திரசாலப்
பொய்த்தெய்வநெறிநான்புகாவகைபுரிந்த
புராணசிந்தாமணிவைத்த
மெய்த்தெய்வநெறிநான்மறையவர்வீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயி
லத்தெய்வநெறியிற்சிவமலாதவமு
மறிவரோவறிவுடையோரே. (ரு)

அக்கனாவனையசெல்வமேசிந்தித்
தைவரோடழுந்தியானவமே
புக்கிடாவண்ணங்காத்தெனையாண்ட
புனிதனைவனிதைபாகனையெண்
டிக்கெலாங்குலவும்புகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடிநிழற்கீழ்ப்
புக்குநிற்பவர்தம்பொன்னடிக்கமலப்
பொடியணிந்தடிமைபூண்டேனே. (௬)

கங்கைநீரரிசிற்கரையிருமருங்குங்
கமழ்பொழிறழுவியகழனித்
திங்கணேர்தீண்டநீண்டமாளிகைசூழ்
மாடநீடுயர்திருவீழித்
தங்குசீர்ச்செல்வத்தெய்வத்தான்றோன்றி
நம்பியைத்தன்பெருஞ்சோதி
மங்கையோர்பாகத்தென்னருமருந்தை
வருந்திநான்மறப்பனோவினியே. (எ)

ஆயிரங்கமலஞாயிறாயிரமுக்
கண்முககரசரணத்தோன்
பாயிருங்கங்கைபனிநிலாக்கரந்த
படர்சடைமின்னுபொன்முடியோன்
வேயிருந்தோளியுமைமணவாளன்
விரும்பியமிழலைசூழ்பொழிலைப்
போயிருந்தேயும்போற்றுவார்கழல்கள்
போற்றுவார்புரந்தராதிகளே. (அ)

எண்ணில்பல்கோடிசேவடிமுடிக
ளெண்ணில்பல்கோடிதிண்டோள்க
ளெண்ணில்பல்கோடிதிருவுருநாம
மேர்கொண்முக்கண்முகமியல்பு
மெண்ணில்பல்கோடியெல்லைக்கப்பாலாய்
நின்றைஞ்ஞூற்றந்தணரேத்து
மெண்ணில்பல்கோடிகுணத்தரேர்வீழி
யிவர்நம்மையாளுடையாரே. (கூ)

தக்கன்வெங்கதிரோன்சலந்தரன்பிரமன்
சந்திரனிந்திரனெச்சன்
மிக்கநெஞ்சரக்கன்புரங்கரிகருடன்
மறலிவேளிவர்மிகைசெகுத்தோன்
திக்கெலாநிறைந்தபுகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடிநிழற்கீழ்ப்
புக்கிருந்தவர்தம்பொன்னடிக்கமலப்
பொடியணிந்தடிமைபூண்டேனே. (௧௦)

உளங்கொளமதுரக்கதிர்விரித்துயிர்மே
லருள்சொரிதருமுமாபதியை
வளங்கிளர்நதியுமதியமுஞ்சூடி
மழவிடைமேல்வருவானை
விளங்கொளிவீழிமிழலைவேந்தேயென்
றுந்தனைச்சேந்தன்றாதையையான்
களங்கொளவழைத்தாற்பிழைக்குமோவடியேன்
கைக்கொண்டகனககற்பகமே. (கக)

பாடலங்காரப்பரிசில்காசருளிப்
பழுத்தசெந்தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்தெம்பெருமக்க
ளைஞ்ஞூற்றுவர்நிறைந்துநின்றானை
வேடலங்காரக்கோலத்தினமுதைத்
திருவீழிமிழலையூராளுங்
கேடிலங்கீர்த்திக்கனககற்பகத்தைக்
கெழுமுதற்கெவ்விடத்தேனே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

# உ. திருவாவடுதுறை.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்யாதவேதியர்சாந்தைமெய்ப்புகழாளராயிரம்பூசுரர்
மெய்யேதிருப்பணிசெய்சீர்மிகுகாவிரிக்கரைமேய
ஐயாதிருவாவடுதுறையமுதேயென்றுன்னையழைத்தக்கால்
மையார்தடங்கண்மடந்தைக்கொன்றருளாதொழிவதுமாதிமையே.

மாதிமணங்கமழும்பொழின்மணிமாடமாளிகைவீதிசூழ்
சோதிமதிலணிசாந்தைமெய்ச்சுருதிவிதிவழியோர்தொழு
மாதியமரர்புராணனுமணியாவடுதுறைநம்பிநின்ற
நீதியறிகிலள்பொன்னெடுந்திண்டோள்புணரநினைக்குமே. (௨)

நினைக்குநிரந்தரனேயென்னுநிலாக்கோலச்செஞ்சடைக்கங்கைநீர்
நனைக்குநலங்கிளர்கொன்றைமேனயம்பேசுநன்னுதனங்கைமீர்
மனக்கின்பவெள்ளமலைமகண்மணவாளநம்பிவண்சாந்தையூர்
தனக்கின்பனாவடுதண்டுறைத்தருணேந்துசேகரனென்னுமே. (௩)

தருணேந்துசேகரனேயெனுந்தடம்பொன்னித்தென்கரைச்சாந்தையூர்ப், பொருணேர்ந்தசிந்தையவர்தொழப்புகழ்செல்வமல்குபொற்கோயிலு,ளருணேர்ந்தமர்திருவாவடுதுறையாண்டவாண்டகையம்மானே, தெருணேர்ந்தசித்தம்வலியவாதிலகநுதலிதிறத்திலே. (௪)

திலகநுதலுமைநங்கைக்குந்திருவாவடுதுறைநம்பிக்குங், குலகவடியவர்க்கென்னையாட்கொடுத்தாண்டுகொண்டகுணக்கட, லலதொன்றறிகின்றிலேமெனுமணியும்வெண்ணீறஞ்செழுத்தலால், வலதொன்றிலளிதற்கென்செய்கேன்வயலந்தண்சாந்தையர்வேந்தனே. (௫)

வேந்தன்வளைத்ததுமேருவில்லரவுநாண்வெங்கணைசெங்கண்மால்
போந்தமதிலணிமுப்புரம்பொடியாடவேதப்புரவித்தேர்
சாந்தைமுதலயன்சாரதிகதியருளென்னுமித்தையலை
யாந்தண்டிருவாவடுதுறையான்செய்கையாரறிகிற்பாரே. (௬)

இற்போமெனத்தக்கன்வேள்விபுக்கெடுத்தோடிக்கெட்டவத்தேவர்கள்,சொற்போலுமெய்ப்பயன்பாவிகாளென்சொல்லிச்சொல்லுமித்துமொழி, கற்போன்மனங்கனிவித்தவெங்கருணாலயாவந்திடாயென்றுற், பெற்போபெருந்திருவாவடுதுறையாளிபேசாதொழிவதே.()

ஒழிவொன்றிலாவுண்மைவண்ணமுமுலப்பிலஞறின்பவெள்ளமு, மொழிவொன்றிலாப்பொன்னித்தீர்த்தமுமுனிகோடிகோடியாமூர்த்தியு, மழிவொன்றிலாச்செல்வச்சாந்தையூரணியாவடுதுறையாடிஞ, னிழிவொன்றிலாவகையெய்தினின்றிறுமாக்குமென்னிளமானனே.()

மானேர்கலைவளையுங்கவர்ந்துளங்கொள்ளைகொள்ளவழக்குண்டே
தேனேயமுதேயென்சித்தமேசிவலோகநாயகச்செல்வமே
யானேயலம்புபுனற்பொன்னியணியாவடுதுறையன்பர்தங்
கோனேநின்மெய்யடியார்மனக்கருத்தைமுடித்திடுங்குன்றமே. (கூ)

குன்றேந்திகோகனதத்தயனறியாநெறியென்னைக்கூட்டிஞ
யென்றேங்கியேங்கியழைக்கின்ருளிளவல்லியெல்லைகடந்தன
ளன்றேயலம்புபுனற்பொன்னியணியாவடுதுறையாடிஞ
னன்றேயிவணம்பரமல்லணவலோகநாயகன்பாலளே. (கo)

பாலுமமுதமுந்தேனுமாயானந்தந்தந்துள்ளேபாலிப்பான்
போலுமெனுருயிர்ப்போகமாம்புரகாலகாமபுராந்தகன்
சேலுங்கயலுந்திளைக்குநீர்த்திருவாவடுதுறைவேந்தனே
டாலுமதற்கேமுதலுமாமறிந்தோமரிவைபொய்யாததே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ரு. திருவிடைக்கழி.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாலுலாமனந்தந்தென்கையிற்சங்கம்வவ்விஞன்மலைமகண்மதலை, மேலுலாந்தேவர் குலமுழுதாளுங் குமரவேள்வள்ளிதன்மணளன், சேலுலாங்கழனித் திருவிடைக்கழியிற் றிருக்குராநீழற்கீழ்நின்ற, வேலுலாந்தடக்கை வேந்தனென்சேந்த னென்னுமென்மெல்லியலிவளே. (க)

இவளைவாரிளமென்கொங்கைபீர்பொங்க வெழில்கவர்ந்தானிளங்காளை, கவளமாகரிமேற் கவரிசூழ்குடைக்கீழ்க் கனகக்குன்றெனவருங்கள்வன், றிவளமாளிகைசூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, குவளைமாமலர்க்கணங்கையாளைக்குங்குழகனல்லழகனாய்கோவே. (உ)

கோவினைப்பவளக்குழமணக்கோலக்குழாங்கள்சூழ் கோழிவெல்கொடியோன், காவனற்சேனையென்னக்காப்பவனென்பொன்னை

மேகலைகவர்வானே, தேவிநற்றலைவன்றிருவிடைக்கழியிற்றிருக்குரா நீழற்கீழ்நின்ற, தூவிநற்பீலி மாமயிலூருஞ் சுப்பிரமண்ணியன்றானே. (௫)

தானமர்பொருதுவானவர்சேனைமடியச்சூர் மார்பினைத்தடிந்தோன், மானமர்தடக்கைவள்ளறன்பிள்ளைமறைநிறைசட்டறம்வளரத், தேனமர்பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, கோனமர்கூத்தன்குலவிளங்களிறென்கொடிக்கிடர்பயப்பதுங்குணமே.

குணமணிக்குருளைக்கொவ்வைவாய்மடந்தை படுமிடர்குறிக்கொளாதழகோ, மணமணிமறையோர்வானவர்வையமுய்யமற்றடியனேன்வாழத், திணமணிமாடத்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற கணமணிபொருநீர்க்கங்கைதன்சிறுவன்கணபதிபின்னிளங்கிளையே.

கிளையிளஞ்சேயக்கிரிதனைக்கீண்டவாண்டகைகேடில்வேற்செல்வன், வளையிளம்பிறைச்செஞ்சடையரன்மதலைகார்நிறமாறிருமருகன், றிளையிளம்பொழில்சூழ்திருவிடைக்கழியிற் றிருக்குராநீழற்கீழ்நின்ற, முளையிளங்களிறென்மொய்குழற்சிறுமிக்கருளுங்கொன்முருகவேள்பரிந்தே. (௬)

பரிந்தசெஞ்சுடரோ பரிதியோமின்னோ பவளத்தின்குழவியோ பசும்பொன், சொரிந்தசிந்துரமோ தூமணித்திரளோ சுந்தரத்தரசிது வென்னத், தெரிந்தவைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, வரிந்தவெஞ்சிலைக்கைமைந்தனையஞ்சொன்மையல்கொண்டையுறும்வகையே. (௭)

வகைமிகுமசுரர்மாளவந்துழிஞைவானமர்விளைத்ததாளாளன், புகைமிகுமனலிற்புரம்பொடிபடுத்த பொன்மலைவில்லிதன்புதல்வன், றிகைமிகுகீர்த்தித்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற,தொகைமிகுநாமத்தவன்றிருவடிக்கென்றுடியிடை மடவருடங்கினளே.

தொடங்கினண்மடலென்றணிமுடித்தொங்கற்புறவிதழாகிலுமருளா, ணிடங்கொளக்குறத்திதிறத்திலுமிறைவன்மறத்தொழில்வார்த்தையுமுடையன், றிடங்கொள்வைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, மடங்கலைமலரும்பன்னிருநயனத்தறுமுகத்தமுதினைமருண்டே. (௯)

மருண்டுறைகோயின் மல்குநன்குன்றப்பொழில்வளர்மகிழ்திருப்பிடவூர், வெருண்டமான்விழியார்க்கருள்செயாவிடுமேவிடலையேயெவர்க்குமெய்யன்பர், தெருண்டவைதிகர்வாழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற,குருண்டபூங்குஞ்சிப்பிறைச்சடைமுடிமுக்கண்ணுடைக்கோமளக்கொழுந்தே. (௧௦)

கொழுந்திரள்வாயார் தாய்மொழியாகத்தூய்மொழியமரர்கோமகனைச், செழுந்திரட்சோதிச்செப்புறைச்சேந்தன்வாய்ந்தசொல்லிவைசுவாமியையே, செழுந்தடம்பொழில்சூழ்திருவிடைக்கழியிற்றிருக்குராநீழற்கீழ்நின்ற, வெழுங்கதிரொளியையேத்துவார்கேட்பாரிடர்கெடுமாலுலாமனமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

# கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

## க. கோயில்.

பண் புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கணம்விரிகுடுமிச்செம்மணிக்கவைநாக்
கறையணற்கட்செவிப்பகுவாய்ப்
பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்றுப்
பாம்பணிபரமர்தங்கோயின்
மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின்
மழைதவழ்வளரிளங்கமுகந்
திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (க)

இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்து
மேழையேற்கென்னுடன்பிறந்த
வைவரும்பகையேயார்துணையென்று
லஞ்சலென்றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக்
கடைசியர்களைதருநீலஞ்
செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (உ)

தாயினேரிரங்குந்தலைவவோவென்றுந்
தமியனேன்றுணைவவோவென்று
நாயினேனிருந்துபுலம்பினுலிரங்கி
நலம்புரிபரமர்தங்கோயில்
வாயினேரரும்புமணிமுருக்கலர
வளரிளஞ்சோலைமாந்தளிர்செந்
தீயினேரரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (ங)

துந்துபிகுழல்யாழ்மொந்தைவாணியம்பத்
தொடர்ந்திருடியர்கணந்துதிப்ப
நந்திகைமுழவமுகிலெனமுழங்க
நடம்புரிபரமர்தங்கோயி
லந்தியின்மறைநான்காரணம்பொதிந்த
வரும்பெறன்மறைப்பொருண்மறையோர
சிந்தையிலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௪)

கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென்
களைகணேயோலமென்றோலிட்
டெண்பெராமுருகுமன்பர்தங்கூட்டத்
தென்னையும்புணர்ப்பவன்கோயில்
பண்பலதெளிதேன்பாடிநின்றாடப்
பனிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௫)

நெஞ்சிடரகலவகம்புகுந்தொடுங்கு
நிலைமையோடிருள்கிழிதெழுந்த
வெஞ்சுடர்சுடர்வபோன்றொளிதுளும்பும்
விரிசடையடிகடங்கோயி
லஞ்சுடர்ப்புரிசையாழிசூழ்வட்டத்
தகம்படிமணிநிரைபரந்த
செஞ்சுடரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௬)

தித்திரளுருவஞ்செங்கதிர்விரியாப்
புந்தியில்வந்தமால்விடையோன்
றூத்திரட்பளிங்கிற்றோன்றியதோற்றந்
தோன்றநின்றவன்வளர்கோயி
லுத்திரண்மறையோர்ந்தோமகுண்டத்து
நறுநெயான்மறையவர்வளர்த்த
தீத்திரளரும்புபெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௭)

சீர்த்ததிண்புவனமுழுவதுமேனைத்
திசைகளோடண்டங்களனைத்தும்
போர்த்ததம்பெருமைசிறுமைபுக்கொடுங்கும்
புணர்ப்புடையடிகடங்கோயி

லார்த்துவந்தமரித்தமரரும்பிறரு
மலைகடலிடுதிரைப்புனிதத்
தீர்த்தநீரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (அ)

பின்னுசெஞ்சடையும்பிறைதவழ்மொழுப்பும்
பெரியதங்கருணையுங்காட்டி
யன்னைதேன்கலந்தின்னமுதுகந்தளித்தாங்
கருள்புரிபரமர்தங்கோயில்
புன்னைதேன்சொரியும்பொழிலகங்குடைந்து
பொறிவரிவண்டினம்பாடுந்
தென்னதேனரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (௯)

உம்பர்நாடிம்பர்விளங்கியாங்கெங்கு
மொளிவளர்திருமணிச்சுடர்கான்
றெம்பிரானடஞ்செய்சூழலங்கெல்லா
மிருட்பிழம்பறவெறிகோயில்
வம்புலாங்கோயில்கோபுரங்கூடம்
வளர்நிலைமாடமாளிகைகள்
செம்பொனலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (க0)

இருந்திரைத்தரளப்பரவைசூழகலத்
தெண்ணிலங்கண்ணில்புண்மாக்க
டிருந்துயிர்ப்பருவத்தறிவுறுகருவூர்த்
துறைவளர்தீந்தமிழ்மாலை
பொருந்தருங்கருணைப்பரமர்தங்கோயிற்
பொழிலகங்குடைந்துவண்டுறங்கச்
செருந்திநின்றரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்
திருவளர்திருச்சிற்றம்பலமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## உ. திருக்களந்தையாதித்தேச்சரம்.

பண் புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

கலைகடம்பொருளுமறிவுமாயென்னைக்கற்பினிற் பெற்றெடுத்தெனக்
முலைகடந்தருளுந்தாயினுநல்லமுக்கணாளுறைவிடம்போலு [கே

மலைகுடைந்தனையநெடுநிலைமாடமருங்கெலாமறையவர்முறையோத்
தலைகடன்முழங்குமந்தணீர்க்களந்தையணிதிகழாதித்தேச்சரமே.(௧)

சந்தனகளபந்துதைந்தநன்மேனித்தவளவெண்பொடிமுழுதாடுஞ்
செந்தழலுருவிற்பொலிந்துநோக்குடையதிருநுதலவர்க்கிடம்போலு
மிந்தனவிலங்கலெறிபுனந்தீப்பட்டெரிவதொத்தெழுநிலைமாட
மந்தணரழலோம்பலைபுனற்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (௨)

கரியரேயிடந்தான்செய்யரேயொருபாற்கழுத்திலோர்தனிவடஞ்
சேர்த்தி, முரிவரேமுனிவர்தம்மொடாணிழற்கீழ்முறைதெரிந்தோரு
டம்பினரா, மிருவரேமுக்கணாற்பெருந்தடந்தோளிறைவரேமறைக
ளுந்தேட, வரியரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே

பழையராந்தொண்டர்க்கெளியரேமிண்டர்க்கரியரேபாவியேன்
செய்யும், பிழையெலாம்பொறுத்தென்பிணிபொறுத்தருளாப்பிச்ச
ரேநச்சராமிளிருங், குழையராய்வந்தென்குடிமுழுதாளுங்குழகரே
யொழுகுநீர்க்கங்கை, யழகரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்
தேச்சரமே. (௪)

பவளமேமகுடம்பவளமேதிருவாய்பவளமேதிருவுடம்பதனிற்
றவளமேகளபந்தவளமேபுரிநூறவளமேமுறுவலாடரவந் [தி
துவளுமேகலையுந்துகிலுமேயொருபாற்றுடியிடையிடமருங்கொருத்
யவளுமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (௫)

நீலமேகண்டம்பவளமேதிருவாய்நித்திலநிரைத்திலங்கினவே
போலுமேமுறுவனிறையவானந்தம்பொழியுமேதிருமுகமொருவர்
கோலமேயச்சோவழகிதேயென்றுகுழைவரேகண்டவருண்ட
தாலமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (௬)

திக்கடாநினைந்துநெஞ்சிடிந்துருகுந்திறத்தவர்புறத்திருந்தலச
மைக்கடாவனையவென்னையாள்விரும்பிமற்றொருபிறவியிற்பிறந்து
பொய்க்கடாவண்ணங்காத்தெனக்கருளேபுரியவும்வல்லரேயெல்லே
யக்கடாவாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (௭)

மெய்யரேமெய்யர்க்கிடுதிருவானவிளக்கரேயெழுதுகோல்வளை
யாண், மையரேவையம்பலிதிரிந்துறையுமயானரேயுளங்கலந்திருந்
தும், பொய்யரேபொய்யர்க்கடுத்தவாண்பளிங்கின்பொருள்வழியிரு
ள்கிழித்தெழுந்த, வையரேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்
தேச்சரமே. (௮)

குமுதமேதிருவாய்குவளையேகளமுங்குழையதேயிருசெவியொரு பால், விமலமேகலையுமுடையரேசடைமேன்மிளிருமேபொறிவரிநாகங், கமலமேவதனங்கமலமேநயனங்கனகமேதிருவடிநிலைநீ, ரமலமேயாகிலவரிடங்களந்தையணிதிகழாதித்தேச்சரமே. (கூ)

நீரணங்கசும்புகழனிசூழ்களந்தைநிறைபுகழாதித்தேச்சரத்து
நாரணன்பரவுந்திருவடிநிலைமேனலமலிகலைபயில்கருவூ
ராரணமொழிந்தபவளவாய்சுரந்தவமுதமூறியதமிழ்மாலை [யரே.
யேரணங்கிருநான்கிரண்டிவைவல்லோரிருள்கிழித்தெழுந்த சிந்தை

திருச்சிற்றம்பலம்.

## ௯. திருக்கீழ்க்கோட்டூர்மணியம்பலம்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தள்ரொளிமணிப்பூம்பதஞ்சிலம்பலம்பச்
சடைவிரித்தலையெறிகங்கைத்
தெளிரொளிமணிநீர்த்திவலைமுத்தரும்பித்
திருமுகமலர்ந்துசொட்டட்டக்
கிளரொளிமணிவண்டறைபொழிற்பழனங்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
வளரொளிமணியம்பலத்துணின்றாடு
மைந்தனென்மனங்கலந்தானே. (க)

துண்டவெண்பிறையும்படர்சடைமொழுப்புஞ்
சுழியமுஞ்சூலமுநீல
கண்டமுங்குழையும்பவளவாயிதழுங்
கண்ணுதற்றிலகமுங்காட்டிக்
கெண்டையுங்கயலுமுகளுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
வண்டறைமணியம்பலத்துணின்றாடு
மைந்தனென்மனங்கலந்தானே. (உ)

திருநுதல்விழியும்பவளவாயிதழுந்
திலகமுமுடையவன்சடைமேற்
புரிதருமலரின்றாதுநின்றூதப்
போய்வருந்தும்பிகாளிங்கே

கிரிதவழ்முகிலின்கீழ்த்தவழ்மாடங்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
வருதிறன்மணியம்பலவனைக்கண்டென்
மனத்தையுங்கொண்டுபோதுமினே. (௩)

தெள்ளுநீறவனீறென்னுடல்விரும்புஞ்
செவியவனறிவுநூல்கேட்கு
மெள்ளவேயவன்பேர்விளம்பும்வாய்கண்கள்
விமானமேநோக்கிவெவ்வுயிர்க்குங்
கிள்ளைபூம்பொதும்பிற்கொஞ்சிமாம்பொழிற்கே
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
வள்ளலேமணியம்பலத்துணின்றாடு
மைந்தனேயென்னுமென்மனனே. (௪)

தோழியாஞ்செய்ததொழிலெனெம்பெருமான்
றுணைமலர்ச்சேவடிகாண்பா
னூழிதோறூழியுணர்ந்துளங்கசிந்து
நெக்குநைந்துளங்கரைந்துருக்குங்
கேழலும்புள்ளுமாகிநின்றிருவர்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
வாழியமணியம்பலவனைக்காண்பான்
மயங்கவுமாலொழியோமே. (௫)

என்செய்கோந்தோழிதோழிநீதுணையா
யிரவுபோம்பகல்வருமாகி
லஞ்சலோவென்னானாழியுந்திரையு
மலமருமாறுகண்டயர்வன்
கிஞ்சுகமணிவாயரிவையர்தெருவிற்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மஞ்சணிமணியம்பலவவோவென்று
மயங்குவன்மாலையம்பொழுதே. (௬)

தழைதவழ்மொழுப்புந்தவளநீற்றொளியுஞ்
சங்கமுஞ்சகடையின்முழக்குங்
குழைதவழ்செவியுங்குளிர்சடைத்தெண்டுங்
குண்டையுங்குழாங்கொடுதோன்றுங்
கிழைதவழ்கனகம்பொழியுநீர்ப்பழனங்
கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மழைதவழ்மணியம்பலத்துணின்றாடு
மைந்தர்தம்வாழ்வுபோன்றதுவே. (௭)

தன்னகமழலைச்சிலம்பொடுசதங்கை
 தமருகந்திருவடிதிருநீ
றின்னகைமழலைகங்கைகோங்கிதழி
 யிளம்பிறைகுழைவளரிளமான்
இன்னரமுழவமழலையாழ்வீணை
 கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மன்னவன்மணியம்பலத்துணின்றாடு
 மைந்தனென்மனத்துள்வைத்தனனே. (௮)

யாதுநீநினைவதெவரையாமுடைய
 தெவர்களும்யாவையுந்தானாய்ப்
பாதுகைமழலைச்சிலம்பொடுபுகுந்தென்
 பணிமலர்க்கண்ணுணின்றகலான்
கேதகைநிழலைக்குருகெனமருவிக்
 கெண்டைகள்வெருவுகீழ்க்கோட்டூர்
மாதவன்மணியம்பலத்துணின்றாடு
 மைந்தனென்மனம்புகுந்தானே. (௯)

அந்திபோலுருவுமந்தியிற்பிறைசே
 ரழகியசடையும்வெண்ணீறுஞ்
சிந்தையானினையிற்சிந்தையுங்காணேன்
 செய்வதென்றெளிபுனலலங்கற்
கெந்தியாவுகளுங்கெண்டைபுண்டரீகங்
 கிழிக்குந்தண்பணைசெய்கீழ்க்கோட்டூர்
வந்தநாண்மணியம்பலத்துணின்றாடு
 மைந்தனேயறியுமென்மனமே. (௧௦)

கித்திநின்றாடுமரிவையர்தெருவிற்
 கெழுவுகம்பலைசெய்கீழ்க்கோட்டூர்
மத்தனைமணியம்பலத்துணின்றாடு
 மைந்தனையாரணம்பிதற்றும்
பித்தனேன்மொழிந்தமணிநெடுமாலை
 பெரியவர்க்ககலிருவிசும்பின்
முத்தியாமென்றேயுலகரேத்துவரேன்
 முகமலர்ந்தெதிர்கொளுந்திருவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், அடையாறு, சென்னை-20.

## ௪. திருமுகத்தலை.

### பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

புவனநாயகனேயகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம்பொழியும்
பவளவாய்மணியேபணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்னகாபரணா
வவனிஞாயிறுபோன்றருள்புரிந்தடியே
னகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன்றனிமைநீங்குதற்கே. (௧)

புழுங்குதீவினையேன்வினைகெடப்புகுந்து
புணர்பொருளுணர்வுநூல்வகையால்
வழங்குதேன்பொழியும்பவளவாய்முக்கண்
வளரொளிமணிநெடுங்குன்றே
முழங்குதீம்புனல்பாய்ந்திளவராலுகளு
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
விழுங்குதீங்கனியாயினியவானந்த
வெள்ளமாயுள்ளமாயினையே. (௨)

கன்னெகாவுள்ளக்கள்வனேநின்கட்
கசிவிலேன்கண்ணினீர்சொரியேன்
முன்னகாவொழியேனாயினுஞ்செழுநீர்
முகத்தலையகத்தமர்ந்துறையும்
பன்னகாபரணாபவளவாய்மணியே
பாவியேனாவியுள்புகுந்த
தென்னகாரணநீயேழைநாயடியேற்
கெளிமையோபெருமையாவதுவே. (௩)

கேடிலாமெய்ந்நூல்கெழுமியுஞ்செழுநீர்க்
கிடையனாருடையவென்னெஞ்சிற்
பாடிலாமணியேமணியுமிழ்ந்தொளிரும்
பரமனேபன்னகாபரணா
மேடெலாஞ்செந்நெற்பசுங்கதிர்விளைந்து
மிகத்திகழ்முகத்தலைமூதூர்
நீடினாயெனினுமுள்புகுந்தடியே
னெஞ்செலாநிறைந்துநின்றாயே. (௪)

அக்கனாவனையசெல்வமேசிந்தித்
தைவரோடென்னொடும்விளைந்த
விக்கலாமுழுதுமொழியவந்துள்புக்
கென்னையாளாண்டநாயகனே
முக்கணாயகனேமுழுதுலகிறைஞ்ச
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
பக்கலானந்தமிடையறாவண்ணம்
பண்ணினாய்பவளவாய்மொழிந்தே. (ரு)

புனல்படவுருகிமண்டழல்வெதும்பிப்
பூம்புனல்பொதிந்துயிரளிக்கும்
வினைபடுநிறைபோணிறைந்தவேதகத்தென்
மனநெகமகிழ்ந்தபேரொளியே
முனைபடுமதின்மூன்றெரித்தநாயகனே
முகத்தலையகத்தமர்ந்தடியேன்
வினைபடுமுடனீபுகுந்துநின்றமையால்
விழுமியவிமானமாயினதே. (சு)

விரியுநீராலக்கருமையுஞ்சாந்தின்
வெண்மையுஞ்செந்நிறத்தொளியுங்
கரியுநீறுடுங்கனலுமொத்தொளிருங்
கழுத்திலோர்தனிவடங்கட்டி
முரியுமாறெல்லாமுரிந்தழகியையாய்
முகத்தலையகத்தமர்ந்தாயைப்
பிரியுமாறுளதேபேய்களோஞ்செய்த
பிழைபொறுத்தாண்டபேரொளியே. (எ)

என்னையுன்பாதபங்கயம்பணிவித்
தென்பெலாமுருகநீயெளிவந்
துன்னையென்பால்வைத்தெங்குமெஞ்ஞான்று
மொழிவறநிறைந்தவொண்சுடரே
முன்னையென்பாசமுழுவதுமகல
முகத்தலையகத்தமர்ந்தெனக்கே
கன்னலும்பாலுந்தேனுமாரமுதுங்
கனியுமாயினியையாயினையே. (அ)

அம்பராவனலாவனிலமேபுவிநீ
யம்புவேயிந்துவேயிரவி
யும்பராலொன்றுமறியொணாவணுவா
யொழிவறநிறைந்தவொண்சுடரே

மொய்ம்பராய்நலஞ்சொன்மூதறிவாளர்
முகத்தலையகத்தமர்ந்தெனக்கே
யெம்பிரானாகியாண்டநீமீண்டே
யெந்தையுந்தாயுமாயினையே. (௯)

மூலமாய்முடிவாய்முடிவிலாமுதலாய்
முகத்தலையகத்தமர்ந்தினிய
பாலுமாயமுதாம்பன்னகாபரணன்
பனிமலர்த்திருவடியிணைமே
லாலையம்பாகினனையசொற்கருவூ
ரமுதுறழ்தீந்தமிழ்மாலை
சீலமாப்பாடுமடியவரெல்லாஞ்
சிவபதங்குறுகிநின்றாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## ரு. திரைலோக்கியசுந்தரம்.

பண் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீரோங்கிவளர்கமலநீர்பொருந்தாத்தன்மையன்றே
யாரோங்குமுகமலர்ந்தாங்கருவினையேன்றிறமறந்தின்
றாரோங்கும்பழிபாரா தன்பாலேவிழுந்தொழிந்தேன்
சீரோங்கும்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௧)

நையாதமனத்தினனைநைவிப்பானித்தெருவே
யையாநீயுலாப்போந்தவன்றுமுதலின்றுவரை
கையாரத்தொழுதருவிகண்ணாரச்சொரிந்தாலுஞ்
செய்யாயோவருள்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௨)

அம்பளிங்குபகலோன்பாலடைப்பற்றாயிவண்மனத்தின்
முன்பளிந்தகாதலுநின்முகந்தோன்றவிளங்கிற்றால்
வம்பளிந்தகனியேயென்மருந்தேநல்வளர்முக்கட்
செம்பளிங்கேபொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௩)

மைஞ்ஞின்றகுழலாடன்மனந்தரவும்வனதாரா
திஞ்ஞின்றகோவணவனிவன்செய்தியார்செய்தார்
மெய்ஞ்ஞின்றதமர்க்கெல்லாமெய்ஞ்ஞிற்கும்பண்பினுறு
செய்ஞ்ஞன்றியிலன்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (௪)

நீவாராதொழிந்தாலுநின்பாலேவிழுந்தேழை
கோவாதமணிமுத்துங்குவளைமலர்சொரிந்தனவா
லாவாவென்றருள்புரியாயமரர்கணந்தொழுதேத்துந்
தேவாதென்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (ரு)

முழுவதுநீயாயினுமிம்மொய்குழலாண்மெய்ம்முழுதும்
பழுதெனவேநினைந்தோராள்பயில்வதுநின்னொருநாம
மழுவதுநின்றிறநினைந்தேயதுவன்றோபெறும்பேறு
செழுமதில்சூழ்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (சு)

தன்சோதியெழுமேனித்தபனியப்பூஞ்சாய்க்காட்டா
யுன்சோதியெழில்காண்பானோலிடவுமுருக்காட்டாய்
துஞ்சாகண்ணிவளுடையதுயர்தீருமாறுரையாய்
செஞ்சாலிவயற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (எ)

அரும்பேதைக்கருள்புரியாதொழிந்தாய்நின்னவிர்சடைமே
னிரம்பாதபிறைதூவுநெருப்பொடுநின்கையிலியாழ்
நரம்பாலுமுயிரீர்ந்தாய்நளிர்புரிசைக்குளிர்வனம்பா
திரம்போதுசொரிகோடைத்திரைலோக்கியசுந்தரனே. (அ)

ஆறாதபேரன்பினவருள்ளங்குடிகொண்டு
வேறாகப்பலர்சூழவீற்றிருத்தியதுகொண்டு
வீறாடியிவளுன்னைப்பொதுநீப்பான்விரைந்தின்னந்
தேறாடென்பொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (கூ)

சரிந்ததுகிறளர்ந்தவிடையவிழ்ந்தகுழலிளந்தெரிவை
யிருந்தபரிசொருநாள்கண்டிரங்காயெம்பெருமானே
முரிந்தநடைமடந்தையர்தமுழங்கொலியும்வழங்கொலியுந்
திருந்துவிழவணிகோடைத்திரைலோக்கியசுந்தரனே. (க0)

ஆரணத்தேன்பருகியருந்தமிழ்மாலைகமழவருங்
காரணத்தினிலைபெற்றகருவூரன்றமிழ்மாலை
பூரணத்தாலீரைந்தும்போற்றிசைப்பார்காந்தாரஞ்
சீரணைத்தபொழிற்கோடைத்திரைலோக்கியசுந்தரனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ௬. கங்கைகொண்டசோளேச்சரம்.

### பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமாய்விசும்புபறந்தயன்றேட
வங்ஙனேபெரியநீசிறிய
வென்னையாள்விரும்பியென்மனம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
முன்னமாலறியாவொருவனுமிருவா
முக்கணாநாற்பெருந்தடந்தோட்
கன்னலேதேனேயமுதமேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௧)

உண்ணெகிழ்ந்துடலநெக்குமுக்கண்ணா
வோலமென்றோலமிட்டொருநாண்
மண்ணினின்றலறேன்வழிமொழிமாலை
மழலையஞ்சிலம்படிமுடிமேற்
பண்ணிநின்றுருகேன்பணிசெயேனெனினும்
பாவியேனாவியுள்புகுந்தென்
கண்ணினின்றகலானென்கொலோகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௨)

அற்புதத்தெய்வமிதனின்மற்றுண்டே
யன்பொடுதன்னையஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத்துள்ளமள்ளூறுந்
தொண்டருக்கெண்டிசைக்கனகம்
பற்பதக்குவையும்பைம்பொன்மாளிகையும்
பவளவாயவர்பணைமுலையுங்
கற்பகப்பொழிலுமுழுதுமாங்கங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௩)

ஐயபொட்டிட்டவழகுவாணுதலு
மழகியவிழியும்வெண்ணீறுஞ்
சைவம்விட்டிட்டசடைகளுஞ்சடைமேற்
றரங்கமுஞ்சதங்கையுஞ்சிலம்பு
மொய்கொளெண்டிக்குங்கண்டநின்றொண்டர்
முகமலர்ந்திருகணீரரும்பக்
கைகண்மொட்டிக்குமென்கொலோகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௪)

சுருதிவானவனுந்திருநெடுமாலுஞ்
 சுந்தரவிசும்பினிந்திரனும்
பரிதிவானவனும்படர்சடைமுக்கட்
 பகவனுமகவுயிர்க்கமுதா
மெருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்த
 வேறுசேவகனுமாம்பின்னுங்
கருதுவார்கருதுமுருவமாங்கங்கை
 கொண்டசோளேச்சரத்தானே. (௫)

அண்டமோரணுவாம்பெருமைகொண்டணுவோ
 ரண்டமாஞ்சிறுமைகொண்டடியே
னுண்டவூணுனக்காம்வகையெனதுள்ள
 முள்கலந்தெழுபரஞ்சோதி
கொண்டநாண்பாம்பாம்பெருவரைவில்லிற்
 குறுகலர்புரங்கண்மூன்றெரித்த
கண்டனேநீலகண்டனேகங்கை
 கொண்டசோளேச்சரத்தானே. (௬)

மோதலைப்பட்டகடல்வயிறுதித்த
 முழுமணித்திரளமுதாங்கே
தாய்தலைப்பட்டங்குருகியொன்றாய
 தன்மையிலென்னைமுன்னீன்ற
நீதலைப்பட்டாலியானுமவ்வகையே
 நிசிசரரிருவரோடொருவர்
காதலிற்பட்டகருணையாய்கங்கை
 கொண்டசோளேச்சரத்தானே. (௭)

தத்தையங்கனையார்தங்கண்மேல்வைத்த
 தயாவைநூறாயிரங்கூறிட்
டத்திலங்கொருகூறுன்கண்வைத்தவருக்
 கமருலகளிக்குநின்பெருமை
பித்தனென்றொருகாற்பேசுவரேனும்
 பிழைத்தவைபொறுத்தருள்செய்யுங்
கைத்தலமடியேன்சென்னிமேல்வைத்தகங்கை
 கொண்டசோளேச்சரத்தானே. (௮)

பண்ணியதழல்காய்பாலளாநீர்போற்
 பாவமுன்பறைந்துபாலனைய
புண்ணியம்பின்சென்றறிவினுக்கறியப்
 புகுந்ததோர்யோகினிற்பொலிந்து

நுண்ணியையெனினும்நம்பநின்பெருமை
நுண்ணிடையொடுங்கநீவந்தென்
கண்ணினுண்மணியிற்கலந்தனைகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௯)

அங்கைகொண்டமரர்மலர்மழைபொழிய
வடிச்சிலம்பலம்பவந்தொருநா
ளுங்கைகொண்டடியேன்சென்னிவைத்தென்னை
யுய்யக்கொண்டருளினைமருங்கிற்
கொங்கைகொண்டனுங்குங்கொடியிடைகாணிற்
கொடியளென்றவிர்சடைமுடிமேற்
கங்கைகொண்டிருந்தகடவுளேகங்கை
கொண்டசோளேச்சரத்தானே. (௧0)

மங்கையோடிருந்தேயோகுசெய்வானை
வளரிளந்திங்களைமுடிமேற்
கங்கையோடணியுங்கடவுளைக்கங்கை
கொண்டசோளேச்சரத்தானை
யங்கையோடேந்திப்பலிதிரிகருவூ
ரறைந்தசொன்மாலையாலாழிச்
செங்கையோடுலகிலரசுவீற்றிருந்து
திளைப்பதுஞ்சிவனருட்கடலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## எ. திருப்பூவணம்.

---

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்
சிறியனுக்கினியதுகாட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமேதருநின்
பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதரசிருங்கோங்ககின்மரஞ்சாடி
வரைவளங்கவர்ந்திழிவைகைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௧)

பாம்பணைத் துயின்றோனயன்முதற்றேவர்
பன்னெடுங் காலநிற்காண்பா
னேம்பலித்திருக்கவென்னுளம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
றேம்புனற்பொய்கைவாளைவாய்மடுப்பத்
தெளிதருதேறல்பாய்ந்தொழுகும்
பூம்பணைச்சோலையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௨)

கரைகடலொலியிற்றமருகத்தரையிற்
கையினிற்கட்டியகயிற்று
விருதலையொருநாவியங்கவந்தொருநா
ளிருந்திடாயெங்கள்கண்முகப்பே
விரிதிகழ்விழவின்பின்செல்வோர்பாடல்
வேட்கையின்வீழ்ந்தபோதவிழ்ந்த
புரிசடைதுருக்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௩)

கண்ணியன்மணியின்சூழல்புக்கங்கே
கலந்துபுக்கொடுங்கினேற்கங்ங
னுண்ணியையெனினுநம்பநின்பெருமை
நுண்ணிமையிறந்தமையறிவன்
மண்ணியன்மரபிற்றங்கிருண்மொழுப்பின்
வண்டினம்பாடநின்றுடும்
புண்ணியமகளிராவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௪)

கடுவினைப்பாசக்கடல்கடந்தைவர்
கள்ளரைமெள்ளவேதுரந்து
னடியிணையிரண்டுமடையுமாறடைந்தே
னருள்செய்வாயருள்செயாதொழிவாய்
நெடுநிலைமாடத்திரவிருள்கிழிக்க
நிலைவிளக்கலகில்சாலேகம்
புடைகிடந்திலங்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௫)

செம்மனக்கிழவோரன்புதாவென்றுன்
சேவடிபார்த்திருந்தலச
வெம்மனங்குடிகொண்டிருப்பதற்கியானு
ரென்னுடையடிமைதானியாதே

யம்மனங்குளிர்நாட்பலிக்கெழுந்தருள
வரிவையரவிழ்குழற்சுரும்பு
பொம்மெனமுரலுமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௬)

சொன்னவின்முறைநான்காரணமுணராச்
சூழல்புக்கொளித்தநீயின்று
கன்னவின்மனத்தென்கண்வலேப்படுமிக்
கருணையிற்பெரியதொன்றுளதே
மின்னவில்கனகமாளிகைவாய்தல்
விளங்கிளம்பிறைதவழ்மாடம்
பொன்னவில்புரிசையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (எ,அ,௯)

பூவணங்கோயில்கொண்டெனையாண்ட
புனிதனைவனிதைபாகனைவெண்
கோவணங்கொண்டுவெண்டலையேந்துங்
குழகனையழகெலாநிறைந்த
தீவணன்றனைச்செழுமறைதெரியுந்
திகழ்கருவூரனேனுரைத்த
பாவணத்தமிழ்கள்பத்தும்வல்லார்கள்
பரமனதுருவமாகுவரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

## அ. திருச்சாட்டியக்குடி.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பெரியவாகருணையிளநிலாவெறிக்கும்பிறைதவழ்சடைமொழுட் பவிழ்ந்து, சரியுமாசுழியங்குழைமிளிர்ந்திருபாற்முழ்ந்தவாகாதுகள் கண்டங், கரியவாதாமுஞ்செய்யவாய்முறுவல்காட்டுமோசாட்டியக் குடியா, ரிருகைகூம்பினகண்டலர்ந்தவாமுகமேழிருக்கையிலிருந்த வீசனுக்கே. (௧)

பாந்தள்பூணாரம்பரிகலங்கபாலம்பட்டவர்த்தனமெருதன்பர்
வார்ந்தகண்ணருவிமஞ்சனசாலேமலேமகண்மகிழ்பெருந்தேவி
சாந்தமுந்திருநீறருமறைகீதஞ்சடைமுடிசாட்டியக்குடியா, ரேந்தெ
ழிலிதயங்கோயின்மாளிகையேழிருக்கையுளிருந்தவீசனுக்கே. (௨)

தொழுதுபின்செல்வதயன்முதற்கூட்டங்தொடர்வனமறைகளு
ன்கெனினுங், கழுதுறுகரிகாடுறைவிடம்போர்வைகவந்திகைகரியுரி
திரிந்தூண், டழலுமிழரவங்கோவணம்பளிங்குசெபவடஞ்சாட்டிய
க்குடியா, ரிழுதுநெய்சொரிந்தோம்பழலொளிவிளக்கேழிருக்கையி
லிருந்தவீசனுக்கே. (௫)

பதிகநான்மறைதும்புருவுநாரதரும்பரிவொடுபொகொந்தர்ப்பர்
கதியெலாமரங்கம்பிணையன்மூவுலகிற்கடியிருட்டிருநடம்புரியுஞ்
சதியிலார்கதியிலொலிசெயுங்கையிற்றமருகஞ்சாட்டியக்குடியா
ரிதயமாங்கமலங்கமலவர்த்தனையேழிருக்கையிலிருந்தவீசனுக்கே. ()

திருமகன்முருகன்றேவியேயுமையாடிருமகண்மருமகன்றுயா
மருமகன்மதனன்மாமனேலிமவான்மலையுடையரையர்தம்பாவை
தருமலிவளனுஞ்சிவபுரன்றேழன்றனபதிசாட்டியக்குடியா [கே.
ரிருமுகங்கழன்மூன் றேழுகைத்தலமே ழிருக்கையிலிருந்தவீசனுக்

அனலமேபுனலேயனிலமேபுவனியம்பராவம்பரத்தளிக்குங், கன
கமேவெள்ளிக்குன்றமே யென்றன்களைகணே களைகண்மற்றில்லாத்,
தனியனேனுள்ளங்கோயில்கொண்டருளுஞ்சைவனே சாட்டியக்கு
டியார்க், கினியதீங்கனியாயொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்த
வாறியம்பே. (௬)

செம்பொனேபவளக்குன்றமேநின்றதிசைமுகன்மான்முதற்கூட்டத்
தன்பரானவர்கள்பருகுமாரமுதேயத்தனேபித்தனேனுடைய, சம்பு
வேயணுவேதாணுவேசிவனேசங்கராசாட்டியக்குடியார்க், கின்ப
னேயெங்குமொழிவறநிறைந்தேழிருக்கையிலிருந்தவாறியம்பே. ()

செங்கணாபோற்றிதிசைமுகாபோற்றிசிவபுரநகருள்வீற்றிருந்த, வங்
கணாபோற்றியமரனேபோற்றியமரர்கடலைவனேபோற்றி, தங்கண
ன்மறைநூல்சகலமுங்கற்றோர்சாட்டியக்குடியிருந்தருளு, மெங்கண
யகனேபோற்றியேழிருக்கையிறைவனேபோற்றியேபோற்றி. (அ)

சித்தனேயருளாய்செங்கணாவருளாய்சிவபுரநகருள்வீற்றிருந்த,வ
த்தனேயருளாயமரனேயருளாயமரர்களதிபனேயருளாய், தத்துநீர்
ப்படுகர்த்தண்டலைச்சூழற்சாட்டியக்குடியுளேழிருக்கை, முத்தனே
யருளாய்முதல்வனேயருளாய்முன்னவாதுயர்கெடுத்தெனக்கே. (௯)

தாட்டரும்பழனப்பைம்பொழிற்படுகர்த்தண்டலைச்சாட்டியக்குடி
யா, ரீட்டியபொருளாயிருக்குமேழிருக்கையிருந்தவன்றிருவடிமலர்
மேற்,காட்டியபொருட்கலைபயில்கருவூரன்கழறுசொன்மாலையீரைந்
து,மாட்டியசிந்தைமைந்தருக்கன்றேவளரொளிவிளங்குவானுலகே.

திருச்சிற்றம்பலம்.

## ௯. தஞ்சையிராசராசேச்சரம்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாந்தொழவந்தெழுகதிர்ப்பரிதி
  யொன்றுநூறாயிரகோடி
யலகெலாம்பொதிந்ததிருவுடம்பச்சோ
  வங்ஙனேயழகிதோவரணம்
பலகுலாம்படைசெய்நெடுநிலைமாடம்
  பருவரைஞாங்கர்வெண்டிங்க
ளிலைகுலாம்பதணத்திஞ்சிசூழ்தஞ்சை
  யிராசராசேச்சரத்திவர்க்கே. (௧)

நெற்றியிற்கண்ணென்கண்ணினின்றகலா
  நெஞ்சினிலஞ்சிலம்பலைக்கும்
பொற்றிருவடியென்குடிமுழுதாளப்
  புகுந்தனபோந்தனவில்லை
மற்றெனக்குறவேன்மறிதிரைவடபாற்
  றிடுபுனன்மதகில்வாழ்முதலை
யெற்றுநீர்க்கிடங்கிலிஞ்சிசூழ்தஞ்சை
  யிராசராசேச்சரத்திவர்க்கே. (௨)

சடைகெழுமகுடந்தண்ணிலாவிரிய
  வெண்ணிலாவிரிதருதரளக்
குடைநிழல்விடைமேற்கொண்டுலாப்போதுங்
  குறிப்பெனோகோங்கிணரனைய
குடைகெழுநிருபர்முடியொடுமுடிதேய்ந்
  துக்கசெஞ்சுடர்ப்படுகுவையோங்
கிடைகெழுமாடத்திஞ்சிசூழ்தஞ்சை
  யிராசராசேச்சரத்திவர்க்கே. (௩)

வாழியம்போதத்தருகுபாய்விடையம்
  வரிசையின்விளக்கலினடுத்த
சூழலம்பளிங்கின்பாசலராதிச்
  சுடர்விடுமண்டலம்பொலியக்
காழகில்கமழுமாளிகைமகளிர்
  கங்குல்வாயங்குலிகெழும
யாழொலிசிலம்புமிஞ்சிசூழ்தஞ்சை
  யிராசராசேச்சரத்திவர்க்கே. (௪)

எவருமாமறைகளைவையும்வானவர்க
ளீட்டமுந்தாட்டிருக்கமலத்
தவருமாலவனுமறிவரும்பெருமை
யடலழலுமிழ்தழற்பிழம்ப
ருவரிமாகடலினொலிசெய்மாமறுகி
லுறுகளிற்றரசினநீட்ட
மிவருமால்வரைசெயிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௫)

அருளுமாறருளியாளுமாறாள
வடிகடமழகியவிழியுங்
குருளும்வார்காதுங்காட்டியான்பெற்ற
குயிலினைமயல்செய்வதழகோ
தரளவான்குன்றிற்றண்ணிலாவொளியுந்
தருகுவால்பெருகுவான்றெருவி
லிருளெலாங்கிழியுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௬)

தனிப்பெருந்தாமேமுழுதுறப்பிறப்பின்
றளிரிறப்பிலையுதிர்வென்றா
னினைப்பருந்தம்பாற்சேறலின்றேனு
நெஞ்சிடித்துருகுவதென்னோ
சுனைப்பெருங்கலங்கற்பொய்கையங்கழுநீர்ச்
சூழன்மாளிகைசுடர்வீசு
மெனைப்பெருமணஞ்செயிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௭)

பன்னெடுங்காலம்பணிசெய்துபழையோர்
தாம்பலரேம்பலித்திருக்க
வென்னெடுங்கோயினெஞ்சுவீற்றிருந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
மின்னெடும்புருவத்திளமயிலனையார்
விலங்கல்செய்நாடகசாலை
யின்னடம்பயிலுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௮)

மங்குல்சூழ்போதினொழிவறநிறைந்து
வஞ்சகர்நெஞ்சகத்தொளிப்பா
ரங்கழற்சுடராமவர்க்கிளவேன
லலர்கதிரனையவாழியரோ

பொங்கெழிற் றிருநீறழிபொசிவனப்பிற்
புனறுளும்பவிர்சடைமொழுப்ப
ரெங்களுக்கினியரிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௯)

தனியரொத்தனையொராயிரவருமாந்
தன்மையரென்வயத்தினராங்
கனியரத்தருதீங்கரும்பர்வெண்புரிநூற்
கட்டியரட்டவாரமிர்தர்
புனிதர்பொற்கழலர்புரிசடாமகுடர்
புண்ணியர்பொய்யிலாமெய்யர்க்
கினியரெத்தனையுமிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவர்க்கே. (௧0)

சரளமந்தாரசண்பகவகுள
சந்தனநந்தனவனத்தி
னிருள்விரிமொழுப்பினிஞ்சிசூழ்தஞ்சை
யிராசராசேச்சரத்திவரை
யருமருந்தருந்தியல்லறீர்கருவூ
ரறைந்தசொன்மாலையீரைந்தின்
பொருண்மருந்துடையோர்சிவபதமென்னும்
பொன்னெடுங்குன்றுடையோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## ௧0. திருவிடைமருதூர்.

---

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வெய்யசெஞ்சோதி மண்டலம்பொலிய வீங்கிருணடுநல்யாமத் தோர், பையசெம்பாந்தள்பருமணியுமிழ்ந்துபாவியேன்காதல்செய் காதி, லையசெம்பொற்றோட்டவிர்சடைமொழுப்பினழிவழகியதிருநீ ற்று, மையசெங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிடந்திருவிடை மருதே. (௧)

இந்திரலோகமுழுவதும்பணிகேட்டிணையடிதொழுதெழத்தாம்போ யைந்தலைநாகமேகலையரையாவகந்தொறும்பலிதிரியடிக
டந்திரிவீணைகீதமும்பாடச்சாதிகின்னரங்கலந்தொலிப்ப
மந்திரகீதந்தீங்குழலெங்குமருவிடந்திருவிடைமருதே. (௨)

பனிபடுமதியம்பயில்கொழுந்தன்னபல்லவம்வல்லியென்றிங்ங
ன், வினைபடுகனகம்போலயாவையுமாய்வீங்குலகொழிவறநிறைந்து,
துனிபடுகலவிமலைமகளுடனாய்த்துங்கிருணடுநல்யாமத்தென், மன
னிடையணுகிநுணுகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே. ()

அணியுமிழ்சோதிமணியினுள்கலந்தாங் கடியனேனுள்கலந்தடியேன்
பணிமகிழ்ந்தருளுமரிவைபாகத்தன்படர்சடைவிடமிடற்றடிக
டுணியுமிழாடையரையிலோராடைசுடருமிழ்தரவதனருகே
மணியுமிழ்நாகமணியுமிழ்ந்திமைப்பமருவிடந்திருவிடைமருதே. (௪)

பந்தமும்பிரிவுந்தெரிபொருட்பனுவற்படிவழிசென்றுசென்றேறிச்
சிந்தையுந்தானுங்கலந்ததோர்கலவிதெரியினுந்தெரிவுறாவண்ண
மெந்தையுந்தாயும்யானுமென்றிங்ஙனெண்ணில்பல்லூழிகளுடனாய்
வந்தணுகாதுநுணுகியுள்கலந்தோன்மருவிடந்திருவிடைமருதே. (௫)

எரிதருகரிகாட்டிடுபிணநிணமுண்டேப்பமிட்டிலங்கெயிற்றழல்
வாய்த், துருகழனெடும்பேய்க்கணமெழுந்தாடுந்தூங்கிருணடுநல்யா
மத்தே, யருள்புரிமுறுவன்முகிழ்நிலாவெறிப்பவந்திபோன்றொளிர்
திருமேனி, வரியரவாடவாடுமெம்பெருமான்மருவிடந்திருவிடை
மருதே. (௬)

எழிலையாழ்செய்கைப்பசுங்கலன்விசும்பினின்றுளிபடநனைந்து
ருகி, யழலையாழ்புருவம்புனலொடுங்கிடந்தாங்காதனேன்மாதரார்
கலவித், தொழிலையாழ்நெஞ்சமிடர்படாவண்ணந்தூங்கிருணடுநல்
யாமத்தோர், மழலையாழ்சிலம்பவந்தகம்புகுந்தோன்மருவிடந்திருவி
டைமருதே. (௭)

வையவாம்பெற்றம்பெற்றமேறுடையார்மாதவர்காதல்வைத்தெ
ன்னை, வெய்யவாஞ்செந்தீப்பட்டவிட்டிகைபோல்விழுமியோன்
முன்புபின்பென்கோ, நொய்யவாறென்னவந்துள்வீற்றிருந்தநூறு
நூறாயிரகோடி, மையவாங்கண்டத்தண்டவானவர்கோன்மருவிட
ந்திருவிடைமருதே. (௮)

கலங்கலம்பொய்கைப்புனற்றெளிவிடத்துக்கலந்தமண்ணிடைக்
கிடந்தாங்கு, நலங்கலந்தடியேன்சிந்தையுட்புகுந்தநம்பனேன்வம்ப
னேனுடைய, புலங்கலந்தவனேயென்றுநின்றுருகிப்புலம்புவாரவ
ம்புகாரருவி, மலங்கலங்கண்ணிற்கண்மணியனையான்மருவிடந்திரு
விடைமருதே. (௯)

ஒருங்கிருங்கண்ணினெண்ணில்புன்மாக்களுறங்கிருணடுநல்யாம
த்தோர், கருங்கணின்றிமைக்குஞ்செழுஞ்சுடர்விளக்கங்கலந்தென

க்கலந்துணர்கருவூர், தருங்கரும்பனையதீந்தமிழ்மாலைதடம்பொழின் மருதயாழுதிப்ப, வருங்கருங்கண்டத்தண்டவானவர்கோன்மருவி டந்திருவிடைமருதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## பூந்துருத்திநம்பிகாடநம்பி திருவிசைப்பா.

### ௧. திருவாரூர்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கைக்குவான்முத்தின்சரிவளைபெய்துகழுத்திலோர்தனிவடங்க ட்டி, முக்கணாயகராய்ப்பவனிபோந்திங்ஙன்முரிவதோர்முரிவுமைய ளவுந், தக்கசீர்க்கங்கையளவுமன்றென்னேதம்மொருப்பாடுலகதன் மேன், மிக்கசீராரூராதியாய்வீதிவிடங்கராய்நடங்குலாவினரே. (௧)

பத்தியாயுணர்வோரருளைவாய்மடுத்துப்பருகுதோறமுதமொத்த வர்க்கே, தித்தியாவிருக்குந்தேவர்காளிவர்தந்திருவுருவிருந்தவாபா ரீர், சத்தியாய்ச்சிவமாயுலகெலாம்படைத்ததனிமுழுமுதலுமாயதற் கோர், வித்துமாயாரூராதியாய்வீதிவிடங்கராய்நடங்குலாவினரே.()

திருச்சிற்றம்பலம்.

### ௨. கோயில்.

பண் சாளரபாணி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவயிரமணிமாணிக்கமாலைகண்மேற்
றொத்துமிளிர்வனபோற்றூண்டுவிளக்கேய்ப்ப
வெத்திசையும்வானவர்களேத்துமெழிற்றில்லை
யத்தனுக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (௧)

கடியார்கணம்புல்லர்கண்ணப்பரென்று
னடியாரமருலகமாளநீயாளாதே
முடியாமுத்திவேள்விழுவாயிரவரொடுங்
குடிவாழ்க்கைகொண்டுநீகுலாவிக்கூத்தாடினையே. (௨)

அல்லியம்பூம்பழனத்தாமூர்நாவுக்கரசைச்
செல்லநெறிவகுத்தசேவகனேதென்றில்லைக்
கொல்லைவிடையேறிகூத்தாடரங்காகச்
செல்வநிறைந்தசிற்றம்பலமேசேர்ந்தனையே. (௩)

எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டெமையாளுஞ்
சம்பந்தன்காழியர்கோன்றன்னையுமாட்கொண்டருளி
யம்புந்துகண்ணாளுந்தானுமணிதில்லைச்
செம்பொன்செயம்பலமேசேர்ந்திருக்கையாயிற்றே. (௪)

களையாவுடலோடுசேரமானாரூரன்
விளையாமதமாறுவெள்ளானைமேல்கொள்ள
முளையாமதிசூடிமூவாயிரவரொடு
மனையாவிளையாடுமம்பலநின்றாடரங்கே. (௫)

அகலோகமெல்லாமடியவர்கடற்சூழப்
புகலோகமுண்டென்றுபுகுமிடந்தேடாதே
புவலோகநெறிபடைத்தபுண்ணியங்கணண்ணியசீர்ச்
சிவலோகமாவதுவுந்தில்லைச்சிற்றம்பலமே. (௬)

களகமணிமாடஞ்சூளிகைசூழ்மாளிகைமே
லளகமதிநுதலாராயிழையார்போற்றிசைப்ப
வொளிகொண்டமாமணிகளோங்கிருளையாங்ககற்றுந்
தெளிகொண்டதில்லைச்சிற்றம்பலமேசேர்ந்தனையே. (௭)

பாடகமுநூபுரமும்பல்சிலம்பும்பேர்ந்தொலிப்பச்
சூடகக்கைநல்லார்தொழுதேத்தத்தொல்லுலகி
னாடகத்தின்கூத்தைநவிற்றுமவர்நாடோறு
மாடகத்தான்மேய்ந்தமைந்தவம்பலநின்றாடரங்கே. (௮)

உருவத்தெரியுருவாயூழிதோறெத்தனையும்
பரவிக்கிடந்தயனுமாலும்பணிந்தேத்த
விரவிக்குநேராகியேய்ந்திலங்குமாளிகைசூழ்ந்
தரவிக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. (௯)

சேடருறைதில்லைச்சிற்றம்பலத்தான்ற
னாடலதிசயத்தையாங்கறிந்துபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலைபத்துங்கருத்தறிந்து
பாடுமிவைவல்லார்பற்றுநிலைபற்றுவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# கண்டராதித்தர் திருவிசைப்பா.

---

## கோயில்.

### பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னாருருவமேல்விளங்கவெண்கொடிமாளிகைசூழப்
பொன்னார்குன்றமொன்றுவந்துநின்றதுபோலுமென்னாத்
தென்னாவென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளென்னாரமுதையெங்கள்கோவையென்றுகொலெய்துவதே. (௧)

ஓவாமுத்தீயஞ்சவேள்வியாறங்கநான்மறையோ
ராவேபடுப்பாரந்தணாளராகுதிவேட்டுயர்வார்
மூவாயிரவர்தங்களோடுமுன்னரங்கேறிநின்ற
கோவேயுன்றன்கூத்துக்காணக்கூடுவதென்றுகொலோ. (௨)

முத்தியாளர்நான்மறையர்மூவாயிரவர்நின்னோ
டொத்தேவாழுந்தன்மையாளரோதியநான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளத்தாவுன்றனாடல்காணவணைவதுமென்றுகொலோ. (௩)

மானைப்புரையுமடமென்னோக்கிமாமலையாளோடு
மானஞ்சாடுஞ்சென்னிமேலோரம்புலிசூடுமரன்
றேனைப்பாலைத்தில்லைமல்குசெம்பொனினம்பலத்துக்
கோனைஞானக்கொழுந்துதன்னைக்கூடுவதென்றுகொலோ. (௪)

களிவானுலகிற்கங்கைநங்கைகாதலனேயருளென்
றொளிமான்முன்னேவரங்கிடக்கவுன்னடியார்க்கருளுந்
தெளிவாரமுதேதில்லைமல்குசெம்பொனினம்பலத்து
ளொளிவான்சுடரேயுன்னைநாயேனுறுவதுமென்றுகொலோ. (௫)

பாரோர்முழுதும்வந்திறைஞ்சப்பதஞ்சலிக்காட்டுகந்தான்
வாரார்முலையாண்மங்கைபங்கன்மாமறையோர்வணங்கச்
சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடுகின்ற
காரார்மிடற்றெங்கண்டனாரைக்காண்பதுமென்றுகொலோ. (௬)

இலையார்கதிர்வேலிலங்கைவேந்தனிருபதுதோளுமிற
மலைதானெடுத்தமற்றவற்குவாளொடுநாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன்றெய்தவில்லிசெம்பொனினம்பலத்துக்
கலையார்மறிபொற்கையினானைக்காண்பதுமென்றுகொலோ. (௭)

வெங்கோல்வேந்தன்றென்னாடுமீழமுங்கொண்டதிறற்
செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்பொன்னணிந்த
வங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்து
ளெங்கோனீசனெம்மிறையையென்றுகொலெய்துவதே. (அ)

நெடியானோடுநான்முகனும்வானவருநெருங்கி
முடியான்முடிகண்மோதியுக்கமுழுமணியின்றிரளை
யடியாரலகினாற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென்றுகொலோ. (கூ)

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த
வாராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

# வேணாட்டடிகள் திருவிசைப்பா.

---

## கோயில்.

பண் புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

துச்சானசெய்திடினும்பொறுப்பரன்றேயாளுகப்பார்
கைச்சாலுஞ்சிறுகதலியிலைவேம்புங்கறிகொள்வா
ரெச்சார்வுமில்லாமைநீயறிந்துமெனதுபணி
நச்சாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (க)

தம்பானைசாய்ப்பற்றாரென்னுமுதுசொல்லு
மெம்போல்வார்க்கில்லாமையென்னளவேயறிந்தொழிந்தேன்
வம்பானார்பணியுகத்திவழியடியேன்றொழிலிறையு
நம்பாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (உ)

பொசியாதோகீழ்க்கொம்புநிறைகுளமென்றதுபோலத்
திசைநோக்கிப்பேழ்கணித்துச்சிவபெருமானேயெனினு
மிசையானாலென்றிறத்துமெனையுடையாளுரையாடா
ணசையானேன்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௩)

ஆயாதசமயங்களவரவர்கண்முன்பென்னை
நோயோடுபிணிநலியவிருக்கின்றவதனாலே
பேயாவித்தொழும்பனைத்தம்பிரானிகழுமென்பித்தாய்
நாயேனைத்திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (ச)

நின்றுநினைந்திருந்துகிடந்தெழுந்துதொழுந்தொழும்பனே
னொன்றியொருகானினையா திருந்தாலுமிருக்கவொட்டாய்
கன்றுபிரிகற்றாப்போற்கதறுவித்திவரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௫)

படமதமுமிடவயிறுமுடையகளிறுடையபிரா
னடியறியவுணர்த்துவதுமகத்தியனுக்கோத்தன்றே
யிடுவதுபுல்லெருதுக்கொன்றினுக்குவையிடுதே
னடுவிதுவோ திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௬)

மண்ணோடுவிண்ணளவுமனிதரொடுவானவர்க்குங்
கண்ணாவாய்கண்ணாகாதொழிதலுநான்மிகக்கலங்கி
யண்ணாவோவென்றண்ணாந்தலமந்துவிளித்தாலு
நண்ணாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௭)

வாடாவாய்நாப்பிதற்றியுனைநினைந்துநெஞ்சுருகி
வீடாஞ்செய்குற்றேவலெற்றேமற்றதுபொய்யிற்
கூடாமேகைவந்துகுறுகுமாறியானுன்னை
நாடாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௮)

வாளாமாலயன்வீழ்ந்துகாண்பரியமாண்பிதனைத்
தோளாரக்கையாரத்துணையாரத்தொழுதாலு
மாளாநீயுடையதுவுமடியேனுன்றாள்சேரு
நாளேதோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. (௯)

பாவார்ந்ததமிழ்மாலைபத்தரடித்தொண்டனெடுத்
தோவாதேயழைக்கின்றானென்றருளிநன்றுமிகத்
தேவேதென்றிருத்தில்லைக்கூத்தாடீநாயடியேன்
சாவாயுநினைக்காண்டலினியுனக்குத்தடுப்பரிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

# திருவாலியமுதனார் திருவிசைப்பா.

## ௧. கோயில் - பாதாதிகேசம்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மையன்மாதொருகூறன்மால்விடையேறிமான்மறியேந்தியதடங்
கையன்கார்புரையுங்கறைக்கண்டன்கனன்மழுவா
ளையனாரழலாடுவானணிநீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௧)

சலம்பொற்றாமரைதாழ்ந்தெழுந்த தடமுந்தடம்புனல்வாய்ம லர்த
யலம்பிவண்டறையுமணியார்தில்லையம்பலவன் [ழீஇ
புலம்பிவானவர்தானவர்புகழ்ந்தேத்தவாடுபொற்கூத்தனார்கழற்
சிலம்புகிங்கிணியென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௨)

குருண்டவார்குழற்கோதைமார்குயில்போன்மிழற்றிய கோலமாளி
திரண்டதில்லைதன்னுட்டிருமல்குசிற்றம்பலவன் [கை
மருண்டுமாமலையான்மகடொழவாடுங்கூத்தன்மணிபுரைதரு
திரண்டவான்குறங்கென்சிந்தையுள்ளிடங்கொண்டனவே. (௩)

போழ்ந்தியானைதன்னைப்பொருப்பன்மகளுமையச்சங்கண்டவன்
றாழ்ந்ததண்புனல்சூழ்தடமல்குசிற்றம்பலவன் [றொடு
சூழ்ந்தபாய்புலித்தோன்மிசைத்தொடுத்துவீக்கும்பொன்னூறன்னி
தாழ்ந்தகச்சதன்றேதமியேனைத்தளர்வித்ததே. (௪)

பந்தபாசமெலாமறப்பசுபாசநீக்கியபன்முனிவரோ
டந்தணர்வணங்குமணியார்தில்லையம்பலவன்
செந்தழல்புரைமேனியுந்திகழுந்திருவயிறும்வயிற்றினு
ளுந்திவான்சுழியென்னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. (௫)

குதிரைமாவொடுதேர்பலகுவிந்தீண்டுதில்லையுட்கொம்பனாரொடு
மதுரவாய்மொழியார்மகிழ்ந்தேத்துசிற்றம்பலவ
னதிரவார்கழல்வீசிநின்றழகாநடம்பயில்கூத்தன்மேற்
றிகழுதரபந்தனமென்னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. (௬)

படங்கொள்பாம்பணையானொடுபிரமன்பரம்பரமாவருளென்று
தடங்கையாற்றொழவுந்தழலாடுசிற்றம்பலவன்
றடங்கைநான்குமத்தோள்களுந்தடமார்பினிற்பூண்கண்மேற்றிசை
விடங்கொள்கண்டமன்றேவினையேனைமெலிவித்ததே. (௭)

செய்யகோடுடன்கமலமலர்சூழ்தருதில்லை மாமறையோர்கடாந்தொ
வையமுய்யநின்றுமகிழ்ந்தாடுசிற்றம்பலவன் [ழ
செய்யவாயின்முறுவலுந்திகழுந்திருக்காதுங் காதினின்மாத்திரைக
ளோ, டையதோடுமன்றேயடியேனையாட்கொண்டனவே. (௮)

செற்றுவன்புரந்தீயெழச்சிலைகோலியாரழலூட்டினானவ
னெற்றிமாமணிகளெறிநீர்த்தில்லையம்பலவன்
மற்றைநாட்டமிரண்டொடுமலருந்திருமுகமுமுகத்தினு
ணெற்றிநாட்டமன்றேநெஞ்சுளேதிளைக்கின்றனவே. (௯)

தொறுக்கள்வான்கமலமலருழக்கக்கரும்புநற்சாறுபாய்தர
மறுக்கமாய்க்கயல்கண்மடைபாய்தில்லையம்பலவன்

முறுக்குவாசிகைதன்னொடுமுகிழ்த்தவல்வகத்தி மொட்டொடுமத்த
மும்,பிறைக்கொள்சென்னியன்றேபிரியாதென்னுணின்றனவே. ()

தூவிநீரொடுபூவவைதொழுதேத்துகையினராகிமிக்கதோ
ராவியுண்ணிறுத்தியமர்ந்தூறியவன்பினராய்த்
தேவர்தாந்தொழவாடியதில்லைக்கூத்தனைத்திருவாலிசொல்லிவை
மேவவல்லவர்கள்விடையானடிமேவுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## உ. கோயில் - பவளமால்வரை.

---

பண் நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பவளமால்வரையைப்பனிபடர்ந்தனையதோர்படரொளிதருதிருநீ
றுங், குவளைமாமலர்க்கண்ணியுங்கொன்றையுந்துன்றுபொற்குழற்றி
ருச்சடையுந், திவளமாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற,த
வளவண்ணனைநினைதொறுமென்மனந்தழன்மெழுகொக்கின்றதே.()

ஒக்கவோட்டந்தவந்தியுமதியுமலைகடலொலியோடு
நெக்குவீழ்தருநெஞ்சினைப்பாய்தலுங்கிறையழிந்திருப்பேனைச்
செக்கர்மாளிகைசூழ்தருதில்லையுட்டிருநடம்வகையாலே
பக்கமோட்டந்தமன்மதன்மலர்க்கணைபடுந்தொறுமலந்தேனே. (உ)

அலந்துபோயினேனம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ
சிலந்தியையரசாள்கவென்றருள்செய்ததேவதேவீசனே
யுலர்ந்தமார்க்கண்டிக்காகியக்காலனையுயிர்செகவுதைகொண்ட
மலர்ந்தபாதங்கள்வனமுலைமேலொற்றவந்தருள்செய்யாயே. (௩)

அருள்செய்தாடுநல்லம்பலக்கூத்தனேயணிதில்லைநகராளீ
மருள்செய்தென்றனைவனமுலைபொன்பயப்பிப்பதுவழக்காமோ
திரளுநீண்மணிக்கங்கையைத்திருச்சடைச்சேர்த்தியச்செய்யாளுக்
குருவம்பாகமுமீந்துநல்லந்தியையொண்ணுதல்வைத்தோனே. (௪)

வைத்தபாதங்கண்மாலவன்காண்கிலன்மலரவன்முடிதேடி
யெய்த்துவத்திழிந்தின்னமுந்துதிக்கின்றாரெழின்மறையவற்றாலே
செய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கியதில்லையம்பலத்தானைப்
பத்தியாற்சென்றுகண்டிடவென்மனம்பதைபதைப்பொழியாதே. ()

தேய்ந்துமெய்வெளுத்தகம்வளைந்தரவினையஞ்சித்தானிருந்தேயுங்
காய்ந்துவந்துவந்தென்றனைவலிசெய்துகதிர்நிலாவெரிதூவு
மாய்ந்தநான்மறையந்தணர்தில்லையுளம்பலத்தரனுடல்
வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர்மனத்தினையுடையேற்கே.()

உடையும்பாய்புலித்தோலுநல்லரவமுமுண்பதும்பலிதேர்ந்து
விடையதூர்வதுமேவிடங்கொடுவரையாகினுமென்னெஞ்ச
மடைகொள்வாளைகள்குதிகொளும்வயற்றில்லையம்பலத்தனலாடு
முடையகோவினையன்றிமற்றுரையுமுள்ளுவதறியேனே. (௭)

அறிவுமிக்கநன்ஞாணமுநிறைமையுமாசையுமிங்குள்ள
வுறவும்பெற்றநற்றாயொடுதந்தையுமுடன்பிறந்தவரோடும்
பிரியவிட்டுனையடைந்தனனேன்றுகொள்பெரும்பற்றப்புலியூரின்
மறைகளுன்குங்கொண்டந்தணரேத்தநன்மாநடமகிழ்வானே. (௮)

வானநாடுடைமைந்தனேயோவென்பன்வந்தருளாயென்பன்
பானெய்யைந்துடனாடியபடர்சடைப்பால்வண்ணனேயென்பன்
றேனமர்பொழில்சூழ்தருதில்லையுட்டிருநடம்புரிகின்ற
வேனமாமணிப்பூணணிமார்பனேயெனக்கருள்புரியாயே. (௯)

புரியும்பொன்மதில்சூழ்தருதில்லையுட்பூசுரர்பலர்போற்ற
வெரியதாடுமெம்மீசனைக்காதலித்தினையவண்மொழியாக
வரைசெய்மாமதின்மயிலையர்மன்னவன்மறைவலதிருவாலி
பரவல்பத்திவைவல்லவர்பரமனதடியிணைபணிவாரே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

---

## ௩. கோயில்.

---

பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அல்லாய்ப்பகலாயருவாயுருவாயாராவமுதமாய்க்
கல்லானிழலாய்கயிலைமலையாய்காணவருளென்று
பல்லாயிரம்பேர்பதஞ்சலிகள்பரவவெளிப்பட்டுச்
செல்வாய்மதிற்றில்லைக்கருளித்தேவனாடுமே. (௧)

அன்னநடையாரமுதமொழியாரவர்கள்பயிறில்லைத்
தென்னன்றமிழுமிசையுங்கலந்தசிற்றம்பலந்தன்னுட்
பொன்னுமணியுநிரந்ததலத்துப்புலித்தோல்பியற்கிட்டு
மின்னினிடையாளுமையாள்காணவிகிர்தனாடுமே. (௨)

இளமென்முலையாரெழின்மைந்தரொடுமேராரமளிமேற்
றிளையுமாடத்திருவார்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
வளர்பொன்மலையுள்வயிரமலைபோல்வலக்கைகவித்துநின்
றளவில்பெருமையமரர்போற்றவழகனாடுமே. (௩)

சந்துமகிலுந்தழைப்பீலிகளுஞ்சாதிபலவுங்கொண்
டுந்தியிழியுநிவவின்கரைமேலுயர்ந்தமதிற்றில்லைச்
சிந்திப்பரியதெய்வப்பதியுட்சிற்றம்பலந்தன்னு
ணந்திமுழவங்கொட்டநட்டநாதனாடுமே. (௪)

ஓமப்புகையுமகிலின்புகையுமுயர்ந்துமுகிறோயத்
தீமெய்த்தொழிலார்மறையோர்மல்குசிற்றம்பலந்தன்னுள்
வாமத்தொழிலாரெடுத்தபாதமழலைச்சிலம்பார்க்கத்
தீமெய்ச்சடைமேற்றிங்கள்சூடித்தேவனாடுமே. (௫)

குரவங்கோங்கங்குளிர்புன்னைகைதைகுவிந்தகரைகண்மேற்
றிரைவந்துலவுந்தில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
வரைபோன்மலிந்தமணிமண்டபத்துமறையோர்மகிழ்ந்தேத்த
வரவமாடவனல்கையேந்தியழகனாடுமே. (௬)

சித்தர்தேவரியக்கர்முனிவர்தேனார்பொழிற்றில்லை
யத்தாவருளாயணியம்பலவாவென்றென்றவரேத்த
முத்துமணியுநிரந்ததலத்துண்முளைவெண்மதிசூடிக்
கொத்தார்சடைகடாழநட்டங்குழகனாடுமே. (௭)

அதித்தவரக்கனெரியவிரலாலடர்த்தாயருளென்று
துதித்துமறையோர்வணங்குந்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளுதித்தபோழ்திலிரவிக்கதிர்போலொளிர்மாமணியெங்கும்
பதித்ததலத்துப்பவளமேனிப்பரமனாடுமே. (௮)

மாலோடயனுமமரர்பதியும்வந்துவணங்கிநின்
றுலகண்டாவரனேயருளாயென்றென்றவரேத்தச்
சேலாடும்வயற்றில்லைமல்குசிற்றம்பலந்தன்னுட்
பாலாடுமுடிச்சடைகடாழப்பரமனாடுமே. (௯)

நெடியசமணுமறைசாக்கியருநிரம்பாப்பல்கோடிச்
செடியுந்தவத்தோரடையாத்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளடிகளவரையாரூர்நம்பியவர்களிசைபாடக்
கொடியும்விடையுமுடையகோலக்குழகனாடுமே. (௧௦)

வானோர்பணியமண்ணோரேத்தமன்னிநடமாடுந்
தேனார்பொழில்சூழ்தில்லைமல்குசிற்றம்பலத்தானைத்
தூநான்மறையானமுதவாலிசொன்னதமிழ்மாலைப்
பானேர்பாடல்பத்தும்பாடப்பாவநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## ச. கோயில்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கோலமலர்நெடுங்கட்கொவ்வைவாய்க்கொடியேரிடையீர்
பாலினையின்னமுதைப்பரமாயபரஞ்சுடரைச்
சேலுகளும்வயல்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேல்வுடையெம்மிறையையென்றுகொல்காண்பதுவே. (க)

காண்பதியாமென்றுகொல்கதிர்மாமணியைக்கனலை
யாண்பெண்ணருவுருவென்றறிதற்கரிதாயவனைச்
சேண்பணைமாளிகைசூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
மாண்புடைமாநடஞ்செய்மறையோன்மலர்ப்பாதங்களே. (உ)

கள்ளவிழ்தாமரைமேற்கண்டயனொடுமால்பணிய
வொள்ளொளியின்னடுவேயுருவாய்ப்பரந்தோங்கியசீர்த்
தெள்ளியதண்பொழில்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
துள்ளொளியாடுகின்றவொருவனையுணர்வரிதே. (ங)

அரிவையோர்கூறுகந்தானழகன்னெழின்மால்கரியி
னுரிவைநல்லுத்தரியமுகந்தானும்பரார்தம்பிரான்
புரிபவர்க்கின்னருள்செய்புலியூர்த்திருச்சிற்றம்பலத்
தெரிமகிழ்ந்தாடுகின்றவெம்பிரானென்னிறையவனே. (ச)

இறைவனையென்கதியையென்னுளேயுயிர்ப்பாகிநின்ற
மறைவனைமண்ணும்விண்ணுமலிவான்சுடராய்மலிந்த
சிறையணிவண்டறையுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
நிறையணியாமிறையைநினைத்தேனினிப்போக்குவனே. (ரு)

நினைத்தேனினிப்போக்குவனோநிமலத்திரளைநினைப்பார்
மனத்தினுளேயிருந்தமணியைமணிமாணிக்கத்தைக்
கனைத்திழியுங்கழனிக்கனகங்கதிரொண்பவளஞ்
சினத்தொடுவந்தெறியுந்தில்லைமாநகர்க்கூத்தனையே. (சு)

கூத்தனை வானவர்தங்கொழுந்தைக்கொழுந்தாயெழுந்த
மூத்தனைமூவுருவின்முதலைமுதலாகிநின்ற
வாத்தனைத்தான்படைக்குமந்தணர்தில்லையம்பலத்து
ளேத்தநின்றுடுகின்றவெம்பிரானடிசேர்வன்கொலோ. (எ)

சேர்வன்கொலோவன்னைமீர்திகழும்மலர்ப்பாதங்களை
யார்வங்கொளத்தழுவியணிநீறென்முலைக்கணியச்
சீர்வங்கம்வந்தணவுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேர்வங்கைமான்மறியனெம்பிரானென்போனேசனையே. (அ)

நேசமுடையவர்கணெஞ்சுளேயிடங்கொண்டிருந்த
காய்சினமால்விடையூர்கண்ணுதலைக்காமருசீர்த்
தேசமிகுபுகழோர்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தீசனையெவ்வுயிர்க்குமெம்மிறைவனென்றேத்துவனே. (கூ)

இறைவனையேத்துகின்றவிளையாண்மொழியின்றமிழான்
மறைவலநாவலர்கண்மகிழ்ந்தேத்துசிற்றம்பலத்தை
யறைசெந்நெல்வான்கரும்பினணியாலைகள்சூழ்மயிலை
மறைவலவாலிசொல்லைமகிழ்ந்தேத்துகவானெளிதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

---

# புருடோத்தமநம்பி திருவிசைப்பா.

---

## க. கோயில்.

### பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வாரணிநறுமலர்வண்டுகெண்டுபஞ்சமஞ்செண்பகமாலைமாலை, வாரணிவனமுலை மெலியும்வண்ணம் வந்துவந்திவைநம்மை மயக்குமாலோ, சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள்செல்வன்வாரா,னுரைனயருள்புரிந்தஞ்சலென்பாராவியின்பரமென்றனுதரவே. (க)

ஆவியின்பரமென்றனுதரவுமருவினையேனைவிட்டம்மவம்ம, பாவிவன்மனமிதுபையவேபோய்ப்பனிமதிச்சடையான்பாலதாலோ
நீவியுநெகிழ்ச்சியுநிறையழிவுநெஞ்சமுந்தஞ்சமிலாமையாலே
யாவியின்வருத்தமிதாரறிவாரம்பலத்தருநடமாடுவானே. (உ)

அம்பலத்தருநடமாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெஞ்ச, மும்பர்கள்வன்பழியாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென்றேயுமுய்யேன், வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்களைமாற்றி

யாங்கே, யென்பெரும்பயலைமைதீரும்வண்ணமெழுந்தருளாயெங்கள்வீதியூடே. (௩)

எழுந்தருளாயெங்கள்வீதியூடேயேதமின்முனிவரொடெழுந்தஞானக், கொழுந்ததுவாகியகூத்தனேநின்குழையணிகாதினின்மாத்திரையுஞ், செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்செங்கனிவாயுமென்சிந்தைவெளவ, வழுந்துமென்னுருயிர்க்கென்செய்கேனோவரும்புனலலமருஞ்சடையினனே. (௪)

அரும்புனலலமருஞ்சடையினானையமரர்களடிபணிந்தரற்றவந்நாட், பெரும்புரமெரிசெய்தசிலையின்வார்த்தைபேசவுநையுமென்பேதைநெஞ்சங், கருந்தடமலர்புரைகண்டவண்டார்காரிகையார்முன்பென்பெண்மைதோற்றேன், றிருந்தியமலரடிநசையினாலேதில்லையம்பலத்தெங்கடேவதேவே. (௫)

தில்லையம்பலத்தெங்கடேவதேவைத்தேறியவந்தணர்சிந்தைசெய்யு, மெல்லையதாகியவெழில்கொள்சோதியென்னுயிர்காவல்கொண்டிருந்தவெந்தாய், பல்லையார்பசுந்தலையோடிடறிப்பாதமென்மலரடிநோவநீபோ, யல்லினிலருநடமாடிலெங்களாருயிர்காவலிங்கரிதுதானே. (௬)

ஆருயிர்காவலிங்கருமையாலேயந்தணர்மதலைநின்னடிபணியக், கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக் குரைகழல்பணிகொளமலைந்ததென்று, லாரினியமரர்கள்குறைவிலாதாரவரவர்படுதுயர்களையநின்ற, சீருயிரேயெங்கடில்லைவாணாசேயிழையார்க்கினிவாழ்வரிதே. (௭)

சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனேநீ, தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கராவுன், பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமுங்கண், டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ. (௮)

எங்களையாளுடை யீசனேயோவிளமுலைமுகநெக முயங்கிநின்பொற், பங்கயம்புரைமுகநோக்கிநோக்கிப்பனிமதிநிலவதென்மேற்படரச், செங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னே திருச்சிற்றம்பலமுடனேபுகுந்து, வங்குனபணிபலசெய்துநாளுமருள்பெறினகலிடத்திருக்கலாமே. (௯)

அருள்பெறினகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலு, மிருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை, மருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனைவல்வினையாட்டியேனு, னருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே. (௧௦)

ஆசையையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாவோனை, வாசநன்மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசன், மாசிலாமறைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த, வாசகமலர்கள்கொண்டேத்தவல்லார்மலைமகள்கணவனையணைவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

---

## உ. கோயில்.

---

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கள்வேண்டவளர்நஞ்சையுண்டார்தா
மூனமிலாவென்கையொளிவளைகள்கொள்வாரோ
தேனல்வரிவண்டறையுந்தில்லைச்சிற்றம்பலவர்
நானமரோவென்னாதேநாடகமேயாடுவரே. (௧)

ஆடிவருங்காரரவுமைம்மதியும்பைங்கொன்றை
சூடிவருமாகண்டேன்றோள்வளைகடோற்றாலுந்
தேடியிமையோர்பரவுந்தில்லைச்சிற்றம்பலவ
ராடிவரும்போதருகேநிற்கவுமோவொட்டாரே. (௨)

ஒட்டாவகையவுணர்முப்புரங்களோரம்பாற்
பட்டாங்கழல்விழுங்கவெய்துகந்தபண்பினார்
சிட்டார்மறையோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
கொட்டாநடமாடக்கோல்வளைகள்கொள்வாரே. (௩)

ஆரேயிவைபடுவாரையங்கொளவந்து
போரேடியென்றுபுருவமிடுகின்றார்
தேரார்விழவோவாத்தில்லைச்சிற்றம்பலவர்
தீராநோய்செய்வாரையொக்கின்றார்காணீரே. (௪)

காணீரேயென்னுடையகைவளைகள்கொண்டார்தாஞ்
சேணார்மணிமாடத்தில்லைச்சிற்றம்பலவர்
பூணார்வனமுலைமேற்பூவம்பாற்காமவே
ளாணாடுகின்றவாகண்டுமெருளாரே. (௫)

ஏயிவரேவானவர்க்கும்வானவரேயென்பாராற்
றாயிவரேயெல்லார்க்குந்தந்தையுமாமென்பாராற்
றேய்மதியஞ்சூடியதில்லைச்சிற்றம்பலவர்
வாயினகேட்டறிவார்வையகத்தாராவாரே. (௬)

ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன்
மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கண்ணர்
தேவாமறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கோவாவினவளைகள்கொள்வாரோவென்னையே. (எ)

என்னைவலிவாராரென்றவிலங்கையர்கோன்
மன்னுமுடிகணெரித்தமணவாளர்
செந்நெல்விளைகழனித்தில்லைச்சிற்றம்பலவர்
முன்னந்தான்கண்டறிவாரோவவாிம்முத்தரே. (அ)

முத்தர்முதுபகலேவந்தென்றனில்புகுந்து
பத்தர்பலியிடுகவென்றெங்கும்பார்க்கின்றார்
சித்தர்கணம்பயிலுந்தில்லைச்சிற்றம்பலவர்
கைத்தலங்கள்வீசிநின்றாடுங்காலோக்காரே. (கூ)

நோக்காததன்மையாலோக்கிலோமியாமென்று
மாற்காழியீந்துமலரோனைநிந்தித்துச்
சேக்காதலித்தேறுந்தில்லைச்சிற்றம்பலவ
ரூர்க்கேவந்தென்வளைகள்கொள்வாரோவொண்ணுதலிர். (க0)

ஒண்ணுதலிகாரணமாவும்பர்தொழுதேத்துங்
கண்ணுதலான்றன்னைப்புருடோத்தமன்சொன்ன
பண்ணுதலைப்பத்தும்பயின்றாடிப்பாடினா
ரெண்ணுதலைப்பட்டங்கினிதாவிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## சேதிராயர் திருவிசைப்பா.

### கோயில்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சேலுலாம்வயற்றில்லையுளீருமைச்
சாலநாளயன்சார்வதினுலிவள்
வேலையார்விடமுண்டுகந்தீரென்று
மாலதாகுமென்வாணுதலே. (க)

வாணுதற்கொடிமாலதுவாய்மிக
*நாணமற்றனளுனறியேனினிச்
சேணுதற்பொலிதில்லையுளீருமைக்
*காணிலெய்ப்பிலள்காரிகையே. (உ)

காரிகைக்கருளீர்கருமால்கரி
யீருரித்தெழுபோர்வையினீர்மிகு
சீரியற்றில்லையாய்சிவனேயென்று
வேரிநற்குழலாளிவள்விம்முமே. (௩)

விம்மிவிம்மியேவெய்துயிர்த்தாளொரு
வும்மையேநினைந்தேத்துமொன்றாகிலள்
செம்மலோர்பயிறில்லையுளீரெங்க
ளம்மலோதியயர்வுறுமே. (௪)

அயர்வற்றஞ்சலிகூப்பியந்தோவெனை
யுயவுன்கொன்றையந்தாரருளாயெனுஞ்
செயலுற்றார்மதிற்றில்லையுளீரிவண்
மயலுற்றாளென்றன்மாதிவளே. (௫)

மாதர்கூறன்வண்டார்கொன்றைமார்பனென
றோதிலுய்வனென்பைங்கிளியேயெனுஞ்
சேதித்தீர்சிரநான்முகனைத்தில்லை
வாதித்தீரென்மடக்கொடியையே. (௬)

கொடியைக்கோமளச்சாதியைக்கொம்பிளம்
பிடியையென்செய்திட்டீர்பகைத்தார்புர
மடியச்செஞ்சிலைகால்வளைத்தீரென்று
முடியுநீர்செய்தமூச்சறவே. (௭)

அறவனேயன்றுபன்றிப்பின்னேகிய
மறவனேயெனைவாதைசெய்யேலெனுஞ்
சிறைவண்டார்பொழிற்றில்லையுளீரெனும்
பிறைகுலாநுதற்பெய்வளையே. (௮)

அன்றருக்கனைப்பல்லிறுத்தானையக்
கொன்றுகாலனைக்கோளிழைத்தீரெனுந்
தென்றலார்பொழிற்றில்லையுளீரிவ
ளொன்றுமாகிலளும்பொருட்டே. (௯)

ஏயுமாறெழிற்சேதிபர்கோன்றில்லை
நாயனாரைநயந்துரைசெய்தன
தூயவாறுரைப்பார்துறக்கத்திடை
யாயவின்பமெய்தியிருப்பரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

ஆ திருப்பதிகம் - உ௮.

திருவிசைப்பா முற்றுப்பெற்றது.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சேந்தனாரருளிச்செய்த

# திருப்பல்லாண்டு.

## கோயில்.

பண் பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்துபுவனியெல்லாம்விளங்க
வன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே. ()

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றே பல்லாண்டுகூறுதுமே.

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே.

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௪)

புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட்டின்னம்புகலரிதா [ன்றூங்
யிரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக்கென்செயவல்லமெ
கரந்துங்கரவாதகற்பகனாகிக்கரையில்கருணைக்கடல்
பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கேபல்லாண்டுகூறுதுமே. (௫)

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந்திசைதிசையன
கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழாமாய்நின்றுகூத்தாடு
மாவிக்கமுதையென்னார்வத்தனத்தினையப்பனையொப்பமரர்
பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௬)

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீ
ழாரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. (௭)

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே
பாலுமமுதுமொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௮)

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௯)

தாதையைத்தாளறவீசியசண்டிக்குமண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௧௦)

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங் குழாம்பெருகி
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே. (௧௧)

ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநா
ணாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே. (௧௨)

எந்தையெந்தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரானென்றென்று
சிந்தைசெய்யுஞ்சிவன்சீரடியாரடிநாய்செப்புறை
யந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே. (௧௩)

திருச்சிற்றம்பலம்.

---

திருப்பல்லாண்டு முற்றுப்பெற்றது.

# திருவிசைப்பாப்
# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். |
|---|---|
| அகலோகமெல் | ௩௯ |
| அக்கணு-டென் | ௨௫ |
| அக்கணு-டமூ | ௧௨ |
| அங்கைகொண்ட | ௩௦ |
| அணியுமிழ்சோ | ௩௭ |
| அண்டமோரணு | ௨௯ |
| அதித்தவரக்க | ௪௬ |
| அதுமதியிதுவென் | ௫ |
| அந்திபோலுருவு | ௨௩ |
| அம்பராவனலா | ௨௫ |
| அம்பலத்தருந | ௪௮ |
| அம்பளிங்குபக | ௨௬ |
| அயர்வுற்றஞ்சலி | ௫௨ |
| அரிவையோர்கூ | ௪௭ |
| அருட்டிரட்செம் | ௯ |
| அரும்புனலலம | ௪௯ |
| அரும்பேதைக் | ௨௭ |
| அருளுமாறருளி | ௩௫ |
| அருள்செய்தாடு | ௪௪ |
| அருள்பெறினக | ௪௯ |
| அலந்துபோயி | ௪௪ |
| அல்லாய்ப்பக | ௪௫ |
| அல்லியம்பூம்பழ | ௩௯ |
| அறவனே | ௫௨ |
| அறிவுமிக்கநன் | ௪௫ |
| அற்புதத்தெய்வ | ௨௮ |
| அனலமேபுன | ௩௩ |
| அன்றருக்கனை | ௫௨ |
| அன்னநடையா | ௪௫ |
| அன்னமாய் | ௨௮ |
| ஆசையையளவ | ௫௦ |
| ஆடரவாடவாடு | ௧௦ |
| ஆடிவருங்கா | ௫௦ |
| ஆயாதசமயங்க | ௪௧ |
| ஆயிரங்கமல | ௧௨ |
| ஆரணத்தேன் | ௨௭ |
| ஆருயிர்காவ | ௪௯ |
| ஆரேயிவைபடு | ௫௦ |
| ஆவாவிவர் | ௫௧ |
| ஆவியின்பரமெ | ௪௮ |
| ஆறுதபேரன்பி | ௨௭ |
| இடர்கெடுத் | ௧ |
| இணங்கிலாவீச | ௯ |
| இத்தெய்வநெறி | ௧௨ |
| இந்திரலோகமு | ௩௬ |
| இருந்திரைத்தர | ௧௯ |
| இலையார்கதிர்வே | ௪௦ |
| இவனைவாரிளமெ | ௧௫ |
| இவ்வரும்பிறவிப் | ௧௭ |
| இளமென்முலை | ௪௬ |
| இறைவனையென் | ௪௭ |
| இறைவனையேத் | ௪௮ |
| உடையும்பாய் | ௪௫ |
| உண்ணெகிழ் | ௨௮ |
| உம்பர்நாடிம்பர் | ௧௯ |
| உயர்கொடியாடை | ௪ |
| உருக்கியென்னுள் | ௧௦ |
| உருவத்தெரி | ௩௯ |
| உலகெலாந்தொ | ௩௪ |
| உளங்கொளமது | ௧௩ |
| உறவாகியயோகமு | ௬ |
| உற்றுயென்னு | ௯ |
| எங்களையா | ௪௯ |
| எச்சனைத்தலை | ௧௦ |
| எட்டுருவிரவி | ௯ |
| எண்ணில்பல | ௧௩ |
| எம்பந்தவல்வி | ௩௯ |
| எரிதருகரிகாட் | ௩௭ |
| எவருமாமறைக | ௩௫ |
| எழிலையாழ் | ௩௭ |
| எழுந்தருளா | ௪௯ |
| என்செய்கோந் | ௨௨ |
| என்னையுன்பாத | ௨௫ |
| என்னைவலி | ௫௧ |
| ஏகநாயகனை | ௧௧ |
| ஏயிவரேவான | ௫௦ |
| ஏயுமாறெழிற் | ௫௨ |
| ஏர்கொள்கற்பக | ௬ |
| ஐயபொட்டிட்ட | ௨௮ |
| ஒக்கவோட்டந்த | ௪௪ |
| ஒட்டாவகை | ௫௦ |
| ஒண்ணுதலிகா | ௫௧ |
| ஒருங்கிருங் | ௩௭ |
| ஒழிவொன்றிலா | ௧௫ |
| ஒளிவளர் | ௧ |
| ஓமப்புகையு | ௪௬ |
| ஓவாமுத்தீயஞ்சு | ௪௦ |
| கங்கைநீரரிசிற் | ௧௨ |
| கடியார்கணம் | ௩௮ |
| கடுப்பாய்ப்பறை | ௮ |
| கடுவினைப்பாசக் | ௩௧ |
| கணம்விரிகுடுமி | ௧௭ |
| கணியெரிவிசிறு | ௬ |
| கண்ணியன் | ௩௧ |
| கண்பனியரும்ப | ௧௮ |
| கரியரேயிடங் | ௨௦ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| கருவளர்மேகத் | ௪ |
| கரைகடலொலி | ௩௧ |
| கலங்கலம்பொ | ௩௭ |
| கலைகடம்பொரு | ௧௯ |
| களகமணி | ௩௯ |
| களிவானுலகிற் | ௪௦ |
| கலையாவுடலோ | ௩௯ |
| கள்ளவிழ்தாம | ௪௭ |
| கற்றவர்விழுங்கு | ௧௧ |
| கன்னெனகாவுள் | ௨௪ |
| காடாடுபல்கணஞ் | ௭ |
| காணீரேயெ | ௫௦ |
| காண்பதியா | ௪௭ |
| காமனைக்கால | ௬ |
| காரிகைக்க | ௫௨ |
| கானேவரு | ௭ |
| இத்திநின்றடு | ௨௩ |
| இளையிளஞ்சேய | ௧௬ |
| இற்போமெனத் | ௧௪ |
| குணமணிக்குரு | ௧௬ |
| குதிரைமாவொடு | ௪௩ |
| குமுதமே | ௨௧ |
| குரவங்கோங் | ௪௬ |
| குருண்டவார்கு | ௪௩ |
| குன்றேந்தி | ௧௫ |
| கூத்தனை | ௪௮ |
| கேடிலாமெய்ந் | ௨௪ |
| கைக்குவான் | ௩௮ |
| கொடியைக் | ௫௨ |
| கொழுந்திரள் | ௧௭ |
| கோலமலர்நெ | ௪௭ |
| கோலமே | ௨ |
| கோவினைப் | ௧௫ |
| சடைகெழுமகுட | ௩௪ |
| சந்தனகளபங் | ௨௦ |
| சந்துமகிலுந் | ௪௬ |
| சரளமந்தார | ௩௬ |
| சரிந்ததுகிறளர்ந் | ௨௭ |
| சலம்பொற்று | ௪௩ |
| சித்தர்தேவரிய | ௪௬ |
| சித்தனேயருளா | ௩௩. |
| சிறப்புடையடியா | ௧௦ |
| சீரான்மல்கு | ௪௧ |
| சீர்த்ததிண்புவ | ௧௮ |
| சுருதிவானவனுந் | ௨௯ |
| செக்கரொத்திரவி | ௧௦ |
| செங்கணு | ௩௩ |
| செம்பொனே | ௩௩ |
| செம்மணக்கிழ | ௩௧ |
| செய்யகோடுட | ௪௩ |
| செழுந்தென்ற | ௭ |
| செற்றுவன்புர | ௪௩ |
| சேடருறைதில் | ௩௯ |
| சேயிழையார்க் | ௪௯ |
| சேர்வன்கொ | ௪௮ |
| சேலுலாம்வய | ௫௧ |
| சேவேந்துவெல் | ௮ |
| சொன்னவின் | ௩௨ |
| தக்கனற்றலையு | ௩ |
| தக்கன்வெங்க | ௧௩ |
| தத்தையங்கனை | ௨௯ |
| தப்பானைசாய்ப் | ௪௧ |
| தரவார்புனஞ் | ௮ |
| தருணேந்துசே | ௧௪ |
| தழைதவழ்மொ | ௨௨ |
| தளிரொளிமணி | ௨௧ |
| தற்பரம்பொரு | ௧ |
| தனதனற்றே | ௨ |
| தனிப்பெருந்தா | ௩௫ |
| தனியரெத்தனை | ௩௬ |
| தன்சோதியெழு | ௨௭ |
| தன்னகமழலை | ௨௩ |
| தன்னடிநிழற்கீ | ௧௧ |
| தாட்டரும்பழன | ௩௩ |
| தாயினேரிரங்கு | ௧௭ |
| தானமர்பொருது | ௧௬ |
| திக்கடாநினைந்து | ௨௦ |
| திசைக்குமிக்குல | ௧௦ |
| திருநீறிடாவுரு | ௮ |
| திருநுதல்விழியு | ௨௧ |
| திருநெடுமாலி | ௫ |
| திருமகன்முருக | ௩௩ |
| திருவருள்புரிந் | ௩௦ |
| திலகநுதலுமை | ௧௪ |
| தில்லையம்பலத் | ௪௯ |
| திறம்பியபிறவி | ௨ |
| துச்சானசெய்தி | ௪௧ |
| துணுக்கென | ௧௦ |
| துண்டவெண்பி | ௨௧ |
| துந்துபிகுழல்யா | ௧௮ |
| தூவிநீரொடு | ௪௪ |
| தெள்ளுநீறவ | ௨௨ |
| தேய்ந்துமெய் | ௪௫ |
| தேர்மலிவிழவிற் | ௪ |
| தொடங்கினன் | ௧௬ |
| தொழுதுபின்செ | ௩௩ |
| தொறுக்கள்வா | ௪௩ |
| தோழியாஞ்செ | ௨௨ |
| நிறைதழைவாழை | ௫ |
| நினைக்குநிரந்தர | ௧௪ |
| நினைத்தேனினி | ௪௭ |
| நின்றுநினைந்தி | ௪௨ |
| நீரணங்கசும் | ௨௧ |
| நீரோங்கிவளர் | ௨௬ |
| நீலமேகண்டம் | ௨௦ |
| நீவாராதொ | ௨௭ |
| நீறணிபவளக் | ௨ |
| நெஞ்சிடரகல | ௧௮ |
| நெடியசமணு | ௪௬ |
| நெடியானோடு | ௪௧ |
| நெற்றியிற்கண் | ௩.௪ |
| நேசமுடையவர் | ௪௮ |
| நையாதமனத் | ௨௬ |
| நோக்காததன் | ௫௧ |
| படங்கொள் | ௪௩ |
| படுமதமுமிடவ | ௪௨ |
| பண்ணியத | ௨௯ |
| பதிகநான்ம | ௩௩ |
| பத்தியாயுணர் | ௩௮ |
| பந்தபாச | ௪௩ |
| பந்தமும்பிரிவு | ௩௭ |
| பரிந்தசெஞ்சு | ௧௬ |
| பவளமால்வ | ௪௪ |

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| பவளமேமரு | ௨௦ | போழ்ந்தியானை | ௪௩ | மோதலைப்பட்ட | ௨௧ |
| பழையராங் | ௨௦ | மங்குல்சூழ் | ௩௫ | யாதுநீநினைவ | ௨௩ |
| பணிபடுமதிய | ௩௭ | மங்கையோடி | ௩௦ | வகைமிகுமசுரர் | ௧௬ |
| பன்னெடுங்கால | ௩௫ | மடங்கலாய்க் | ௩ | வண்டார்குழலு | ௭ |
| பாடகமுநூபு | ௩௧ | மண்டலத்தொ | ௧௧ | வரம்பிரிவாளா | ௪ |
| பாடலங்கார | ௧௩ | மண்ணோடு | ௪௨ | வாடாவாய் | ௪௨ |
| பாந்தள்பூணா | ௩௨ | மருண்டுறை | ௧௬ | வாணுதற்கொடி | ௫௧ |
| பாம்பணைத்து | ௩௧ | மறைகளுமமரர் | ௩ | வாரணிநறும | ௪௮ |
| பாரோர்முழு | ௪௦ | மாதிமணங்கம | ௧௪ | வாழியம்போதத் | ௩௪ |
| பாலுமமுதமு | ௧௫ | மாதோர்கூ | ௫௨ | வாளாமாலய | ௪௨ |
| பாவார்ந்த | ௪௨ | மாலுலாமனந்த | ௧௫ | வானநாடுடை | ௪௫ |
| பின்னுசெஞ்ச | ௧௧ | மாலோடயனு | ௪௬ | வானவர்கள் | ௫௦ |
| புரியும்பொன் | ௪௫ | மானேர்கலைவ | ௧௫ | வானோர்பணிய | ௪௭ |
| புவனநாயகனே | ௨௪ | மானைப்புரையு | ௪௦ | விண்ணவர்மகுட | ௧௦ |
| புழுங்குதீவினை | ௨௪ | மின்னுருருவ | ௪௦ | விம்மிவிம்மி | ௫௨ |
| புனல்படவுருகி | ௨௫ | முத்தர்முதுபக | ௫௧ | விரியுநீராலக் | ௨௫ |
| பூத்திரளுருவஞ் | ௧௮ | முத்தீயாளர் | ௪௦ | வெங்கோல்வே | ௪௧ |
| பூவணங்கோயில் | ௩௨ | முத்துவயிரம | ௩௮ | வெய்யசெஞ் | ௩௬ |
| பெரியவாகரு | ௩௨ | முழுவதுமீயாயி | ௨௭ | வெறியேறு | ௭ |
| பெருமையிற் | ௨ | மூலமாய்முடிவா | ௨௬ | வேந்தன்வளைத் | ௧௪ |
| பொசியாதோ | ௪௧ | மெய்யரேமெய்ய | ௨௦ | வேறுகவுள்ளத்து | ௯ |
| பொய்யாதவேதி | ௧௪ | மைஞ்ஞின்ற | ௨௬ | வைத்தபாதங் | ௪௪ |
| பொருவரைப் | ௫ | மையன்மா | ௪௨ | வையவாம்பெ | ௩௭ |


திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பல்லாண்டுப்
## பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஆரார்வந்தார | ௫௪ | சேவிக்கவந் | ௫௪ | புரந்தரன்மா | ௫௩ |
| எந்தையெந்தா | ௫௪ | சொல்லாண்ட | ௫௩ | மன்னுகதில்லை | ௫௩ |
| குழலொலி | ௫௪ | தாதையைத்தா | ௫௪ | மிண்டுமனத்தவ | ௫௩ |
| சீருந்திருவும் | ௫௪ | நிட்டையிலா | ௫௩ | | |
| சேலுங்கயலு | ௫௪ | பாலுக்குப்பால | ௫௪ | | |

## திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராணச்செய்யுட்டிரட்டு.

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

எடுக்குமாக்கதையின்றமிழ்ச்செய்யுளாய்
நடக்குமேன்மைநமக்கருள்செய்திடத்
தடக்கையைந்துடைத்தாழ்செவிநீண்முடிக்
கடக்களிற்றைக்கருத்துளிருத்துவாம்.

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி.

கற்பனைகடந்தசோதிகருணையேயுருவமாகி
யற்புதக்கோலநீடியருமறைச்சிரத்தின்மேலாஞ்
சிற்பரவியோமமாகுந்திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்றபூங்கழல்போற்றிபோற்றி.

தண்ணளிவெண்குடைவேந்தன்செயல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்தா
ரண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான்.

சடைமருங்கிலிளம்பிறையுந்தனிவிழிக்குந்திருநுதலு
மிடமருங்கிலுமையாளுமெம்மருங்கும்பூதகணம்
புடைநெருங்கும்பெருமையுமுன்கண்டரசன்போற்றிசைப்ப
விடைமருவும்பெருமானும்விறல்வேந்தற்கருள்கொடுத்தான்.

வையகம்பொலியமறைச்சிலம்பார்ப்பமன்றுளேமாலயன்றேட,
வையர்தாம்வெளியேயாடுகின்றாரை யஞ்சலிமலர்த்திமுன்போற்று
ங், கைகளோதிளைத்தகண்களோவந்தக்கரணமோகலந்தவன்புந்தச்,
செய்தவம்பெரியோன்சென்றுதாழ்ந்தெழுந்தான் றிருக்களிற்றுப்ப
டிமருங்கு.

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ளவளப்பருங்கரணங்கணான்குஞ்
சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிகமேயாக
விந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின் [ர்.
வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின் மலர்ந்தா

தெண்ணிலாமலர்ந்தவேணியாயுன்றன்றிருநடங்கும்பிடப்பெற்று
மண்ணிலேவந்தபிறவியேயெனக்குவாலிதாமின்பமாமென்று
கண்ணிலானந்தவருவிநீர்சொரியக்கைம்மலருச்சிமேற்குவித்துப்
பண்ணினானீடியறிவரும்பதிகம்பாடினார்பரவினார்பணிந்தார்.

சொல்லுவதறியேன்வாழிதோற்றியதோற்றம்போற்றி
வல்லைவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையிலின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்ன.

ஆனாயர்குழலோசைகேட்டருளியருட்கருணை
தானாயதிருவுள்ளமுடையதவவல்லியுடன்
கானாதிகாரணராங்கண்ணுதலார்விடையுகைத்து
வானாறுவந்தணைந்தார்மதிநாறுஞ்சடைதாழ.

திசைமுழுதுங்கணநாதர்தேவர்கட்குமுன்னெருங்கி
மிசைமிடைந்துவரும்பொழுதுவேற்றொலிகள்விரவாமே
யசையவெழுங்குழனாதத்தஞ்செழுத்தாற்றமைப்பரவு
மிசைவிரும்புங்கூத்தனாரெழுந்தருளியெதிர்நின்றார்.

நன்மைபெருகருணெறியேவந்தணைந்துநல்லூரின்
மன்னுதிருத்தொண்டனார்வணங்கிமகிழ்ந்தெழும்பொழுதி
லுன்னுடையநினைப்பதனைமுடிக்கின்றோமென்றவர்தஞ்
சென்னிமிசைப்பாதமலர்சூட்டினான்சிவபெருமான்.

அண்ணலேயெனையாண்டுகொண்டருளியவமுதே
விண்ணிலேமறைந்தருள்புரிவேதநாயகனே
கண்ணினாற்றிருக்கயிலையிலிருந்தநின்கோல
நண்ணிநான்றொழநயந்தருள்புரியெனப்பணிந்தார்.

# பெரியபுராணச்செய்யுட்டிரட்டு.

வெள்ளிவெற்பின்மேன்மரகதக்கொடியுடன்விளங்குந்
தெள்ளுபேரொளிப்பவளவெற்பெனவிடப்பாகங்
கொள்ளுமாமலையாளுடன்கூடவீற்றிருந்த
வள்ளலாரைமுன்கண்டனர்வாக்கின்மன்னவனார்.

சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம்
பவமதனையறமாற்றும்பாங்கினிலோங்கியஞான
முவமையிலாக்கலைஞானமுணர்வரியமெய்ஞ்ஞானந்
தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்.

கையதனாலொற்றறுத்துப்பாடுதலுங்கண்டருளிக்கருணைகூர்ந்த
செய்யசடைவானவர்தமஞ்செழுத்துமெழுதியசெம்பொற்றாளங்க
ளையரவர்திருவருளாலெடுத்தபாடலுக்கிசைந்தவளவாலொற்ற
வையமெலாமுய்யவருமறைச்சிறுவர்கைத்தலத்துவந்தவன்றே.

நச்சியின்றமிழ்பாடியஞானசம்பந்த
ரிச்சையேபுரிந்தருளியவிறைவரின்னருளா
லச்சிறப்பருள்பூதமுன்விரைந்தகன்பீடத்
துச்சிவைத்ததுபசும்பொனாயிரக்கிழியொன்று.

ஆலமேயமுதமாகவுண்டுவானவர்க்களித்துக்
காலனைமார்க்கண்டற்காக்காய்ந்தனையடியேற்கின்று
ஞாலநின்புகழேயாகவேண்டுநான்மறைகளேத்துஞ்
சீலமேயாலவாயிற்சிவபெருமானேயென்றார்.

கைகளுந்தலைமீதேறக்கண்ணிலானந்தவெள்ள
மெய்யெலாம்பொழியவேதமுதல்வரைப்பணிந்துபோற்றி
யையனேயடியனேனையஞ்சலென்றருளவல்ல
மெய்யனேயென்றுவீடலாலவாய்விளம்பலுற்றார்.

வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமஞ்சாந்தமணித்தூபந்
தேசிற்பெருகுஞ்செழுந்தீபமுதலாயினவுந்திருவமுது
மீசர்க்கேற்றபரிசினாலருச்சித்தருளவெந்நாளும்
பூசைக்கமர்ந்தபெருங்கூத்தர்பொற்பார்சிலம்பினொலியளித்தார்.

மறவாமையானமைத்தமனக்கோயிலுள்ளிருத்தி
யுறவாதிதனையுணருமொளிவிளக்குச்சுடரேற்றி
யிறவாதவானந்தமெனுந்திருமஞ்சனமாட்டி
யறவாணர்க்கன்பென்னுமமுதமைத்தர்ச்சனைசெய்வார்.

வெள்ளிமால்வரைக்கயிலையில்வீற்றிருந்தருளித்
துள்ளுவார்புனல்வேணியாரருள்செயத்தொழுது
தெள்ளுவாய்மையினாகமத்திறனெலாந்தெரிய
வுள்ளவாறுகேட்டருளினாளுலகையாளுடையாள்.

எண்ணிலாகமமியம்பியவிறைவர்தாம்விரும்பு
முண்மையாவதுபூசனையெனவுரைத்தருள
வண்ணலார்தமையர்ச்சனைபுரியவாதரித்தாள்
பெண்ணினல்லவளாயினபெருந்தவக்கொழுந்து.

நங்கையுண்ணிறைகாதலைநோக்கிநாயகன்றிருவுள்ளத்துமகிழ்ந்தே, யங்கணெய்தியமுறுவலுந்தோன்றவடுத்ததென்கொனின்பாலெனவினவ, விங்குநாதநீமொழிந்தவாகமத்தினியல்பினாலுனையர்ச்சனைபுரியப், பொங்குகின்றதென்னாசையென்றிறைஞ்சிப்போகமார்த்தபூண்முலையினாள்போற்ற.

நெஞ்சமீசனைக்காண்பதேவிரும்பிநிரந்தரந்திருவாக்கினினிகழ்வ, தஞ்செழுத்துமேயாகவாளுடையவம்மைசெம்மலர்க்கைகுவித்தருளித், தஞ்சமாகியவருந்தவம்புரியத்தரிப்பரேயவடணிப்பெருநகணவர், வஞ்சநீக்கியமாவின்மூலத்தில்வந்துதோன்றினார்மலைமகள்காண.

கொய்தபன்மலர்கம்பைமாநதியிற்குலவுமஞ்சனநிலவுமெய்ப்பூச்சு, நெய்தருங்கொழுந்தீபதூபங்கணிறைந்தசிந்தையினீடியவன்பின், மெய்தரும்படிவேண்டினவெல்லாம் வேண்டும்போதினிலுதவமெய்ப்பூசை, யெய்தவாகமவிதியெலாஞ்செய்தாளுயிர்கள்யாவையுமீன்றவெம்பிராட்டி.

கரந்தரும்பயனிதுவெனவுணர்ந்துகம்பமேவியவும்பர்நாயகர்பா, னிரந்தகாதல்செயுள்ளத்தளாகிநீடுநன்மைகளியாவையும்பெருக, வரந்தரும்பொருளாமலைவல்லிமாறிலாவகைமலர்ந்தபேரன்பாற், சிரம்பணிந்தெழுபூசைநாடோறுந்திருவுளங்கொளப்பெருகியதன்றே.

வேதநெறிதழைத்தோங்கமிகுசைவத்துறைவிளங்கப்
பூதபரம்பரைபொலியப்புனிதவாய்மலர்ந்தழுத
சீதவளவயற்புகலித்திருஞானசம்பந்தர்
பாதமலர்தலைக்கொண்டுதிருத்தொண்டுபரவுவாம்.

வேதநான்முகன்மால்புரந்தரன்முதலாம்விண்ணவரெண்ணிலார்மற்றுங், காதலான்மிடைந்தமுதற்பெருந்தடையாங்கதிர்மணிக்கோபுரத்துள்ளான், பூதவேதாளப்பெருங்கணநாதர்போற்றிடப்பொதுவினின்றாடு, நாதனாராதிதேவனார்கோயினாயகனந்தியெம்பெருமான்.

நெற்றியிற்கண்ணர்நாற்பெருந்தோளர்நீறணிமேனியரநேகர், பெற்றமேல்கொண்டதம்பிரானடியார் பிஞ்ஞகன்றன்னருள்பெறுவார், மற்றவர்க்கெல்லாந்தலைமையாம் பணியுமலர்க்கையிற்சுரிகையும்பிரம்புங், கற்றைவார்சடையானருளினாற்பெற்றான்காப்பதக்கயிலைமால்வரைதான்.

மாமறைவிதிவழாமன்மணத்துறைக்கடன்களாற்றித்
தூமறைமூதூர்க்கங்குன்மங்கலந்துவன்றியார்ப்பத்
தேமருதொடையன்மார்பன்றிருமணக்கோலங்காணக்
காமுறுமனத்தான்போலக்கதிரவனுதயஞ்செய்தான்.

அண்டர்பிரானுந்தொண்டர்தமக்கதிபனாக்கியனைத்துநா
முண்டகலமுமுடுப்பனவுஞ்சூடுவனவுமுனக்காகச்
சண்டீசனுமாம்பதந்தந்தோமென்றங்கவர்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர்சடைக்கொன்றைமாலைவாங்கிச்சூட்டினார்.

கொண்டுவந்துமனைப்புகுந்துகுலாவுபாதம்விளக்கியே
மண்டுகாதலினாதனத்திடைவைத்தருச்சனைசெய்தபி
னுண்டிநாலுவிதத்திலாறுசுவைத்திறத்தினிலொப்பிலா
வண்டர்நாயகர்தொண்டரிச்சையிலமுதுசெய்யவளித்துளார்.

மண்ணினிற்பிறந்தார்பெறும்பயன்மதிசூடு
மண்ணலாரடியார்தமையமுதுசெய்வித்தல்
கண்ணினாலவர்நல்விழாப்பொலிவுகண்டார்த
லுண்மையாமெனினுலகர்முன்வருகெனவுரைப்பார்.

அல்லார்கண்டத்தண்டர்பிரானருளாற்பெற்றபடிக்காசு
பல்லாறியன்றவளம்பெருகப்பரமனடியாரானார்க
ளெல்லாமெய்தியுண்கவெனவிரண்டுபொழுதும்பறைநிகழ்த்திச்
சொல்லாற்சாற்றிச்சோறிட்டார்துயர்கூர்வறுமைதொலைத்திட்டார்.

தனிவெள்விடைமேனெடுவிசும்பிற்றலைவர்பூதகணநாதர்
முனிவரமரர்விஞ்சையர்கண்முதலாயுள்ளோர்போற்றிசைப்ப
வினியகறியுந்திருவமுதுமமைத்தார்காணவெழுந்தருளிப்
பனிவெண்டிங்கண்முடிதுளங்கப்பரந்தகருணைநோக்களித்தார்.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

# பிரகடனபத்திரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கந்தபுராணம் | எ | 0 | 0 |
| திருவள்ளுவர்பரிமேலழகருரை | ச | 0 | 0 |
| பெரியபுராணமுதற்காண்டம் சூசனத்தோடும்கூடி இரண்டாவது காண்டம் பாடலுஞ்சேர்ந்தது. | ச | 0 | 0 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதம் | ௩ | அ | 0 |
| திருக்கோவையாருரை | ௩ | அ | 0 |
| சேதுபுராணம் | ௩ | 0 | 0 |
| பதினொராந்திருமுறை | ௨ | 0 | 0 |
| நன்னூற்காண்டிகையுரை | ௨ | 0 | 0 |
| அகத்தியர்தேவாரத்திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு. | க | கஉ | 0 |
| கொலைமறுத்தல், வைராக்கியசதகம், வைராக்கியதீபம், அவிரோதவுந்தியார். | க | ௰ | 0 |
| கோயிற்புராணவுரை | க | அ | 0 |
| பெரியபுராணவசனம். | க | ச | 0 |
| திருவிளையாடற்புராணவசனம் | | | |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச்சூறாவளி. | க | ச | 0 |
| சிவஞானபோதச்சிற்றுரை | க | ச | 0 |
| சைவசமயநெறியுரை | க | ச | 0 |
| சூடாமணிநிகண்டுபத்துத்தொகுதி | க | 0 | 0 |
| பிரயோகவிவேகவுரை | க | 0 | 0 |
| தாயுமானசுவாமிபாடல் | க | 0 | 0 |
| இலக்கணச்சுருக்கம் | 0 | கஉ | 0 |
| கந்தபுராணச்சுருக்கம் | 0 | கஉ | 0 |
| தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயம் | 0 | அ | 0 |
| கைவல்லியநவநீதவுரை | 0 | அ | 0 |
| சூடாமணிநிகண்டு பதினொராவது பன்னிரண்டாவதுதொகுதிகள் | 0 | அ | 0 |
| திருக்கோவையாருண்மை | | | |
| இலங்கைப்பூமிசாத்திரம் | 0 | ரு | 0 |
| திருமுருகாற்றுப்படையுரை | 0 | ச | 0 |
| மருதூரந்தாதியுரை | 0 | ச | 0 |
| திரிகடுகவுரை | 0 | ச | 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| திருவகுப்பு | 0 | ச | 0 |
| சிவாலயதரிசனவிதி | 0 | ௩ | 0 |
| பட்டணத்தார்பாடல் | 0 | உ | 0 |
| திருச்செந்திநிரோட்டகயமகவந்தாதியுரை | 0 | உ | 0 |
| உபநிடதவுரை | 0 | உ | 0 |
| சிதம்பரமும்மணிக்கோவை | 0 | உ | 0 |
| சிதம்பரமான்மியம் | 0 | உ | 0 |
| இலக்கணவினாவிடை | 0 | உ | 0 |
| விவிலியகுற்சிதம் | 0 | உ | 0 |
| கந்தரலங்காரம், கந்தரனுபூதி | 0 | க | ௬ |
| நால்வர்நான்மணிமாலை | 0 | க | ௬ |
| ஏரெழுபது | 0 | க | ௬ |
| நீதிநெறிவிளக்கம் | 0 | க | ௩ |
| உவமானசங்கிரகம், இரத்தினச்சுருக்கம் | 0 | க | ௩ |
| மறைசையந்தாதி | 0 | க | 0 |
| அருணகிரியந்தாதி | 0 | க | 0 |
| அபிராமியந்தாதி | 0 | க | 0 |
| திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி | 0 | க | 0 |
| திருக்கருவைவெண்பாவந்தாதி | 0 | க | 0 |
| விநாயகரகவல், திருச்செந்தூர்க்கலிவெண்பா | 0 | க | 0 |
| திருச்செந்தூரகவல் | 0 | க | 0 |
| புட்பவிதி | 0 | க | 0 |
| சிவதத்துவவிவேகம் | 0 | க | 0 |
| விநாயககவசம், சிவகவசம், சத்திகவசம், இலக்குமிதோத்திரம், சரசுவதிதோத்திரம் | 0 | க | 0 |
| நமச்சிவாயமாலை | 0 | 0 | ௬ |
| கபிலரகவல் | 0 | 0 | ௬ |
| துண்டிவிநாயகர்திருவருட்பா | 0 | 0 | ௬ |
| கதிர்காமவேலவர்திருவருட்பா | 0 | 0 | ௯ |
| மதுரைஅறுபத்துநான்குதிருவிளையாடற்போற்றிக்கலிவெண்பா | 0 | 0 | ௬ |
| சரஸ்வதியந்தாதி | 0 | 0 | ௬ |
| முதற்பாலபாடம் | 0 | க | 0 |
| இரண்டாம்பாலபாடம் | 0 | உ | 0 |
| நான்காம்பாலபாடம் | 0 | கஉ | 0 |
| முதற்சைவவினாவிடை | 0 | உ | 0 |
| உ-மஜசைவவினாவிடை | 0 | அ | 0 |

இப்புத்தகங்கள் வேண்டியவர்கள் சென்னபட்டணம் தங்கசாலைவீதி ௯00-ம் நெம்பர் வீட்டிலும், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ம-ள-ள-ஸ்ரீ, ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களிடத்திலும், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் செட்டித்தெருவில் ம-ள-ள-ஸ்ரீ, கு. சபாபதிச்செட்டியாரவர்களிடத்திலும் மேற்கண்டிருக்கும் கிரயத்துக்குப் பெற்றுக்கொள்ளலாம்.